# Compendium of Rulings and Observations of the Chair for the Eighth Assembly

1/89

அலுவலகப் பணிக்கு மட்டும்

1/89

# தீர்ப்புரைகள் மற்றும் குறிப்புரைகள்

தமிழ்நாடு எட்டாவது சட்டமன்றப் பேரவை

*(16–1–1985 முதல் 30–1–1988 வரை)*

128-77—i

122318

D I
Y211, 31 N88 ← N85

N88

# முன்னுரை

மக்களாட்சி முறையின் முக்கிய அங்கமாக விளங்கும் சட்டமன்றத்தின் பாரம்பரியத்தையும் கண்ணியத்தையும் கட்டிக் காக்கின்ற பெரும் பொறுப்பை ஏற்பவர்கள் தலைவரும் துணைத் தலைவரும் ஆவர். அவர்கள் வழங்கிடும் தீர்ப்புகள், அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகளின் ஆழமான கருத்துக்கள், பல்வேறுபட்ட பாராளுமன்ற நடைமுறைகள், விதிகள், மரபுகள் போன்றவற்றை பிரதிபலிப்பவையாகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் இருப்பதால் எதிர் காலத்தில் எளிதாக எடுத்தாளத்தக்க வகையில் அவை தொகுக்கப் பெறுவது இன்றியமையாததாகின்றது.

*16—1—1985* முதல் *30—1—1988* வரையிலான எட்டாவது சட்டமன்றப் பேரவையின் தலைவராக மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன் அவர்களும் துணைத் தலைவராக மாண்புமிகு திரு. வேட்சந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் அவர்களும் இருந்தனர். பேரவையின் கூட்டங்கள் 6 தொடர்களில் 179 நாட்கள் நடைபெற்றன. நடவடிக்கைக் குறிப்புகள் (Legislative Assembly Debates) 47 தொகுதிகளில் வெளிவந்துள்ளன.

ஒரு பிரச்சினை குறித்த விவாதத்தின்போது தலைவர் அளித்த முக்கியமான குறிப்புரைகள் அனைத்தும், தேவையான சிற்சில மாற்றங்களுடன் ஒருங்கிணைக்கப் பெற்றுள்ளன. மிக முக்கியமான தீர்ப்புகளை விரைவாகவும் இலகுவாகவும் கண்டறியும் பொருட்டு, உரிய தலைப்புகள் ஆங்காங்கே சேர்க்கப் பெற்றுள்ளது இவ் வெளியீட்டின் சிறப்பு அம்சமாகும். பேரவைச் செயலக அலுவல்களை நன்முறையில் நிறைவேற்றிட இந்நூல் பெரிதும் துணை புரியும்.

சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.,
ஆணையர் மற்றும் செயலர்.

சென்னை—600 009,
10–11–1988
(திருவள்ளுவராண்டு—2019)

உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| அரசியலமைப்புச் சட்டப் பிரிவை எரித்தோர்— உறுப்பினர் தகுதியை இழத்தல்— | 1—3 |
| அவைக்குள் அனுமதி— | 3 |
| அவையில் காட்டப்பெறும் பொருட்கள்— | 3 |
| அவையில் பயன்படுத்தப்பெறும் சொற்கள், சொற்றொடர்கள்— | 3—7 |
| அறிக்கைகள்— | 7—9 |
| உரிமைப் பிரச்சினைகள்— | 10—33 |
| அமைச்சர்கள் மீது— | 10 |
| *பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர்* .. .. .. .. | 10 |
| அலுவலர்கள் மீது— | 10 |
| *மின் வாரியத் தலைவர்* .. .. .. | 10 |
| உறுப்பினர்கள் (மேலவை) மீது— | 11—12 |
| பத்திரிகைகள் மீது— | 12—33 |
| *அசைடு* .. .. .. .. .. | 12 |
| *ஆனந்த விகடன்* .. .. .. .. | 13—20 |
| *தினகரன்* .. .. .. .. .. | 20—21 |
| *தினகரன், முரசொலி நாளிதழ்கள் மற்றும் மேலவை உறுப்பினர் திரு. மு. கருணாநிதி* | 21—25 |
| *துக்ளக்* .. .. .. .. .. | 26—27 |
| *வணிக ஒற்றுமை* .. .. .. .. | 27—33 |

| | பக்கங்கள் |
|---|---|
| உரிமைப் பிரச்சினை—நடைமுறைகள்— | 33—35 |
| உறுப்பினர்கள் கைது— | 35 |
| ஒத்திவைப்புத் தீர்மானம் (அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் இசைவு மறுக்கப்பெற்றவை)— | 36—38 |
| காவல் துறை .. .. .. .. | 36 |
| தடியடி, துப்பாக்கிச் சூடு முதலியன .. .. | 36—47 |
| மக்கள் நல்வாழ்வு .. .. .. .. | 37—38 |
| விபத்துக்கள் .. .. .. .. | 38 |
| ஒத்திவைப்புத் தீர்மானம்—நடைமுறைகள்— | 39—42 |
| அனுமதி .. .. .. .. .. | 39—41 |
| உரையாற்றும் முறை .. .. .. .. | 41—42 |
| ஒழுங்குப் பிரச்சினைகள்— | 42—56 |
| அதிகாரிகள் மாடம் .. .. .. .. | 42 |
| அரசியலமைப்புச் சட்டப் பிரிவை எரித்தோர்—உறுப்பினர் பதவியை இழத்தல் .. .. | 43 |
| அவை அலுவல்கள் .. .. .. .. | 43—47 |
| ஆளுநர் நடவடிக்கை—(மேலவை உறுப்பினர் நியமனம்) .. .. .. .. | 48 |
| உறுப்பினர் அமரும் இடங்கள் .. .. | 48—50 |
| உறுப்பினர்களுக்கான வசதிகள் .. .. | 50 |
| குற்றச்சாட்டுகள் .. .. .. .. | 50 |
| குறிப்புகள் .. .. .. .. .. | 51 |
| குறைவெண் .. .. .. .. .. | 51 |
| கூட்டுப் பொறுப்பு .. .. .. .. | 52 |
| கொள்கை அறிவிப்புகள் .. .. .. | 52—53 |
| செய்திகள் .. .. .. .. .. | 53 |
| தலைவரின் தீர்ப்பு .. .. .. .. | 53 |



| | பக்கங்கள் |
|---|---|
| ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி | |
| நீக்கம் .. .. .. .. .. | 54 |
| பிற சபை விவாதங்கள் .. .. .. .. | 54 |
| பேசும் வாய்ப்பு .. .. .. .. | 54—55 |
| பேரவைச் செயலகம் .. .. .. .. | 55 |
| மேலவை நீக்கம் .. .. .. .. | 56 |
| ஒழுங்குப் பிரச்சினை—ஏனையவை— | 56—58 |
| ஒழுங்குப் பிரச்சினை—நடைமுறைகள்— | 58—62 |
| அனுமதி .. .. .. .. .. | 60 |
| கேட்கும் முறை .. .. .. .. | 60—61 |
| தவிர்த்தல் .. .. .. .. .. | 61—62 |
| ஒழுங்குமுறை— | 62—71 |
| அமைதி காத்தல் .. .. .. .. | 62—65 |
| அவைக்கு வருதல் .. .. .. .. | 66 |
| அனுமதி பெற்றுப் பேசுதல் .. .. .. | 66—69 |
| உரிய இடத்தில் அமர்தல் .. .. .. | 69—70 |
| தலைவரின் கவனத்தை ஈர்த்தல் .. .. | 70—71 |
| ஒழுங்கு முறை (உறுப்பினர்கள் பேட்ஜ் அணிந்துள்ளது)— | 71 |
| ஒழுங்கு முறை (உறுப்பினர்களை வெளியேற்றுதல்)— | 72 |
| கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் உறுப்பினர்கள் பதவி இழத்தல்— | 72—73 |
| கவன ஈர்ப்பு—நடைமுறைகள்— | 73—80 |
| அறிக்கை .. .. .. .. .. | 73 |
| அனுமதித்தல் .. .. .. .. | 74 |
| நிலுவையில் உள்ளவை .. .. .. | 74—75 |
| விளக்கம் கோருதல் .. .. .. .. | 75—80 |

பக்கங்கள்


கவன ஈர்ப்பு—நடைமுறைகள் (செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மகன் அரசு நிலத்தை குறைந்த வாடகைக்கு எடுத்தது)— 81

குற்றச்சாட்டுகள்— 81—88

அமைச்சர்கள் மீது—
(அடையாறு தொழில் நுட்பப் பயிலக வித்தோ கிராபி பிரிவிற்கு மாணவர்கள் தேர்வு பற்றியது உள்பட). 81—83

அலுவலர்கள் மீது—
(உறுப்பினர் காவல்துறை அதிகாரிக்கு எழுதிய கடிதம் பற்றியது உள்பட). 84—85

அவையில் இல்லாதோர் மீது—
(வெடிகுண்டுச் சம்பவம் தொடர்பான கடிதப் பற்றியது உள்பட) 85—87

உறுப்பினர்கள் மீது—
(மனை ஒதுக்கீட்டில் தவறு நடந்துள்ளதாகக் குறிப்பிடப்பெற்றது உள்பட). 87—88

குற்றச்சாட்டு—நடைமுறைகள்— 88—105

அனுமதி .. .. .. .. .. 88—92

ஆதாரமளித்தல் .. .. .. .. 92—96

ஆதாரமளித்தல்—(ஆதாரம் தருவதாகச் சொல்லி தராமல் இருத்தல்) .. .. .. 96

ஆதாரமளித்தல்—(குற்றச்சாட்டிற்கு தணிக்கை அறிக்கையை ஆதாரமாக்குதல்) .. .. 97—98

பொறுப்பேற்றல் .. .. .. .. 98

மறுத்தல் .. .. .. .. .. 98—99

மற்றைய நடைமுறைகள் .. .. .. 99—105

குறிப்புகள்— 105—106




பக்கங்கள்


குறுக்கீடுகள் .. .. .. .. .. 107—121

அமைச்சரின் உரையில் விளக்கம் .. .. 107—111

உறுப்பினரின் உரையில் விளக்கம் .. .. 112—121

குறைவெண்— 122

கூட்டுப் பொறுப்பு— 122

கொள்கை அறிவிப்புகள்— 122—123

சட்டமன்ற கட்சிகளுக்கு உறுப்பினர்கள் விடுதியில் இட ஒதுக்கீடு— 123

சட்டமன்ற நடவடிக்கைகள் குறித்த நீதிமன்றத்தின் அறிவிக்கைகள்— 124

சட்ட முன்வடிவுகள்—உரையாற்றும் முறை 125—133

சட்ட முன்வடிவு—நடைமுறைகள்— 133—137

தகவல் கோரல்— 137—143

அமைச்சர்களின் இலாக்கா மாற்றம். .. .. 137

அரசு நிகழ்ச்சிகளுக்கு உறுப்பினர்களை அழைத்தல் 137—139

அறிக்கைகள் .. .. .. .. 140—141

உறுப்பினர்கள் அமரும் இடங்கள் .. .. 141

உறுப்பினர்களுக்கான வசதிகள் .. .. 141—142

வெளிநாட்டுப் பிரச்சினைகள் .. .. .. 143

தகவல் கோரல்—ஏனைய பிரச்சினைகள்— 143—147

தகவல் கோரல்—நடைமுறைகள்— 147—159

அனுமதி .. .. .. .. .. 147—154

உறுப்பினர்களின் அறிவிக்கைகள் .. .. 154—157

கேட்கும் முறை .. .. .. .. 157—159

| | பக்கங்கள் |
|---|---|
| தலைவரின் தீர்ப்பு— | 160—162 |
| தன்னிலை விளக்கம்— | 162 |
| தனி உறுப்பினர் அலுவல்— | 163—164 |
| தனித் தீர்மானங்கள்—(சட்டமன்ற மேலவையை நீக்குதல்)— | 164 |
| திருத்தங்கள் | 164—166 |
| சட்டமுன்வடிவுகள் .. .. .. .. | 164—166 |
| தனித் தீர்மானங்கள் .. .. .. .. | 166 |
| தீர்மானங்கள்— | |
| அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவை எரித்தோர்—உறுப்பினர் தகுதியை இழத்தல் .. .. | 166 |
| தீர்மானம்—நடைமுறைகள்— | 166—169 |
| அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவை எரித்தோர்—பதவி நீக்கம் பற்றியது உள்பட .. .. | 166—168 |
| நடவடிக்கைக் குறிப்புகள்— | 169—170 |
| நடவடிக்கைக் குறிப்புகள்—(பேரவை கூடும் நாட்கள் குறித்து திரித்து செய்தி வெளியிட்ட பத்திரிகை மீது நடவடிக்கை)— | 170—171 |
| நீக்கம்— | 171 |
| அவைக்கு ஒவ்வாத சொற்கள் .. .. | 171—172 |
| அவையில் இல்லாதோர் குறித்துப் பேசியது .. | 172—174 |
| அனுமதியின்றிப் பேசியது .. .. .. | 174—175 |
| ஆதாரமின்றிப் பேசியது .. .. .. | 176 |
| ஆளுநரைப் பற்றிப் பேசியது .. .. .. | 176 |
| கட்சி பற்றிப் பேசியது .. .. .. | 177 |





| நீக்கம்—தொடர்ச்சி | பக்கங்கள் |
|---|---|
| கற்பனையாகப் பேசியது .. .. .. | 177 |
| குற்றஞ்சாட்டிப் பேசியது .. .. .. | 178—183 |
| தவறான தகவல் .. .. .. .. | 183 |
| தீர்ப்புக்குப் பின் பேசியது .. .. .. | 183—184 |
| தொடர்பற்ற கேள்வி .. .. .. .. | 184 |
| தொடர்பின்றிப் பேசியது .. .. .. | 185—187 |
| நீக்கியதைப் பேசியது .. .. .. .. | 187—188 |
| விசாரணையிலுள்ளது பற்றிப் பேசியது .. | 188—189 |
| வெளியே பேசியது .. .. .. .. | 189—190 |
| நீக்கம்—ஏனையவை— | 190—191 |
| நீக்கம்—நடைமுறைகள்— | 191—192 |
| நீதிமன்றத் தீர்ப்பு—(சென்னை சுக்கிராசங்கி மற்றும் சந்தலால் மீதான வழக்கு)— | 192—195 |
| நீதிமன்றத் தீர்ப்பு—(வணிக ஒற்றுமை ஆசிரியர் திரு. பால்ராஜ் தொடுத்த வழக்கு)— | 196 |
| பத்திரிகையாளர் மாடம்— | 197 |
| பேரவை அலுவல்— | 198 |
| பேரவைச் செயலகம்— | 198—199 |
| பொது நடைமுறைகள்— | 199—202 |
| மரபுகள்— | 203—206 |
| மேலவை நீக்கம்— | 206 |
| மேற்கோள்கள்— | 206—208 |
| விசாரணையில் இருக்கும் பொருள்— | 208—211 |
| விவாதம்— | 211—233 |
| அவை முன்னுள்ள பொருள் .. .. .. | 211—213 |
| அவையில் இல்லாதோர் குறித்து .. .. | 213—214 |

| | பக்கங்கள் |
|---|---|
| விவாதம்—தொடர்ச்சி | |
| அழைக்கும் முறை | 214—215 |
| உரையை எழுதி வந்து படித்தல் | 215—216 |
| கற்பனையாகப்பேசுதல் | 216—217 |
| கன்னிப் பேச்சு | 217 |
| கால வரையறை | 218—224 |
| சவால் விடுதல் | 225 |
| சுருங்கச் சொல்லி விளக்குதல் | 225 |
| தலைவரைப் பற்றிப் பேசுதல் | 225 |
| தவறான தகவல் | 225 |
| பத்திரிகைச் செய்திகள் | 226 |
| பிற அவையில்/குழுவில் பேசியது | 226 |
| பேசியதையே பேசுதல் | 227 |
| பேசும் முறை | 227—231 |
| மத்திய அரசின் கொள்கைகள் | 231 |
| வெளியே பேசப்பட்டவை | 231—232 |
| விவாதம்—ஏனையவை— | 232—237 |
| வினாக்கள்—விடைகள்— | 237—247 |
| துணை வினா—அனுமதி | 237 |
| துணை வினா—குற்றச்சாட்டுகள் | 238 |
| துணை வினா—கேட்கும் முறை | 238—243 |
| துணை வினா—பதிலளிக்கும் முறை | 243—244 |
| வினாக்கள்—விடைகள்—நடைமுறைகள்— | 244—247 |
| வெளிநடப்பு— | 247 |


# தீர்ப்புரைகள் மற்றும் குறிப்புரைகள்.

*(16-1-1985—30-1-1988)*

## அரசியலமைப்புச் சட்டப் பிரிவை எரித்தோர்— உறுப்பினர் தகுதியை இழத்தல்.

The point now for consideration is whether a Member having taken oath under Article 188 of the Constitution, can violate the oath and still continue as a Member of this House.

I must mention, as a Speaker of this House at this juncture, I have a constitutional duty to take action against Members of the Assembly who grossly violate the oath or affirmation.

In this case of burning publicly the Constitution or a part of it, Criminal Courts and the Executive are concerned with violation of Criminal law and as such their prosecution and verdict has nothing to do with the discharge of Constitutional obligations of Members, but the Speaker is concerned with it. In other words, we, the Legislators are concerned about the conduct of the Members of this House in burning publicly the Constitution and its effect on their status. However, unpleasant it may be, I must say that as a Constitutional functionary I cannot be a silent spectator to the burning publicly of the Constitution by any Member of this House.

The question now before the House is whether the Members who burnt the Constitution publicly have violated the oath taken under the Constitution, that they will bear true faith and allegiance to the Constitution of India as law established. Every Member of this House has a Constitutional obligation to perform under Article 188 and there is an express provision of penalty for non-compliance of the provisions of Article 188 before taking his seat in the House. So taking oath is not a mere formality or a ritual. Hence it is clear that an elected Member's eligibility to sit in this House arises because of the oath he is bound to take under the Constitution. By burning publicly the Constitution, those Members have made it understood that they have no faith or allegiance to the Constitution of India.

The founding fathers of the Constitution could not have visualised Members of the Legislature or Parliament burning the Constitution or part of it publicly and hence in the absence of express provisions of law in the Constitution dealing with the Members of this House for having violated the oath taken immediately after election to the House, I have no other option except to invoke my residuary power under Rule 312 of Tamil Nadu Legislative Assembly Rules framed under Article 208 of the Constitution of India to preserve and protect the Constitution of India.

Rule 312 of the Tamil Nadu Legislative Assembly Rules runs as follows:

"All matters not specifically provided for in the Constitution or in these rules and all questions relating to the detailed working of these rules shall be regulated in such manner as the Speaker may from time to time direct."

I would like to point out that the Legislature, Judiciary and the Executive are all creatures of Constitution. It has been repeatedly held and I hold that Constitution is supreme and any Member of this House causing injury to its supremacy will never be tolerated.

Hence, I declare that the Members of this House, viz.,

1. Thiru K. Anbazhagan, representing Park Town Constituency,
2. Thiru S. Balan, representing Egmore Constituency,
3. Thiru A. Selvarasan, representing Harbour Constituency,
4. Thiru Parithi Ilamvazhuthi, representing Perambur Constituency,
5. Thiru P. Ponnurangam. representing Royapuram Constituency,
6. Thiru M. Ramanathan, representing Coimbatore (West) Constituency and
7. Thiru R. Chinnasamy, representing Dharmapuri Constituency have violated the oath taken by them under Article 188 by burning the Constitution or part of it publicly and therefore the elected Members' eligibility to sit in this House ceases and they are disqualified to continue as Members in this House.

I am forwarding the copy of this Ruling along with the proceedings to His Excellency the Governor of Tamil Nadu as well as to the Election Commission of India, New Delhi, for appropriate follow up action.

பதவி நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர்களின் மேல் முறையீடு தொடர்பாக உச்ச நீதிமன்றம் அனுப்பியுள்ள முன்னறிவிக்கையை ஏற்காதது குறித்து தலைவர் பின்வருமாறு அறிவித்தார்:

"Iwant to inform the Hon.Members of this House that I have received today by post from the Supreme Court of India a notice in regard to the Appeal filed by certain expelled Members of this House against the judgment of the Madras High Court upholding the expulsion of the Members from the House, informing that the application will be listed before the Supreme Court on 20th July 1987.





As per the Constitutional provisions and the conventions followed in this House, I feel that I cannot be and do not propose to be subjected to the authority of any Court in respect of the proceedings of this House. Hence I am not going to respond to the notice.

A similar notice has also been received by the Secretary, Legislative Assembly. I am directing him not to respond to the notice as the matter in question relates to the proceedings of the House.

However, I request the Hon. Minister for Law to instruct the Advocate-General, Tamil Nadu to apprise the Supreme Court of the correct legal and Constitutional position in the matter."

1986 XXXI 44-46, 47-49, 423-517
1987 XLIII 807

**அவைக்குள் அனுமதி—**

கேள்வி நேரத்தில் அமைச்சர்களுடைய பணியாளர்கள் அவைக்குள்ளே வருவதைத் தவிர்ப்பது நல்லது.

*1986* XV *325*

**அவையில் காட்டப்பெறும் பொருட்கள்—**

ஓர் உறுப்பினர் உரையாற்றுகையில் போஸ்ட்டரைக் காட்டிய போது தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார் :

"இப்படியெல்லாம் திடீரென்று போஸ்ட்டரைக் காண்பிக்கக்கூடாது. தலைவரிடம் காண்பித்துவிட்டுப் பேசப் பழக வேண்டும்."

*1987* XXXIV *272–273*

**அவையில் பயன்படுத்தப்பெறும் சொற்கள், சொற்றொடர்கள்—**

அரசியலமைப்புச் சட்டப் பிரிவைப் பொது இடத்தில் எரித்ததற்காக சில உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்வது குறித்த தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பேசிய ஓர் உறுப்பினர் முதலமைச்சர் குறித்து குறிப்பிட்ட சில சொற்களைத் திரும்ப பெற வேண்டுமென்று பல உறுப்பினர்கள் கோரியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"..அந்த மாதிரி வார்த்தைகளைத் தயவுசெய்து பயன்படுத்த வேண்டாம். பொதுக் கூட்டங்களில் பேசுகிற விவகாரம் வேறு, இங்கே பேசுவது வேறு..

அந்த வார்த்தைகள் சரியில்லை என்பதால் வாபஸ் வாங்கத்தான் வேண்டும்.

..I have to protect the Hon. Chief Minister because he is a Member of the Legislative Assembly.

..The Hon. Member has to withdraw the words; otherwise he cannot continue his speech."

அவையில் பயன்படுத்தப்பெறும் சொற்கள், சொற்றொடர்கள்—தொடர்ச்சி.

எந்தவிதமான நோக்கத்தோடும் அல்லது களங்கப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடும், தான் முதலமைச்சரைப் பற்றிப் பேசவில்லை என்றும், அவரிடம் தனக்குத் தனி மரியாதை உண்டு என்றும் அவ்வுறுப்பினர் தெரிவித்த பிறகு பிரச்சினை முடித்துக் கொள்ளப்பெற்றது.

1986 XXXI 428-430, 460.

'' அயோக்கியன் '' is an unparliamentary expression

1987 XXXVII 647

உறுப்பினர் ஒருவர் தம் பேச்சில் திட்டக் குழுவின் அமைப்பு பற்றி குறிப்பிட்டு, 'கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதை' என்று கூறியதையொட்டி மற்றொரு உறுப்பினர் அப்பழமொழி அவைக் குறிப்பில் இருக்கலாமா என்று வினவியபோது, ''இருக்கலாம்'' என்று தலைவர் குறிப்புரைத்தார்.

1987 XXXIX 806

எரியாத தெருவிளக்குகள் குறித்து மின் வாரியம் கொடுத்துள்ள கணக்கை ''காந்தி கணக்கு'' என்று ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது, ''காந்தி கணக்கு'' என்ற சொற்கள் அவைக் குறிப்பில் இருக்கலாம் எனக் குறிப்புரைக்கப்பெற்றது.

1986 XXX 235-236

ஓர் உறுப்பினர் தம் உரையில் ''ஆயிரத்து தொள்ளாயிரத்து எம்பளத்தி ஐந்தாம் ஆண்டு'' என்று குறிப்பிட்டவுடன் அவையில் எழுந்த சிரிப்பொலியைத் தொடர்ந்து தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''எம்பளத்தி'' என்பது தென்னாற்காடு பாஷை.

1985 XIV 434

ஓர் உறுப்பினர் தம் பேச்சில், ''..கசாப்புக் கடை வைத்துக் கொண்டு காருண்யவாதம் பேசாதீர்கள்'' எனக் குறிப்பிட்டபோது, 'கசாப்புக் கடை' என்று குறிப்பிடலாமா என மற்றொரு உறுப்பினர் வினவியபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' கசாப்புக் கடை என்பது நம்முடைய நாட்டிலே புழக்கத்திலே இருக்கிற வார்த்தைதான். கறிக்கடை என்றால் வெஜிடேபிள்சைக் குறிக்கும். கசாப்புக் கடை என்றால் ஆட்டுக் கறியைக் குறிக்கும்.''

1986 XXXI 442-444



அவையில் பயன்படுத்தப்பெறும் சொற்கள், சொற்றொடர்கள்—தொடர்ச்சி

ஓர் உறுப்பினர் தமது உரையில், ''வசூலிக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டதா'' என்று குறிப்பிட்டதை இன்னொரு உறுப்பினர் ஆட்சேபித்தபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' கொள்ளை என்ற வார்த்தைக்கே இங்கே இடமில்லை. கொள்ளையென்ற வார்த்தைக்கு அர்த்தமே வேறு. கொள்ளையென்றால் ஆங்கிலத்தில் 'டெக்காய்ட்டி' என்று சொல்வார்கள், for decoity, five or more persons are required and force also is necessary.''

1987 XXXV 576

'' காவல்துறை என்று ஒன்று இருந்தால், அது கொஞ்சம் படம் எடுக்கத்தான் செய்யும். படம் எடுத்து ஆடினால்தான் கொஞ்சம் பாதுகாப்பு இருக்கும். பாம்பு படம் எடுத்து ஆடவில்லை என்று சொன்னால், பொது மக்களுடைய நிலை என்ன ஆகும், ரத்தம் சொட்டச் சொட்ட வந்த பாம்பினுடைய கதைபோல் ஆகும். எனவே, போலீஸ் இலாகாவைப் பொறுத்தவரையில் அது கடிக்காது'' என்று ஓர் உறுப்பினர் குறிப்பிட்டது உகந்தது அல்ல என இன்னொரு உறுப்பினர் தெரிவித்தபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

'' உதாரணத்திற்கு இவ்வாறு சொல்லப்பட்டிருப்பதால், அது இருக்கலாம்.''

1985 XII 341

கூட்டுறவுத் துறையில் சனியன் பிடித்து 11 வருடங்கள் 10 மாதங்கள் ஆகின்றன என்று ஓர் உறுப்பினர் கூறியதில் உள்ள 'சனியன்' என்ற சொல் அவைக் குறிப்பில் இருக்கலாமா என்ற பிரச்சினை எழுப்பப்பட்டபோது, ''அது நாம் எல்லாம் உபயோகப்படுத்துகிற வார்த்தைதான், ஒன்றும் தவறு இல்லை'' என்று குறிப்புரைக்கப்பெற்றது.

1987 XXXIII 323

செங்கற்பட்டு மாவட்டத்தை அண்ணா மாவட்டம் என்று ஓர் உறுப்பினர் குறிப்பிட்டுப் பேசுவது முறையா என்று இன்னொரு உறுப்பினர் வினவியபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' செங்கற்பட்டு மாவட்டம் என்றுதான் அது இருக்கும். அவைக் குறிப்பில் அது திருத்தப்படும். திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டிருக்கும் மாவட்டம்தான் அண்ணா மாவட்டம். ஒரு மாவட்டத்தின் பெயரை உறுப்பினர் விருப்பப்படி சபையிலே அழைக்க முடியாது.''

1986 XXV 607-608

அவையில் பயன்படுத்தப்பெறும் சொற்கள், சொற்றொடர்கள்—தொடர்ச்சி

" நீங்கள் எண்ணிப் பாருங்கள் "—இதில் 'நீங்கள்' என்ற சொல் பேரவைத் தலைவரையே குறிக்கும். அவ்வாறு சொல்லாமல், கட்சியின் பெயரை வேண்டுமானால் குறிப்பிடலாம்.

1985 II 248

'பொய்' என்ற சொல்லை ஓர் அமைச்சர் குறிப்பிட்டபோது, 'உண்மைக்கு மாறானது' என்ற சொற்களைப் பயன்படுத்த வேண்டுமென்று குறிப்புரைக்கப்பெற்றது.

1987 XXXII 40

'பொய்' என்ற வார்த்தையைச் சொல்லக் கூடாது.

1986 XV 85

'விவசாயிகள், வியாபாரிகளிடம் ஏமாந்து கொண்டிருக்கிறார்கள்' எனப் பேசப்பட்டதை ஆட்சேபித்த ஓர் உறுப்பினர் அப்பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கோரியபோது தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார் :

"ஏமாற்றுகிறார்கள் என்று சொல்வதில் தப்பு இல்லை ; அது ஒன்றும் அன்-பார்லியமெண்டரி வார்த்தை அல்ல".

1986 XXXI 190

"1947-ஆம் ஆண்டிலிருந்து இன்றையவரையிலும் இந்த நாட்டை எங்கள் பாரம்பரியத்தைத் தவிர வேறு எந்தப் பாரம்பரியமும் கட்டிக்காக்க முன்வரவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1977-ஆம் ஆண்டிலே நீங்கள் மாற்றிப் பார்த்தீர்கள். 2½ ஆண்டுக்குப் பின்னாலே தாக்குப் பிடிக்க முடியாது தாமாகவே விட்டு விட்ட வரலாறுதான் இந்திய சரித்திரத்தில் காணப்படும் வரலாறு"—இதில் வருகின்ற தாக்குப்பிடிக்க முடியாது என்ற சொற்களை இன்னொரு கட்சி உறுப்பினர் ஆட்சேபித்த போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"அந்த வார்த்தைகள் அன்-பார்லிமெண்டரி அல்ல."

1986 XXIX 91–92, 94–95



அவையில் பயன்படுத்தப்பெறும் சொற்கள், சொற்றொடர்கள்—தொடர்ச்சி

" Irresponsible" என்று பொருள்படும் வகையில் பேசப்பெற்ற பகுதி குறித்து பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது :

" It is not unparliamentary. But let the Members use a polite language. "

1985 IV 445–446

விவாதத்தில் தடித்த வார்த்தைகளை உறுப்பினர்கள் பயன்படுத்தக் கூடாது. தடித்த வார்த்தைகளைப் பேசினால் மற்ற உறுப்பினர்களும் அதைப் பயன்படுத்துவார்கள்.

1986 XXXI 443

அறிக்கைகள்—

அமைச்சர் அறிக்கை அளித்த பிறகு உறுப்பினர் ஒருவர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்ப முயன்றபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

"There shall be no such debate on such statement at the time it is made என்று விதி இருக்கிறது".

1985 XIII 516

அமைச்சரின் அறிக்கைக்குப் பின் ஒழுங்குப் பிரச்சினையின் மூலம் ஓர் உறுப்பினர் விளக்கம் பெற முயன்றபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"அமைச்சருடைய அறிக்கையின்மீது எந்தவிதமான விவாதமும் கூடாது. இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் கிடையாது."

1987 XXXII 85

அமைச்சரின் அறிக்கை பற்றிய விளக்கங்களைத் திடீரென ஓர் உறுப்பினர் எழுப்பியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது :

அமைச்சரின் அறிக்கையில் தவறு இருப்பதாகக் கருதினால் அது குறித்து எழுப்ப சட்டமன்றப் பேரவை விதி 114(1)-ன்படி தலைவரின் முன் அனுமதி பெறவேண்டும்,

விதி 114(1)-ல் பின்வருமாறு குறிப்பிடப்பெற்றுள்ளது :
"A Member wishing to point out any mistake or inaccuracy in a statement made by a Minister or any other Member shall, before referring to the matter in the House, write to the Speaker pointing out the particulars of the mistake or inaccuracy and seek his permission to raise the matter in the House".

தலைவரின் அனுமதி பெற்று எழுப்புகிறபோது அமைச்சருக்கும் அதை மறுப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்றும் திடீரென்று திரும்பவும் அதுபற்றிப் பேசுவதை அனுமதிக்க முடியாது என்றும் குறிப்புரைக்கப்பெற்று அவ்வாறு அனுமதியின்றிப் பேசிய பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றன.

1986 XVII 240, 241, 242, 243

அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அவையில் வைக்கப் படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியபோது அந்த அறிக்கை அவையில் அளிக்கப்படும்போது அதுபற்றிய விளக்கம் அளிக்கப்படும் என்று தலைவர் குறிப்புரைத்தார். அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அறிக்கையை அவைக்கு அளித்தபோது தெரிவித்ததாவது :

"..அறிக்கையை அச்சிட்டு வழங்குவதற்குத் தேவையான அவகாசம் இல்லாத காரணத்தால் ஐந்து நகல்கள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்ட மன்ற நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளன. அறிக்கை அச்சிடப்பெற்ற பின்னால், அச்சிடப்பெற்ற பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்."

1987 XLVI 600, 602–603

குதிரைப் பந்தய ஒழிப்பு குறித்து விதி 111-ன் கீழ் அமைச்சர் அறிக்கை அளிக்கத் தொடங்கியபோது அதே பொருள் குறித்து இன்னொரு உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். அதற்குத் தலைவர் அளித்த குறிப்புரையாவது :

"அமைச்சர் படிக்கப் போகின்ற அறிக்கை என்னவென்று உறுப்பினருக்குத் தெரியாது. எனவே, அவர்கள் படித்த பிறகு கேளுங்கள்."

1986 XXVI 176–179



சட்டமன்றப் பேரவை விதி 112-ன்கீழ் ஓர் அமைச்சர் அவையில் அறிக்கை அளித்த பிறகு இப்படிப்பட்ட அறிக்கைகளை உறுப்பினர்களுக்கு சர்க்குலேட் செய்ய வேண்டுமென்று ஓர் உறுப்பினர் கோரியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"அவ்வறிக்கையின் நகல், விதிகளின்படி நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர்கள் அங்கே சென்று பார்த்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது."

1986 XXVIII 77

தம் வீட்டில் வருமான வரி அதிகாரிகள் அல்லது C.B.I. அதிகாரிகள் சோதனை செய்தார்கள் என்ற செய்தியை மறுத்து சட்ட அமைச்சர் பேரவை விதி 111-ன்கீழ் அறிக்கை அளித்ததை சில உறுப்பினர்கள் ஆட்சேபித்த போது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

"இப்பொருள் நீதி மன்றத்தின் முன் இல்லை."

1986 XXVI 185

பேரவை விதியின்கீழ் அமைச்சர் அறிக்கை அளித்த பிறகு அதன்மீது விவாதம் கூடாது.

1986 XVIII 329

மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிக்கை படிக்கும் நேரத்தில் உறுப்பினர்கள் அவரவர்கள் இடத்தில் அமர வேண்டும்.

1987 XXXII 82

விதி 111-ன்கீழ் அமைச்சர் அறிக்கை வைத்துவிட்டால் உடனே விளக்கம் கேட்க முடியாது.

1985 XII 331
1986 XVI 570

விதி 111-ன்கீழ் அமைச்சர் ஒருவரை அறிக்கை அளிக்க அழைத்த பிறகு, சில உறுப்பினர்கள் பேச முயன்றபோது தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார் :

"Kindly do not waste the precious time of the House. இப்படி எல்லோரும் எழுந்து பேசுகிறீர்கள். நாட்டு மக்களுக்கெல்லாம் தெரியட்டும், நீங்கள் அறிவிப்பு கொடுத்த கண்டனத் தீர்மானத்தை நிராகரித்து விட்டேன். அதை நீங்கள் மீண்டும் எழுப்புவீர்களானால் ஜனநாயக நிறுவனத்தையே நீங்கள் தடுக்கிறீர்கள்."

1986 XXXI 354

உரிமைப் பிரச்சினைகள்—

அமைச்சர்கள் மீது—

பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர்—

அம்பாசங்கர் குழுவின் அறிக்கையையொட்டி ஏற்கெனவே ஆணை பிறப்பித்துவிட்ட பிறகு சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் அவ்வறிக்கை பரிசீலனையில் இருக்கிறதென்றும், பரிசீலனை முடிந்தவுடன் அவைமுன் வைக்கப்படும் என்றும் பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கூறியிருப்பது அவை உரிமையை மீறிய செயலாகும் என்று ஓர் உறுப்பினர் கொண்டு வந்த உரிமைப் பிரச்சினை மீது தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார் :

"அதில் 'பிரைமா பேசி' இல்லை."

1986 XXII 977–978

அலுவலர்கள் மீது—

மின்வாரியத் தலைவர்—

மின் வாரியத்தின் ஊழியர்கள் அவர்களுடைய குறைகளைக் குறித்து சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாக பேரவையிலோ அல்லது பாராளுமன்றத்திலோ வினாக்கள் மூலமாகவோ அல்லது விவாதத்தின் மூலமாகவோ எழுப்பக் கூடாது என்றும் அவ்வாறு எழுப்புவது மின் வாரியத்தின் ஆணைக்குப் புறம்பானது என்றும் குறிப்பிட்டு மின் வாரியத் தலைவர் சுற்றறிக்கை விடுத்திருப்பது உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதிப்பதாக உள்ளது என்று ஓர் உறுப்பினர் 1986 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் நாள் அன்று உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். உரிமைப் பிரச்சினையை விளக்கி அவ்வுறுப்பினர் பேசியதற்குப் பிறகு தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"இப்பிரச்சினை குறித்து மின் வாரியத் தலைவரிடமிருந்து விளக்கம் பெற்ற பின்பு என்னுடைய தீர்ப்பை* அளிக்கிறேன்."

1986 XXIX 161–165

---

*பேரவைக் கூட்டத் தொடர் இறுதி செய்யப் பெற்றதால் செல்லிலனற்றதாகி விட்டது.



உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் (மேலவை) மீது—

8-1-1986 ஆம் நாளன்று சட்டமன்றங்களின் கூட்டுக் கூட்டத்தில் ஆளுநர் உரையாற்றியபோது மேலவை உறுப்பினர்களான திருவாளர்கள் எஸ். ஜே. சாதிக் பாட்சா, பி. மாணிக்கம் குறுக்கிட்டுப் பேசி வெளிநடப்பு செய்தது அவையின் கண்ணியத்திற்கு உகந்தது இல்லையென்றும், கூட்டுக் கூட்டத்தில் ஆளுநர் உரை நிகழ்த்துவதற்கு முன்பாக மேலவை உறுப்பினர்கள் பேசுவது அவை உரிமை மீறல் ஆகும் என்றும் குறிப்பிட்டு 10-1-1986 அன்று ஓர் உறுப்பினர் உரிமைப் பிரச்சினை ஒன்றைக் கொண்டு வந்தபோது பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது :

"சட்டமன்றப் பேரவை விதி 17-ன்படி, 'அரசியலமைப்புச் சட்டத்தின் 175 அல்லது 176-வது பிரிவின்படி சட்டமன்றத்தில் இரு அவைகளின் இணைந்த கூட்டுக் கூட்டத்தின்போது அல்லது அரசியலமைப்புச் சட்டத்தின் 175-வது பிரிவின்படி பேரவை உறுப்பினர்கள் தனியே கூடியிருக்கும்போது ஆளுநர் உரை நிகழ்த்துகையிலோ நிகழ்த்துவதற்கு முன்னரோ பின்னரோ, உறுப்பினர் எவரும் தமது பேச்சினாலோ, ஒழுங்குப் பிரச்சினையினாலோ, வேறு எவ்வகையிலோ தடுக்கவோ குறுக்கீடு செய்யவோ கூடாது. அவ்வாறு தடங்கலோ, குறுக்கீடோ செய்வது பேரவையின் ஒழுங்கிற்குப் பெருந்த ஊறுவிளைவிப்பதாகக் கருதப்பெற்று, அடுத்து நிகழும் கூட்டத்தில் பேரவைத் தலைவரால் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பெறும்.' அது மாதிரி சட்டமன்ற மேலவையின் விதிகளிலேயும் உள்ளது.

பேரவை விதி 2(1) (உஉ) இன்படி 'உறுப்பினர்' என்பது 'பேரவை உறுப்பினர்களையே குறிக்கும்'.

ஆனால் தற்போது எழுப்பப்பட்டுள்ள உரிமைப் பிரச்சினை மேலவை உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டதாக உள்ளது. எனவே இதுகுறித்து மேலவையில்தான் உரிமைப் பிரச்சினையை எழுப்ப முடியும்.

இதேமாதிரி சம்பவம் நடைபெற்று, அது அவையின் உரிமை மீறலாகக் கருதப்பட்டு 13-5-1952 அன்று, அன்றைய முதலமைச்சராக இருந்த திரு. இராஜாஜி

உறுப்பினர்கள் (மேலவை) மீது—தொடர்ச்சி

அவர்களால் திரு. டி. பிரகாசம் அவர்கள் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்பட்டது என்று சொன்னார்கள். 13-5-1952 அன்று மேலவையில்தான் திரு டி. பிரகாசம் அவர்களுடைய நடத்தையைக் கண்டிக்கும் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. பின்னர் அது திரும்பப் பெறப்பட்டது. பேரவையில் அது குறித்து எந்தப் பிரச்சினையும் அப்போது எழுப்பப்படவில்லை. எனவே நான் இதற்கு அனுமதி மறுக்கிறேன்.''

1986 XV 61

பத்திரிகைகள் மீது—

அசைடு—

1-3-1987/15-3-1987 நாளிட்ட 'அசைடு' (ASIDE) பத்திரிகையில் சட்டமன்ற உறுப்பினர்கள் நடந்து கொள்ளும் முறை பற்றியும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் நடத்தை குறித்தும் எழுதப்பட்டுள்ள சில வாசகங்கள் பேரவையின் கண்ணியத்தையும் உறுப்பினர்களின் உரிமைகளையும் பெருமளவு பாதிப்பதாக அமைந்துள்ளதால் அவை, உரிமை மீறல் பிரச்சினையாகும் என்று சில உறுப்பினர்கள் கொடுத்திருந்த உரிமைப் பிரச்சினையின் மீது உறுப்பினர்களுடைய கருத்துக்களைக் கேட்டறிந்த பிறகு, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது இப்பிரச்சினையில் அவை உரிமை மீறல் இருப்பதாக நான் கருதுவதால், இப்பிரச்சினையை ஆய்ந்து பேரவைக்கு அறிக்கை அளிப்பதற்காக, பேரவை விதி 226-ன் கீழ் அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புகிறேன்*.''

1987 XXXIII 233

*பேரவை கலைக்கப்படும் நாள் வரையில் இப்பிரச்சினை முடித்து வைக்கப்பெறவில்லை.





பத்திரிகைகள் மீது— தொடர்ச்சி

ஆனந்த விகடன்—

29-3-1987 ஆம் தேதியிட்ட (முன் கூட்டியே வெளி வந்துள்ள) ''ஆனந்த விகடன்'' பத்திரிகை உறுப்பினர்களையும் அமைச்சர்களையும் சமுதாய விரோதிகளாக கேலிச் சித்திரம் வெளியிட்டு, சட்ட மன்றத்தைக் கேவலப் படுத்துவது முறையா என்று 28-3-1987 ஆம் நாளன்று ஓர் உறுப்பினர் வினவியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''சில பத்திரிகைகள் விளம்பரத்திற்காக — இப்படி எழுதினால்தான் விளம்பரம் கிடைப்பது போலவும், இங்கே எழுப்பப்பட்டால் அவர்களுக்கு அதிக விளம்பரம் கிடைப்பது போலவும், வியாபாரத்தில் முன்னேறலாம் என்றும்—இந்தப் பணியைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பற்றி எழுப்புவதற்கு உங்கள் கையிலே ஒன்றும் இல்லை. ஆயுதம் உங்கள் கையிலே இல்லை. சட்டசபையில் ஓர் இதழ் இருக்குமானால் அதைப் பார்த்துக்கொள்ளலாம்.''

தலைவர் மேலும் தமது தீர்ப்புரையில் குறிப்பிட்டதாவது:

"I condemn that publication.

It is brought to my notice by some sections of the House regarding the publication on the front cover page of 'Ananda Vikatan', carrying a defamatory statement, which I do not want to mention here— and which was aimed and calculated to damage the reputation of the Members of the House in general and more so the Ministers in particular.

A man's reputation is a man's property and under the guise of freedom of press, one would expect to preserve and promote the freedom of citizen first and then talk about democracy. Under the guise of democracy, it is not the duty of the press to damage the reputation of the M.L.As. and the Ministers in general and to push and promote the sales in the market. They have steeped to the low level of injuring the reputation of M.L.As. I demand on behalf of the Members of the House and order 'Ananda Vikatan' to publish in the front page their apology for this publication failing which summary sentence will be passed by the House itself. (Cheers).

Our defamatory laws are not so stringent and hence this irresponsible gutter publication. Writers and Editors know that with a protracted and prolonged trial, one would not normally resort to legal remedy in the Court of Law.

I appeal to the journals with good heritage a long heritage – to condemn this irresponsible publication to preserve the freedom of the Members.

I also come to know about some recently started gutter yellow journals/publications. Their aim is only to mar the reputation of M.L.As. in the eyes of the public and thereby cause irreparable damage to democracy itself. I mention and warn these irresponsible press that the Legislature is a Court of Record and it will take cognizance in future such publications and deal with them straightaway to prevent such gutter publications.

I would like to mention at this juncture that one journalist in Tamil Nadu was sentenced to undergo three months imprisonment by the Supreme Court and was also ordered to go to every Judge's house and apologise before entering the jail to serve the sentence. I request these to be construed as precedents and followed as precedents.

Nobody has a right to mar the reputation of M.L.As. and Ministers. I would like to mention that the recently started certain weeklies and magazines are prone to these libellous gutter publications and tend to lower the reputation of the Dailies and Journals with long heritage like 'Ananda Vikatan'. That is all".

தலைவர் அளித்த தீர்ப்புரைக்கிணங்க, அந்தப் பத்திரிகை வருத்தம் தெரிவித்து செய்தி வெளியிடாததைத் தொடர்ந்து 4–4–1987 ஆம் நாளன்று தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார்.

"In response to the ruling given by me in the House about 'Ananda Vikatan' on 28th March 1987, the magazine has failed to comply with the order to publish in the front cover page an apology. Instead, it has published an article sarcastically explaining the reasons to the readers. The Editor has sent a letter enclosing the said article to the Secretary of the Legislative Assembly which has been placed before me by the Secretary.



The Editor in his explanation to the readers has said that the words referred to both the Ministers and the M.L.As. are only political jokes, which I am unable to accept for the following reasons :

The words referred to by the Editor of 'Ananda Vikatan' on the front cover page of its issue, dated 29th March 1987 were mischievous and published maliciously and calculated to undermine the prestige and dignity of the House and the reputation of the Ministers and M.L.As.

The explanation has not mitigated the damage caused to the dignity of the House as there was no apology tendered by the Editor but instead has cast additional slur on the dignity of the House and the reputation of the Members.

It is obvious that this Journal has been continuously for a long time been carrying on this kind of mischievous and scandalous publications against the elected representatives of this House with the deliberate intention to malign the dignity and reputation of this House and its Members. I have no hesitation to hold that the Editor of 'Ananda Vikatan' has committed *prima facie* breach of privilege and contempt of the House.

I would like to remind the concerned, 'A man was walking in Hyde Park, London, having his walking stick; it hit the nose of a man coming opposite direction, and said it is his freedom to do so. It is absurd.' The freedom of the man waving the walking stick ends where the nose of the person coming in the opposite direction ends.

I would like to mention at this juncture on behalf of the Members of this House that the recent trend of journalism by some vested interest is to totally mislead the public and more so some press are indulging in blackmailing tactics by resorting to absolute falsehood and total vulgarism. I, on behalf of the Members of this House, appeal to the public at large not to read and attach credibility to these journals which are selfishly bent upon commercial exploitation of the ignorance of the public for their pecuniary gain.

உரிமைப் பிரச்சினைகள்— தொடர்ச்சி

பத்திரிகைகள் மீது.— தொடர்ச்சி

ஆனந்த விகடன்— தொடர்ச்சி

While we have to appreciate the commendable and constructive contributions being made by some responsible Press in public interest, unfortunately some Press have opened the floodgates that psychologically encourage cruder feelings, characterlessness moral deprivity and lack of civic responsibility in the minds of our people, particularly the youth of our society. The moral responsibility and duty of the Press as a whole is mainly to educate the people with regard to economic and developmental aspects and moral values. This is the urgent need of our society which is yet to socially and economically develop. The Press has to play a very major role in this direction in our country today. But to our anguish and disappointment a few Press have resorted to undesirable and depraved kind of publication.

I quote from an Article written by Mr. Rajeev Dhavan on the law of the Press in India in the Journal of the Indian Law Institute, New Delhi in July–September 1984, Page 289—

"India's press has always had a very inchoate conception of its societal function. This is amply shown by the literature on the press. Some early works convey exaggerated notion of the dangers and contributions of the press. Later accounts synthesize information about the press, correlate it to political trends, or consist of research commissioned by the Government.

Perceptions of the press vary. Some describe the press as routine, dull without accountability or money, ambivalent about the Government and lacking a well founded public or collegiate critique (or) the art of relevant or objective criticism.

Ultimately, it is the pathology of the operation of the law that determines its social and operational context. On paper, India's press laws look archaic, oppressive and harsh. In fact, the press has been able to make symbolic and other gains by making social and political capital out of the Court cases and public advocacy campaigns. The trial process becomes a vehicle for transforming restraints into possibilities'.



உரிமைப் பிரச்சினைகள்— தொடர்ச்சி

பத்திரிகைகள் மீது— தொடர்ச்சி

ஆனந்த விகடன்— தொடர்ச்சி

I would like to bring to the notice of the House—that is the Hon. Members—that there is a Press Ombudsman in Sweden and as such the House may recommend to the Governments both at the Centre and the State to have such Ombudsman in our State. With these observations, I hold that the above matter affects the privilege and contempt of the House and require intervention of the House and I place the matter before the House for its decision".

இப்பிரச்சினை குறித்து அவை முடிவு செய்யலாம் எனத் தலைவர் குறிப்புரைத்த பிறகு, பேரவை முன்னவர், "29—3—1987ஆம் தேதியிட்ட 'ஆனந்தவிகடன்' வார ஏட்டின் முன் அட்டைப் பக்கத்தில் பிரசுரித்து இருந்த கேலிச் சித்திரமும், பேரவைத் தலைவர் அவர்கள் 28—3—1987 அன்று பேரவையில் அளித்த தீர்ப்பிற்கு மேற்கண்ட பத்திரிகை ஆசிரியரிடமிருந்து வரப்பெற்ற 2—4—1987ஆம் நாளிட்ட கடிதமும், சட்டமன்றப் பேரவை விதி 225-ன் கீழ் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிந்தார்.

மேற்கண்ட தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு பின் வருமாறு:

"—A man's reputation is a man's property. A man has freedom to have his reputation safeguarded.

..If they are attacking M.L.As. and Ministers, I declare, that they are yellow journals. They have no character, they have no morality. Healthyman will give a healthy teaching. Filthy man will give filthy teaching. These are all filthy teachings. Don't hold a brief for an yellow journal. I am here to protect everybody.

தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே உள்ள 224 சட்டமன்ற உறுப்பினர்களையும், இப்போது ஓய்வூதியம் வாங்கக் கூடிய சட்டமன்ற உறுப்பினர்களையும், முன்னாள் அமைச்சர்களையும் பாதுகாக்கக்கூடிய பொறுப்பு இந்த அவைக்கு இருக்கிறது. இதைப்பற்றி மேலும் பேச வேண்டாம். ஒரு வரி 'அப்பாலஜி' போடுவதால் தரம் குறைந்து விடும், பிரஸ்டிஜ் குறைந்து விடும் என்று கருதுகிறார்கள்.

..ஒரு யோசனையை நான் சபைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். Indian Penal Code Sections 500, 501, 502.

*Section* 500:

'Whoever defames another shall be punished with simple imprisonment for a term which may extend to two years, or with fine, or with both.'

This is for the consideration of the House. State has got a right to pass amendments.

*Section* 501: *Printing or engraving matter known to be defamatory.*

'Whoever prints or engraves any matter, knowing or having good reason to believe that such matter is defamatory of any person, shall be punished with simple imprisonment for a term which may extend to two years, or with fine, or with both'.

*Section* 502: *Sale of printed or engraved substance containing defamatory matter.*

'Whoever sells or offers for sale any printed or engraved substance containing defamatory matter, knowing that it contains such matter, shall be punished with simple imprisonment for a term which may extend to two years, or with fine, or with both.'

Then *Section* 292(*A*) : 'Printing etc., of grossly indecent or scurrilous matter or matter intended for blackmail—

'(*f*) offers or attempts to do any act which is an offence under this Section, shall be punished on first conviction with imprisonment of either description for a term which may extend to two years or with fine or with both, and in the event of a second or subsequent conviction with imprisonment of either description for a term which may extend to five years and with fine'.

This is for your information".

தீர்மானத்தின் மீதான விவாத முடிவில், கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.





"ஆய்வுக்குப் பின், ஆனந்த விகடன் பத்திரிகை, கேலிச் சித்திரம் வெளியிட்டதன் மூலம் இப்பேரவையின் உரிமையை மீறியுள்ளதாக இப்பேரவை தீர்மானித்து, அந்த ஏட்டின் ஆசிரியர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களைக் கைது செய்து சென்னை மத்திய சிறையில் மூன்று மாதகாலம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது."

அவையின் முடிவின்படி அந்த ஏட்டின் ஆசிரியர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு சென்னை மத்திய சிறையில் மூன்று மாத காலம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

6-4-1987ஆம் நாளன்று மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பெருந்தன்மை, வேண்டுகோளின்படி அந்தப் பத்திரிகை ஆசிரியரை, தலைவர் அவையின் அனுமதியுடன் விடுதலை செய்வதாக அறிவித்தபோது வழங்கிய தீர்ப்புரை பின்வருமாறு;

"This is to inform the House that the Editor of 'Ananda Vikatan' Thiru S. Balasubramanian, was arrested on Saturday, the 4th April, 1987 in pursuance of a Warrant issued by me to execute the sentence of three months rigorous (interruptions) imprisonment passed by the Assembly.

The Hon'ble Chief Minister Dr. M.G.R. has with his magnanimity and gesture requested me to appeal to the House to re-consider and revise the decision.

I am appealing to the Hon'ble Members of this august House to appreciate the Hon'ble Chief Minister Dr. M.G.R.'s gesture and accept this decision.

I would like to mention at this juncture that the democratic institutions should be safeguarded and preserved and then alone the liberty of the individual will not be at stake.

The liberty of common man shall also be preserved and taken note of by the Hon'ble Members of this House, since a common man under earlier Cr. P.C. Section 55, clause (*b*) till 1973 and subsequently amended by Section 42 Cr. P. C. was arrested and detained for not having furnished the place of residence or ostensible means of existence. No doubt, he might have been released the next day or a week after; after furnishing the residential address. There is nobody to fight for the liberty of such poor people.

The preamble of the Constitution enshrining liberty of thought, expression, belief, faith and worship enunciated by the people of India, shall apply to a common man. I appeal to the Press and other institutions to take note of this infringement of liberty of the common man even under law.

I would like to bring to the notice of the Hon'ble Members of this House Article 50 (Part IV-Directive Principles of State Policy) of the Constitution of India, which runs as follows :

'50. The State shall take steps to separate the judiciary from the executive in the public services of the State since the executive is a part of the Legislature and its essential composition, the Legislature, a democratic institution can deliver justice enshrined in the Preamble of the Constitution, to the people.

I accept the appeal of the Hon'ble Chief Minister and appreciate his gesture and in exercise of the residuary powers conferred on me by this august House, I order the release of the Editor of 'Ananda Vikatan', Thiru S. Balasubramanian, from the Central Prison, Madras, to-day, after the period already undergone by him.

இதை அவை ஏற்றுக்கொள்கிறது என்று கருதுகிறேன் ''.

(உறுப்பினர்கள் மேசையைத் தட்டி ஒலி எழுப்பியதன் மூலம் அவை ஏற்றுக் கொண்டது.)

| | | |
|---|---|---|
| 1987 | XXXV | 356–359 |
| | XXXVII | 73–119, |
| | | 277–279 |

தினகரன்—

முதலமைச்சர் அவர்களின் தஞ்சாவூர் சுற்றுப் பயணத்தைக் குறித்து 22–4–1987 அன்று ஓர் உறுப்பினர் தெரிவித்த கருத்துக்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றிருந்தும் நீக்கப்பட்ட அந்தப் பகுதிகளை 23–4–1987ஆம் தேதிய 'தினகரன்' பத்திரிகை பிரசுரித்துள்ளது பற்றி தலைவர் அளித்த தீர்ப்புரை யாவது :

''..அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளை வேண்டுமென்றே பத்திரிகையில் பிரசுரிப்பது அவை உரிமை மீறிய செயலாகும். இந்த நிகழ்வில் இப் பத்திரிகை வேண்டுமென்றே அவைக் குறிப்பிலிருந்து நீக்









கப்பட்ட பகுதியை தெரிந்தே அவையின் நிகழ்ச்சியைத் திசை திருப்பும் நோக்குடன் பிரசுரித்துள்ளது. எனவே, இப்பிரச்சினையை ஆராய்ந்து அவைக்கு அறிக்கை அளிக்கும்படி பேரவை விதி 226—ன் கீழ் அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்''*

| | | |
|---|---|---|
| 1987 | XL | 59–60 |

தினகரன், முரசொலி நாளிதழ்கள் மற்றும் மேலவை உறுப்பினர் திரு. மு. கருணாநிதி மீது—

''எம். ஜி. ஆர். இடம் சாராய ஏஜென்சி கேட்டு சட்டசபையில் மனுவா?'' என்ற தலைப்புடன் 28–6–1985-ம் தேதி தினகரன் மற்றும் 29–6–1985ஆம் தேதியிட்ட முரசொலி நாளிதழ்களில் வெளியான செய்திகளும், மேலவை உறுப்பினர் திரு. மு. கருணாநிதி பேசியதாக அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளும் உறுப்பினர்களின் கௌரவத்தையும் மன்றத்தினுடைய உரிமையையும் குறைப்பதாக இருக்கின்றது என்று குறிப்பிட்டு ஓர் உறுப்பினர் ஓர் அவை உரிமை மீறல் பிரச்சினையை 1985 ஜூலை 2ஆம் நாளன்று எழுப்பிய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

''சம்பந்தப்பட்டவர்களிடம் விளக்கம் கேட்டு என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன்''.

பின்னர் 16–7–1985 ஆம் நாளன்று தலைவர் தம் தீர்ப்புரையில் குறிப்பிட்டதாவது :

''மாண்புமிகு மேலவை உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்கள், தன்னுடைய விளக்கத்தில் தாம் பேசியது என்ன என்பதை மீண்டும் குறிப்பிட்டு விட்டு, சாராய ஏஜென்டுகளுக்காக மனுக்களைக் கொடுத்தார்கள் என்று தெரியவருகிறது. அது உண்மையோ, பொய்யோ எனக்குத் தெரியாது என்றுதான் நான் அந்த நிகழ்ச்சியில் பேசியிருக்கிறேன். இதில் எதுவும் சட்டமன்ற உறுப்பினர்களுடைய கௌரவத்திற்கு மாசு கற்பிக்கும் உள்நோக்கம் எனக்கு இல்லை.

*பேரவை கலைக்கப்படும் நாள் வரையில் இப்பிரச்சினை முடித்து வைக்கப்பெறவில்லை.

மாறாக சட்டமன்ற உறுப்பினர்களை மதித்து, அடிக்கடி முதல் அமைச்சர் அவர்கள் சட்டமன்றங்களுக்கு வரவேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்களுக்காக வாதாடி இருக்கிறேன் என்பதுதான் எனது பேச்சின் சாரமாகும். எனவே எனது பேச்சில் எந்தவித உரிமை மீறலும் இல்லை, என்று கூறியிருக்கிறார்கள்.

தினகரன், நாளிதழ் ஆசிரியர், மாண்புமிகு மேலவை உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்கள் பேசியதாக 28–6–1985 இதழில் வெளியிட்டுள்ள செய்தி என்று பிரச்சினைக்குரிய செய்தியைக் கூறி விட்டு, முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் சட்டசபைக்கு வருவதையே தவிர்க்கிறார் என்பதையும், என்றாவது ஒருநாள் அவர் வரும்போது, அதனை ஒரு முக்கியமான வாய்ப்பாகக் கருதி மனுக்களைக் கூட சட்டசபையிலேயே எம். எல். ஏ-க்கள் கொடுக்க வேண்டிய நிலைமைகள் உருவாகி இருப்பதையும் சுட்டிக்காட்டி, மாண்புமிகு மேலவை உறுப்பினர் பேசியதை தினகரன் வெளியிட்டுள்ளது, இது ஒரு நாளிதழின் கடமையே தவிர, அதில் எந்தவித உள்நோக்கமும் இல்லை. மாண்புமிகு மேலவை உறுப்பினரவர்கள் பேசியதன் விவரம் முழுமையாக 29–6–1985 முரசொலியில் வெளியாகியிருக்கிறது. தினகரன் 28–6–1985 இதழில் அந்தப் பேச்சின் சுருக்கமே வெளியிடப்பட்டுள்ள காரணத்தால், சாராய ஏஜென்சி மனுக்களை அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கொடுத்தார்கள் என்று தெரிகிறது என்பது போல அமைந்துவிட்டது. அது உண்மையோ, பொய்யோ எனக்குத் தெரியாது என்று மாண்புமிகு மேலவை உறுப்பினர் அந்தப் பேச்சில் குறிப்பிட்டு முரசொலியிலும் வெளியான அந்தப் பகுதி தினகரனில் இடம் பெறாமல் போய்விட்டது. மேலும் தற்கால தமிழகத்தில் சாராயக் கடைகள் பலரும் நடத்தி வருகிற சட்ட ரீதியான ஒரு தொழில் ஆகும். ஆகவே சட்டப் பேரவையையோ, சட்டமன்ற உறுப்பினர்களையோ இழிவுபடுத்தும் நோக்கத்துடன் அந்தச் செய்தி வெளியிடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள்.









முரசொலி ஆசிரியர், மாண்புமிகு மேலவை உறுப்பினர் அவர்கள் பேசியதை முரசொலியில் வெளியிட்டுள்ளபடி குறிப்பிட்டுவிட்டு, தினகரன் நாளிதழ் ஆசிரியர் கூறிய காரணங்களையே மறுபடியும் கூறிவிட்டு, 'அதாவது சாராய ஏஜென்டுக்கான மனுக்களைக் கொடுத்தார்கள் என்று செய்தி வருகிறது. அது உண்மையோ பொய்யோ தெரியாது என்றுதான் அந்த நிகழ்ச்சியிலே மாண்புமிகு மேலவை உறுப்பினர் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

அதிலே எதுவும் சட்டமன்ற உறுப்பினர்களின் கௌரவத்திற்கு மாசு கற்பிக்கும் உள்நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. அதனை வெளியிட்ட எங்களுக்கும் சட்ட மன்ற உறுப்பினர்களின் கௌரவத்திற்கு மாசு கற்பிக்கும் உள்நோக்கம் எதுவும் கிடையாது. சட்ட மன்ற உறுப்பினர்களை மதித்து அடிக்கடி முதலமைச்சர் சட்டமன்றங்களுக்கு வர வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்களுக்காக மாண்புமிகு மேலவை உறுப்பினர் அவர்கள் வாதாடியிருப்பதைத்தான் வெளியிட்டிருக்கிறோம். எனவே, நாங்கள் வெளியிட்டுள்ள அந்தச் செய்தியில் எந்தவிதமான உரிமை மீறலும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்' என்று கூறியிருக்கிறார்.

இந்த மூன்று விளக்கங்களிலிருந்தும், பேசப்பட்ட பொருளும் வெளியிடப்பட்ட பொருளும், இங்கு குறிப்பிடப்பட்டது போலவே உள்ளது என்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. தாம் அவ்வாறு பேசியது உண்மை என்று மாண்புமிகு மேலவை உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்கள் கூறியிருக்கிறார். அவர் பேசியதைத்தான் தாங்கள் வெளியிட்டுள்ளதாகப் பத்திரிகைகளும் கூறியுள்ளன.

பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் என்ன கொடுத்தார்கள் என்பதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. மேலும் அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் பேசுகையில் "அன்று சட்டமன்றத்தில் முதல்வரிடம் நாங்கள் மட்டுமல்ல காங்கிரஸ்

உரிமைப் பிரச்சினைகள்— தொடர்ச்சி

பத்திரிகைகள் மீது— தொடர்ச்சி

தினகரன், முரசொலி நாளிதழ்கள் மற்றும் மேலவை உறுப்பினர் திரு. மு. கருணாநிதி மீது— தொடர்ச்சி

பேரியக்கத்தைச் சேர்ந்தவர்களும், ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்களும், பெரியவர்கள், உறுப்பினர்கள் பலரும் மனுக்களைக் கொடுத்தார்கள். அவை என்ன என்று தெரியாமலே ஏதோ சாராய ஏஜென்சி வாங்குவதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள் மனுக்களைக் கொடுத்தார்கள் என்று சொல்லுகிறபொழுது அது எவ்வளவு தூரம் நம்மைக் கேவலப்படுத்துவதாக இருக்கிறது என்ற அந்த அடிப்படையில் இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டுமென்று நான் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.

பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்ட மனுக்கள் என்ன என்பது குறித்து தெரிவதற்கு வாய்ப்பு இல்லை. ஆனாலும், ஒரு முன்னாள் முதலமைச்சர், பல வருடங்கள் இந்தப் பேரவையில் உறுப்பினராக இருந்தவர், தற்சமயம், மேலவை உறுப்பினராக இருப்பவர் ''சாராய ஏஜென்டுக்கான மனுக்களைக் கொடுத்தார்கள் என்று செய்தி வருகிறது. அது உண்மையோ பொய்யோ எனக்குத் தெரியாது'' என்று கூறுவதைப் பொருத்தமான கூற்றாக எடுத்துக் கொள்ள இயலாது. தனக்கு உண்மை என்று நிச்சயமாகத் தெரியாத ஒன்றை பேரவை உறுப்பினர்களைக் குறித்துச் சொல்லும்போது, இப்படிக் கூறுவது பேரவை உறுப்பினர்களது கௌரவத்தைப் பாதிக்கும் என்பது முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்க வேண்டும். எனவே, தெரிந்தே, வேண்டுமென்றே உறுப்பினர்களுக்குக் களங்கம் கற்பிக்கும் நோக்கத்துடன் கூறப்பட்டது என்று கருத இடமிருக்கிறது. இது பேரவை உறுப்பினர்களின் உரிமையைப் பாதிப்பதாகும். ஆயினும், மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள் மேலவை உறுப்பினர் என்பதாலும், பேரவை மற்றும் மேலவை ஆகியவற்றின் சுமுகமான உறவைக் கருதியும் பாராளுமன்ற மரபுகளை ஒட்டியும், இப்பிரச்சினை குறித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைக்கிறேன்.



உரிமைப் பிரச்சினைகள்— தொடர்ச்சி

பத்திரிகைகள் மீது— தொடர்ச்சி

தினகரன், முரசொலி நாளிதழ்கள் மற்றும் மேலவை உறுப்பினர் திரு மு. கருணாநிதி மீது— தொடர்ச்சி

பத்திரிகைகளைப் பொறுத்தமட்டில், முரசொலி நாளேட்டின் ஆசிரியர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார். எனவே, இப்பேரவையில் அவர் மீது அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினைக்கு நடவடிக்கை எடுக்க இயலாது. 1984 ஆம் ஆண்டு பேரவைத் தலைவர்கள், மேலவைத் தலைவர்கள் மாநாடு பம்பாயில் நடந்தபோது இப்பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டு, ஓர் அவையின் உறுப்பினர் வேறோர் அவையின் உரிமை மீறியதாகப் பிரச்சினை எழுந்தால், அப்போது அப்பிரச்சினை குறித்து உரிமை மீறல் எழுப்பப்பட்ட அவையின் தலைவர், அந்த உறுப்பினர் எந்த அவையில் உறுப்பினராக இருக்கிறாரோ அந்த அவையின் தலைவருக்கு அனுப்பி, அவர் மீது நடவடிக்கை எடுப்பதுதான் சரியான முறை என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது.

ஆகவே, முரசொலி நாளிதழின் ஆசிரியர் திரு. மாறன் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதால், அவர் மீது எழுப்பப்பட்டுள்ள உரிமை மீறல் குறித்த பிரச்சினையை நாடாளுமன்றத் தலைவருக்கு எழுதி, தக்க நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

'தினகரன்' நாளிதழ் ஆசிரியர் சம்பந்தப்பட்ட வரையில் இந்த அவையே உரிமை மீறல் குறித்த பிரச்சினையில் நடவடிக்கை எடுக்கலாம் என்பதால், அவை உரிமை மீறல் குழுவிற்கு அனுப்ப பேரவையில் தீர்மானம் கொண்டு வரலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'தினகரன்' நாளிதழின் மீதான உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வரப்பெற்று, அவையின் அனுமதியோடு உரிமைக் குழுவுக்கு * அனுப்பி வைக்கப் பெற்றது.

1985 XI 245-247
XIII 629-631

* பேரவை கலைக்கப்படும் நாள் வரையில் இப்பிரச்சினை முடித்து வைக்கப் பெறவில்லை.

**துக்ளக்—**

"துக்ளக் இதழ் (15-6-1985) முன் அட்டையில் கேலிச் சித்திரம் வரைந்து அதில் பட்டதாரிக்கு சாராயக் கடை, படிக்காதவர்களுக்கு சட்டசபை என்றும்; பக்கம் 32-ல் கேள்விக்கு பதில் தெரிவிக்கும்போது சட்டசபையை மனிதர் கூட்டம் என்றும், சட்டசபையை அலங்கரிக்கிறவர்கள் காகிதத்தை விட கேவலமானவர்கள் என்றும்; பக்கம் 33-ல் கேள்விக்கு பதில் தெரிவிக்கும்போது சட்டசபையில் எம்.எல்.ஏ.க்கள் ரௌடித்தனம் செய்யவில்லை என்றால் அதுவே ஒரு செய்தி என்றும், இப்படியாக சட்டப் பேரவையையும் சட்டப் பேரவை உறுப்பினர்களையும் மிகவும் கேவலமாக சித்தரித்து கேள்வி-பதில் என்ற தலைப்பில் எழுதியிருப்பது சட்டப் பேரவையையும், சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமையையும் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது" என ஓர் உறுப்பினர் ஜூன் 19 ஆம் நாள் அவை உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். அதன் மீது தலைவர் அளித்த தீர்ப்புரையாவது:

"இப்பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்." *

| 1985 | IX | 58-79 |
|---|---|---|

"துக்ளக்" நாளிதழின் அட்டைப் படத்தில் சட்டமன்றம் போன்றும் அதன் நுழைவாயிலில் 'சட்டசபை' என்றும் அதன் முன்னர் இரண்டு கழுதைகள் நிற்பது போன்றும், அவைகளில் ஒன்று, 'கொஞ்சம் இரு, சபாநாயகர் பேசறாரு கேட்கலாம்' என்றும், மற்றொரு கழுதை, "வேண்டாம் ஓடிப் போய் விடலாம், பேசறதுக்கெல்லாம் நம்ப மேலே பழி வரும், நாமதான் கத்தறோம் என்று சொல்லுவாங்க, வா வா" என்று பதிலளிப்பது போன்றும் கட்டடத்தில் உள் இருந்து, "ஏய், கொன்னுபுடுவேண்டா ஓ" என்று குரல் எழுப்புவது போன்றும் கேலிச் சித்திரம் போடப்பட்டுள்ளது என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்தப் பிரசுரம் பேரவையை அவதூறு செய்வது போலவும்,

* பேரவை கலைக்கப்பெறும் நாள் வரையில் இப்பிரச்சினை முடித்து வைக்கப்பெறவில்லை.









**துக்ளக்— தொடர்ச்சி**

பேரவை ஏற்கெனவே எச்சரிக்கை செய்ததற்கு உள்நோக்கம் கற்பிப்பது போலவும் அமைந்துள்ளதால், அவை உரிமை மீறல் பிரச்சினையை எழுப்புவதாக ஓர் உறுப்பினர் 1985 ஆம் ஆண்டு ஜூலை முதல் நாளன்று எழுப்பினார். அது குறித்து அளிக்கப் பெற்ற குறிப்புரையாவது :

"இப்பிரச்சினை அவை உரிமையை மீறிய செயலாகத் தோன்றுவதால் பேரவையின் தலையீடு தேவை என்று நான் கருதுகிறேன். எனவே, ஏற்கெனவே அவையினால் அனுப்பி வைக்கப்பெற்றுள்ள பிரச்சினையோடு இதனையும் ஆய்ந்து அறிக்கை அனுப்ப, இதனை அவை உரிமைக் குழுவிற்கு விதி 252-ன் கீழ் நான் அனுப்பி வைக்கிறேன்." *

| 1985 | XI | 35, 37 |
|---|---|---|

**வணிக ஒற்றுமை—**

1-7-1985 ஆம் தேதியன்று "வணிக ஒற்றுமை' இதழ் ஆசிரியர் திரு. பால்ராஜ் மீதான உரிமை மீறல் பிரச்சினை குறித்து தொடர் நடவடிக்கை அவையால் எடுக்கப்பட்டது.

ஏழாவது சட்டமன்றப் பேரவைக்கு, மேற்படி பொருள் குறித்து அவை உரிமைக் குழுவால் 28-3-1984 ஆம் நாளன்று அளிக்கப்பெற்ற அறிக்கையை பேரவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது.

"28-3-1984 ஆம் தேதியன்று, ஏழாவது சட்டமன்றப் பேரவைக்கு அளிக்கப்பெற்ற "வணிக ஒற்றுமை" திங்களிதழ் மீதான உரிமை மீறல் பிரச்சினை குறித்த ஏழாவது சட்டமன்றப் பேரவையின் அவை உரிமைக் குழு அறிக்கையை பேரவை ஏற்று, இப்பேரவையின் உரிமையை மீறிய செயலுக்காக 'வணிக ஒற்றுமை' திங்களிதழின் ஆசிரியரும், பதிப்பாளருமான திரு. பால்ராஜ் அவர்களைக் கைது செய்து சென்னை மையச் சிறையில் இரண்டு வார காலம் வெறும் காவலில் வைக்கவேண்டுமென்று

* பேரவை கலைக்கப்பெறும் நாள் வரையில் இப்பிரச்சினை முடித்து வைக்கப் பெறவில்லை.

இப்பேரவை தீர்மானிக்கிறது'' என்ற தீர்மானம் அரசின் சார்பாக மொழியப்பெற்று விவாதிக்கப் பெற்றது.

''வணிக ஒற்றுமை'' ஆசிரியருக்கு அளிக்கப்படுகின்ற இரண்டு வார சிறைத் தண்டனையைக் குறைக்க வேண்டுமென்று ஓர் உறுப்பினர் திருத்தம் மொழிந்ததையொட்டி எழுந்த விவாதங்களுக்கு பதில் அளித்து தலைவர் அளித்த தீர்ப்புரைகளின் தொகுப்பாவது :

''..இது நம்முடைய மன்ற உறுப்பினர்களுடைய பிரச்சினை. கண்ணியப் பிரச்சினை. இதை நாம் விவாதிக்கிறதினாலே என்ன அர்த்தம் ஆகிறது என்றால், பொதுவாக, ஏற்கெனவே எதையும் எழுதலாம் என்ற நிலைமை இன்றைக்கு இருக்கிறது, அது குறித்து இந்த அவை எதையும் செய்ய முடியாது என்று வெளியிலே இருப்பவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நீதி மன்றத்திற்கு எப்படி பயப்படுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். நீதிபதியின் முன்னால் அப்படியே ஆடிப்போய் நிற்பார்கள் கன்டெம்ப்ட் ஆப் கோர்ட் என்று கேசிலே வருகின்றபொழுது அப்படி நிற்பார்கள் ஆனால் நம்முடைய மன்றம் வீனியன்டாக இருக்கிறது என்பதற்காக எதையும் எழுதலாம், எந்தக் கார்ட்டூனையும் போடலாம் என்ற நிலைமை இருக்கிறது.

அவையில் நமது உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று அவையை நம்பி உறுப்பினர்களாகிய நாம் இருக்கிறோம். நாம் எல்லா உறுப்பினர்களின் சார்பாகவும் தான் பேசிக் கொண்டு இருக்கிறோம். எனவே, விவாதம்கூட வேண்டாம். என்னுடைய கருத்துகூட, கடுங்காவல் தண்டனை கொடுத்திருக்க வேண்டும். சிம்பிள் இம்பிரிசன்மெண்ட் என்று கொடுத்தால் உள்ளே போய் சாப்பிட்டுவிட்டு வெளியிலே வந்து திரும்பவும் எழுதுவார்கள்.

சட்டமன்ற நடவடிக்கைகளைப்பற்றி விமர்சனம் செய்ய. கொஸ்டின் பண்ண நீதிமன்றத்திற்குக்கூட உரிமை இல்லை. சட்டமன்ற நடவடிக்கைகளை தரக்குறைவாக விமர்சனம் செய்தால் அது உரிமை மீறல் என்றுதான் வரும்.



..பேரவையிலுள்ள 234 மாண்புமிகு உறுப்பினர்களது கண்ணியம், கௌரவம் காக்கப்பட வேண்டும். வெளியிலே உள்ள தனிப்பட்ட ஒருவர் இந்த அவையைப்பற்றி, அவை உறுப்பினர்களைப்பற்றி எதை வேண்டுமானாலும் எழுதலாம் என்பதைப் பேரவைத் தலைவர் என்ற முறையில் என்னால் அனுமதிப்பதற்கில்லை. Perverted intelligent people are doing that. As a Member of this House Thiru Rahmankan should not encourage these perverted people.

..இத்தீர்மானம் குறித்து நடைபெற்ற விவாதம் முழுவதையும் பத்திரிகையாளர்கள் வெளியிட வேண்டாம். In the interest of the public I am ordering that the entire proceedings need not be published. It is enough only if the main portion relating to the 'sentence' is published. உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்காகத்தான் நான் இதைச் செய்கிறேன். இது போன்று நீதிமன்றத்திலும்கூட நடந்திருக்கின்றது. அதை முன்மாதிரியாக வைத்துத்தான் சொல்கிறேன்.''

சிறிது விவாதத்திற்குப்பின் திருத்தம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்று, 'வணிக ஒற்றுமை' ஆசிரியர் திரு. பால்ராஜ் அவர்கள் இரண்டு வார காலம் வெறும் காவலில் வைக்கப்படவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.

'வணிக ஒற்றுமை' ஆசிரியர் திரு. ஏ. எம். பால்ராஜ் அவர்களுக்கு பேரவை வழங்கிய தண்டனையை எதிர்த்து அவர் உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கின்மீது நீதிபதி அளித்த தீர்ப்பில், முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள், உறுப்பினர்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென்று கூறியதை மேற்கோள் காட்டி தெரிவித்த கருத்துக்களைப்பற்றி ஓர் உறுப்பினர் குறிப்பிட்டு நீதித் துறையில் தலைவருடைய தீர்ப்பை எடுத்துக் கொண்டு விவாதிப்பது சரிதானா என்றும், எதிர்காலத்திலே நீதிபதிகளைப்பற்றிப் பேரவையிலே பிரச்சினைகளை எழுப்பலாமா என்றும்,

வணிக ஒற்றுமை ஏட்டின் ஆசிரியருக்கு பேரவை அளித்த தண்டனை நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்றும் விளக்கங்கள் கோரியபோது பின்வருமாறு தீர்ப்புரைக்கப் பட்டது:

"It is quite unfortunate that the Hon'ble Judge has referred to an extract. That is uncalled for. அதைச் செய்திருக்கக் கூடாது. An excerpt of a speech of Franklin D. Roosvelt, President of United States of America:

'When the Congress has sought to stabilise national agriculture, to improve the condition of labour, to safeguard business against unfair competition, to protect our national resources and in many other ways to serve our clear national needs, the majority of the Court has been assuming the power to pass on the wisdom of these Acts of Congress and to approve or disapprove the public policy written into these laws.

The Court in addition to the proper use of its judicial functions has improperly set itself as a Third House of the Congress—a super legislature as one of the justices has called it —reading into the Constitution words and implications which were not there and which were never intended to be there. We have therefore reached the point as a Nation where we must take action to save the Constitution from the Court and the Court from itself.... We want a Supreme Court which will do justi(ce) under the Constitution, not over it. In our Courts we want a Government of laws and not of men.'

இவ்வாறு பிரசிடென்ட் ரூஸ்வெல்ட் அவர்கள் தன்னுடைய பேச்சிலே சொல்லியிருக்கிறார்கள். இது டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களுடைய பேச்சிற்குரிய பதிலாக அமைகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய அறைக்கு வந்து கால் அட்டென்ஷன் மற்றும் கொஸ்டின்ஸ் எல்லாம் கொடுக்கிறீர்கள். நான் அவற்றை சேம்பரிலேயே டிஸ்அலவ் பண்ணுகிறேன். நீதிமன்றத்தின்மீது இன்னும் மக்களுக்கு நம்பிக்கை இருக்கின்றது.



அது குறையக் கூடாது என்ற ஒரே காரணத்திற்காகத்தான் நான் அதைச் செய்தேன். இந்த கேஸிலேகூட நீதிபதி தள்ளுபடி பண்ணிவிட்டார்கள் என்று பேரவை முன்னவர் அவர்கள்கூடச் சொன்னார்கள்.

They should not have allowed it to be numbered. கேஸ் வந்து அதற்கு நம்பர் பண்ணி, கோர்ட்டுக்குக்கூட வரக்கூடாது என்று There is clear provision under the Constitution under Article 212. It should not be taken into file. சாதாரணமாக வந்தால் The office will put up the file to the concerned judge. He will go through the file and will say that it is not maintainable at the appeal stage itself. எனவே ஒன்றாகப் பார்த்து, விவாதத்திற்கு வந்து, அதைப் பேசி முடித்து பிறகு தீர்ப்புச் சொல்வார்கள். நான் அந்த மாதிரி இப்போது அலவ் பண்ணவில்லை. இந்த அவையிலே எடுத்துக்கொண்டு, நீங்கள் விவாதித்து பேசிமுடித்து, திரும்பவும் அதை டிஸ்அலவ் பண்ணினால் அது நம்முடைய பர்ப்பஸை வெளியிலே கொண்டுவந்துவிடும். அதைத்தான் ஜஸ்டிஸ் வி. ஆர். கிருஷ்ணய்யர் சொல்லியிருக்கிறார்கள், 'populist judge' என்று. சில பிரச்சினைகள் அதிலே இருக்கின்றன. அதனால் அதை எடுக்க வேண்டாம்.

நம்முடைய திரு. குப்புசாமி அவர்கள் பேசும்போது முதலமைச்சருடைய வழுக்கைப்பற்றிச் சொன்னார்கள். அந்த நேரத்திலே கூட I have kept the House under darkness to save the judiciary.

இப்போது 211—லே விவாதிக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய நீதிமன்றத்திலே இந்த நீதிபதியையும் சேர்த்து, 3 நீதிபதிகளைக் கொண்ட ஒரு குழு, ஒரு ஃபுல் பென்ச் தீர்ப்புக் கொடுத்திருக்கிறது, நீதிபதிகளைப்பற்றிப் பேசலாம் என்று.

ஒரு முன்னாள் உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதி தன் மீது சுமத்தப்பட்ட ஒரு குற்றச்சாட்டிற்காக ஒரு வழக்கு தாக்கல் செய்தார்கள். அந்த வழக்கில் 3 நீதிபதிகளைச் சேர்ந்த குழு விசாரித்தது. அதில் இந்த நீதிபதியும் இருந்தார்கள். அந்தத் தீர்ப்பிலே சொல்லியிருக்கிறார்கள், நீதிபதிகளைப்பற்றிப் பேசலாம் என்று. ஆனால் அந்தத் தீர்ப்பையே—மக்களுக்குத் தெரியாத அளவுக்கு, எந்த புஸ்தகத்திலேயும்

**உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி**

**பத்திரிகைகள் மீது—தொடர்ச்சி**

**வணிக ஒற்றுமை—தொடர்ச்சி**

இடம் பெறவில்லை—எந்தக் குடிமகனும் பெற முடியாது, அப்படி அவர்கள் தங்களுடைய தனித் தன்மைகளைப் பாதுகாப்பதற்கு, கண்ணியத்தைப் பாதுகாப்பதற்கு செய்தார்கள்.

1971 ஆம் ஆண்டு அந்த நீதிமன்றத்தில் வக்கீலாக அமர்ந்திருந்த போது நான் பார்த்தேன்; இதேபோல ஒரு பத்திரிகை ஆசிரியர் நீதிபதியைப் பற்றி தரக் குறைவாக எழுதிய காரணத்தினால், நீதிமன்றத்திற்கு வரவழைக்கப்பட்டார். 7 நீதிபதிகள் சேர்ந்து விசாரித்தார்கள். நான் அப்போது பார்த்ததினால் சொல்கிறேன். 7 நீதிபதிகள் விசாரிக்கும் போது அந்தப் பத்திரிகையாளர் 7 பேர்களையும் பார்த்து குறை சொன்னார்.

ஆனால் அந்த வழக்கை நீதிபதிகள்—அந்தக் கேஸ் கட்டையே சீல் வைத்து நீதிமன்றத்தின் மூலையில் வைத்துவிடுங்கள். இதைத்திறக்க வேண்டும் என்றால் கூட நீதிமன்றத்தினுடைய உத்தரவை வாங்க வேண்டும் என்று 1971 ஆம் ஆண்டு உத்திரவிட்டிருந்தார்கள். இன்றைக்கும் அந்த 1971 ஆம் ஆண்டு கேஸ் கட்டு அப்படியே இருக்கிறது. யாரும் அதைக் கேட்கவில்லை. அந்த அளவுக்கு நீதிமன்றம் தன்னுடைய கண்ணியத்தையும் மரபையும் மக்கள் அதன் மீது வைத்திருக்கிற நம்பிக்கையையும் பாதுகாத்துக் கொள்வதற்காகச் செய்கிறார்கள். அந்த உணர்வை இங்கே சொல்லக்கூடிய அளவுக்கு வைத்து விட்டீர்கள். நானும் அதை துரதிருஷ்டவசமாக எடுத்துச் சொல்ல நேரிட்டு விட்டது. இத்துடன் இதை நிறுத்திக் கொள்வோம்.''

உரிமை மீறல் குற்றத்திற்காக பேரவையால் தண்டிக்கப்பட்ட திரு. பால்ராஜ மீது நடவடிக்கை எடுக்கப்படாதது குறித்து ஓர் உறுப்பினர் தகவல் கோரிய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''அதுபற்றியெல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவில் கேட்க வேண்டும். இங்கே கேட்கக் கூடாது. உரிமைப் பிரச்சினைகளுக்கெல்லாம் குழு வேறு தனியாக இருக்கிறது. அந்தக் குழுவில் தாங்கள் கூட இருக்கிறீர்கள். அங்கே கேட்டுக்கொள்ளலாம். ''அந்தத் தீர்ப்பு எக்சிகியூட் ஆகவில்லை. அதில் நீங்கள் என்ன செய்ய முடியும்? நான்தான் என்ன செய்ய முடியும்?



**உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி**

**பத்திரிகைகள் மீது—தொடர்ச்சி**

**வணிக ஒற்றுமை—தொடர்ச்சி**

''இந்த அவைதான் சுப்ரீம் என்பது நிலைநாட்டப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்டவர் ஓடி ஒளிந்தால் போலீஸ்தான் தேடிப் பிடிக்க வேண்டும்.''

| | | |
|---|---|---|
| 1985 | XI | 44–58 |
| | XIV | 420–425 |
| | XV | 218–220 |

**உரிமைப் பிரச்சினை—நடைமுறைகள்.—**

அரசினர் சட்ட முன் வடிவின் மீது ஓர் உறுப்பினர் உரையாற்றுகையில் குற்றச்சாட்டு ஒன்றைக் கூறியபோது, தலைவர் பின் வருமாறு குறிப்புரைத்தார் :—

'' ஏற்கெனவே அந்தப் பிரச்சினை பற்றி என்னிடம் பிரிவிலேஜ் வந்தது. என் அறையில் அதற்கு பதில் கொடுத்து தள்ளுபடி செய்து விட்டேன். அவ்வாறு ரிஜெக்ட் செய்ததை திரும்ப எப்படி பேச முடியும்? ''

1986 XVII 383

உரிமைப் பிரச்சினைக்கு முன்னறிவிப்பு கொடுத்த உறுப்பினர் முன்னறிவிப்பை மட்டும் படித்துவிட்டு அமர்ந்து விட வேண்டும்.

1986 XV 59, 60

ஏழாவது சட்டமன்றப் பேரவையில் கொண்டு வரப்பட்ட உரிமைப் பிரச்சினை பற்றிய அறிக்கையை 8-வது சட்டமன்றப் பேரவையில் வைக்கலாமா என ஓர் உறுப்பினர் வினா எழுப்பியபோது தலைவர் அளித்த தீர்ப்புரையாவது :

'' வைக்கலாம். ஏற்கெனவே இரண்டு வைக்கப்பட்டிருக்கின்றன.''

1985 XI 57

ஓர் உரிமைப் பிரச்சினை மீதான தீர்ப்பை தலைவர் ரிசர்வ் செய்திருக்கும்போது, அவ்வுரிமைப் பிரச்சினை பற்றி உறுப்பினர் பேசக்கூடாது என்று குறிப்புரைக்கப் பெற்று அவ்வாறு குறிப்பிட்ட பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது.

1986 XXX 389

ஓர் உரிமைப் பிரச்சினையை உடனடியாக எடுத்துக்கொண்டதற்கு என்ன காரணம் என்று ஓர் உறுப்பினர் வினவியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

"உரிமைப் பிரச்சினையில் உள்ள பிரச்சினை அவையினுடைய நடைமுறை சம்பந்தமாக இருப்பதாலும், முந்தைய நாள் நடைபெற்றது பற்றியதாக இருப்பதாலும் அவையினுடைய கண்ணியத்தைக் காப்பாற்ற அது உடனடியாக எடுத்துக்கொள்ளப்பட்டது."

1986 XV 61, 62

சட்டமன்ற நடவடிக்கைகளைப்பற்றி விமர்சனம்பண்ண "கொஸ்டியன்" ( Question ) பண்ண நீதிமன்றத்திற்குக் கூட உரிமை இல்லை. சட்டமன்ற நடவடிக்கைகளை செய்தித்தாள்கள் தரக்குறைவாக விமர்சனம் செய்தால் அது உரிமை மீறல் என்றுதான் வரும்.

1986 XI 55

'தினகரன்' நாளிதழ் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினையை உரிமைக் குழுவின் ஆய்விற்கு அனுப்ப வேண்டுமென்ற தீர்மானத்தை 16—7—1985 ஆம் நாளன்று அவை நிறைவேற்றிய பிறகு தமக்குப் பேச வாய்ப்பு கொடுக்காமல் தீர்மானத்தை நிறைவேற்றியது முறைகேடு என்று ஓர் உறுப்பினர் குறிப்பிட்டு, தம்மைப் பேச அனுமதிக்க வேண்டுமென்று வலியுறுத்தியபோது, இது எல்லா உறுப்பினர்களுக்கும் சம்பந்தப்பட்டது ; விவாதம் வேண்டாம் என்று குறிப்புரைக்கப்பெற்றது.

இருப்பினும் ஆலோசனையாக சில கருத்துக்களைச் சொல்ல அவ்வுறுப்பினருக்கு வாய்ப்பு அளிக்கப் பெற்றது.

1985 XIII 632—635

'தினகரன்' பத்திரிகையின்மீது உரிமைப் பிரச்சினை ஒன்றை விவாதம் இல்லாமல் உரிமைக் குழுவிற்கு தலைவர் அனுப்பியுள்ளது குறித்து ஓர் உறுப்பினர் வினவியபோது தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார் :

"Speaker has got suo moto power to refer to the Privileges Committee".

1987 XL 60





நிலுவையில் இருக்கும் ஒரு உரிமைப் பிரச்சினை பற்றி அவையிலே விமர்சிக்கக்கூடாது. அது தலைவரிடம் இருக்கிறது.

1986 XXX 201

பேரவையில் ஓர் அமைச்சரால் கொடுக்கப்பட்ட உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை என்பது உரிமை மீறிய செயலாகவோ, அவையை அவமதித்த செயலாகவோ ஆகாது.

The observations by Kaul and Shakdhar are as follows :

"Non-implementation of an assurance given by a Minister on the floor of the House is neither a breach of privilege not Contempt of the House."

1985 II 285, 287, 288

முதல்வர் மீது 7-வது சட்டமன்றத்தில் கொடுக்கப்பெற்ற ஓர் உரிமை மீறல் பிரச்சினையை 8-வது சட்டமன்றத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற ஓர் உறுப்பினரின் கோரிக்கை மீது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"ஏழாவது சட்டமன்றம் கலைக்கப்பட்டபோது அப்படிப்பட்ட பிரச்சினை எதுவும் நிலுவையில் இல்லை. அசெம்பிளி புரோரோக் ஆகும்போது நோட்டீஸ்கள் எல்லாம் ஆட்டோமெடிக்காக லேப்ஸ் ஆகிவிடுகின்றன.

..லேப்ஸ் ஆனவற்றையெல்லாம் எடுத்தால் சபையில் இந்த வேலையைத்தான் பார்க்க வேண்டியிருக்கும்."

1985 XVI 357—358

உறுப்பினர்கள் கைது—

ஓர் உறுப்பினர் கைது செய்யப்பெற்று, விடுதலையான தகவல் உடனடியாக அவையில் ஏன் அறிவிக்கப்படவில்லை என ஆட்சேபணை எழுப்பப்பெற்றபோது, தலைவர் அளித்த குறிப்புரையாவது :

"அதிகாரபூர்வமாக வராததால் சொல்லவில்லை".

1985 III 181

ஒத்திவைப்புத் தீர்மானம் (அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் இசைவு மறுக்கப் பெற்றவை)—

காவல் துறை —

மதுரை மாவட்டம் தேனிக்கு அருகிலுள்ள தேவதானப் பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி பிளஸ் 2 மாணவன் வேல்முருகன் காவல் துறையால் தாக்குண்டு மரண மடைந்தது மற்றும் போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் நசீர் என்பவர் இறந்ததால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை—

| | | |
|---|---|---|
| 1986 | XX | 40—53 |

12—4—1986 அன்று இரவு தென்காசி தாலுகா பாலூர் சத்திரம் காவல்நிலையத்தில் விசாரணைக்கு என்று அழைத்துச் சென்ற சின்னசாமி நாடார் என்பவரை போலீஸ்காரர்கள் அடித்துத் துன்புறுத்தி அதன் காரண மாக அவர் இறந்துவிட, அதை மறைக்க காவல் நிலைய அதிகாரியும், ஏனைய போலீஸ்காரர்களும் இறந்தவரின் கழுத்தில் வேஷ்டியால் சுருக்கு மாட்டி கொலையை தற்கொலையென்று மாற்றியதால் அந்தப் பகுதியில் உள்ள மக்களிடையே தோன்றியுள்ள அச்சம்—

| | | |
|---|---|---|
| 1986 | XXIII | 313—323 |

தடியடி, துப்பாக்கிச் சூடு முதலியன—

கடந்த 17—5—1985 அன்று இரவு திருச்சி மத்திய சிறை யில் தி.மு.க. மறியல் தொண்டர்கள் அடைபட்டிருந்த ஓலைக் கொட்டகை தீப்பிடித்தது மற்றும் அதைத் தொடர்ந்து நடந்த தடியடிப் பிரயோகத்தில் 70-க்கும் மேற்பட்ட தி.மு.க. வினர் படுகாயம் அடைந்துள்ளது—

| | | |
|---|---|---|
| 1985 | VI | 685—695 |

சென்னை ஆவடியிலுள்ள ராமரத்னா சினிமா தியேட்டரில் 1—4—1985 இரவு சுமார் 11 மணி அளவில் ஆவடி போலீஸ் முகாமைச் சேர்ந்த சுமார் 100 எஸ்.ஏ.பி. போலீசார் உள்ளே புகுந்து ஜனங்களை அடித்தும், சொத்துக்களை நொறுக்கியும், கடைகளில் புகுந்து அடித்தும், பலருக்குக் காயமேற்படுத்தியதால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை—

| | | |
|---|---|---|
| 1985 | V | 258—272 |

சென்னை இராசரத்தினம் ஸ்டேடியத்தில் 30—3—1985 அன்று போலீஸ் வேலைக்கு ஆட்கள் தேர்வு செய்ய நடை பெற்ற நேர்முகத் தேர்வில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டபோது திடீரென்று கூட்ட நெரிசலை



ஒத்திவைப்புத் தீர்மானம் (அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் இசைவு மறுக்கப் பெற்றவை)— தொடர்ச்சி

தடியடி, துப்பாக்கிச் சூடு முதலியன— தொடர்ச்சி

ஒழுங்குபடுத்துகிறோம் என்று சொல்லி சென்னை நகர போலீசார் கடுமையான தடியடிப் பிரயோகம் செய்தும், போலீஸ் குதிரைப் படையைக் கொண்டு தாக்கியும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டதால் மனோகரன் என்பவர் போலீசாரின் தாக்குதலுக்கு உள்ளாகி மரணம் அடைந்திருக்கிறார். இன்னொருவர் உயிருக்கு ஆபத் தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட் டிருக்கிறார். நூற்றுக்கணக்கானோர் படுகாயம் அடைந் திருக்கிறார்கள். இதனால் பொது மக்களிடையே ஏற் பட்டிருக்கும் பதட்ட நிலை—

| | | |
|---|---|---|
| 1985 | V | 24—47 |

சென்னை வியாசர்பாடி காவல் நிலையத்தில் 20—1—1986 அன்று கைதி ஒருவர் மர்மமான முறையில் மரணமடைந் திருப்பதாகக் கூறப்பட்டதை ஒட்டி அப்பகுதியைச் சார்ந்த மக்கள் பலர் காவல் நிலையத்திற்கு நியாயம் கேட்கச் சென்றபொழுது போலீஸ், மக்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்தும், துப்பாக்கிச் சூடு நடத்தியும், அதன் காரணமாக சிலர் மரணமடைந்திருப்பதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டிருக்கும் நிலை—

| | | |
|---|---|---|
| 1986 | XVI | 82—94 |

திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், வேப்பந்தட்டை கிராமத்தில் 12—7—1985 அன்று மாலை போலீசார் நடத் திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் மரணம், நூற்றுக்கணக் கானவர் காயம் அடைந்ததால் ஏற்பட்ட பதட்ட நிலை—

| | | |
|---|---|---|
| 1985 | XIV | 46—63 |

மக்கள் நல்வாழ்வு—

கோவை, குறிச்சியில் தேசிய ஜவுளி கார்ப்பரேசன் நிர்வாகத் தின் கீழ் இயங்கும் ஆலையில் (சாரதா) உள்ள கேன்டீனில் சாப்பிட்ட 220-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் 14—3—1985 அன்று திடீரென்று வாந்தி, மயக்கம் ஏற் பட்டு மிகவும் கவலைக்கிடமான நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு இருப்பதால் அப்பகுதி வாழ் மக்கள், தொழிலாளர்கள் இடையே ஏற்பட்டுள்ள நிலை—

| | | |
|---|---|---|
| 1985 | III | 280—285 |

ஒத்திவைப்புத் தீர்மானம் (அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் இசைவு மறுக்கப் பெற்றவை)—தொடர்ச்சி

மக்கள் நல்வாழ்வு—தொடர்ச்சி

சென்னை இராயபுரம் ஸ்டான்லி நர்சஸ் குவார்ட்டர்சில் தங்கி பயிற்சி பெறும் செவிலியர்கள் அண்மையில் அங்குள்ள கிணற்று நீரை சமையலுக்குப் பயன்படுத்தியதால் உயிருக்கு மன்றாடிய நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை—

1986 XXIV 471-491

திருவண்ணாமலையில் காலரா நோயினால் 7 பேர் இறந்துள்ளதாலும் பல்லாயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு உள்ளதாலும், காலரா நோய் தமிழகம் முழுவதும் பரவும் நிலை ஏற்பட்டுள்ளதாலும் திருவண்ணாமலையிலும் மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பீதி நிறைந்த பதட்ட நிலை—

1985 XIII 637–645

விபத்துக்கள்—

எண்ணூர் தெர்மல் ஸ்டேஷனில் பாய்லர் உடைப்பு (Boiler Burst) காரணத்தால் சுமார் 17 நபர்கள் ஸ்டான்லி மருத்துவமனையில் 1–4–1985-ல் சுமார் 11-30 மணி அளவில் அவசரச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். மூவரின் உயிர் ஊசலாடும் நிலை—

1985 V 159–169

தமிழக அரசுக்குச் சொந்தமான புகளூர் காகிதத் தொழிற்சாலையில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் ரூபாய் ஒரு கோடி மதிப்புள்ள பத்திரிகைக் காகிதம் எரிந்து சாம்பலானது—

1985 XI 539–541

திரிசூலம் என்ற இடத்தில் அண்ணா அரிசன சொசைட்டியில் 3–7–1985 விடியற்காலை 3–30 மணிக்கு கல் உடைப்பதற்காக வைத்துள்ள தோட்டா வெடித்து ஏற்பட்டுள்ள உயிர்ச்சேதம் மற்றும் பொருள் சேதம்—

1985 XIII 495–505

மூர் மார்க்கட் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து—

1985 VI 335-351



ஒத்திவைப்புத் தீர்மானம்—நடைமுறைகள்—

அனுமதி—

அரசு ஊழியர்கள் பிரச்சினை பற்றி கொடுக்கப்பட்டுள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சில உறுப்பினர்கள் கேட்டபோது தலைவர் பின் வருமாறு தீர்ப்புரைத்தார்:

''இது ஒத்திவைப்புத் தீர்மானத்திலே வராது. இந்தப் பிரச்சினை பற்றி ஏற்கனவே இந்த மாமன்றத்திலே பல்வேறு நிலைமைகளிலே பேசி இருக்கிறோம். அவை முன்னவர் அவர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். தயவு செய்து ஒத்துழையுங்கள். மாவட்ட நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கை வரும்போது இந்தப் பிரச்சினை பற்றி விரிவாகப் பேசலாம்''.

1986 XXII 770, 771

அரியலூருக்கு அருகே தாத்தூரில் ஒரு குடும்பமே தீயினால் அழிந்துள்ளது குறித்து தாம் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானம் எடுந்துக் கொள்ளப்பட வேண்டும் என்று ஓர் உறுப்பினர் வற்புறுத்தியபோது தலைவர் பின் வருமாறு குறிப்புரைத்தார் :

''அதை ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக் கொள்வதற்கில்லை. காரணம், அரசாங்கத்திற்கு அதில் பொறுப்பில்லை. அரசின் பொறுப்புக்குட்பட்ட ஒரு பொருளைப் பற்றியதாக, தெளிவாக அது இருக்க வேண்டும்.

..இந்த நிகழ்ச்சி பற்றி அரசுக்கு ஏதாவது விவரங்கள் கிடைத்திருந்தால் அவற்றை அவைக்குச் சொல்லலாம்''

பேரவை முன்னவர் அச்சம்பவம் பற்றி அறிக்கை அளித்த பிறகு, ஓர் உறுப்பினர் விளக்கம் கேட்க அனுமதி கோரியபோது, இதை ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுக்க முடியாததால்தான் இந்த வழி கையாளப்பட்டது என்றும் அமைச்சரின் ஸ்டேட்மெண்டின்மீது எந்த விவாதமும் இல்லை என்றும் குறிப்புரைக்கப்பெற்றது.

1986 XVII 218–222

அலுவல் ஆய்வுக் குழுவில் விவாதிக்கப்பட்ட ஒரு பொருள் குறித்து உறுப்பினர் ஒருவர் அவையில் எழுப்பியபோது தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார் :

''....அலுவல். ஆய்வுக் குழுவில் பேசியதை இங்கே அவையிலே பேசுவது சரியல்ல.

அனுமதி—தொடர்ச்சி

I have already disallowed the Adjournment Motion."

1987 XLIV 175, 180-181

ஆளுநர் உரையின்மீது விவாதம் நடைபெறும் போது ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்று தலைவர் ஏற்கனவே தீர்ப்பளித்து இருந்தும் இப்போது ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுவதற்கான காரணம் என்னவென்று ஓர் உறுப்பினர் வினவியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''கொடுத்துள்ள பொருளின் முக்கியத்துவம் கருதி எடுத்துக் கொள்ள முடிவு செய்கின்ற உரிமை எனக்கு இருக்கின்றது. இப்போது அவை நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இந்த நேரத்தில் வியாசர்பாடி காவல் நிலையத்தருகே வன்முறைச் சம்பவங்கள், துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது. எனவே இதன் அவசர முக்கியத்துவம் கருதி இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி அளித்திருக்கிறேன்.''

1986 XVI 82, 89

ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அமைச்சர் பதிலளித்த பிறகு ஓர் உறுப்பினர் விளக்கம் கூற முயன்றபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

"It is only on the question of admissibility. நான் அட்மிட் பண்ணினால்தான் அதைப்பற்றிப் பேச முடியும்.''

1985 IV 199

ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிக்கை கொடுத்த உறுப்பினர் அதுபற்றி அவையில் கேட்பது கூடாது.

1985 IV 596

ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு பதில் அளித்து அமைச்சர் தெரிவித்த கருத்துக்கும், பத்திரிகைச் செய்திக்கும் முரண்பாடு இருக்கிறது என்று ஓர் உறுப்பினர் கூறியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''அது பற்றி நீங்கள் இங்கே எழுப்ப முடியாது. வேண்டுமானால் தனியாக எழுதிக்கொடுங்கள்.''

1986 XX 53



அனுமதி—தொடர்ச்சி

ஓர் உறுப்பினர் தாம் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படாமல் இருப்பதைச் சுட்டிக் காட்டியபோது, தலைவர் குறிப்புரைத்ததாவது :

''வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்ள வேண்டாமென்ற மரபு இருக்கிறது. அலுவல் ஆய்வுக் குழுவிலே அவ்வாறு முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. முக்கியமான பிரச்சினையை அதன் முக்கியத்துவத்தைக் கருதி எடுத்துக் கொள்ளலாமென்று அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்தால் எடுத்துக் கொள்ளலாம். அலுவல் ஆய்வுக் குழுவில் மீண்டும் இதுபற்றி விவாதித்து முடிவெடுக்கலாம். இந்த அவையைத் தயவுசெய்து அலுவல் ஆய்வுக் குழுவாகக் கருத வேண்டாம்.''

அவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதைப் பற்றியெல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவுக்கு ரெபர் செய்யாமல் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அவ்வப்போது அவை முன்னவருடன் கலந்து உசிதம் போல் தலைவர் அனுமதிக்கலாமென்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்த கருத்தை தலைவர் ஏற்றுக் கொண்டு இனிமேல் அம்மாதிரியான முறையைக் கடைப் பிடிக்கலாம் என்று குறிப்புரைத்தார்.

1986 XIX 650–651

சுருக்கமாகச் சொல்ல வேண்டும். ஒத்திவைத்துவிட்டு, விவாதம் நடத்துவதுபோல் நீண்ட நேரம் பேச வேண்டியதில்லை.

1986 V 29

உரையாற்றும் முறை—

எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மட்டும் குறிப்பிடவேண்டும்.

1985 III 283

ஒத்திவைப்புத் தீர்மானத்தில் விளக்கமாகப் பேசமுடியாது. குறிப்பிட்ட பிரச்சினை எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து இரண்டு வார்த்தைகளிலே சொல்லி முடிக்க வேண்டும். அமைச்சர் விளக்கமாகப் பதில் சொல்லலாம்.

உரையாற்றும் முறை—தொடர்ச்சி

ஒத்திவைப்புத் தீர்மானத்தில் நீதிமன்றத்திற்குப் போகக் கூடிய பல பிரச்சினைகள் இருக்கலாம். ஆகவே, அதிலே விளக்கமாகப் பேசுவது என்பது இயலாது, அவையில் இல்லாத ஒருவரைப் பற்றிப் பேசுவது அனுமதிக்கப் படமாட்டாது.

1986 XXIII 316

ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன் அறிவிப்பின்மீது பேசும்போது அவையை ஏன் ஒத்திவைக்க வேண்டுமென் பதற்கான காரணங்களை மட்டும் சுருக்கமாகச் சொல்ல வேண்டும். ஒத்திவைக்கப்பட்டால் உறுப்பினர்கள் என் னென்ன பேசுவார்களோ அதையெல்லாம் பேசக்கூடாது.

1986 XVI 84,86,88
XX 42

ஒரு குறிப்பிட்ட பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக அவையின் அலுவல்களை ஒத்திவைத்து ஏன் விவாதிக்க வேண்டுமென்பதற்கான காரணங்களைச் சுருக்கமாகச் சொன்னாலே போதும். வேண்டுமானால் ஒன்றிரண்டு ப்ரைமாஃபேசி கேஸை எடுத்துச் சொல்லலாமே தவிர நீண்ட விவாதமாகப் பேசிக்கொண்டிருப்பது தேவையில்லை.

1985 V 30

ஒழுங்குப் பிரச்சினைகள்—

அதிகாரிகள் மாடம்—

சட்டமன்றத்தில் தெரிவிக்கப்படும் கருத்துக்களைக் குறிப் பெடுத்துக்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வரா ததை ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை மூலம், சுட்டிக்காட்டியபோது தலைவர் பின்வருமாறு குறிப் புரைத்தார் :

''கேலரியில் இருக்கிற ஆபீசர்களைப் பற்றி உறுப்பினர் ரெஃபர் செய்ய முடியாது. அவர்கள் அமைச்சர்களின் உதவிக்காக வருகிறார்கள். அவர்கள் இங்கு இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை; அமைச்சர்களே குறிப்பு எடுத்துக்கொள்ளலாம்.''

1985 XV 358–359





அரசியலமைப்புச் சட்டப் பிரிவை எரித்தோர்—உறுப்பினர் பதவியை இழத்தல்—

அரசியலமைப்புச் சட்டப்பிரிவை எரித்தோர் உறுப்பினர் தகுதியை இழந்துவிட்டார்கள் என்று 24–11–1986ஆம் நாளன்று தலைவர் அளித்த தீர்ப்பையொட்டி, அவ் வுறுப்பினர்களின் இருக்கைகளில் 'வெற்றிடம்' என்று போடப்பட்டு இருப்பதைக் குறித்து ஓர் உறுப்பினர் ஒழுங்கு பிரச்சினை எழுப்பியபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"..When I said they are ineligible to sit in the House, my office would have automatically taken up follow up action, based on my ruling.

அது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. இது அவை சம்பந்தப் பட்ட பிரச்சினை அல்ல. என் அலுவலகம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. அதை இங்கே எழுப்ப முடியாது. It is not the business of the House. It is office routine."

தலைவரின் தீர்ப்பைக் குறித்து சில உறுப்பினர்கள் மேலும் விவாதிக்க முயன்றபோது, தலைவர் குறிப்புரைத்த தாவது:

"..Sky was the limit in 1972. Now also I have followed that.

இதே நாற்காலியில் அமர்ந்திருந்த சபாநாயகரைப்பற்றி நான் பேசியாக வேண்டும். அன்றைக்கு அவைத் தலைவ ருக்குப்பக்கத்திலே நாற்காலியைப்போட்டு இரட்டை சட்ட சபையை நடத்திவிட்டு அன்றைக்கு 'Sky was the limit' என்று சொல்லப்பட்டது. இப்போது கேள்வி கேட்கி றீர்கள். அதை வரலாறு மறக்காது.''

1986 XXXI 341–348

அவை அலுவல்கள்—

அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அவையில் வைக்கப்பட வில்லை என்பதைச் சுட்டிக்காட்டி ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியபோது அந்த அறிக்கை அவை யில் அளிக்கப்படும்போது அது பற்றிய விளக்கம் அளிக்கப் படும் என்று தலைவர் குறிப்புரைத்தார்.

அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அறிக்கையை அவைக்கு அளித்தபோது தெரிவித்ததாவது :

" அறிக்கையை அச்சிட்டு வழங்குவதற்குத் தேவையான அவகாசம் இல்லாத காரணத்தால் ஐந்து நகல்கள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளன. அறிக்கை அச்சிடப்பெற்ற பின்னால், அச்சிடப்பெற்ற பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்."

1987 XLVI 600, 602–603·

இரங்கல் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுவதற்காகக் கேள்வி நேரத்தை ஒத்திவைக்க வேண்டுமென்றால் அதற்கு அவையின் ஒப்புதல் தேவை என்பதால் அப்படிப்பட்ட ஒப்புதல் பெறப்படாதது குறித்து ஓர் ஒழுங்குப் பிரச்சினையை உறுப்பினர் ஒருவர் எழுப்பியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

" எதிர்பாராதவிதமாக இரங்கல் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. மறைந்தவருக்கு மரியாதை தெரிவிப்பதற்காக கேள்வி நேரத்திற்கு முன்னரே அதைக் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டது."

1985 1 305–306

இலங்கையில் இந்திய அரசு போர் நிறுத்தம் செய்யவேண்டுமென அவை வலியுறுத்தும் தீர்மானத்தை தாம் செயலாளரிடம் கொடுத்ததாகவும் அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் ஒழுங்குப்பிரச்சினையின் மூலம் ஓர் உறுப்பினர் வலியுறுத்தியபோது தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பாவது:

" தீர்மானத்தை என்னிடம் கொடுக்கவில்லை. என்னை உறுப்பினர்பார்க்கவும் இல்லை. அனுமதியைப் பெறவும் இல்லை.

"செயலாளரிடம் கொடுத்தால் செயலாளர் அனுமதி கொடுக்கமுடியாது. நான் தான் அனுமதி வழங்கமுடியும். இதற்கு அனுமதியில்லை என்று ஏற்கனவே உறுப்பினரிடம் சொல்லியிருக்கிறேன். இதைப்பற்றி உறுப்பினர் தினமும் தீர்மானம் கொடுத்துக்கொண்டு வருகிறார். ஒரு தடவை தள்ளுபடி செய்யப்பட்ட பொருள் குறித்து இன்னொரு



தடவை தீர்மானம் கொடுக்கக்கூடாது என்ற முறையில் 'ரெஸ்ஜூடிகேட்டா பிரின்சிபிளை' இங்கே கொண்டு வர வேண்டியது தான். இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

"ஏற்கனவே அனுமதியில்லை என்றால் நீக்குவது வழக்கம். ஆனால், இங்கே நான் அதை நீக்கவில்லை. அதற்கு என்னுடைய உணர்வுதான் காரணம்."

1987 XLV 444, 445, 446, 447

இலங்கையில் போர் நிறுத்தம் செய்யவேண்டுமென்ற பிரச்சினை பற்றி பேரவையில் எழுப்பியதை நாடாளுமன்றத்தில் விவாதிக்கிறார்கள் என்பதால், அங்கே விவாதிக்கப்பட்டதை இங்கே பேச தமக்கு வாய்ப்பு வேண்டுமென்று ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி ஓர் உறுப்பினர் அனுமதி கோரியபோது தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு பின்வருமாறு :

" பிரச்சினை வெளி விவகாரத்துறை சம்பந்தப்பட்டது. அதற்கு பதில் சொல்வதற்கு நாடாளுமன்றத்தில் அமைச்சர்கள் இருக்கிறார்கள்.

" இங்கு நான் அனுமதிக்கவில்லை. இவை பற்றியெல்லாம் என்னிடம் கேட்க வேண்டாம். என் சம்பந்தப்பட்டவற்றை மட்டும் கேளுங்கள். இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை."

1987 XLV 446

உள்ளாட்சித் துறை அமைச்சர் சத்துணவுத் துறை அமைச்சராக ஆனபின், உள்ளாட்சித்துறை சட்ட முன்வடிவை அவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அவர் முன்மொழியலாமா என்கிற ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட்டபொழுது, தலைவர் அளித்த குறிப்புரையாவது:

"இதுவரையில் அவர்கள் உள்ளாட்சித்துறை அமைச்சர் தான். இதுவரையில் அவைக்கு வேறு தகவல் வரவில்லை. அப்படி வந்த பிறகுதான் அதைப்பற்றி முடிவு செய்யவேண்டும். எனவே, தகவல் வரும் வரையில் இவர்தான் உள்ளாட்சித் துறை அமைச்சர். எனவே, இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை."

1985 II 592

அவை அலுவல்கள்—தொடர்ச்சி

ஒரு குறிப்பிட்ட கேள்வியை கேட்ட உறுப்பினரும், அமைச்சரும் அவையில் இருக்கும்போது அக்கேள்வியை ஒத்திவைப்பது முறையா என ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது :

''கேள்வியைக் கேட்ட உறுப்பினரோ மற்ற துணைத் தலைவர் போன்றவர்களோ தலைமைப் பீடத்தில் அமர்ந்திருக்கும் போது அவர்கள் கேட்டுள்ள வினாக்களை ஒத்திவைப்பது மரபாகும். உறுப்பினர் அவர்களே தலைமைப் பீடத்தில் இருந்தால் நிச்சயமாக அந்த உரிமை அவருக்கு வழங்கப்படும். எனவே இதில் ஒழுங்குப் பிரச்சினை எதுவும் இல்லை.''

1985 VIII 350–351

தலைவர் அலுவல் சம்பந்தப்பட்ட பிரச்சினை பற்றி ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப முயன்றபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' உறுப்பினர்கள் அசெம்பிளியிலிருந்து பேசுகிற மாதிரி பேசவேண்டும். என் அலுவல் சம்பந்தப்பட்ட பிரச்சினை குறித்து என்னுடைய அறைக்கு வந்து கேட்க வேண்டும். இங்கே கேட்க முடியாது.''

1987 XLII 377

திருத்தங்களுக்கான முன்னறிவிப்புகள், சட்ட முன்வடிவு பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிற நாளுக்கு மூன்று நாட்களுக்கு முன்னதாகவே செயலாளருக்கு அனுப்பப்பெறவேண்டும் என்ற விதியை ஓர் உறுப்பினர் சுட்டிக்காட்டி, முதல் நாள் அறிமுகம் செய்துவிட்டு மறுநாள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது முறையல்ல என்று கூறியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' விதிகளின்படி தலைவர் அதை 'வெய்வ்' செய்யலாம்.''

1985 XVI 510–511





அவை அலுவல்கள்—தொடர்ச்சி

பேரவையில் விவாதம் நடந்துகொண்டிருக்கும்போது அமைச்சர் ஒருவர் அதிகாரிகள் காலரிக்குச் சென்று பேசிக் கொண்டிருப்பது முறையா என ஓர் உறுப்பினர் கேட்டபோது பின்வருமாறு தீர்ப்புரைக்கப்பட்டது:

''அது தவறே அல்ல. மேலும், 'On a point of order raised whether it was in order for a Minister to converse with the officials in the Officers' Gallery while a Member was speaking, the Chair observed that it was in order for a Minister to consult officials and it was already allowed in the past. There is nothing wrong' என்று ஏற்கனவே தீர்ப்புரைக்கப் பெற்றுள்ளது.''

1985 XII 609

முந்தைய நாள் ஒரு பொருள் குறித்து தாம் கொடுத்திருந்த ஒத்திவைப்பு அறிவிக்கையினை எடுத்துக் கொள்ளாது அதே பொருள் குறித்து விதி 110-ன் கீழ் அமைச்சரை தன்னிலை விளக்கம் அளிக்க அனுமதிப்பது முறையா என ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

''நேற்று பேரவையில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களது மகன் இல்லத்தில் நடைபெற்ற மத்திய அரசு அதிகாரிகளின் சோதனை குறித்து ஒரு பிரச்சினை எழுப்ப முயற்சிக்கப்பட்டது. அது ஒழுங்குப் பிரச்சினையின் கீழ் வராது என்று நான் தீர்ப்பளித்தேன். அதன் பிறகு அதே பிரச்சினை குறித்து உறுப்பினர் அவர்களிடமிருந்து முன்னறிவிப்பு வந்துள்ளது. இப்பிரச்சினையில் தமிழக அரசின் நேரடிப் பொறுப்பு எதுவும் இல்லை என்ற காரணத்தால் பேரவையில் இந்தப் பிரச்சினையை எழுப்ப இசைவை என் அறையிலேயே மறுத்துள்ளேன். ஆகவே இது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் குறித்த பிரச்சினையாக உள்ளதால் அவர்கள் தன்னிலை விளக்கம் அளிக்க பேரவை விதி 110-ன் கீழ் அனுமதி அளிக்கிறேன்''.

1935 IV 20–37

ஆளுநர் நடவடிக்கை (மேலவை உறுப்பினர் நியமனம்)—

மேலவை உறுப்பினர் நியமனத்தில் ஆளுநர் மேற்கொண்ட நடவடிக்கை பற்றி ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி பேச முற்பட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

" The act of the Governor cannot be questioned at all and the matter is sub-judice.

I have given an opportunity to the Member to express his views. The ruling of the Chair is final. There cannot be a debate after my ruling. இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.''

1986 XXIII 299–307

உறுப்பினர்கள் அமரும் இடங்கள்—

இரண்டு உறுப்பினர்கள் இடம் மாறி அமர்ந்திருப்பது குறித்து ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

''அந்த இரண்டு உறுப்பினர்களைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற முறையிலும், கட்சியின் நிறுவனர் என்ற முறையிலும் எனக்கு ஓர் அறிவிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட காரணத்தால் அங்கே உட்கார்ந்திருக்கிறார்கள்''.

1987 XXXII 417, 418

உறுப்பினர்களின் முகவரிப் பட்டியலில் தம்முடைய பெயருக்குக் கீழே 'சுயேச்சை' எனக் குறிப்பிடப்பட்டிருப்பது குறித்து ஜனதா கட்சியின் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பிய போது தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு வருமாறு:

''இது ஒழுங்குப் பிரச்சினையின்கீழ் வராது. இதையெல்லாம் என்னுடைய அறையிலே வந்து சொல்ல வேண்டும். இங்கே பேசக் கூடாது. அலுவல் ஆய்வுக் குழுவிலே இதுபற்றி விவாதித்திருக்கிறோம். அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திற்கு நீங்கள் வந்து கலந்து கொள்ளாததால் உங்களுக்குத் தெரியவில்லை: அதற்காக அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்து பேச வேண்டிய பிரச்சினையை அவையில் எழுப்பவும், விவாதிக்கவும் நான் அனுமதிக்க முடியாது. தயவு செய்து இந்த





உறுப்பினர்கள் அமரும் இடங்கள்— தொடர்ச்சி

மன்றத்தை அலுவல் ஆய்வுக் குழுவாக மாற்ற முயற்சிக்காதீர்கள். இன்றைக்கும் கூட அலுவல் ஆய்வுக் குழு கூட இருக்கிறது. அங்கே வந்து இந்தப் பிரச்சினையை எழுப்புங்கள். இதுபற்றி அங்கே விவாதித்துக் கொள்ளலாம்.

..நிகழ்ச்சி நிரலின்படி அவையை நடத்திச் செல்ல உறுப்பினர்கள் என்னுடன் ஒத்துழைக்க வேண்டும். அவை நடவடிக்கைக்கு யாரும் குந்தகம் விளைவிப்பதை நான் அனுமதிப்பதற்கில்லை.

..இன்னொன்றையும் அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சைதாப்பேட்டையிலே பொதுக் கூட்டம் போட்டு அந்தக் கூட்டத்திலே இந்த அவை பற்றிப் பேசப்பட்டிருக்கின்றது. இப்படிப் பேரவையினுடைய மரியாதையை, கண்ணியத்தைக் குறைப்பதற்கு யார் முயன்றாலும் நான் அனுமதிக்க மாட்டேன். அங்கே என்னென்ன பேசப்பட்டன என்ற விவரங்களை வேண்டுமானாலும் சொல்கிறேன், என் அறைக்கு வாருங்கள்.

..நமது விதிகளுக்குட்பட்டு அவை நிகழ்ச்சிகளைத்தொடர்ந்து அமைதியாக நடத்திச் செல்வதற்கு என்னுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மக்களின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்காக நாம் சட்டமன்றத்திலே கூடி இருக்கிறோம். கட்சிப் பிரச்சினைகள் பற்றி இங்கே பேச முடியாது. ஏதோ ஓர் உள் நோக்கத்தில் அவை நிகழ்ச்சிகளை இப்படித் தடுக்காதீர்கள். மீறினால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

..அத்தோடு இன்னொன்றையும் சொல்லி விடுகிறேன். இந்த மாதிரி சட்டசபை நடவடிக்கைகள் நடக்கும் போது, வேண்டுமென்றே சபையினுடைய நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டும் என்று பிரச்சினைகளை எழுப்புபவர்கள் குறித்து 1972 ஆம் ஆண்டிலேயே அன்று இருந்த முதலமைச்சர் அவர்கள் இந்தச் சபையிலே சொல்லியிருக்கிறார்கள். 'யாராவது ஒரு மெம்பர் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பிய பிறகு பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் உண்மையில் சொல்லாமல் இருந்தால் அவருக்கு மறுபடியும் 10 பாயின்ட் ஆப் ஆர்டர் வரை கேட்பதற்கு அனுமதி மறுத்துவிட வேண்டும்.' என்று சொல்லி இருக்கிறார்கள். நானும் இனிமேல் அந்த முறையைப் பின்பற்றப் போகிறேன். You will not catch my eyes for ten times "

1985 IX 53–57

உறுப்பினர்கள் அமரும் இடங்கள்—தொடர்ச்சி

எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர், எதிர்க்கட்சித் தலைவர் இருக்கையில் அமர்ந்தது குறித்தும் ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் அமைச்சர்கள் வரிசையில் அமர்ந்தது குறித்தும் சில உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

''இதில் ஒழுங்குப் பிரச்சினை இல்லை. அமைச்சர்களுடன் உறுப்பினர்கள் வந்து அமர்வதால் அவர்களும் அமைச்சர் ஆவதில்லை. இவரும் எதிர்க்கட்சித் தலைவர் ஆவதில்லை.''

1986 XXVIII 162

ஒரு கட்சியிலிருந்து நீக்கப் பெற்ற உறுப்பினர்கள் குறித்து ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

''அவை நடவடிக்கைகள் பற்றி வருமேயானால் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பலாம். மற்றபடி முக்கியமானதாக இருந்தால் என்னுடைய அறையில் வந்து கேட்டு, அமைச்சரைக் கேட்டு எழுப்பலாம்.''

1987 XXXII 84

உறுப்பினர்களுக்கான வசதிகள்:—

உறுப்பினர்கள் விடுதி சம்பந்தமான பிரச்சினைகளை அவைக்குழுவில் எழுப்புதல் வேண்டும். அவையில் எழுப்புதல் கூடாது.

1985 III 495

குற்றச்சாட்டுகள் :—

மத்திய அரசின் மீது குற்றஞ்சாட்டி ஓர் உறுப்பினர் பேசியபோது இன்னொரு உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி மத்திய மாநில அரசுகளின் உறவு பற்றி கருத்துத் தெரிவித்தபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது:

''சபை நடவடிக்கைகளுக்கு, விதிமுறைகளுக்கு முரணாக நடப்பதுதான் பாயின்ட் ஆப் ஆர்டரில் வரும். இப்போது உறுப்பினர் எழுப்புவது ஒழுங்குப் பிரச்சினையாகாது.''

1986 XVIII 514



குறிப்புகள்—

ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி ஓர் உறுப்பினர் பாலிசி நோட்டிலே இருக்கும் தவறை சுட்டிக் காட்டியபோது தலைவர் குறிப்புரைத்ததாவது:

''இது பாயின்ட் ஆப் ஆர்டரிலும் வராது. பாயின்ட் ஆப் இன்பர்மேஷனிலும் வராது. முந்தைய உறுப்பினர் பேசியதிலே தவறு இருந்தால் கேட்கலாம் அல்லது உங்களுக்குப் பேசுகிற சந்தர்ப்பம் இருந்தால் அப்போது கேட்கலாம். எழுத்துப் பிழைகளை ஒரு பிரச்சினையாக எழுப்பிக் கொண்டிருந்தால் சபையை நடத்த முடியாது. எழுத்துப் பிழை, கமா இவற்றையெல்லாம் 234 உறுப்பினர்களும் எழுப்பினால், சபையை நடத்த முடியாது. உங்கள் கட்சியிலே யார் பேசுகிறாரோ அவரிடம் சொல்லி பேசச் சொல்லுங்கள்.''

1987 XXXI 722

''தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்'' என்ற மானியக் கோரிக்கையை அமைச்சர் முன் மொழிந்த பிறகு ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி, சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சர் தற்போது அமைச்சராக இல்லை என்றும் உறுப்பினராகத்தான் இருக்கிறார் என்றும் சுட்டிக் காட்டியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

''இந்தக் குறிப்புகள் ஒரு மாதத்திற்கு முன்பு வழங்கப்பட்டவை. ஏப்ரல் மாதம் 5-ந் தேதி அனுப்பப்பட்டவை. மறுபடியும் இவைகளை அச்சடிக்க வேண்டும் என்றால் காலம் அதிகம் ஆகும். இவைகளையெல்லாம் பெரிய விஷயமாகச் சொல்ல வேண்டாம்.''

1986 XXVI 268-269

குறைவெண்—

அவையில் விவாதம் நடந்துகொண்டிருக்கும்போது குறைவெண் இல்லாதது பற்றி ஓர் உறுப்பினர் தலைவருடைய கவனத்திற்குக் கொண்டுவந்த போது பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது:

''மன்றத்தை ஆரம்பிக்கிறபோது குறைவெண் (Quorum) இருந்தால் போதும்.''

1985 XII 73

ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி

கூட்டுப் பொறுப்பு—

மானியக் கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட அமைச்சர் (ராஜினாமா செய்ததாக சொல்லப்படுகின்ற நிலையில்) அவையில் இருந்தும் முன் மொழியாமல் இன்னொரு அமைச்சர் முன் மொழிவது முறையா என சில உறுப்பினர்கள் ஓர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

"It is a collective responsibility. Any Minister can move any demand. Members cannot compel a particular Minister to move a demand."

1986 XXI 323–324

கொள்கை அறிவிப்புகள்—

ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர், மாநிலங்கள் அவையில் பேசியது பற்றி முதலமைச்சர் கொடுத்துள்ள அறிக்கை குறித்து ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினையெழுப்பிப் பேச முற்பட்டபோது தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு பின்வருமாறு :

''மாநிலங்கள் அவையில் பேசியதைப் பற்றி இங்கே பேச முடியாது. இங்கே அந்தக் குறிப்பு வராது.

..அது கட்சி விவகாரம். முதலமைச்சர் அவர்கள் கட்சித் தலைவர் என்ற முறையில் அதைச் சொல்லியிருக்கிறார்கள். Chief Minister is also the General Secretary of the Party.

..He can control his M.Ps. and M.L.As. He has got that prorogative as a Leader of the Party.

..நாம் அஜெண்டாவில் ஒதுக்கிய பிறகுதான் பேச முடியும். இப்போது பேச முடியாது. என்னென்ன விவாதிக்கலாமென்று அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவெடுத்து பின்னர் இங்கே வந்து விவாதிக்கலாம்.

..அது பாயின்ட் ஆப் ஆர்டரில் எழ முடியாது. ராஜ்ய சபாவில் நடந்தது பற்றி இந்த ஹவுசில் பதில் சொல்வதற்கு யாரும் இல்லை. இது அதில் வராது. It is not related to the proceedings of the House. As a Leader of the Party and as a Chief Minister he has issued a statement. You cannot raise it here under any of the Rules.



ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி

கொள்கை அறிவிப்புகள்—தொடர்ச்சி

..There is no point of order. It cannot be raised as a point of information also."

1987 XLV 235, 236, 237, 238

பால், சர்க்கரை, பஸ் கட்டண உயர்வு பற்றி அமைச்சர் அவையில் அறிக்கை வைக்காமல் பத்திரிகையில் செய்தி வெளியிட்டுள்ளது முறையா என ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பியபோது, அது ''ஒழுங்குப் பிரச்சினையில்'' வராது என்று தீர்ப்புரைக்கப்பெற்றது.

1985 IV 443–445

செய்திகள்—

ஓர் அமைச்சர் ராஜினாமா செய்துள்ளதாக வந்துள்ள செய்தி பற்றி ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''அவைக்கும் அதற்கும் தொடர்பில்லை. ஆகவே அதிலே ஒழுங்குப் பிரச்சினை எதுவும் இல்லை. அவையின் முன்புள்ள அலுவலாக இருந்தால் மட்டுமே ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப வேண்டும்.''

1986 XXI 522

[illegible]ரின் தீர்ப்பு—

உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் பற்றி கேலிச் சித்திரம் வெளியிட்டதற்காக ஆனந்த விகடன் பத்திரிகை ஆசிரியருக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை ரத்து பற்றி சில உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிப் பேச முயன்றபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

''இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. முடிந்த பிரச்சினையை விவாதிப்பது முறையல்ல. நேற்றைய தினம் தீர்ப்பளித்த பிறகு நேற்றைய தினமே அந்த விவகாரம் முடிந்துவிட்டது. இந்தப் பிரச்சினையை இன்றைக்குப் பேசுவது சரியல்ல; முறையல்ல.''

1987 XXXVII 469–472

நீக்கம்—

அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கம் செய்யப் பெற்றது பற்றி ஒழுங்குப் பிரச்சினையொன்றை சில உறுப்பினர்கள் எழுப்பியபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''அதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் வராது. அவற்றையெல்லாம் நேற்று 'எக்ஸ்பஞ்ச்' செய்தாகிவிட்டது. நேற்றைய தினம் உங்கள் அனைவருடைய வேண்டுகோளுக்கிணங்க அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டவை பத்திரிகையில் வந்திருந்தால் எழுதிக் கொடுங்கள். நடவடிக்கை எடுக்கலாம். மீண்டும் அவைகளை எல்லாம் அவைக் குறிப்பில் ஏற்ற வேண்டாம்.'' உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய பகுதி நீக்கப்பெற்றது.

1987 XXXIII 466–469,472

பிற சபை விவாதங்கள்—

நீதிமன்றத் தீர்ப்பு ஒன்று பற்றி அவையில் விவாதிப்பது குறித்து 7–4–1986ஆம் நாளன்று தலைவர் அளித்த தீர்ப்பு சம்பந்தமாக மாநிலங்கள் அவையில் நடந்த விவாதம் குறித்து விளக்கம் கோரி ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''டெல்லியில் மேல் சபையில் அவர்கள் அதைப் பேசினார்கள் என்றால் அதை நாம் இங்கே விவாதிக்க வேண்டியது இல்லை. வெளியே யாரும் பேசலாம். நீங்கள் 234 மாண்புமிகு உறுப்பினர்கள் என் மேல் நம்பிக்கை, கான்பிடென்ஸ் வைத்திருக்கும்போது அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். I have your full confidence, love and affection. அது போதும். அதுதான் முக்கியம்.''

1986 XXVII 40

பேசும் வாய்ப்பு—

உரையாற்றிக் கொண்டிருக்கிற ஓர் உறுப்பினருக்கு அதிக நேரம் கொடுக்க வேண்டுமென்று இன்னொரு உறுப்பினர் கோரியபோது, இவ்வாறு மற்ற உறுப்பினர்களுக்காக வக்காலத்து வாங்கிப் பேசுவது முறையா என்றும், நீதி





பேசும் வாய்ப்பு தொடர்ச்சி

மன்றத்தைப் போல் வக்காலத்து பெட்டிஷன்கள் சட்ட மன்றத்தில் போடுவது முறையா என்றும் எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்சினைக்குத் தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''இது ஒழுங்குப் பிரச்சினை அல்ல.''

1986 XXIII 671–672

பேரவைச் செயலகம்—

பேரவைச் செயலகத்தின் இலச்சினையை பீர்க்கங்கரணை பகுதியைச் சேர்ந்த குடும்ப நல இளைஞர் மன்ற துவக்க விழா அழைப்பிதழில் உபயோகித்துள்ளது, அவ்விழாவினைப் பேரவைத் தலைவர் நடத்துவது போல, அரசாங்கமே நடத்துவது போல எண்ணுகின்ற அளவுக்கு துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகும் என அவையில் ஓர் உறுப்பினர் 1985 சூலை 5 ஆம் நாளன்று ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பட்டது :

''பேரவைச் செயலகத்தின் இலச்சினையை பேரவைச் செயலகத்தைத் தவிர வெளியார் யாரும் பயன்படுத்த முடியாது. அப்படி யாரேனும் பயன்படுத்தியிருந்தால் அது பெரிய தவறுதான். It is an offence. He can be penalised for fine.

இது பேரவைச் செயலகம் பற்றியது. எனவே, நான் தீவிரமாக விசாரித்து, மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டு, எப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அப்படி எடுக்கிறேன்.''

11–7–1985ஆம் தேதியன்று தலைவர் அளித்த தீர்ப்புரையாவது :

''இது குறித்து அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டது. அவர்கள் தங்களுக்கு அனுபவம் இல்லாத காரணத்தால், இந்தப் பிழை நேர்ந்துவிட்டது என்றும், தங்கள் செயலுக்கு வருந்துவதாகவும், தங்களை மன்னிக்கும்படியும் கேட்டுக் கடிதம் எழுதியுள்ளார். எனவே, இதில் மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் தேவையில்லை.''

1985 XII 45–51

1985 XIII 20

மேலவை நீக்கம்—

கொள்கை அளவில் மேலவையை ஒழித்து விடுவதாக அரசு முடிவெடுத்து இருப்பதாக மேலவையில் செய்திகள் அறி விக்கப்பட்டுள்ளது குறித்து ஓர் உறுப்பினர் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையின் மீது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''நாம் எல்லோரும் வாக்களித்த பிறகுதான் அதை எடுக்க முடியும் என்று உங்களுக்குத் தெரியும்.

..அவை முன்னவர் வந்தவுடன் கேட்கலாம். அங்கே என்ன கேட்கப்பட்டது என்பது எனக்கு ஒன்றும் இன்னமும் தெரியாது. என்னுடைய கவனத்திற்கு வந்த பிறகுதான் நான் சொல்ல முடியும். என்னுடைய கவனத்திற்கு வந்த பிறகுதான் உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதுகாப்பது பற்றி நான் பேச முடியும்.''

1986 XXVII 220—221

ஒழுங்குப் பிரச்சினை—ஏனையவை—

உள்ளாட்சி நிறுவன ஊழியர்கள் கோட்டைமுன் உண்ணா விரதம் இருப்பது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத் திருக்கிறது என ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை யொன்றை எழுப்பியபோது, இது ஒழுங்குப் பிரச்சினை யின் கீழ் வராது என தலைவர் குறிப்புரைத்தார்.

1985 IX 464

ஒழுங்குப் பிரச்சினை என்ற முறையில் எழுப்பப்பட்ட ஒரு பொருள் ஒழுங்குப் பிரச்சினையின் கீழ் வராது என்ற அடிப்படையில் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1986 XXV 555
XXI 41
XXVI 623
XXVIII 72

ஒழுங்குப் பிரச்சினை என்று, எழுந்து ஓர் உறுப்பினர்பேசத் தொடங்கிய போது, உறுப்பினர் ஒரு தகவல் சொல்கிறார் என்றும், அதுகுறித்து சொல்வது ஒழுங்குப் பிரச்சினையின் கீழ் வராது என்றும் குறிப்புரைக்கப் பெற்று அப்பகுதி நீக்கப் பெற்றது.

1986 XIX 353





ஓர் அமைச்சருடைய மகன் சட்டத்தை மீறியதற்காக சென்னை நகரில் உள்ள அவரது வீட்டைச் சோதனை யிட்டது பொதுமக்கள் மத்தியில் ஒரு பதட்ட நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்றும், ஆகவே அமைச்சர் தன் னிலை விளக்கம் கொடுக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டு ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது :

''It will not come under point of order........................ It Should emerge out of proceedings. திடீரென்று எழுந்து இப்படி கேட்கக் கூடாது. முன்னறிவிப்பு கொடுத்தால் தொடர்புடைய அமைச்சருக்கும் அது பற்றித் தெரிவித்துப் பதிலளிக்க வசதி ஏற்படும்.''

1985 III 496

கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தைத் தொடங்கி வைத்த முன்னாள் பிரதமரைக் குற்றம் சாட்டுகிற மாதிரி ஓர் உறுப்பினர் பேசியதை இன்னொரு உறுப்பினர் ஆட் சேபித்து ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் ;

'' இது ஒழுங்குப் பிரச்சினை அல்ல. பேசுகின்ற உறுப்பி னர் சபையின் மரபுகளை மீறவில்லை, விதிகளை மீறவில்லை, அவருடைய கருத்தைச் சொன்னார்.''

1986 XIX 92—93

குதிரைப் பந்தய ஒழிப்பு குறித்து விதி 111-ன்கீழ் அமைச்சர் அறிக்கை அளிக்கத் தொடங்கியபோது அதே பொருள் குறித்து ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். அதற்கு தலைவர் அளித்த குறிப்புரையாவது :

'' அமைச்சர் படிக்கப் போகின்ற அறிக்கை என்னவென்று உறுப்பினருக்குத் தெரியாது. எனவே, அவர்கள் படித்த பிறகு கேளுங்கள்.''

1986 XXVI 176—179

சட்ட முன்வடிவின் மீது ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது இன்னொரு உறுப்பினர் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை, ஒழுங்குப் பிரச்சினை அல்ல என்று குறிப்புரைக்கப்பெற்று, நீக்கப்பெற்றது.

*1986* **XXVIII** *464–465, 469*

செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் பறக்கின்ற தேசியக் கொடியில் ஏற்பட்ட கிழிசல் குறித்து ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பியபோது தலைவர் அளித்த தீர்ப்புரையாவது :

"The defect has been rectified. This will not come under point of order."

*1985* **XI** *404*

பிற்பட்ட வகுப்பினருக்கான ஒதுக்கீடு குறித்து ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியபோது இது ஒழுங்குப் பிரச்சினையின் கீழ் வராது என்றும் இதைப்பற்றி விவாதத்தில் பேசலாம் என்றும் தலைவர் குறிப்புரைத்தார்.

*1986* **XXVII** *39*

மின்வாரிய வரவு–செலவுத் திட்ட விவாதத்தில் ஓர் உறுப்பினர் உரையாற்றுகையில் தெரிவித்த ஒரு கருத்தையொட்டி இன்னொரு உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி விளக்கம் கோரியபொழுது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் ;

"அதெல்லாம் மின் துறை குறித்த அறிக்கையிலேயே இருக்கிறது, எது எது எவ்வளவு ஆண்டுகளாக பெண்டிங்காக இருக்கிறது என்று அறிக்கையிலே இருக்கிறது. அதெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரிலே வராது."

*1987* **XLIV** *468, 469*

ஒழுங்குப் பிரச்சினை—நடைமுறைகள்

அனுமதி—

அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைப் பாராட்டுவதற்காக உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்புகிறார்கள். அவை ஒழுங்குப் பிரச்சினைகளின் கீழ் வராது என்று குறிப்புரைக்கப் பெற்றது.

*1985* **XIII** *628–629*





அனுமதி—தொடர்ச்சி

ஆசிரியர்கள் கைது குறித்து கேள்வி நேரம் முடிந்தவுடன் ஓர் உறுப்பினர் பேச முற்பட்டபோது பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது;

"இதுபற்றி கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ, ஒத்திவைப்புத் தீர்மானமாகவோ கொண்டு வருவதற்கு, முன்னறிவிப்பு கொடுக்க வேண்டும். திடீரென்று பேசக்கூடாது."

*1985* **XIII** *493–494*

உரையாற்றிக் கொண்டிருக்கிற ஓர் உறுப்பினர், இன்னொரு உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவதைச் சுட்டிக்காட்டி தம் பேச்சை நிறுத்த முயன்றபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"பாயின்ட் ஆப் ஆர்டரை நீங்களே அனுமதிக்க முடியாது. நீங்கள் தொடர்ந்து பேசுங்கள். இல்லாவிட்டால் அமர்ந்து விடுங்கள்."

*1986* **XXX** *387–388*

ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப விரும்பும் உறுப்பினர்கள் முன்கூட்டியே தலைவரிடம் தெரிவித்து அனுமதியைப் பெறவேண்டும் என்று குறிப்புரைக்கப்பெற்று, அவ்வாறு தலைவரிடம் முன்அனுமதி பெறாமல் எழுப்பப்பெற்ற ஒழுங்குப் பிரச்சினைக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

*1986* **XX** *694*

**XXIX** *258*

ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைத் திடீரென எழுப்பியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"என் அனுமதியின்றி பேசக் கூடாது. என் அறைக்கு வாருங்கள். பேசிக்கொள்ளலாம். உறுப்பினர் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்பதாக எழுப்பிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது."

*1985* **VIII** *38*

அனுமதி—தொடர்ச்சி

தலைவருடைய தீர்ப்பு மீது ஒழுங்குப் பிரச்சினை வராது.

| | | |
|---|---|---|
| 1985 | VI | 446 |

கேட்கும் முறை—

அவையிலே நடக்கக் கூடிய நிகழ்ச்சிகளின் தொடர்பாகத் தான் எழுப்பப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1985 | I | 321 |
| | II | 93 |

ஓர் உறுப்பினர் உரையாற்றுகையில் இன்னொரு உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைக் கிளப்ப முற்பட்ட போது கீழ்க்கண்டவாறு தீர்ப்பளிக்கப்பெற்றது :

"பாயின்ட் ஆஃப் ஆர்டர் நினைத்தவுடன் கொடுக்க முடியாது. சபை நடந்ததில் எந்த விதி மீறப்பட்டிருக்கிறது என்று சொல்லுங்கள். Please quote the rules. Without quoting the rules, I will not allow. உங்கள் இஷ்டத்திற்கு பாயின்ட் ஆஃப் ஆர்டர் அனுமதிக்க முடியாது. Please do not try to monopolise the time of the House.

நான் அனுமதிக்கவில்லை. விதி மீறப்பட்டிருந்தால்தான் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கிளப்ப முடியும்."

| | | |
|---|---|---|
| 1987 | XXXVI | 66 |

கேள்வி நேரத்திற்குப் பிறகு ஓர் உறுப்பினர் ஒரு குறிப்பிட்ட பிரச்சினை பற்றி ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்ப முயல்கையில் பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது :

"In the interest of the dignity of the House, I am requesting you not to raise that issue now. ..It is a delicate issue."

"பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று அதை எழுப்ப வேண்டாம். பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்பது அவையில் நடைபெறும் நடவடிக்கையை ஒட்டித்தான் இருக்க வேண்டும்."

| | | |
|---|---|---|
| 1985 | XIV | 42–44 |



கேட்கும் முறை—தொடர்ச்சி

பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுந்துகொண்டு உறுப்பினர்கள் விரும்புவதை எல்லாம் பேசக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1987 | XXXII | 285 |

மரணமடைந்த போக்குவரத்து ஊழியர் ஒருவரின் மனைவிக்கு வேலைவாய்ப்பு கொடுப்பது பற்றி ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை கேள்வி நேர முடிவிற்குப் பிறகு எழுப்பியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பட்டது :

"இது பாயின்ட் ஆஃப் ஆர்டரில் வராது, வேறு வழியில் எழுதிக்கொண்டு வாருங்கள்.

It won't come under point of order. Point of order can be raised only on some business which is being conducted in the House. We have not yet started a Government business. We are yet to start."

| | | |
|---|---|---|
| 1985 | IX | 298 |

வெளியில் பேசியதாகச் சொல்லப்படுவதை வைத்து அவையில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புதல் கூடாது.

| | | |
|---|---|---|
| 1985 | II | 278 |

தவிர்த்தல்—

அமைச்சர் பதில் உரையாற்றும்போது ஒழுங்குப் பிரச்சினை கிடையாது.

| | | |
|---|---|---|
| 1986 | XXIII | 714 |

அமைச்சரின் அறிக்கைக்குப் பின் ஒழுங்குப் பிரச்சினையின் மூலம் ஓர் உறுப்பினர் விளக்கம் பெற முயன்றபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"அமைச்சருடைய அறிக்கையின்மீது எந்தவிதமான விவாதமும் கூடாது. இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் கிடையாது."

| | | |
|---|---|---|
| 1985 | XIII | 516 |
| 1987 | XXXII | 86 |

ஒழுங்குப் பிரச்சினை—நடைமுறைகள்—தொடர்ச்சி

தவிர்த்தல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் நினைக்கும்போதெல்லாம் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப முடியாது.

| | | |
|---|---|---|
| 1987 | XXXIII | 366 |

ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப முடியாது.

| | | |
|---|---|---|
| 1986 | XX | 53 |

கேள்வி நேரத்தில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1985 | II | 276 |
| | IV | 437 |

ஒழுங்குமுறை—

அமைதி காத்தல்—

அனுமதியின்றி ஒரு பிரச்சினையை அவையில் சிலர் எழுப்ப முற்பட்டு கூச்சல் குழப்பம் விளைவித்தபோது தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு வருமாறு :

'' அவை நடவடிக்கைகளை இடைமறிக்காதீர்கள். விதியைப் படித்துவிட்டு வாருங்கள். You are all behaving like school children.

..இதற்கு அனுமதி கிடையாது. இவையெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது.

..ஜனநாயக அமைப்பைக் குலைக்கிறீர்கள். ஜனநாயக அமைப்பைக் கெடுத்துவிட்டீர்கள். இந்த அமைப்பு பாதுகாக்கப்பட வேண்டும். உங்களுக்காக இந்த அமைப்பு இல்லை. இது பாதுகாக்கப்படவேண்டும். இது மக்களின் அமைப்பு. மக்கள் மன்றம் இது. இந்த மன்றத்தில் நீங்கள் இவ்வாறு பேசுவது முறையல்ல. விதிக்குட்பட்ட பேச்சல்ல இது.

..இந்த அவையின் கண்ணியம் வெளியே குறைத்து மதிப்பிடப்படுகிறது. அதற்கு இப்பேர்ப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், கட்சியினர் தான் பொறுப்பு என்பதை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.



ஒழுங்கு முறை—தொடர்ச்சி

அமைதி காத்தல்—தொடர்ச்சி

..பிரச்சினையை உருவாக்கி இந்த அவையைத் தங்களுடைய அரசியலுக்குப் பயன்படுத்துவதற்காக வந்திருக்கிறார்கள். நாட்டு மக்களுக்கு இந்த விவகாரம் தெரிந்தாக வேண்டும்.''

| | | |
|---|---|---|
| 1987 | XXXIX | 351–354 |

அவையில் உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1986 | XXXI | 159 |
| 1987 | XXXVII | 87 |

உறுப்பினர்கள் பேரவை அலுவலில் கவனம் செலுத்த வேண்டுமென்பதற்காக தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''ஒரே ஒரு சட்டமன்றம் தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அமைச்சர்களும் உறுப்பினர்களும் இதிலே ஈடுபட வேண்டும்.''

| | | |
|---|---|---|
| 1987 | XXXVI | 450 |

ஒரு கட்சியைச் சேர்ந்த எல்லா உறுப்பினர்களும் எழுந்து நிற்பது முறையல்ல. இப்படி எல்லா உறுப்பினர்களும் எழுந்து நின்று கொண்டிருந்தால் சபையை நடத்த முடியாது.

| | | |
|---|---|---|
| 1986 | XXXI | 101 |

ஓர் உறுப்பினர் தனது இருக்கையின் மேல் நின்று கொண்டு கோஷம் எழுப்பிக் கொண்டிருந்தபோது, வரம்பு மீறக் கூடாது எனக் குறிப்புரைக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1987 | XLIV | 178 |

கண்டனத் தீர்மானம் ஒன்றை நிராகரித்து விட்டதாக தலைவர் அறிவித்த பிறகும் சில உறுப்பினர்கள் அவையில் எழுந்து பேசிக் கொண்டேயிருந்த போது, தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு வருமாறு:

''எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும். ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொன்றைச் சொல்கிறீர்கள். ஓட்டுப் போட்ட நாட்டு மக்கள் இதையெல்லாம்

**அமைதி காத்தல்— தொடர்ச்சி**

பார்க்க வேண்டும். 'எலக்டட் ரெப்ரசென்டேடிவ்ஸ்' எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை அவர்கள் பார்க்க வேண்டும்.

இதையெல்லாம் பத்திரிகைக்காரர்கள் நன்றாகப் பிரசுரிக்க வேண்டும். அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களின் பெயர்களையும் அந்தந்த தொகுதிகளின் பெயர்களையும் போட்டு பிரசுரிக்க வேண்டும். இது மக்களுக்குத் தெரிய வேண்டும்.

..இவ்வாறு நடந்து கொள்வது ஜனநாயக முறைக்கு அப்பாற்பட்டது. இதை விட அதிகமாகச் சொல்வதற்கு வார்த்தைகள் கிடையாது. இது நல்லதல்ல.

..நீங்கள் அரசியலை சட்டமன்ற நடவடிக்கைகளில் கலக்காதீர்கள். உங்கள் கட்சி நடவடிக்கைகளை சட்டமன்றத்தில் கலக்காதீர்கள். சட்டமன்ற உறுப்பினராக என்னிடத்தில் பேசுங்கள்.

..கோயிலுக்குச் சமம் இந்தச் சட்டசபை. மக்களுடைய மன்றம் மகேசனுடைய இடம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

..நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு என்னை ஆளாக்குகிறீர்கள். I want to have a smooth running of the House. ''

1986 XXXI 355–359, 375, 376, 400, 403.

கேள்வி நேரத்தில் பலபேர் எழுந்து பேசக்கூடாது. தலைவர் பேசிக் கொண்டிருக்கும் போது உறுப்பினர்கள் எழுந்திருக்கக் கூடாது.

ஓர் உறுப்பினர் எழுந்த காரணத்தால் மற்றவர்கள் எழுந்து விடக்கூடாது.

Newton's Law of Nature cannot be applied here.

1987 XXXV 8–9





**அமைதி காத்தல்— தொடர்ச்சி**

கேள்வி நேரத்தின் போது உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

1987 XXXIV 198

கேள்வி நேரத்தின் போது உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முறையைப் பற்றி தலைவர் பின்வரும் தீர்ப்பை நினைவுபடுத்தினார்:

"Noticing some Members conversing with the Ministers in the Treasury Benches from behind the Chair observed: Until the Question Hour is over, nobody should talk to the Ministers from behind and Members should not walk across the House during question hour."

1986 XIX 420

தங்களுக்குள்ளே தனியாக சில உறுப்பினர்கள் பேசிக் கொண்டிருந்தபோது "ஓரே ஒரு சட்டசபை நடக்கட்டும்" எனத் தலைவர் குறிப்புரைத்தார்.

1987 XIX 475

தலைவர் ஓர் உறுப்பினரை அனுமதித்து அவ்வுறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும் போது மற்ற உறுப்பினர்கள் நின்று கொண்டு இருப்பது முறையல்ல; பேசிக் கொண்டிருக்கும் உறுப்பினர் முடித்த பிறகு மற்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

1986 XXIII 308–309

நிகழ்ச்சி நிரல்படி அவையை நடத்திச் செல்ல உறுப்பினர்கள் தலைவருடன் ஒத்துழைக்க வேண்டும்.

1986 IX 54–56

பேரவையின் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கும் பொழுது உறுப்பினர்கள் அனைவரும் அமைதி காக்க வேண்டும்.

1986 XXVIII [illegible]

**அவைக்கு வருதல்—**

அமைச்சர்கள் தங்கள் சுற்றுப்பயணங்களைப் பேரவை நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்குத் தடையேற்படாத வாறு அமைத்துக்கொள்ள வேண்டும். பேரவை நிகழ்ச்சிகளுக்கு முதலிடம் கொடுப்பது தான் பேரவைக்கு மரியாதை காட்டுவதாகும். நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்ட அலுவல்களுக்குப் பொறுப்புடைய அமைச்சர்கள் பேரவைக் கூட்டம் ஆரம்பிக்கும்போதே அவையில் இருப்பது சிறப்பாக இருக்கும்.

| | | |
|---|---|---|
| 1985 | II | 279 |

உறுப்பினர்கள் உரையாற்றும்போது தங்களுக்கு இன்னும் கொஞ்சம் நேரம் அனுமதிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால் தலைவர் அவையின் நேரத்தை கொஞ்சம் நீட்டித்தால் எழுந்து வெளியே செல்கிறார்கள். உறுப்பினர்கள் அனைவரும் அவையில் அமர்ந்திருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1986 | XIX | 375 |

**அனுமதி பெற்றுப் பேசுதல்—**

அவையில் சில சமயங்களில் திடீர் திடீரென்று எல்லோரும் ஒன்றாக எழுகின்றபோது பிரச்சினைகள் உருவாகின்றன. உறுப்பினர்கள் எல்லோரும் சுமுகமாக இருந்தால்தான் பிரச்சினை எழாது.

| | | |
|---|---|---|
| 1986 | XXVI | 647 |

அனுமதியில்லாமல் திடீர் திடீரென்று ஓர் உறுப்பினர் பேசுவது சரியல்ல என தலைவர் குறிப்புரைத்தவுடன் அவ்வுறுப்பினர் 'இப்போது கடைசியில் போட்டிருக்கிறீர்கள். பிறகு வெளியே தூக்கிப் போட்டு விடுவீர்கள் நான் கவலைப்படவில்லை' என்று கூறியபோது தலைவர் குறிப்புரைத்ததாவது :

''தவறு செய்தால் வெளியிலேதான் தூக்கிப்போடுவேன்'',

| | | |
|---|---|---|
| 1987 | XXXVII | 98 |





**அனுமதி பெற்றுப் பேசுதல்— தொடர்ச்சி**

உறுப்பினர்கள் அமர்ந்து கொண்டே பேசுவது முறையல்ல.

| | | |
|---|---|---|
| 1986 | XXV | 557 |
| 1987 | XXXVI | 73 |
| | XL | 214 |

உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் நேரடியாகப் பேசிக் கொள்ளக்கூடாது.

| | | |
|---|---|---|
| 1987 | XXXIII | 81 |
| | XXXVII | 586,587 |
| | XLIII | 500 |

உறுப்பினர்கள் பேசும்போது அவரவர்கள் இருக்கையில் இருந்துதான் பேச வேண்டும் ; வேறு இடத்திலிருந்து பேசினால் ரெக்கார்ட் ஆகாது.

| | | |
|---|---|---|
| 1987 | XLVI | 339 |

எல்லோரும் எழுந்து நின்று பேசக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1987 | XXXVII | 98 |

ஒரு கட்சியின் தலைவர் பேசிக் கொண்டிருக்கும்போது அந்தக் கட்சியைச் சேர்ந்த மற்ற உறுப்பினர்கள் எழுந்து பேசக்கூடாது.

| | | |
|---|---|---|
| 1987 | XXXVI | 209 |

ஓர் உறுப்பினர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது மற்ற உறுப்பினர்கள் எழுந்து குறுக்கிட வேண்டியதில்லை. எல்லா உறுப்பினர்களும் எழுந்து பேச முயலக் கூடாது. அந்தந்தக் கட்சிகளின் தலைவர்கள் பேசும்போது பதில் கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு இருக்கிறது.

| | | |
|---|---|---|
| 1986 | XXIX | 69 |

ஓர் உறுப்பினர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது மற்றொரு உறுப்பினர் நின்று கொண்டிருப்பது முறையல்ல. அவ்வுறுப்பினர் உரையில் குறுக்கிடுவதும் நல்லதல்ல.

| | | |
|---|---|---|
| 1986 | XXII | 589 |

ஓர் உறுப்பினர் பேசும்பொழுது அவருக்குப் பின்னால் இருந்து கொண்டு 'ரன்னிங் காமெண்ட்ரி' போல மற்ற உறுப்பினர்கள் பேசுவது சரியான முறையல்ல.

1987 XXXVIII 101

கேள்வி நேரத்தில் ஓர் உறுப்பினர் அனுமதியில்லாமல் குறுக்கீடு செய்தபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''உறுப்பினருக்கு மட்டும் இந்தச் சபை அல்ல. பல உறுப்பினர்கள் கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். உறுப்பினர் அவையின் மரபைக் காப்பாற்ற வேண்டும். கொஞ்சம் அவை அடக்கத்தோடு இருக்க வேண்டும்''.

1986 XXVIII 258

தலைவரின் அனுமதியில்லாமல் எழுந்து நிற்பது முறையல்ல.

1987 XXXIII 468

தலைவரின் அனுமதியின்றி ஓர் உறுப்பினர் பேச முற்பட்டபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது:

''திடீர், திடீரென்று எழுந்து கொள்ளக் கூடாது. இது கேள்வி நேரம்''.

1986 XXVII 190

மூன்று கட்சிகளின் தலைவர்களும் ஒரே நேரத்தில் பேச முற்பட்டபோது, தலைவர் அளித்த குறிப்புரையாவது:

''உங்களுக்குள்ளே ஒருவர் அமர்ந்து, ஒருவர் பேசுவது தான் முறை. .. விதியைப் பின்பற்ற வேண்டும். புதிதாக வந்துள்ள உறுப்பினர்கள் உங்களைப் பார்த்துத்தான் கற்றுக் கொள்ள வேண்டும். எதுவாக இருந்தாலும், அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசலாம்''.

1987 XLIV 182







விதி 111-ன்கீழ் அமைச்சர் ஓர் அறிக்கையைப் படித்துக் கொண்டிருக்கும்போது, சில உறுப்பினர்கள் குறுக்கிட்டபோது, தலைவர் குறிப்புரைத்ததாவது :

''மக்களுடைய பிரச்சினையைப்பற்றி இங்கே அமைச்சர் படித்துக் கொண்டிருக்கிறார். மக்கள் மேல் அக்கறை இல்லாதவர்கள் எதிர்த்துக் கொண்டிருக்கிறீர்கள். மக்களுக்காகப் படித்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் மக்களுக்காக அல்ல. அரசியல் செய்து கொண்டிருக்கிறீர்கள். இது அரசியல்தான். அமைச்சர் மக்களுக்காகப் படிக்கிறார். மக்கள் மன்றத்தில் மக்களுக்காக படிக்கிறார். உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும். இல்லை என்றால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியது வரும்''.

1986 XXXI 354–355

**உரிய இடத்தில் அமர்தல்—**

அவையில் விவாதம் நடக்கின்றபோது உறுப்பினர்கள் நின்று கொண்டிருக்கக் கூடாது.

1986 XIX 715

உறுப்பினர்கள் அவரவர்களுடைய இருக்கைகளில் உட்கார வேண்டும்.

1986 XVIII 629
1987 XXXVI 483

உறுப்பினர்கள் அவைக்கும், அமைச்சர்களுக்கும் தொல்லை கொடுக்கக் கூடாது; அவரவர்கள் இருப்பிடங்களுக்குச் செல்ல வேண்டும்.

1987 XLII 625

ஓர் உறுப்பினர் அனுமதி பெற்று பேச ஆரம்பித்த பிறகு மற்றவர்கள் அமர வேண்டும்.

1987 XLIII 460
XLIV 433

**ஓர் உறுப்பினர் பேசும்போது மற்றவர்கள் எழுந்து நிற்கக் கூடாது.**

1987 XXXVII 907

ஒழுங்கு முறை—தொடர்ச்சி

உரிய இடத்தில் அமர்தல்—தொடர்ச்சி

கேள்வி நேரத்தின்போது உறுப்பினர்கள் அவரவர்கள் இருக்கைகளில் அமர வேண்டும். அமைச்சர்களைத் தொந்தரவு செய்யக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1985 | X | 200 |
| | XII | 484 |
| | XIII | 304 |
| 1986 | XXIX | 142,251 |
| 1987 | XLI | 217 |

விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அதற்கு உதவுகின்ற வகையில் உறுப்பினர்கள் அவரவர்களுடைய இருக்கையில், அமைதியாக அமர்ந்திருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1985 | VI | 217 |
| 1986 | XXVIII | 549 |

தலைவரின் கவனத்தை ஈர்த்தல்—

உறுப்பினர்கள் உரையாற்றும்போது பிரஸ் காலரியைப் பார்த்துப் பார்த்துப் பேசக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1986 | XXIII | 433 |

உறுப்பினர் பேசும்போது தலைவரைப் பார்த்துப் பேச வேண்டும். ஓர் உறுப்பினர் குறுக்கிட்டாலும் கூட அவ்வுறுப்பினரைப் பார்த்துப் பேசக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1987 | XXXVIII | 99 |
| | XXXIX | 743 |

தலைவர் தம்மைப் பார்க்க வேண்டுமென்று ஓர் உறுப்பினர் கேட்டுக் கொண்டபோது பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது :

''நான் உங்களை மட்டுமல்ல, எழுந்து நிற்கும் எல்லோரையும் பார்க்க வேண்டி இருக்கிறது''.

| | | |
|---|---|---|
| 1987 | XXXVII | 98 |

துணை வினா கேட்க விரும்பும் உறுப்பினர் தலைவரின் கவனத்தை ஈர்க்க தம் கையை இருக்கையிலிருந்தே உயர்த்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1985 | VIII | 367 |



ஒழுங்கு முறை—தொடர்ச்சி

தலைவரின் கவனத்தை ஈர்த்தல்—தொடர்ச்சி

வேறு பக்கங்களில் பார்த்துக் கொண்டு பேசக் கூடாது. தலைவரைப் பார்த்துத்தான் பேச வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1987 | XXXIII | 128 |

உறுப்பினர்கள் பேட்ஜ் அணிந்துள்ளது—

ஓர் உறுப்பினர் தம் கட்சி நூற்றாண்டு விழாவினையொட்டி வெளியிடப்பட்ட ஒரு பேட்ஜை அணிந்து கொண்டு அவைக்குள் வந்தது குறித்து மற்றோர் உறுப்பினர் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையின் மீது பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது :

''அவையின் மரபுப்படி உறுப்பினர்கள் பேட்ஜ் அணிந்து கொண்டு அவைக்குள் வரக் கூடாது. தயவு செய்து உறுப்பினர் பேட்ஜை அகற்றிவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.''

| | | |
|---|---|---|
| 1985 | VII | 81 |

ஓர் உறுப்பினர் விவசாயிகளின் கோரிக்கைகளை வலியுறுத்தும் பேட்ஜை அணிந்து கொண்டு அவைக்கு வந்துள்ளது முறையா என்று அமைச்சர் ஒருவர் வினவியபோது, தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார் :—

"It is not in order for the Members to wear badges and signs in their dresses. Display of badge by Health Minister in Lok Sabha in 1977 was not permitted. In 1972, the Speaker, Lok Sabha refused to allow a member to speak till he removed the sign and symbol that he wore in his dress. In 1977, in Bihar Legislative Assembly, some Members entered the chamber with some badges. Objection was raised and then they removed it. According to the Parliamentary Practice and Procedure, wearing of badges or signs in the dress is not in accordance with the decorum to be followed by the Members.

நம்முடைய அவையில் கூட 1983 ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் தேதி இப்படி முறையற்ற பேட்ஜ்கள் மற்றவைகளை அணிவது தவறு, அவ்வாறு அணிவது பாராளுமன்ற சம்பிரதாயம் அல்ல என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது பாராளுமன்ற சம்பிரதாயம் அல்ல என்பதை நான் ஏற்கனவே அவையில் தெரிவித்திருக்கிறேன். எனவே அவ்வாறு அணிந்து கொண்டு இங்கே வந்திருந்தால் அவைகளைக் கழற்றிவிட்டு அவை நடவடிக்கைகளிலே பங்கு கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.''

| | | |
|---|---|---|
| 1986 | XXIII | 310—313 |

ஒழுங்குமுறை—தொடர்ச்சி

**உறுப்பினர்களை வெளியேற்றுதல்—**

கேள்வி நேரம் முடிந்து கவன ஈர்ப்பு எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகும் தொடர்ந்து ஒரு உறுப்பினர் ஒரு பிரச்சினை குறித்து தகவல் கோர விரும்பிய போது தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு பின்வருமாறு :

''..எது எது முடியுமோ, எது எதை இந்த அவையில் விவாதிக்க வேண்டுமோ அதற்கு மட்டும்தான் அனுமதி உண்டு.

உங்களுடைய பிரச்சினை என்ன என்பதை எழுத்து மூலமாகக் கொடுத்தால் அவை முன்னவர் அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர் பதில் சொல்ல வாய்ப்பு இருக்கும். இப்படி திடீரென்று கேட்டால் அது சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் தெரியாது, எனக்கும் தெரியாது.

நேற்றைய தினம் உங்கள் கட்சியின் சார்பில் பேசியபோது இதுபற்றி குறிப்பிட்டிருக்கலாம். துணை மானியக் கோரிக்கையில் பேசியிருக்கலாம். ஒவ்வொன்றுக்கும் ஒரு முறை இருக்கிறது. இப்படி குறுக்கிடுவது முறையல்ல. பொது நலன் கருதித்தான் அனுமதிக்கவில்லை. நீங்கள் அமர வேண்டும்.

பல முறை சொல்லியும் நீங்கள் தொடர்ந்து குறுக்கிடுவதால் அவையிலிருந்து உங்களை வெளியேற்றுகிறேன். உறுப்பினர் பேசிய பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெறுகின்றன.''

1987 XLVI 175, 178, 179, 180.

**கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் கீழ் உறுப்பினர்கள் பதவி இழத்தல்—**

திருமதி ஜானகி இராமச்சந்திரன் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவையின் மீது பேரவை நம்பிக்கையைத் தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு 28–1–1988 அன்று பிற்பகல் 3-30 மணி அளவில் நடைபெற்றது. தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று ப்ளாக்வாரியாக வாக்குகள் எண்ணிக் கணிக்கப் பெற்றபோது ஆளும் கட்சியைச் சேர்ந்த கொறடா, தம் கட்சியைச் சேர்ந்த 27 உறுப்பினர்கள் தாம் வழங்கிய ''விப்பு''-க்கு எதிராக செயல்பட்டுள்ளதால் அவர்கள் மீது கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரி அதற்கான மனுக்களைத் தலைவரிடம் அளித்தபோது வழங்கப்பெற்ற தீர்ப்புரைகளின் சுருக்கம் வருமாறு :



**கட்சித்தாவல் தடைச் சட்டத்தின்கீழ் உறுப்பினர்கள் பதவி இழத்தல்**—தொடர்ச்சி

''கட்சித் தாவல் தடைச் சட்டம்—10th Schedule Para 2 Disqualification on the ground of defection 2 (b) இந்தப் பிரிவின் கீழ் நீங்கள் அளித்த கொறடாவை அவர்கள் மீறியிருக்கின்றார்கள். இதற்கு வேறு சாட்சியே வேண்டாம். என் முன்னாலேயும் நடைபெற்றது. உங்களுடைய முன்னாலேயும் நடைபெற்றது. இதற்கு சாட்சியமாக இந்த அவையே இருக்கிற காரணத்தாலும், அவர்களுடைய இச்செயலை நீங்கள் மன்னிக்காத காரணத்தாலும், கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் அவர்கள் பதவி இழக்கிறார்கள் என்று நான் உத்தரவிடுகிறேன். இங்கே உள்ள காவலர்கள் அவர்களை உள்ளே அனுமதிக்கக் கூடாது என்றும், சபையின் வளாகத்திற்குள் வருவதற்கு அவர்களை அனுமதிக்கக் கூடாது என்றும் உத்தரவிடுகிறேன். இது உடனே அமலுக்கு வருகிறது.''

1988 XLVII 67–81

**கவன ஈர்ப்பு—நடைமுறைகள்—**

**அறிக்கை—**

அமைச்சர் அளித்த அறிக்கையில் தவறான தகவல்கள் இருப்பதாக ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட போது, தலைவர் குறிப்புரைத்ததாவது :

''தவறான தகவல் என்று என்னிடம் நீங்கள் சொல்வீர்களேயானால் நடவடிக்கை எடுக்கப்படும்.''

1987 XL 732

அவையில் வைக்கப்பட்ட விவர அறிக்கையில் உண்மைக்குப் புறம்பான செய்திகள் இருக்கின்றன என்று ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது, அவையில் வைக்கப்பட்ட அறிக்கையைப் பற்றி அப்படிச் சொல்லக் கூடாது என்று குறிப்புரைக்கப்பெற்றது.

1987 XL 53

கவன ஈர்ப்பில் ஒழுங்குப் பிரச்சினை வராது. அமைச்சர் இப்படித்தான் பதில் சொல்ல வேண்டுமென்று கட்டாயப் படுத்த முடியாது.

1986 XX 521

அனுமதித்தல்—

அதிகமான உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருந்தால் முதல் 5 பேர்களை மட்டும் விளக்கம் கோர அனுமதிப்பது என்ற முறைப்படி அனுமதிக்கப்பெற்றது.

1985 IV 47

அறிவிப்பு கொடுத்த உறுப்பினர் அவையில் இல்லாதபோது வேறொரு உறுப்பினர் தலைவருடைய அனுமதியைப் பெற்று, அமைச்சரின் கவனத்தை ஈர்க்கலாம்.

ஆனால் அமைச்சரின் அறிக்கைக்கு பின் விளக்கம் கோரும் வகையில் அவ்வுறுப்பினர் கேள்விகளைக் கேட்க முடியாது.

1985 VIII 40, 43

அறிவிப்பு கொடுத்த உறுப்பினர் இருக்கையில் இல்லாவிட்டாலும் அமைச்சர் அறிக்கை அளிக்கலாம்.

1985 XIV 493

அனுமதி மறுக்கப் பெற்ற கவன ஈர்ப்புபற்றி அவையில் பேசவே கூடாது.

1985 XIV 425

நிலுவையில் உள்ளவை—

பேரவைக் கூட்டத்தின் கடைசி நாள் அன்று நிலுவையில் இருக்கின்ற கவன ஈர்ப்பு குறித்து பின்வருமாறு தீர்ப்புரைக்கப்பெற்றது :

'' அரசிடமிருந்து அறிக்கைகள் வரப்பெற்றுள்ள கவன ஈர்ப்புகள், அறிவிப்புகளுடன் அவையில் வைக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள், அவற்றை உரிய அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தால், அத்தீர்மானத்தில் குறிக்கப்பட்டுள்ள முதல் உறுப்பினர் மட்டும் அதனை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். நேரம் கருதி இன்று கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் மீது விளக்கத்திற்காக ஒரு வினா மட்டும் அனுமதிக்கப்படும்;



நிலுவையில் உள்ளவை— தொடர்ச்சி

அரசுத் துறையிடமிருந்து இதுவரை அறிக்கைகள் வராத கவன ஈர்ப்புகள், துறைகளிடமிருந்து அறிக்கைகள் வந்தவுடன், உரிய உறுப்பினர்களின் தகவலுக்காக அனுப்பி வைக்கப்படும். இன்று கூட்டத்தின் கடைசி நாளானதால். அறிக்கைகள் வரப்பெறாத கவன ஈர்ப்புகளை மட்டும் அவை நடவடிக்கைக் குறிப்பில் பதிவு செய்ய, சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.''

1986 XXVIII 510

விளக்கம் கோருதல்—

அதிகமான கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளும்போது ஓர் உறுப்பினருக்கு ஒரு துணைக் கேள்வி என்ற அடிப்படையில்தான் வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

1987 XXXIX 668
XLIII 63,65

அமைச்சர் அளித்த அறிக்கை மீது விளக்கம் கோரும் வகையில் இரண்டாவது கேள்வி கேட்க ஓர் உறுப்பினர் முற்பட்ட போது, '' ஐந்து உறுப்பினர்களுக்கு மேற்பட்டவர்கள் தீர்மானம் கொடுத்தால் ஒரு உறுப்பினருக்கு ஒரு கேள்வி தான் அனுமதிக்க முடியும் '' என்று தலைவர் குறிப்புரைத்தார்.

1987 XLV 454

அமைச்சர் அறிக்கைக்குப் பிறகு, விளக்கம் கேட்கும் உறுப்பினர் விளக்கத்தை சுருக்கமான கேள்வியாகக் கேட்க வேண்டும். விவாதத்திலே பங்கு எடுத்துச் கொண்டு பேசுவதுபோல் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கக் கூடாது.

கவன ஈர்ப்பில் சம்பந்தப்பட்டுள்ள பொருள் மிக முக்கியமான பிரச்சினை என்றால் வேறு முறையில் அது குறித்து அவையில் விவாதிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அரை மணி நேர விவாதம் அல்லது ஒரு மணி நேர விவாதம் மூலமாக அனுமதி பெற்று விவாதிக்க முடியும்.

1986 XXIX 266

அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போது குறுக்கிடக்கூடாது.

1987 XXXIX 639

விளக்கம் கோருதல்—தொடர்ச்சி

அமைச்சரின் அறிக்கை மீது விளக்கம் கோர விரும்பும் உறுப்பினர் குற்றச்சாட்டு கூறாமல் கேள்வியாகக் கேட்க வேண்டும். குற்றச்சாட்டு கூறக்கூடாது என்று குறிப்புரைக்கப்பெற்று, அவ்வாறு குறிப்பிட்ட பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றது.

| | | |
|---|---|---|
| 1986 | XXVIII | 310 |
| 1987 | XLI | 554 |

அமைச்சரின் அறிக்கை மீது விளக்கம் கோர விரும்பும் உறுப்பினர் கேள்வி வடிவத்தில் விளக்கத்தைக் கேட்க வேண்டும். அமைச்சரின் அறிக்கையில் இருப்பதை அப்படியே திரும்பப் படிப்பதில் இலாபம் ஒன்றும் இல்லை. அதில் ஏதாவது குறை இருந்தால் அதுபற்றிக் கேள்வி வடிவத்தில் கேட்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1986 | XXVIII | 306 |

அறிவிப்பு கொடுத்த உறுப்பினர் அவையில் இல்லை என்றாலும் கவன ஈர்ப்பைத் தலைவர் அனுமதித்த பிறகு, வேறு ஓர் உறுப்பினர் விளக்கம் கேட்க அனுமதி கோரிய போது, அப்படி அனுமதித்தால், எதிர்காலத்திலும் நோட்டீஸ் கொடுத்தவர் வராவிட்டால், வேறுயாரையாவது வைத்து இரண்டு கேள்விகள் கேட்கலாம் என்று வந்து விடும் என்றும், அறிவிப்பு கொடுத்தவர் கண்டிப்பாக வர வேண்டும் என்றும், ஒரே ஒரு கேள்வியை வேறோர் உறுப்பினர் கேட்க இப்போது மட்டும் அனுமதிப்பதால் எதிர்காலத்தில் இதை முன்மாதிரியாகக் கொள்ளக் கூடாது என்றும் தலைவர் குறிப்புரைத்தார்.

| | | |
|---|---|---|
| 1985 | V | 177–180 |

அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்கள்தான் அனுமதிக்கப்படுவார்கள்.

| | | |
|---|---|---|
| 1985 | V | 55 |

இரண்டுபேர் மட்டுமே கவன ஈர்ப்பு கொடுத்திருந்தால், இரண்டு பேர்களுக்கும் விளக்கம்கோரும் வகையில் கேள்வி கேட்க வாய்ப்புண்டு. அதிகம் பேர் கொடுத்திருந்தால், அதில் முன்னுரிமை கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1985 | IV | 450–451 |





விளக்கம் கோருதல்—தொடர்ச்சி

ஐந்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு கொடுத்திருந்தால் பேரவைத் தலைவரின் உசிதப்படி யாரேனும், ஐந்து உறுப்பினர்களை மட்டும் கேள்விகள் கேட்க அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 1986 | XXIX | 269 |

ஒரு கவன ஈர்ப்பின்மீது விளக்கம் கோர ஒரு கட்சியில் ஒருவருக்கு வாய்ப்பு அளிப்பதுதான் விதி.

| | | |
|---|---|---|
| 1987 | XL | 734 |
| | XLIII | 337 |

ஒரு குறிப்பிட்ட வினாவில் துணைக் கேள்விகள் கேட்க 10,12 பேர்களுக்கு மேல் அனுமதி அளிக்கப்பட்டது போல், எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலும் பலரை விளக்கம் கோருவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று ஓர் உறுப்பினர் வினவியபோது தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார் :

"கேள்வி நேரம் என்பதற்கு ஒரு மணி நேரம் ஒதுக்கி வைத்திருப்பதால் அந்த ஒரு மணி நேரத்தையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக இன்று பலருக்கும் துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு கொடுக்கப் பெற்றது. ஒருவருக்குக் கொடுக்கவேண்டும், மற்றவருக்கு கொடுக்கக் கூடாது என்ற உள்நோக்கம் எதுவும் இல்லை.

கவன ஈர்ப்பு என்கிறபோது விதிப்படி 5 பேர்களுக்குத் தான் கொடுக்கலாம் என்று இருக்கிறது.

விதிகள் குழுவில் ஆய்வு செய்து ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டால் இவ்விதியை மாற்றலாம்".

| | | |
|---|---|---|
| 1985 | IV | 598 |

ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுக்கும்போது விளக்கம் பெற ஒருவருக்கு ஒரு கேள்விதான் அனுமதிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1985 | IX | 301 |
| | XI | 253 |

ஓர் உறுப்பினர் விளக்கம் கோரி பல கேள்விகளைக் கேட்ட பொழுது தலைவர் குறிப்புரைத்ததாவது :

'' இப்படி அடுக்கடுக்காக கேள்விகளைக் கேட்டுக்கொண்டு போனால் அமைச்சர் அவர்களால் பதில் சொல்ல இயலாது. முதல் கேள்விக்கு மட்டும் அமைச்சர் பதில் சொல்லலாம் ''.

1987 XXXIX 660

கவன ஈர்ப்பில் அமைச்சரிடத்தில் பதில் பெறுகிற அளவிற்கு கேள்வி கேட்கலாம். உறுப்பினர் கற்பனையில் தோன்றியதையெல்லாம் கேட்கக் கூடாது என்று குறிப்புரைக்கப் பெற்று, அவ்வாறு கற்பனையாகப் பேசப்பட்ட பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கம் செய்யப் பெற்றன.

1987 XLI 572–574

கவன ஈர்ப்பில் அமைச்சரின் அறிக்கைக்குப் பிறகு இரண்டாம் முறையாக தமக்கு விளக்கம் கோர வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று ஒரு உறுப்பினர் கோரியபோது, விதிப்படி ஒரு வினா கேட்பதற்கு மட்டும் அனுமதிக்க தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது என்று குறிப்புரைக்கப் பெற்றது.

1986 XXV 530

கவன ஈர்ப்பின்கீழ் ஓர் உறுப்பினர் விளக்கமாகப் பேசிக் கொண்டிருப்பது சரிடா என மற்றொரு உறுப்பினர் கேட்டபோது தலைவர் அனுமதித்தால் அவ்வாறு பேச லாம் என்று குறிப்புரைக்கப் பெற்றது.

1986 XV 225

கவன ஈர்ப்பு கொடுத்த உறுப்பினர், அமைச்சரின் அறிக்கைக்குப் பிறகு விளக்கத்தைக் கேள்வி வடிவத்தில் சுருக்கமாகக் கேட்க வேண்டும். விவாதமாக ஆக்கிவிடக் கூடாது.

1985 II 451–574<br>
577<br>
III 163–169<br>
IV 152–154<br>
V 51, 52<br>
633<br>
VII 353<br>
IX 466<br>
XI 43, 255<br>
XII 504<br>
XIII 39<br>
XIV 67







1986 XVI 97, 98, 102<br>
365, 366<br>
XX 60<br>
XXVI 54, 189,<br>
608.<br>
XXVII 55, 56<br>
XXVIII 87

1987 XXVIII 515<br>
XXXV 48, 57,<br>
71, 215<br>
XXXVII 475, 488,<br>
827<br>
XXXVIII 233<br>
XLIII 244, 421<br>
XLV 457

கவன ஈர்ப்பு கொடுத்த ஓர் உறுப்பினர் அவையில் இல்லா விட்டால் மற்றொரு உறுப்பினர் அவருக்காக அமைச் ரின் கவனத்தை ஈர்க்கலாம். ஆனால், அமைச்சரின் அறிக்கைக்குப் பிறகு அந்த உறுப்பினர் விளக்கம் கோர முடியாது என்ற நடைமுறைதான் தொடர்ந்து கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது.

1987 XXXIX 679

சிதம்பரம் தொகுதி உறுப்பினர் இல்லம் தாக்கப்பட்டுள்ளது குறித்த கவன ஈர்ப்பின் மீது அமைச்சர் அறிக்கை அளித்த தற்குப் பிறகு விளக்கம் கோரிய உறுப்பினர் குறிப்பிட்ட சில கருத்துக்களை ஆட்சேபித்து இன்னொரு உறுப்பினர் ''ஒரு கட்சியைப் பற்றிச் சொல்வது எப்படி அவைக் குறிப்பிலே இருக்கலாம்'' என்று கேட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' ஏற்கெனவே என்னிடத்திலே மனு வந்திருக்கிறது. தந்தி கூட வந்திருக்கிறது. மாவட்டக் கண்காணிப் பாளரிடத்திலே கேட்டிருக்கிறேன். அறிக்கை வரப் பெற்றிருக்கிறது. அறிக்கையிலேயே தி.மு.க. என்று இருக்கிறது. என்னைச் சொல்ல வைத்து விட்டீர்கள். மாவட்டக் கண்காணிப்பாளர் அனுப்பியிருக்கிறார். அதனால், அது அவைக் குறிப்பில் இருக்கட்டும். ஒரு உறுப்பினர் சம்பந்தப்பட்ட பிரச்சினை. தாக்கப்

கவன ஈர்ப்பு—நடைமுறைகள்—தொடர்ச்சி

விளக்கம் கோருதல்—தொடர்ச்சி

பட்டிருக்கிறார் என்றால் அவர் சொல்வதை நான் ஏற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் கட்சிக்காகப் பேசாதீர்கள். உறுப்பினருக்காகப் பேசுங்கள். ஒரு உறுப்பினருடைய இல்லம் தாக்கப்பட்டிருக்கிற காரணத்தால், நான் அவர் சொல்வதை ஏற்றுக்கொள்கிறேன். 'தேர்ட் பெர்சன்' என்றால் அது கிடையாது. மேற்கொண்டு பேச வேண்டியதில்லை. இதோடு முடித்து விடுங்கள்.''

| | | |
|---|---|---|
| 1986 | XXVIII | 529 |

தனிப்பட்ட விவரங்களைப் பேச முடியாது. அதற்கெல்லாம் அமைச்சரவர்களிடம் பதில் இராது.

| | | |
|---|---|---|
| 1987 | XLV | 459 |

தொடர்புடைய பிரச்சினையோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். உலகம் பூராவிலும் உள்ள பிரச்சினைகளைப் பற்றிப் பேச வேண்டாம்.

| | | |
|---|---|---|
| 1985 | III | 164 |
| | XIII | 39, 40 |
| 1987 | XLI | 236 |

நம்முடைய பாலிசி ஒரு கேள்வி அல்லது இரண்டு கேள்விகள்தான். ... ஒரு கேள்வியாகக் கேட்டால் இரண்டுமுறை கேள்வி கேட்க அனுமதிக்கலாம். ஆனால் ஆறு கேள்விகளை உள்ளடக்கி ஒரே கேள்வியாக கேட்டிருப்பதால் இதற்கு மேல் அனுமதிப்பதற்கில்லை.

| | | |
|---|---|---|
| 1985 | V | 634 |
| 1987 | XXXV | 482 |
| | XXXVI | 489 |
| | XLVI | 588 |

முன்னறிவிப்புக் கொடுக்காத உறுப்பினர்கள் கவன ஈர்ப்பில் கேள்வி கேட்க முடியாது.

| | | |
|---|---|---|
| 1986 | XV | 227 |

விளக்கம் கோரும் வகையில் உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்வி தேவையற்றது என்று குறிப்புரைக்கப்பெற்று, அதற்கு அமைச்சர் பதிலளிக்கவேண்டியதில்லை என்று தீர்ப்புரைக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1986 | XXVI | 58 |



கவன ஈர்ப்பு—நடைமுறைகள் (செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மகன் அரசு நிலத்தை குறைந்த வாடகைக்கு எடுத்தது)—

அரசு நிலத்தை தனியாருக்கு கிராம நிர்வாக அலுவலர் விற்பனை செய்தது குறித்த கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப் பெற்ற போது இது போன்ற நிகழ்வுகளில் அரசு வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி தலைவர் அளித்த குறிப்புரையாவது :

'' அடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதற்கு முன்பு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். . . கிராம நிர்வாக அலுவலர் அரசுக்குத் தெரியாமல் சட்டத்திற்குப் புறம்பாக நிலத்தை விற்பனை செய்ததாக உறுப்பினர் இங்கே குற்றச்சாட்டு எழுப்பி இருக்கிறார். இதுபோலவே செங்கல்பட்டு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரே பன்னாட்டு விமான நிலையத்தின் எதிரில் 1.7 ஏக்கர் நிலத்தை அதாவது அரசாங்க நிலத்தை 30 ஆண்டுக் காலத்திற்கு குறைந்த வாடகையில் தன்னுடைய மகன் பெயரிலேயே எடுத்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் அவையின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். இதுபோல் பல்வேறிடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நம்முடைய இந்திய தண்டனைச் சட்டத்தில் 'இம்மூவபிள் பிராப்பர்ட்டியை' யாராவது எடுத்தால் அவர்களை தண்டிப்பதற்கு வழியில்லை என்ற காரணத்தால்தான் இதுபோல் பல்வேறிடங்களில் பல்வேறு குற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரிய பெரிய பொறுப்பில் இருக்கக் கூடியவர்கள், இது போன்ற பெரிய அதிகாரிகள் அரசாங்கத்திற்கு நஷ்டத்தை விளைவிக்கக்கூடியவர்களாக இருப்பதைத் தடுக்க வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சம்பந்தப்பட்ட விவகாரங்களை நான் அவை முன்னவரிடத்தில் கொடுத்திருக்கிறேன். இன்னும் சில விவரங்களையும் தருகிறேன்.''

| | | |
|---|---|---|
| 1987 | XLV | 242 |

குற்றச்சாட்டுகள்—

அமைச்சர்கள் மீது—

(அடையாறு தொழில் நுட்பப் பயிலக லித்தோகிராபி பிரிவிற்கு மாணவர்கள் தேர்வு)—

19—3—1986 அன்று பேரவையில் ஓர் உறுப்பினர் நிதிநிலை அறிக்கையின்மீது பேசும்போது, சென்னை

(அடையாறு தொழில் நுட்பப் பயிலக லித்தோகிராபி பிரிவிற்கு மாணவர்கள் நேர்வு)— தொடர்ச்சி

அடையாறில் உள்ள அச்சுத் தொழில் நுட்பப் பயிலகத்தில் ''லித்தோகிராபி'' பிரிவில் 1983–84 ஆம் ஆண்டு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் முறைகேடுகள் நடந்துள்ளன என்று கூறி அதன் முதல்வர், இயக்குநர் மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோர் மீது குற்றம் சாட்டினார்.

20–3–1986 ஆம் தேதியன்று நிதி அமைச்சர் அந்தக் குற்றச்சாட்டுக்கு விளக்கம் அளித்து அதில் எந்த விதமான தவறும் நடக்கவில்லை என்று தெரிவித்தார். அமைச்சர் அவைக்கு அளித்த அறிக்கை மிஸ்லீடிங்காக இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டபோது தலைவர் விதியைப் படித்துக் காட்டி அளித்த தீர்ப்புரையாவது :

'' விதி 93. 'ஒரு உறுப்பினர் எழுத்து மூலமாக முன் கூட்டியே பேரவைத் தலைவர், அமைச்சர், சம்பந்தப்பட்ட உறுப்பினர் ஆகியோருக்கு தெரிவித்திருந்தாலன்றி மற்ற எந்த உறுப்பினர் மீதோ அல்லது எந்த அலுவலர் மீதோ அவதூறாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ அவர் மீது குற்றம் சாட்டக் கூடாது. அவ்வாறு முன்னறிவிப்பு கொடுப்பது, குற்றம் சாட்டப்பட்ட உறுப்பினரோ அல்லது அமைச்சரோ அதனைப் புலனாய்வு செய்து பதில் அளிப்பதற்கு ஏதுவாக இருக்கவேண்டும்....' என்பதாகும்.

The Hon'ble Minister is Primarily a Member of this House. I have to protect his rights also. சந்தேகத்தில் உறுப்பினர்கள் எதையும் பேசக் கூடாது. முன் அறிவிப்பு கொடுத்துவிட்டுப் பேச வேண்டும்.''

அப்போது குற்றச்சாட்டு கூறிய உறுப்பினர், தன்னிடம் ஆதாரம் இருக்கிறது என்றும் அதைத் தரத் தயார் என்றும் கூறினார். அக்குற்றச்சாட்டையும் உறுப்பினர் அதற்கு அளித்த ஆதாரத்தையும் பரிசீலித்த பின்னர் 24–3–1986 ஆம் நாளன்று தலைவர் தீர்ப்பளிக்கத் தொடங்கியபோது குற்றம் சாட்டியவர்களுக்கு நேரில் விளக்கம் அளிக்க வாய்ப்பு தரவேண்டும் என்ற கோரிக்கையை சில கட்சித் தலைவர்கள் வைத்தபோது, ''இப்போது நிறுத்திக் கொள்கிறேன். என்னை வந்து பாருங்கள்'' என்று தலைவர் தெரிவித்தார்.







(அடையாறு தொழில் நுட்பப் பயிலக லித்தோகிராபி பிரிவிற்கு மாணவர்கள் தேர்வு)— தொடர்ச்சி

இது குறித்து தலைவர் 9-4-1986 ஆம் நாளன்று அளித்த குறிப்புரையாவது :

'' 21-3-1986-ஆம் தேதியன்று அவ்வுறுப்பினர் ஆதாரங்களை என்னிடம் அளித்தார். மேலும் அவரும், திராவிட முன்னேற்றக் கழக தலைவர் திரு. அன்பழகன் அவர்களும் என்னைச் சந்தித்து விளக்கம் கூறினார்கள். இதுபற்றி நிதி அமைச்சர் அவர்களிடமும், கல்வி அமைச்சர் அவர்களிடமும் விளக்கம் கேட்டேன். இந்தப் பிரச்சினையில் அவைத் தலைவர் முடிவு எடுக்க வேண்டியதெல்லாம், உறுப்பினர் ஏதாவது ஆதாரத்தின் அடிப்படையில் பேசினாரா என்பதுதான். அந்த ஆதாரம் எவ்வளவு தூரம் இந்த நிகழ்வுக்குப் பொருந்தும் என்பது குறித்து பேரவைத் தலைவர் முடிவு கூறத் தேவையில்லை. இந்த நிகழ்வில் உறுப்பினர் சில ஆதாரங்களை வைத்துக் கொண்டு பேசியுள்ளார். அதற்கு நிதி அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்துள்ளார். எனவே, இதுகுறித்து நான் மேலும் தீர்ப்பு கூறத் தேவையில்லை.''

| | | |
|---|---|---|
| 1986 | XVIII | 329–330 |
| | | 640–642 |
| 1986 | XXI | 523–524 |

ஓர் அமைச்சர் சர்வீஸ் கமிஷன் செலக்‌ஷனிலே 'இன்ப்ளுயன்ஸ்' செய்யும் விதத்தில் எழுதியுள்ள கடிதத்தைக் குறிப்பிட்டு ஓர் உறுப்பினர் பேசியதை சில உறுப்பினர்கள் ஆட்சேபித்தபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' அந்த லெட்டரை வாங்கிக் கொண்டு பிறகு நான் விசாரிக்கிறேன்.''

| | | |
|---|---|---|
| 1987 | XXXIII | 289 |

முதலமைச்சருடைய இல்லத்தில் இருக்கிற தொலைபேசி செயல்படாதது குறித்து ஓர் உறுப்பினர் விளக்கமாகப் பேச முற்பட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' டெலிபோன் செயல்படாமல் இருந்தால் செயலற்ற சர்க்காராக ஆகிவிடாது. அதை அமைச்சர் விளக்கியிருக்கிறார். முதலமைச்சர் அவர்கள் அலுவலகத்திற்கு வந்திருக்கிறார்கள். அலுவலகமும் செயல்பட்டுக்கொண்டிருந்தது.''

| | | |
|---|---|---|
| 1986 | XVIII | 540, 541 |

குற்றச்சாட்டுகள்—தொடர்ச்சி

அலுவலர்கள் மீது—

(உறுப்பினர் காவல் துறை அதிகாரிக்கு எழுதிய கடிதம்)

செங்குன்றம் காவல் நிலைய ஆய்வாளருக்கு தாம் எழுதிய கடிதத்தை அவர் கிழித்துப் போட்டதாக ஓர் உறுப்பினர் 16-7-1985ஆம் நாளன்று பேசியபோது, பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

" அதைப்பற்றி எழுதிக் கொடுங்கள், I will take up the issue with Hon'ble Leader of the House.". அவ்வுறுப்பினர் மீண்டும் 20-3-1986ஆம் நாளன்று அதே குற்றச்சாட்டைக் கூறியபோது பின்வருமாறு தீர்ப்புரைக்கப் பெற்றது :

" இப்போதும் உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைக் கொடுக்கிறார்கள். அந்தக் கடிதம் இன்றைக்குக்கூட என்னுடைய டிராயரிலே இருக்கிறது. கொஞ்சம்கூட கசங்காமல் உள்ள அந்தக் காகிதத்தை நான் உங்களிடமே காண்பித்தேன். எனவே தயவு செய்து தவறான தகவலைக் கொடுக்க வேண்டாம். கடந்த முறை நீங்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பிய போது, 'பேஸ்ட் ஆன் தி அலிகேஷன்' அந்த இன்ஸ்பெக்டரை நாங்கள் விசாரித்தோம். அந்தக் கடிதம் கொஞ்சம்கூட கசங்காமல் இருந்ததை நான் உங்களிடத்திலே காண்பித்தேன். இப்போது கசக்கினார் என்று சொன்னால் எப்படி? அதற்காகத்தான் எழுதிக் கொடுங்கள் என்று சொன்னேன். நான் விசாரித்து உங்களுக்குத் தகவல் கொடுக்கிறேன். . . அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்றால் அதுபற்றி எழுதிக் கொடுக்க வேண்டும். அந்த அதிகாரிகள் மீது விசாரணை செய்கிறோம்."

| | | |
|---|---|---|
| 1985 | XIII | 627 |
| 1986 | XVIII | 354–355 |

திருச்சி சி.பி., சி.ஐ.டி. அலுவலகத்திலே விசாரணைக்கென்று அழைத்துச் செல்லப்படுபவர்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்று ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது, தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு பின்வருமாறு :

" அதிகாரிகளைப்பற்றி வருகின்ற நேரத்திலே நான்தான் அவர்களைக் காப்பாற்ற வேண்டும். அதில் உண்மையைக் கண்டறிய வேண்டும். எதற்காகச் செய்தார்கள் என்பதையும் கண்டறிய வேண்டும். செய்திருக்கிறார்களா என்பதையும் பார்க்க வேண்டும். Criminals are also resorting to uncivilised methods. Please take note of it.



குற்றச்சாட்டுகள்—தொடர்ச்சி

அலுவலர்கள் மீது—தொடர்ச்சி

"அதனால் பாதிக்கப்பட்ட மக்களைப் பற்றிப் பேசுங்கள். நான் d f nd பண்ணிச் சொல்லவில்லை. Criminals are resorting to uncivilised methods. Do not encourage criminals. If you encourage criminals, naturally I have to encourage police. Police alone has to protect the society.. Why you hold brief for criminals? Please don't hold brief for criminals".

| | | |
|---|---|---|
| 1987 | XXXIII | 291–297 |

அவையில் இல்லாதோர் மீது—

அவையில் இல்லாதவர்களைப்பற்றி யாரும் பேசக் கூடாது ; குற்றச்சாட்டு சொல்லக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1985 | IV | 362 |
| 1985 | V | 124 |

அவையில் உறுப்பினராக இல்லாதவர் பற்றிப் பேசியது சரியல்ல என்று குறிப்புரைக்கப்பெற்று அவ்வாறு பேசியது நீக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1986 | XVI | 149 |

தனிப்பட்டவர்களைப் பற்றிச் சொன்னால், அவர்கள் இங்கே வந்து மறுக்க முடியாது என்று குறிப்புரைக்கப் பெற்று, அவையில் இல்லாதோர் குறித்து குற்றஞ் சாட்டி ஓர் உறுப்பினர் பேசிய பகுதி அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1986 | XXXI | 99, 100, 103, 104 |

மடாதிபதிகளைக் குறித்து ஓர் உறுப்பினர் பொதுவாகப் பேசியபோது, தலைவர் குறிப்புரைத்ததாவது :

"குற்றமாகச் சொல்லக் கூடாது; குறைகளைச் சொல்லலாம். ஒட்டுமொத்தமாக மடாதிபதிகள் என்று சொல்லக் கூடாது ; பெயர் சொல்லிச் சொல்லலாம்."

| | | |
|---|---|---|
| 1987 | XLII | 149 |

குற்றச்சாட்டுகள்—தொடர்ச்சி

அவையில் இல்லாதோர் மீது—தொடர்ச்சி

(வெடிகுண்டு சம்பவம் தொடர்பான கடிதம் குறித்து)

வெடிகுண்டு சம்பவத்தில் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர் சம்பந்தப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டு ஓர் உறுப்பினர் ஒரு கடிதத்தைப் படித்தபோது, அதை சில உறுப்பினர்கள் ஆட்சேபித்த நேரத்தில், தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு பின்வருமாறு :

''அவர் அந்தக் கடிதத்தை என்னிடம் கொடுத்தார். கடிதத்தைப் பார்த்துவிட்டு நான் அனுமதித்தேன். யார்மீதும் திடீரென்று குற்றச்சாட்டைச் சொல்லிவிட முடியாது. அந்த ப்ராபப்ளிட்டியைப் பார்த்துத்தான் நான் அனுமதித்தேன். சபையில் இல்லாதவரைப் பற்றி பேச முடியாதென்றால் நாம் நம்மைப் பற்றித்தான் பேசிக்கொண்டே இருக்க வேண்டும். சபைக்கு வெளியிலே இருக்கக்கூடியவர்களைப் பாதுகாப்பதற்கும், சபைக்கு வெளியிலே இருக்கக்கூடிய விவகாரங்களைப் பேசுவதற்கும், அவர்களுடைய குறைபாடுகளைப் பற்றிப் பேசுவதற்கும்தான் இந்த மன்றம். ஆகவே இந்த அவைக்கு வெளியிலே எது நடந்தாலும் அதைப் பற்றி நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம்.''

''கட்சி அரசியலைப் பாதுகாக்க முயற்சி செய்கிறீர்களே தவிர, பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு வேண்டாமா ?

''நான் அந்தக் கடிதத்தைப் பார்த்திருக்கிறேன். வேண்டுமானால், 'ஜெராக்ஸ்' பண்ணி எல்லோருக்கும் கொடுக்கிறேன்.

''உறுப்பினர்கள் பொறுப்புள்ளவர்களாக நடந்து கொள்ளவேண்டும். கடிதத்தில் தவறு இருக்குமானால் நடவடிக்கை எடுப்போம். அது என்னுடைய பொறுப்பு.

''அந்தப் பாவகரமான செயலை நான் படிக்கக்கூடாது என்றுதான் அவரைப் படிக்க வைத்தேன்.

''யாரோ ஒருவன் தமிழ்ச் சமுதாயத்தை அழிக்க வேண்டும், பயமுறுத்த வேண்டும் என்று அதாவது ஒரு சமூக விரோதி இந்தச் செயலைச் செய்திருக்கிறான். அவன் மீது யாரும் தயவு காட்டக் கூடாது. சொல்லப் போனால் உண்மையிலேயே அவனுக்கு பெரிய தண்டனை வழங்க வேண்டும்.



குற்றச்சாட்டுகள்—தொடர்ச்சி

அவையில் இல்லாதோர் மீது—தொடர்ச்சி

(வெடிகுண்டு சம்பவம் தொடர்பான கடிதம் குறித்து)—தொடர்ச்சி

அப்படிப்பட்டவர்களுக்காக யாரும் பரிந்து பேசாதீர்கள். தயவுசெய்து கருணை காட்டாதீர்கள். இவை எதையும் அரசியலாக்கிப் பேச வேண்டாம்.''

1987 XXXIII 83–92

உறுப்பினர்கள் மீது—

உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியோரைக் கேவலப் படுத்தி திரைப்படம் எடுப்பதைத் தடை செய்ய வேண்டுமென ஓர் உறுப்பினர் பேசியபோது, ''இப்படிப் பட்ட சினிமாக்கள் திரையிடுவதைத் தடுப்பதற்கு உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு தீர்மானத்தை சபையிலே கொண்டுவரவேண்டும் என்றும், அவற்றைத் திரையிடும் திரையரங்குகளுக்கு உரிமம் கிடையாது என அரசு அறிவிக்க வேண்டும்'' என்றும் குறிப்புரைக்கப் பெற்றது.

1987 XLII 45

(மனை ஒதுக்கீட்டில் தவறு நடந்துள்ளதாகக் குறிப்பிடப் பெற்றது)—

முன்னாள் அமைச்சராக இருந்த ஓர் எதிர்க்கட்சி உறுப்பினர் மீது ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் சாட்டிய குற்றச்சாட்டு தொடர்பாக உறுப்பினர்களிடையே எழுந்த வாதப் பிரதிவாதங்களையொட்டி தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பாவது :

'' இப்படி இரண்டு பக்கமும் குற்றச்சாட்டுகளைச் சொன்னால் நம்மைப்பற்றிய பப்ளிக் கான்பிடன்சே போய் விடும். நம்மைப்பற்றி நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். வேறு யார் யாரோ எதை எல்லாமோ செய்து கொண்டிருக்கிறார்கள். எல்லா அலாட்மெண்ட் ஆர்டரையும் கொண்டு வாருங்கள். நான் காட்டுகிறேன். தமிழ்நாட்டிலே இருக்கிற அவ்வளவு அலாட்மெண்டையும் பார்த்தால், அது எங்கெங்கேயோ போயிருக்கிறது.

ஒருவருக்கொருவர் குற்றச்சாட்டு சொல்வதை விட்டு விடுங்கள். நான் அண்ணா நகரிலே காலையிலே 'வாக்கிங்' போய் வரும்போது பெரிய பெரிய பங்களாக்கள் எல்லாம் இருக்கின்றன. அதைப் பற்றிப்

குற்றச்சாட்டுகள்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் மீது—தொடர்ச்சி

(மனை ஒதுக்கீட்டில் தவறு நடந்துள்ளதாகக் குறிப்பிடப்பெற்றது)—தொடர்ச்சி

பேச்சே கிடையாது. All officials have got plots. ..You have got right. You are also citizen of India. ஆகவே சும்மா எடுத்துக் கொண்டால்தான் தப்பு. பேரவையினுடைய உறுப்பினர்களின் பிள்ளைகள் மெடிக்கல் காலேஜில், என்ஜினியரிங் காலேஜில் படிக்கக் கூடாது, பிளாட் வாங்கக் கூடாது என்றால் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இங்கு வந்துவிட வேண்டியதுதான்... ஒரு நிமிஷம் இருங்கள். நான் மனதில் படுவதைச் சொல்கிறேன். We are unnecessarily exposing ourselves. நான் விசாரிக்கிறேன். நான் பேசிய பிறகும் இது வேண்டுமா? இதை விசாரிக்க வேண்டுமென்றால் 50 ஆயிரம் பேர்களையாவது விசாரிக்க வேண்டியிருக்கிறது. இதில் ஒன்றும் இல்லை. ஒரு குற்றச்சாட்டு வருகிறபோது தாங்குகின்ற சக்தி இல்லாத காரணத்தால் இந்த மாதிரி பிரச்சினை வருகிறது. ஆகவே 'பர்சனல் அட்டாக்கை' விட்டுவிட்டால் இந்தப் பிரச்சினையே வராது. அதைத் தவிர்ப்பது நல்லது.''

1986 XX 535–540

குற்றச்சாட்டு—நடைமுறைகள்—

அனுமதி—

அதிகாரிகள் மீதோ, உறுப்பினர்கள்மீதோ நோட்டீஸ் கொடுக்காமல் குற்றச்சாட்டுக் கூறக் கூடாது. பொதுவாகச் சொல்லக் கூடாது. அதிகாரிகளைப் பற்றிய அந்த விவாதத்தை நீக்கலாம்.

1987 XXXVI 75

அதிகாரியைப் பற்றியோ, அரசைப் பற்றியோ குறை சொல்வதாக இருந்தால் முன்னதாக தலைவரிடம் அனுமதி பெற வேண்டும். அதிகாரி ஒருவர் மீது குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால் ஸ்பெசிபிக்காக இருக்க வேண்டும். ஸ்வீப்பிங்காகச் சொல்வது முறையல்ல. ஸ்வீப்பிங்காகக் குற்றச்சாட்டு சொல்வதற்கு விதிகளில் இடமில்லை. குற்றச்சாட்டு ஆதாரபூர்வமாக இருந்தால், ஸ்பெசிபிக்காக இருந்தால் அமைச்சர் நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கும். அவ்வாறு



குற்றச்சாட்டு—நடைமுறைகள்—தொடர்ச்சி

அனுமதி—தொடர்ச்சி

அனுமதி பெறாமல் பேசப்பட்ட பகுதி நீக்கப்பெற்றபோது, அவ்வாறு நீக்கப்பெறக்கூடாது என்று ஒரு உறுப்பினர் குறிப்பிட்டதற்கு, ''இன்னொரு பக்கத்திலேயிருந்து ஸ்வீப்பிங்காகக் குற்றச்சாட்டுகள் வரும்போது அதையும் அனுமதிக்க வேண்டிய நிலைமை ஏற்படும்; தலைவர் எல்லோரையும் பாதுகாக்க வேண்டும், ஆகவே, எல்லோரையும் பற்றி ஸ்வீப்பிங்காகக் குற்றச்சாட்டு சொல்வது நல்லதல்ல; குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு உறுப்பினர் பொறுப்பேற்றுக்கொள்வதாக இருந்தாலும் கூட, அது குறித்து முன்னதாகவே தலைவரிடம் அனுமதி பெற வேண்டும்'' என்று குறிப்புரைக்கப்பெற்றது.

1986 XXV 51, 77–78,
1986 XXIX 318
375–376

அமைச்சர்கள் மீது ஸ்பெசிபிக்காக ஏதாவது குற்றச்சாட்டு இருந்தால் நோட்டீஸ் கொடுக்க அதற்கான ஆதாரங்களை முன்கூட்டி தலைவரிடத்தில் காட்டி அனுமதி பெற்றபிறகுதான் பேச வேண்டும்.

1986 XVII 383

அரசினர் சட்டமுன்வடிவின் மீது ஓர் உறுப்பினர் உரையாற்றுகையில் குற்றச்சாட்டு ஒன்றைக்கூறிய போது, தலைவர் பின் வருமாறு குறிப்புரைத்தார்: ''ஏற்கெனவே அந்தப் பிரச்சனை பற்றி என்னிடம் பிரிவிலெஜ் வந்தது. என் அறையில் அதற்கு பதில் கொடுத்து தள்ளுபடி செய்து விட்டேன். அவ்வாறு ரிஜெக்ட் செய்ததை திரும்ப பேச முடியாது''.

1986 XVII 383

உச்சநீதிமன்றத் தீர்ப்பினை அரசு நிறைவேற்றவில்லை என்று ஓர் உறுப்பினர் குற்றஞ்சாட்ட முற்பட்டபோது, தலைவர் குறிப்புரைத்ததாவது: ''இது போன்ற விவகாரங்களைப் பற்றிப் பேசும் முன்பு என்னிடம் அனுமதியைப்பெற்றுப் பேச வேண்டும்.''

1987 XXXVII 594–595

உறுப்பினர்கள், அதிகாரிகள் மீது குற்றம் சாட்டுவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட ஆதாரங்களைத் தலைவரிடம் முன் கூட்டியே காட்டி, அவருடைய அனுமதி பெற்ற பிறகுதான் குற்றச்சாட்டுகளைக் கூற வேண்டும்.

1986 XX 376–377

அனுமதி—தொடர்ச்சி

எந்த அமைச்சரைப் பற்றியாவது குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்றால், முன்னாலேயே நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று விதி இருப்பதால், முன் அறிவிப்பின்றி குற்றஞ்சாட்டிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1985 XII 351

ஓர் உறுப்பினர் உரையாற்றுகையில் குற்றச்சாட்டுகளைக்கூறிய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

"ஏதேனும் குற்றச்சாட்டுகள் சொல்வதாக இருந்தால் முதலிலேயே எழுதிக்கொடுத்து தலைவரின் அனுமதியைப் பெற்று பின் பேச வேண்டும் என்று பலமுறை சொல்லியாகிவிட்டது. முதலிலேயே எழுதிக்கொடுத்தால் அதனை சம்பந்தப்பட்டவருக்கு அனுப்பி, அவர்கள் உரிய பதிலைச் சொல்வதற்கு உதவியாக இருக்கும். திடீரென்று இப்படி குற்றச்சாட்டு எழுப்பினால் எப்படி பதில் சொல்ல முடியும்? எனவே அந்தக் குற்றச்சாட்டுகளை நீக்கிவிட வேண்டுமென்று நான் உத்தரவிடுகிறேன்".

1986 XX 531–542

ஓர் உறுப்பினர் ஒட்டு மொத்தமாக அதிகாரிகளைப் பற்றி குறை கூறிப் பேசியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

"முன்கூட்டியே என்னிடம் அனுமதிபெற்றுப்பேசவேண்டும். அப்படி அனுமதி பெற்றுப் பேசியிருந்தால் அமைச்சர் அதற்குப் பதில் சொல்ல முடியும். அனுமதி பெறாமல் பேசியதால் அப்பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது."

1985 XI 296, 596
1986 XXIX 318

ஓர் உறுப்பினர் தன்னிடம் கொடுக்கப்பட்ட புகார் மனுவை அவையில் படிப்பதற்கு முன் தலைவரிடம் முன் கூட்டியே காட்டி அனுமதி பெற்றுப் படிப்பது நல்லது.

1985 II 644

ஓர் உறுப்பினர் மதுரை சட்டக் கல்லூரித் தேர்வு பற்றி குறிப்பிட்டு 'ஊழல் நடந்து இருக்கிறது' என்று தெரிவிக்கையில் அதை இன்னொரு உறுப்பினர் ஆட்சேபித்தபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :





அனுமதி—தொடர்ச்சி.

"உறுப்பினர் 'தவறு நடந்து இருக்கிறது' என்று சொல்வதில் தவறு இல்லை. ஆனால் ஊழல் என்று சொன்னால் குற்றச் சாட்டாக வருகிறது ......ஊழல் என்று சொன்னால் அலிகேஷன் என்று வரும். தவறு நடந்திருக்கிறது என்றால் லேப்சஸ் என்ற வகையில் எடுத்துக் கொள்ளலாம். ஆகவே, ஊழல் என்று குறிப்பிடவேண்டாம். அவ்வாறு குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால் விதி 93-ன்படி தலைவரிடம் முன் அனுமதி பெற்றுப் பேச வேண்டும்."

1986 XIX 484–485

ஓர் உறுப்பினரைப் பற்றி அல்லது ஒரு அதிகாரியைப் பற்றி குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால் முன் அனுமதி பெற்றுச் சொல்ல வேண்டும். பொதுக் கூட்டத்தில் பேசப்பட்டதற்கு அவையில் பதில் சொல்ல முடியாது.

1986 XVIII 654–655

குற்றம் சாட்டிப் பேசுவதற்கு முன் தலைவரின் முன் அனுமதி பெற வேண்டும். முன்பே அனுமதி பெறாமல் பேசுவதால் 4 நாள் கழித்து அமைச்சர் அதற்கு பதில் சொன்னாலும் அது முக்கியத்துவம் இல்லாமல் போய் விடுகிறது.

1985 V 676
1986 XVII 689

பொதுவாக குற்றச்சாட்டு பற்றிச் சொல்லும்போது அமைச்சருக்கு அதுபற்றி நோட்டீஸ் கொடுத்து விட்டால் அவருக்கு பதில் சொல்ல எளிதாக இருக்கும். ஏனென்றால் அவருக்கு அது என்ன என்று தெரிய வேண்டும்.

1985 III 304

வெளியில் இருக்கிற ஒரு நிறுவனத்தைப் பற்றியோ மற்றவர்களைப் பற்றியோ தலைவரிடம் முன் அனுமதி பெற்று பேசினால் அது பற்றி அமைச்சரிடத்திலே கூறி விவரங்கள் பெற்றுத்தர முடியும்.

1986 XXII 592

**அனுமதி**—தொடர்ச்சி

1986 ஆம் ஆண்டு மே திங்கள் 6 ஆம் நாள் அன்று காவல்துறை மானியத்தின் மீது ஓர் உறுப்பினர் பேசும்போது அதிகாரிகள் பற்றி அவையில் பேசினால் இங்கே பதிலளிப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பில்லை என்பதால் அவர்களைப் பற்றிப் பேசக் கூடாது என்று கூறுவது முறையல்ல என்று குறிப்பிட்டபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''அதிகாரிகள் குறித்து அவையில் பேசக்கூடாது என்று சொல்லவில்லை. உறுப்பினருடைய உரிமைகளை தலைவர் பறிப்பது போன்று சொல்வது முறையல்ல. சட்டமன்றப் பேரவை விதி 93-ன்படி அதிகாரிகள் பற்றி குற்றம் சாட்டிப் பேசுவதற்கு முன்பாக முன்னறிவிப்பு கொடுத்துவிட்டுப் பேச வேண்டும். அவ்வாறு முன்னறிவிப்பு கொடுத்துப் பேசினால் அமைச்சர்கள் அதற்குப் பதில் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும்.''

1986 XXVI 97

**ஆதாரமளித்தல்**—

அதிகாரிகள் மீது குற்றஞ்சாட்டிப் பேசிய ஓர் உறுப்பினர் அதற்குத் தன்னிடம் ஆதாரம் இருக்கிறது என்று தெரிவித்தபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' ஆதாரத்தை அமைச்சரிடம் எழுதிக் கொடுங்கள். குற்றஞ் சாட்டிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெறுகிறது ''.

1987 XLVI 587—588

ஆதாரத்தைக் கொடுத்துவிட்டு குற்றச்சாட்டுகள் சொல்வதுதான் சரி. ஆதாரம் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டே பேசிக்கொண்டு போகக் கூடாது.

1987 XL 780

ஆதாரமில்லாமல் கூறப்பட்ட குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது.

'' குற்றச்சாட்டுக்கு ஆதாரம் கொண்டு வந்தால் சபைக் குறிப்பில் ஏற்றுவது பற்றி யோசிக்கலாம். ஆதாரம் வரும்வரையில் குற்றச்சாட்டு அவைக் குறிப்பில் இருக்க முடியாது ''.

1987 XL 776—778



ஆதாரமளித்தல்— தொடர்ச்சி

ஆதாரமில்லாமல் சொல்லக் கூடாது. ஆதாரம் இருந்தால் தலைவரிடம் முன்கூட்டி காட்டிவிட்டு, அவரது முன் அனுமதியைப் பெற்றுத்தான் அவையில் பேச வேண்டும் என குறிப்புரைக்கப்பெற்று ஆதாரமில்லாமல் சொல்லப்பட்ட குற்றச்சாட்டு நீக்கப்பெற்றது.

1985 XIII 143

ஆதாரமில்லாமல் சொல்வதைத் தவிர்க்க வேண்டும்.

1985 XII 347

இன்னொரு அவையில் பேசியதை இங்கே சொல்லக் கூடாது. அது ஆதாரமாகாது.

குற்றச்சாட்டுக்குத் தகுந்த ஆதாரம் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் அப்பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என குறிப்புரைக்கப்பெற்று, நீக்கப் பெற்றது.

1985 X 239—240
1987 XLII 450—451

உறுப்பினர் ஒருவர் தம்முடைய கன்னிப் பேச்சின்போது குறிப்பிட்ட ஒரு தகவலுக்கான ஆதாரத்தை காட்டிய பிறகுதான் அதை அவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இன்னொரு உறுப்பினர் குறிப்பிட்டபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது:—

'' இது உறுப்பினரின் கன்னிப் பேச்சு. அத்தோடு, அவர் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன் என்று தெரிவித்திருக்கிறார். அதனால் இதை இத்தோடு விட்டு விடவும்.''

1985 I 411—413

உறுப்பினர்கள் பேசும்போது ஒரு 'டெபனிட் கன்க்லூஷன் '' இருக்க வேண்டும். சொல்லுகின்ற அலிகேஷன் கான்கிரீட்டாக இருக்க வேண்டும். உறுப்பினருக்கே சந்தேகம் இருந்தால் அதைச் சொல்வது சரியல்ல. சொல்வதில் கான்கிரீட் பாக்ட்ஸ் இருக்கிறதா என்பதை உறுப்பினர் '' சாட்டிஸ்பை '' செய்து கொள்ள வேண்டும். 'with doubts don't make repres ntation here.'

1985 V 35

ஆதாரமளித்தல்— தொடர்ச்சி

ஓர் உறுப்பினர் உரையாற்றுகையில் தமக்கு எழுத்து மூலமாக வந்த குற்றச்சாட்டின் நகலை ஆதாரமாக வைத்து ஒரு குற்றச்சாட்டைக் கூறியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :—

" புகார் என்றால் வரக்கூடிய கடிதங்களைக் காட்டினால் அது புகார் அல்ல. அதை யார் வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளலாம், யார் மேலும் எழுதிக் கொள்ளலாம், வேறு ஏதாவது, " அபிஷியல் டாகுமெண்டு " இருந்தால் சொல்லுங்கள். அபிஷியல் டாகுமெண்ட் இல்லை என்று சொன்னால் அதைக் கொடுக்க வேண்டாம். "Any report can be concocted by anybody.

1986 XXVIII 223–224

ஓர் உறுப்பினர் குற்றச்சாட்டைச் சொல்லும்போது கையிலே ஆதாரமில்லாமல் பேசுவது நல்லதல்ல. அது மரபும் அல்ல. உறுப்பினர்கள் மீது குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்றால் முதலில் எழுதிக் கொடுக்க வேண்டும். அப்படியில்லாமல் ஆதாரமின்றி பேசிவிட்டுப் போய்விட்டால் செய்திகள் வெளியே வருகிறபோது வேறுமாதிரி வரக்கூடும்.

1985 V 33–34

ஓர் உறுப்பினர் தாம் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்கு நடைமுறை ஆதாரம் இருப்பதாகச் சொல்லி, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுதான் ஆதாரம் என்று விவாதித்தபோது, பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :—

" நடைமுறை ஆதாரம் என்பது புதியதாக இருக்கிறது. நடைமுறை ஆதாரம் என்று ஒரு ஆதாரம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே அப்படிச் சொல்ல வேண்டாம்."

1985 XI 594–595

குற்றச்சாட்டுக்கான ஆதாரங்களை அவையில் கொடுக்கக்கூடாது. அதை எழுதி ஒரு கவரிங் லெட்டர் வைத்து தலைவருடைய அறையிலே வந்து கொடுக்க வேண்டும். எந்தக் குற்றச்சாட்டாக இருந்தாலும் இனிமேல் எழுதிக் கொடுத்தால் ஒழிய அனுமதிப்பதாக இல்லை.

1986 XVIII 542, 543





ஆதாரமளித்தல்— தொடர்ச்சி

குற்றச்சாட்டுகள் கூறும் போது ஆதாரங்களை வைத்துத் தான் பேச வேண்டும்.

1985 XI 590, 591

குற்றச்சாட்டைச் சொல்லும்போது ஆதாரம் கொடுக்காமல் பேச முடியாது.

1987 XLI 293–294

தலைவரிடம் ஆதாரம் காட்டாமல் தலைவரின் அனுமதியோடு சொல்வதாகக் குறிப்பிடுவது முறையல்ல என குறிப்புரைக்கப்பெற்று அது சம்பந்தப்பட்ட பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

1985 XII 327

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது தஞ்சை மாவட்டத்திலிருந்து பிற மாவட்டங்களுக்கு அரிசி கடத்தப்பட்டதென்று அமைச்சர் பேசியதை ஓர் உறுப்பினர் ஆட்சேபித்தபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :-

" ஓர் உறுப்பினர் மீதோ, ஓர் அதிகாரி மீதோ ஒரு குற்றச்சாட்டு எழுப்பப்படுமேயானால் அதற்கு முன் அறிவிப்பு கொடுத்து, ஆதாரத்தை என்னிடம் காட்டிய பிறகே பேச வேண்டும். ஆனால் நிர்வாக சம்பந்தமாக அமைச்சர் இங்கே பேசும்போது அவர்களிடம் ஆதாரத்தைக் கேட்டால் அவையை நடத்த முடியாது. அவர்களுக்குப் பொறுப்பு இருக்கிறது. அந்தப் பொறுப்பு உணர்ச்சியோடு பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பேசுவது ரெக்கார்டில் இருக்கிறது. ஆகவே உடனடியாக உறுப்பினர்கள் படித்துப் பார்த்து உரிமைப் பிரச்சினையாகக் கொண்டு வரலாம்."

1986 XX 415–420

பத்திரிகைச் செய்திகளை ஆதாரமாக வைத்து பேசக் கூடாது.

1985 XII 348
1986 XXIV 559, 560

**ஆதாரமளித்தல்— தொடர்ச்சி**

பத்திரிகையில் வந்த செய்தியை ஆதாரமாகக் கொண்டு ஓர் உறுப்பினர் குற்றச்சாட்டு கூறிய பகுதியும், அதற்கு அமைச்சரும் மற்ற உறுப்பினர்களும் விளக்கம் அளித்த பகுதியும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1986 | XXIV | 559, 560 |
| 1987 | XLII | 417–420 |

**ஆதாரமளித்தல் (ஆதாரம் தருவதாகச் சொல்லித் தராமல் இருத்தல்)**

இந்திரா நகர் பிரேமா கொலை வழக்கு சம்பந்தமாக தம்மிடம் இருக்கும் ஆதாரத்தைத் தருவதாக முன்பொருமுறை சொன்ன உறுப்பினர் இதுவரையில் அந்த ஆதாரத்தைத் தரவில்லையாதலால் அவ்வுறுப்பினர் ஆதாரம் இருக்கிறது என்று பேசினால் அவரிடம் முன்கூட்டியே ஆதாரத்தை வாங்கிக் கொண்டு பேசவிடுவது நல்லது என ஓர் உறுப்பினர் தெரிவித்ததற்கு தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

" According to Cr.P.C. failure to give any information about commission of offence is an offence. A private person can arrest any person if anybody commits an offence within his premises, Any citizen has got the right to arrest anybody. Failure to give any information on commission of an offence is a cognizable offence. It is a serious matter and it is not good.

அதற்கு லிமிடேஷனே கிடையாது. இப்போது அவர்கள் பேசினார்கள். அவருக்கு ஆலோசனையாகச் சொல்கிறேன். இந்த மாதிரி விவகாரங்களில் கொஞ்சம் ' ஹாப்-ஹேண்டாகச் ' சொல்வது நல்லதல்ல. கிரிமினல் கேஸுக்கு லைஃப் பூராவும் வாலிடிட்டி (Validity) டைம் இருக்கிறது. எப்போது வேண்டுமானாலும் விசாரிக்கலாம். அதற்கு ஆதாரம் தம்மிடம் இருக்கிறது என்றால் இப்போதும் கொடுக்கலாம். உங்களிடம் ஆதாரம் இருந்தால் நீங்கள் இன்றைக்கு சபை முடிவதற்கு முன்பாகக் கொடுத்து விடுங்கள். I will take action நான் பார்த்துக் கொள்கிறேன். கொலை வழக்கிலே, போகிற போக்கிலே சொல்லிவிட்டுப் போவது நல்லதல்ல. ஆதாரம் இருக்குமானால் கொடுங்கள். இது அவையில் ரெஃபர் ஆன வழக்கு. எனவே விசாரிக்கலாம். I will refer the matter to Commissioner of Police ".

| | | |
|---|---|---|
| 1986 | XVII | 385,386, 390 |





**ஆதாரமளித்தல்— (குற்றச்சாட்டிற்கு தணிக்கை அறிக்கையை ஆதாரமாக்குதல்)— தொடர்ச்சி**

1987-88 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு மீது ஓர் உறுப்பினர் பேசுகையில், 1983 ஆம் ஆண்டுக்குத் தொடர்புடைய தணிக்கை அறிக்கையிலிருந்து சில தகவல்களைக் குறிப்பிட்டு, குற்றஞ்சாட்டிப் பேசி, அவ்வறிக்கை குறித்து இந்த அவை விவாதிப்பதற்கு உரிமை உண்டு என வாதிட்ட போது தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு பின்வருமாறு :

".. இதுபற்றி பி.ஏ.சி.யிலே வந்தால் சம்பந்தப் பட்ட அதிகாரிகளை அழைத்து விசாரிக்க முடியும். இப்போது அமைச்சரிடத்திலே அந்த விவகாரங்கள் எல்லாம் கையிலே இருக்காது. . . . மேலும் விதி 191-ல், 'If an Appropriation Bill is in pursuance of a supplementary grant in respect of an existing service, the discussion shall be confined to the items constituting the same and no discussion shall be raised on the original grant nor the policy underlying it save in so far as it may be necessary to explain or illustrate a particular item under discussion' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஆடிட் ரிப்போர்ட் இதிலே வரவில்லை.

.. இப்போது ஒதுக்கியிருக்கிற ஒதுக்கீடுகளைப் பற்றி விவாதிப்பதற்காகத்தான் இந்த விவாதம். Past appropriation need not be discussed here. It is a post-mortem. Post-mortem is done by the Public Accounts Committee.

I quote from Kaul and Shakhder—page 386 :

'Normally, no question on the Audit Report is permitted to be raised in the House until the Public Accounts Committee has considered the Report.' என்று சொல்லப் பட்டிருக்கிறது. We have not considered the Report.

பொதுக் கணக்குக் குழு இதுபற்றி விவாதிக்க இருப்பதாலும், விதி 191 இதைப்பற்றி குறிப்பிட்டுச் சொல்வதாலும், பொதுக் கணக்குக் குழுவில் விவாதிப்பதற்கு முன், ஆடிட் ரிப்போர்ட்டில் குறிப்பிட்டுள்ளதைப் பற்றி சபையில் விவாதிக்கக் கூடாது என்று 'கவுல் அண்ட் ஷக்தரில்' தெளிவாகச் சொல்லியிருப்பதாலும் இந்தக் குற்றச்சாட்டுகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**ஆதாரமளித்தல்— (குற்றச்சாட்டிற்கு தணிக்கை அறிக்கையை ஆதாரமாக்குதல்)— தொடர்ச்சி**

..This Audit Report is not a final document. It is not a sacred document and it is not a judgment. நான் பொதுவாக சொல்கிறேன். பி.ஏ.சி.யில் விவாதிக்கப்பட்ட பிறகுதான் பி.ஏ.சி. முடிவுக்கு வந்த பிறகு தான் அந்த ரிப்போர்ட் சரியா, தவறா என்று அங்கே பதில் சொல்லி, இந்த அவைக்குத் தெரிவிக்க முடியும். அதுவரை இது நிலுவையில்தான் இருக்கிறது.

...'Any paper laid on the Table of the House under any provision of law may be discussed by the House on an appropriate motion given by any Member as provided for in these rules and admitted by the Speaker' என்று விதி 31-ல் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இங்கே அவை முன் வைக்கப்படுகின்ற ஏடுகளுக்கே இவ்வாறு சொல்லப்பட்டு இருக்கிறது. This is a Report. If it has to be debated, a consensus has to be arrived at in the Business Advisory Committee Meeting."

1987 XLVI 604, 605, 606, 607, 608, 609, 610, 611, 612, 613-618

**பொறுப்பேற்றல்—**

ஓர் உறுப்பினர் தம் உரையில் 'செல்ப் பைனான்சிங் இன்ஸ்டிடியூஷன்ஸ் கொள்ளை அடிக்கிறார்கள்' என்று சொன்னபோது அதற்கு என்ன ஆதாரம் என்பதை முதலில் கொடுக்க வேண்டும் என்றும், அதை நிரூபிக்க உறுப்பினர் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும் என்றும் குறிப்புரைக்கப் பெற்றது.

1987 XXXVII 999–1000

**மறுத்தல்—**

ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் பொதுமக்களிடம் நிதி வசூல் செய்வது குறித்து அமைச்சர் குறிப்பிட்டதை இன்னொரு உறுப்பினர் ஆட்சேபித்தபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :





**மறுத்தல்— தொடர்ச்சி**

''வசூல் பற்றிப் பேசும்போது எனக்குப் பட்டதைச் சொல்கிறேன்.

A Member of Legislative Assembly is a public servant. A Municipal Chairman is also a public servant. A Panchayat Union Chairman is also a public servant. If they collect money, it is for the House to decide whether it is donation or corrupt money''

1987 XLI 726

ஒரு உறுப்பினர் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லுகிறபோது அதற்கு அமைச்சர் பதில் சொல்லிவிட்ட பிறகு அது இல்லையென்று மறுபடியும் உறுப்பினர் கூறிக்கொண்டிருந்தால் அவையை நடத்திச் செல்ல முடியாது.

1987 XIX 86, 91

ஒரு குற்றச்சாட்டை அமைச்சர் மறுத்துவிட்டால் அதைத்தான் பேரவை நம்ப வேண்டும்.

1985 XII 349

ஓர் உறுப்பினர் தெரிவித்த கருத்துக்களுக்கு மறுப்புத் தெரிவிக்க விரும்பும் உறுப்பினர் மறுப்பை மட்டும் தெரிவிக்கலாமே தவிர தனிப்பட்டவர்களைப் பற்றிக் குறிப்பிடக்கூடாது என்று குறிப்புரைக்கப் பெற்று, அவ்வாறு பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1987 XXXVIII 84, 86, 87, 88, 89

குற்றச்சாட்டை அமைச்சர் மறுத்துவிட்டால் அதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் 'கன்வென்ஷன்' என்று குறிப்புரைக்கப் பெற்று அப்பகுதி அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது.

1987 XL 776-778

**மற்றைய நடைமுறைகள்—**

ஆளுநர் உரைமீதான விவாதத்தில் பேசிய ஓர் உறுப்பினர் ஒரு குற்றச்சாட்டைத் தெரிவித்தபோது, தலைவர் குறிப்புரைத்ததாவது;

''குற்றச்சாட்டுக்களை ஸ்பெசிபிக்காகச் சொல்ல வேண்டும். ஸ்பெசிபிக்காக இருந்து அதைச் சொன்னால் அதை விசாரிப்பதற்கு வசதியாக இருக்கும். எனவே அவ்வாறு இல்லாததை நீக்க உத்தரவிடுகிறேன்.''

1987 XXXII 354
XXXIII 95

மற்றைய—நடைமுறைகள்—தொடர்ச்சி

இந்த அவை நிறைவேற்றிய சட்டத்தை அமல் நடத்துகிற வகையில் தான் நீதிபதிகள் இருக்கிறார்கள். எனவே அவர்கள் மீது உறுப்பினர்களின் கொள்கையைத் திணிப்பது சரியாக இருக்காது. நீதித்துறை பற்றி ஒட்டுமொத்தமாக குறிப்பிட்டு பேசக் கூடாது என்று குறிப்புரைக்கப்பெற்று அவ்வாறு பேசிய பகுதி நீக்கப் பெற்றது.

1986 XXI 80

உறுப்பினர்கள் உரையாற்றுகையில் அடுத்த உறுப்பினர் மேல் குற்றச் சாட்டைச் சொல்லக் கூடாது. அவைமுன் உள்ள பொருள் பற்றி மட்டும் பேச வேண்டும்.

1987 XXXVII 895

உறுப்பினர்கள் உரையாற்றும் போது அதிகாரிகளின் பெயர்களைக் குறிப்பிடத் தேவையில்லை.

1986 XXVI 647, 648

ஏதாவது குறிப்பிட்ட இடத்தில் நடந்திருந்தால் அது பற்றிச் சொல்ல வேண்டும்; ஒட்டுமொத்தமாக குற்றச்சாட்டு சொல்லக்கூடாது.

1987 XXXII 358

ஒட்டுமொத்தமாகக் குறிப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

1985 III 450

ஒரு கட்சியைப் பற்றி ஒட்டுமொத்தமாகச் சொல்லப் பெற்ற கருத்துக்கள் நீக்கப்பெற்றன. ஒட்டுமொத்தமாக எல்லாவற்றிலும் சகதி வாரி அடித்தால் சரியாக இருக்காது.

1987 XLI 327

ஒரு குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர் பதிலளித்துவிட்டால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்; அதற்குப் பிறகு அதை 'கான்ட்ராடிக்ட்' செய்வது சரியல்ல.

1986 XX 533



192318

மற்றைய—நடைமுறைகள்—தொடர்ச்சி

ஓர் அமைச்சரின் பதில், உறுப்பினர்களைக் குறை சொல்வதாக உள்ளதென்று ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது தலைவர் குறிப்புரைத்ததாவது:

''அதைப் படித்துப் பார்த்த பிறகு அது உறுப்பினர்களுக்குப் பாதகமாக இருக்குமேயானால் அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விடலாம்.''

1987 XXXIX 345

ஓர் உறுப்பினர் உரையாற்றுகையில் 'நிர்வாகம் பாதிக்கப்படுகிறது' என்று குறிப்பிட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் ;

''நிர்வாகம் பாதிக்கப்படுகிறது என்று ஸ்வீப்பிங்காகச் சொல்லக்கூடாது, ஸ்பெசிபிக்காகச் சொல்ல வேண்டும்.''

1986 XVI 114
1987 XXXIV 591

ஓர் உறுப்பினர் கூறிய குற்றச்சாட்டை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியது முறை அல்ல என வேறோர் உறுப்பினர் குறிப்பிட்டபோது ''ஓரளவு ஸ்வீப்பிங்காகச் சொல்லிவிட்டுப் போவதென்றால், '' It is not propsr. You give one evidence, I will allow after seeing it. ..I have to protect the people even out side. The officer is also a citizen of India. '' என குறிப்புரைக்கப்பெற்று, அப்பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1985 XII 613

ஓர் உறுப்பினர் தம்உரையில் குற்றம் சாட்டிப் பேசியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

''ஸ்பெசிபிக்காக சொல்ல வேண்டும். ஒட்டுமொத்தமாகச் சொல்லக் கூடாது.''

1986 XVIII 351

ஓர் உறுப்பினர் பேசுகையில் பொதுவாக ஒரு குற்றச்சாட்டைத் தெரிவித்தபோது, அதை நீக்கம் செய்து தலைவர் குறிப்புரைத்ததாவது :

''ஒரு ஆஸ்பத்திரியைக் குறிப்பிட்டுச் சொன்னீர்களானால் சம்பந்தப்பட்ட அமைச்சர் விசாரிப்பதற்கு வசதியாக இருக்கும். சொல்வதைஸ்வீப்பிங்காக சொல்லக் கூடாது.''

1987 XXXIII 144

Y211,31 N

ஓர் உறுப்பினர் பேசும்போது ஒரு அதிகாரி பற்றி ''ஸ்வீப்பிங்காகக்'' குற்றச்சாட்டு கூறியபோது, அவ்வாறு குறிப்பிட்டபகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றது. அது குறித்துப் பின்வருமாறு தீர்ப்புரைக்கப்பெற்றது:

''குற்றச் சாட்டை ''ஸ்பெசிபிக்காக'' சொன்னால் பரவாயில்லை. ''ஸ்வீப்பிங்காக'' சொல்லக்கூடாது. ''ஸ்வீப்பிங்காகப்'' பேசினால் எந்தத் துறைக்கும் பாதுகாப்பு இல்லாமல் போய்விடும். ஒரு அதிகாரி மீது குற்றச்சாட்டுச் சொல்ல விரும்பும்உறுப்பினர் முன்கூட்டியே சட்டமன்றப் பேரவை விதி 93-ன்படி முன் அறிவிப்புக் கொடுத்து தலைவரின் அனுமதி பெற்ற பிறகே அதுபற்றிக்குறிப்பிட வேண்டும்.''

1986 XXVIII 394–395

ஓர் உறுப்பினர் பொதுவாக காவல் துறையினரைக் குற்றம் சாட்டிப் பேசியபோது தலைவர் குறிப்புரைத்ததாவது:

''ஸ்பெசிபிக்காக சொல்லுங்கள். குறிப்பிட்டுச் சொன்னால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும். ஒட்டுமொத்தமாகச் சொன்னால் பிரயோசனம் இல்லாமல் போய்விடும்.

.. போலீசார் எல்லோரையும் ஒட்டு மொத்தமாகச் சொல்லக் கூடாது. காவல் துறையில் நல்லவர்களும் இருப்பார்கள். ஒட்டுமொத்தமாகச் சொன்னதால்தான் பிரச்சினையே வந்திருக்கிறது. குற்றச்சாட்டு சம்பந்தப் பட்ட பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறும்.''

1987 XXXVI 570–576

குற்றச்சாட்டு கூறும் உறுப்பினர் ஸ்பெசிபிக்காக சொன்னால்தான் அமைச்சர் நடவடிக்கை எடுப்பதற்கும், துறை நடவடிக்கை எடுப்பதற்கும் வசதியாக இருக்கும்.

ஒட்டுமொத்தமாகச் சொன்னால் நல்ல அதிகாரிகளுக்கும் கெட்ட பெயர் ஏற்படும்.

'வேக்'காகக் குற்றஞ்சாட்டி பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1987 XLII 417–420
463–464
1987 XLIV 483–487





குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். ஒட்டு மொத்தமாகச் சொல்ல வேண்டாம். அப்படி ஒட்டு மொத்தமாகச் சொன்னால், அதே நடைமுறையை அனைவரும் கையாள வேண்டிவரும்.

1987 XXXII 393

குறிப்பிட்டுச் சொல்லாமல், ஒட்டு மொத்தமாக குற்றச் சாட்டை சுமத்துதல் கூடாது எனக் குறிப்பிடப்பட்டு அப்பகுதி நீக்கப்பெற்றது.

1985 IV 485–486

சட்டம்—ஒழுங்கு பற்றி, குறிப்பிட்ட சம்பவம் ஏதாவது இருந்தால் சொல்லலாம். பொதுவாகச் சொன்னால் அது நாளிதழில் தலைப்புகள் கொடுக்கப்பட்டு வெளியிடப் படும் என்று குறிப்புரைக்கப்பெற்று அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1986 XVII 263

சட்டமன்றம் குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பொதுவாக தலைவரைப் பற்றிச் சொல்லலாம். ஆனால், அவர்மேல் 'மோடிவ்' கற்பிப்பது மாதிரி சொல்லக் கூடாது.

1985 XIII 380

சட்ட முன்வடிவின் மீது ஓர் உறுப்பினர் பேசியபோது ஒரு குறிப்பிட்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர் பற்றி அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்ட புகார் பற்றிக் குறிப்பிட்டார். இன்னொரு உறுப்பினர் அது பற்றி விளக்கம் கோர விரும்பியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்;

''ஒரு புகார் அரசாங்கத்திற்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டு, அந்தப்புகாரின் அடிப்படையில் உறுப்பினர் பேசினார். அப்படிப்பட்ட புகார் கொடுக்கப்படவில்லை என்று நீங்கள் சொன்னால் அது பற்றி கண்டுபிடித்து உரிய வகையில் உரிமைப் பிரச்சினை வேண்டுமென்றால் எழுப்பலாம்.''

1986 XXVIII 468–469

தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லையென்றால் இப்படி இப்படி தவறுகள் நடக்கின்றன அல்லது நடக்கும் என்று சொல்லலாமே தவிர, 'ஸ்வீப்பிங்' ஆக குற்றச் சாட்டு சொல்லக்கூடாது என்று குறிப்புரைக்கப்பெற்று அந்தப் பகுதி அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்பெற்றது.

1986 XV 80

பல்வேறு துறைகள், நிர்வாக அமைப்புகளிலுள்ள குறைகளை ஓர் உறுப்பினர் சுட்டிக்காட்டத் தொடங்குமுன்பு, தலைவர், ''பொதுவாக சொல்லாதீர்கள்'' என்று அடிக்கடி சொல்வது தமக்குத் தெரியும் என்று குறிப்பிட்டபோது தலைவர் குறிப்புரைத்ததாவது:

''நான் மட்டும் அல்ல. இந்தியாவில் இருக்கிற சட்டமன்றங்களிலே தலைமை தாங்குகிற எல்லோரும், பாராளுமன்ற சபாநாயகர் உட்பட அப்படித்தான் சொல்வார்கள், அதுதான் பாராளுமன்ற மரபு''.

1987 XXXVII 158

பல உறுப்பினர்கள் குற்றச்சாட்டுகளைக் குறிப்பிடுகின்றபொழுது கூட ''பொதுவாக குறிப்பிடாதீர்கள்' என்று சொல்வதன் மூலம் சட்டமன்ற மரபுகள் உங்களுக்கு அளித்து இருக்கின்ற கேடயங்களை வைத்துக்கொண்டு தப்பிக்காதீர்கள் என ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது:

''மரபு எல்லா உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பை அளிக்கிறது. அவைக் குறிப்பிலேயிருந்து சிலவற்றை நீக்கவில்லை என்றால் எதிர் தரப்பிலே உள்ளவர்கள் எழுந்து பேசத் தொடங்குவார்கள். ஆகவே எல்லா உறுப்பினர்களின் உரிமைகளையும் நலன்களையும் காப்பதற்காகத்தான் மரபுகள், விதிகள் இருக்கின்றன.''

1986 XXIX 322

பொதுப்படையாகக் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது.

1985 VII 622

மாநில அரசு கேட்கிற தொழிலை, மத்திய அரசு கொடுக்கவில்லை. அவர்களாக சில தொழில்களைக் கொடுக்கிறார்கள் என்று அமைச்சர் குறிப்பிட்டதை ஓர் உறுப்பினர் ஆட்சேபித்தபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

''இதிலே குற்றச்சாட்டு ஒன்றும் இல்லை. உறுப்பினர்கள் அடிக்கடி குறுக்கிடக் கூடாது. அமைச்சரின் பதிலுக்கு ஏதாவது விளக்கம் சொல்ல வேண்டுமென்றால் உறுப்பினர்களுக்கு வாய்ப்பு வரும்போது விளக்கம் கொடுக்கலாம். அவ்வப்போது குறுக்கிடக்கூடாது.''

1985 XIX 346







மைனாரிட்டி சம்பந்தமான பிரச்சினையைப்பற்றி ஓர் உறுப்பினர் கூறிய கருத்தினை இன்னொரு உறுப்பினர் ஆட்சேபித்தபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

''இது ரொம்ப ''சென்சிடிவ்' பிரச்சினை. எனவே இதுபற்றிய கருத்துக்களைச் சொல்லும்போது பொறுப்போடு சொல்ல வேண்டும். ஆகவே மைனாரிட்டி சமூகம் பற்றி குறிப்பிட்டு பேசியது அவை குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது.''

1985 VIII 102–103

''ஸ்வீப்பிங்காக' குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. 'ஸ்பெசிபிக்காக' இருந்தால் அனுமதி பெற்று சொல்ல வேண்டும். 'ஸ்வீப்பிங்காக' சொல்லும்போது எதிர் தரப்பில் இருப்பவர்கள் பதில் சொல்வார்கள். அதனால் பிரச்சினை ஏற்படும்.

'ஸ்வீப்பிங்காக' குற்றச்சாட்டு கூறப்பட்ட பகுதி அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1985 | VIII | 842 |
| 1986 | XVIII | 379–388 |
| | XX | 725–727 |
| | XXI | 598 |
| | XXIV | 91 |
| | XXIX | 301–302 |
| 1987 | XXXIV | 256 |
| | XXXV | 71 |
| | XXXVIII | 101 |
| | XLI | 273 |
| | XLVI | 670–671 |
| | | 704–705 |

குறிப்புகள்—

அவையில் வைக்கப்பட்டுள்ள சில வெளியீடுகளில் அவற்றை அச்சிட்ட அச்சகத்தின் பெயர் குறிப்பிடப்படாமல் இருப்பது முறையா என ஓர் உறுப்பினர் கேட்டபோது தலைவர் குறிப்புரைத்ததாவது :

''எங்கே அச்சிடுகிறார்கள் என்று பார்க்கின்ற வேலை என்னைப் பொறுத்தவரையில் இல்லை. சம்பந்தப்பட்ட துறையினர் தான் அச்சிடுகிறார்கள். எனதுசெயலகத்திற்கு வந்தவுடன் என்னுடைய அனுமதியைப் பெற்று அவையில் வைக்கிறார்கள்.''

1986 XVIII 323

தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற மானியக் கோரிக்கையை அமைச்சர் முன்மொழிந்த பிறகு ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி, சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சர் தற்போது அமைச்சராக இல்லை என்றும், உறுப்பினராகத்தான் இருக்கிறார் என்றும் சுட்டிக்காட்டிய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

"இந்தக் குறிப்புகள் ஒரு மாதத்திற்கு முன்பு வழங்கப்பட்டவை. ஏப்ரல் மாதம் 5 ஆம் தேதி அனுப்பப்பட்டவை. மறுபடியும் இவைகளை அச்சடிக்க வேண்டும் என்றால் காலமும் நேரமும் ஆகும். இவைகளையெல்லாம் பெரிய விஷயமாகச் சொல்ல வேண்டாம்."

1986 XXVI 268–269

மானியக் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புகளும், மற்ற வெளியீடுகளும் உறுப்பினர்களுக்கு மிகவும் தாமதமாகக் கிடைப்பதனால் அவற்றைப் படித்து பேரவையின் விவாதங்களில் கலந்து கொள்ள நேரம் கிடைப்பதில்லை என்று உறுப்பினர்கள் பலர் கூறுகின்றனர். கொள்கை விளக்கக் குறிப்புகளும் மற்ற புத்தகங்களும் மானியக் கோரிக்கை பேரவையில் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு நான்கு நாட்கள் முன்னதாகவே பேரவைச் செயலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என்று ஏற்கனவே எல்லாத் துறைகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அவையிலும் பலமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இம்முறை துறைகளுக்குப் போதிய அவகாசம் இருந்தும் சில மானியக் கோரிக்கைகள் பேரவையில் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்தினம்தான் குறிப்புகள் பேரவைச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அதனால் உறுப்பினர்களுக்கு இவற்றை அனுப்புவதில் காலதாமதம் ஆகிறது. எனவே, அமைச்சர்கள் தங்கள் துறைகளிடம் சொல்லி இவற்றை நான்கு நாட்கள் முன்னதாகவே பேரவைச் செயலகத்திற்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மீண்டும் இம்மாதிரி காலம் கடந்து இவை அனுப்பி வைக்கப்பட்டு உறுப்பினர்கள் இவற்றைப் படிக்க நேரம் இல்லையென்று பேரவையில் கூறினால், அந்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தை ஒத்தி வைக்க நேரிடும். அமைச்சர்கள்தான் இதற்குப் பொறுப்பேற்க வேண்டிவரும்.

1985 VIII 39

மானியக் கோரிக்கை சம்பந்தப்பட்ட குறிப்புகள் உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே அனுப்பி வைக்கப்பெற வேண்டும்.

1985 VII 607



குறுக்கீடுகள்—

அமைச்சரின் உரையில் விளக்கம்—

அமைச்சர் உரை முடிந்ததற்குப் பிறகு, உறுப்பினர்கள் பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷனோ, அல்லது பாயின்ட் ஆப் ஆர்டரோ கொண்டு வரலாம். இதுதான் நடைமுறையில் இருந்து வருகிறது. எனவே அமைச்சர் பேசும்போது உறுப்பினர்கள் குறுக்கிடக்கூடாது.

1985 III 209
1986 XXIII 715

அமைச்சர் உரையாற்றியதற்குப் பிறகு, விளக்கம் கோருவதற்கு ஒரு நியாயத்தின் அடிப்படையில், விவாதத்தில் பங்கு பெற்ற உறுப்பினர்களுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. வேறுயாரையும் அனுமதிப்பதில்லை. இது ஒரு மரபு, நியதி.

1986 XXIII 454
XXX 491
1987 XXXVI 627
XL 211

அமைச்சர் ஒரு தகவலைத் தந்துவிட்ட பிறகு, அதுகுறித்து பத்திரிகையில் வந்திருப்பவை பற்றியெல்லாம் சொல்லக் கூடாது.

1985 XIII 526

அமைச்சர் ஓர் அறிக்கையைப் படிக்கும்போது ஓர் உறுப்பினர் இடையே குறுக்கிட்டுக் கொண்டே இருந்தால் தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார்:

"அமைச்சர் அறிக்கையைப் படிக்கிறார். உங்களுக்கு மட்டும் உரிமை இருப்பதாக எண்ணிக்கொண்டு, நின்று கொண்டு பேசிக்கொண்டிருப்பது முறையல்ல. அவரும் இந்த அவையின் உறுப்பினர். அவர் அறிக்கையைப் படிப்பதற்கு அனுமதியுங்கள். அமருங்கள். விதிகளுக்குப் புறம்பாக நீங்கள் நின்று கொண்டேயிருக்கிறீர்கள். பேசிக் கொண்டே இருக்கிறீர்கள், நீங்கள் முறையாக அழைக்கப்படவில்லை."

1987 XLIV 183–184

அமைச்சர் பதில் உரைக்குப் பிறகு ஏதேனும் விளக்கம் கேட்பதாக இருந்தால் கேட்கலாம். இடையிலே குறுக்கிட்டால் நாட்டுக்கு அமைச்சரால் அறிவிக்கப்பட வேண்டிய முக்கியமான அறிவிப்புகள் விட்டுப் போய்விடக்கூடும்.

1986 XXII 915

குறுக்கீடுகள்—தொடர்ச்சி

அமைச்சரின் உரையில் விளக்கம்—தொடர்ச்சி

அமைச்சர் பதிலளித்த பிறகு உறுப்பினர்கள் விளக்கம் கேட்க வேண்டும். இடையில் ஒருவருக்கு அனுமதி கொடுத்தால், இன்னொருவருக்கும் கொடுக்க வேண்டும்.

1987 XXXV 590

அமைச்சர் பேசியதற்குப் பிறகு விளக்கம் கேட்கும் உறுப்பினர்கள் சுருக்கமாகத்தான் விளக்கம் கேட்க வேண்டும். கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகக் கூடாது. சந்தேகம் இருந்தால் அதை மட்டும்தான் கேட்க வேண்டும்.

1985 IV 56
1986 XXX 487-488

அமைச்சர் விளக்கம் அளித்த பிறகும் ஓர் உறுப்பினர் தன்னுடைய கருத்தை வலியுறுத்திப்பேசதனக்கு உரிமையிருக்கிறது என்று வாதிட்டபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது :

"தவறான தகவலை அவைக்குத் தரக்கூடாது. I am her. to straighten the record. அமைச்சர்கள் பதில் சொல்லலாம். பதில் சொல்லக்கூடாது என்று இல்லை".

1987 XXXVII 995

அமைச்சரின் பதிலுரைக்குப் பிறகு விளக்கம் கோரும் முகத்தான் தாம் கேட்ட விளக்கத்திற்கு அமைச்சர் முழுமையான பதிலளிக்கவில்லை என்று ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது தலைவர் குறிப்புரைத்ததாவது :

"கட்டாயப்படுத்த முடியாது. அமைச்சரை இப்படி பதில் சொல்லுங்கள் என்று தலைமை சொல்ல முடியாது."

1985 XIII 684
1987 XLV 171

அமைச்சரின் பதிலுரைக்குப் பின் அடிக்கடி குறுக்கிட்டு ஓர் உறுப்பினர் விளக்கம் கேட்க முற்பட்டபோது கீழ்க்கண்டவாறு குறிப்புரைக்கப்பெற்றது:

"கோபமாகப் பேசினால் அனுமதிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. அனுமதிக்கவும் மாட்டேன். அவையிலே பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போது அமைச்சருக்கு என்று ஸ்பெஷல் ட்ரீட்மென்ட் கொடுக்க முடியாது. உரக்கக் குரல் கொடுப்பதாலேயே நீங்கள் சொல்லுவது நியாயம் ஆகாது."

1987 XXXVI 364



குறுக்கீடுகள்—தொடர்ச்சி

அமைச்சரின் உரையில் விளக்கம்—தொடர்ச்சி

அமைச்சரின் பதிலுரைக்குப் பின் முன் வரிசையில் உள்ள உறுப்பினர்கள் மட்டும் விளக்கம் கேட்கலாம்.

1987 XXXVI 362

அவை முன்னவர் முறையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று விளக்கம் கொடுத்த பிறகு மேற்கொண்டு அந்த விஷயத்தைப்பற்றிக் கூறக்கூடாது.

1986 I 199

ஆளும் கட்சியினர் தவறான கருத்துக்களைச் சொல்லும்போது எதிர்க்கட்சியினர் அதை மறுத்துப் பேசுவதற்கு வாய்ப்பு தரப்படுவது இல்லையென்று ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட போது தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பாவது:

"..நான் எல்லோருக்கும் பாதுகாப்பு கொடுக்கிறேன். அமைச்சர் பேசியது தாக்குதல் இல்லை, அவருடைய நாவன்மையை, இலக்கிய வன்மையைக் காட்டுகிறது. நான் யாரையும் தாக்க விட மாட்டேன். எல்லோருக்கும் பாதுகாப்பு உண்டு."

1986 XIX 467-468

உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்சினைகளுக்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டே போனால் பொழுது விடிந்து விடும் என்ற காரணத்தால் ஒரு சிலவற்றிற்கு மட்டும் இங்கே விளக்கத்தைத் தந்து மற்றவற்றிற்கு தனியாகப் பட்டியல் போட்டு அதிலே அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதையும் சேர்த்து அச்சடித்து உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் என்று அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது:

"..எல்லா அமைச்சர்களும் இதைப் பின்பற்றினால் எல்லோருக்கும் நல்லது."

1987 XLI 417

உறுப்பினருக்கு அமைச்சர் பதிலளித்த பிறகு மீண்டும் உறுப்பினர் பேச முற்பட்டபோது, தலைவர் குறிப்புரைத்ததாவது:

"இப்படியே பேசிக்கொண்டிருந்தால் டிபேட் முடியாது."

1987 XXXVII 612

அவையிலே அமைச்சர் குறிப்பிட்டுள்ளதைப் பற்றி உறுப்பினர் திரும்ப பேசக்கூடாது.

1987 XXXV 364

ஓர் உறுப்பினர் உரையாற்றுகையில் குறிப்பிட்ட ஒரு கருத்துக்கு அமைச்சர் ஒருவர் விளக்கம் அளித்த பிறகு, மற்றொரு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் விளக்கம் அளிக்க முயல்வது சரியல்ல. பின்னர் வாய்ப்பு வரும்போது அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் விளக்கம் அளிக்கலாம்.

..அப்போதைக்கப்போது குறுக்கீடு இருப்பது நல்ல மரபு அல்ல.

1985 IV 393, 394, 395

சட்ட முன்வடிவின் மீதான விவாதத்திற்கு அமைச்சர் பதில் அளிக்கையில், உறுப்பினர் ஒருவர் குறுக்கிட்டபோது, ''அமைச்சர் முடித்தவுடன் சொல்லலாம்; நினைத்தவுடன் உறுப்பினர் குறுக்கிட்டு அமைச்சர் கருத்துக்குப் பதில் சொல்ல முடியாது'' என்று குறிப்புரைக்கப் பெற்றது.

1987 XLVI 291, 293

தான் சபையில் சொன்னது தவறு என்று ஓர் அமைச்சர் 'எஸ்டாபிளிஷ்' செய்திருக்கிற காரணத்தால், அது குறித்துப் பேச தனக்கு சந்தர்ப்பம் தரவேண்டும் என்று ஓர் உறுப்பினர் கேட்ட போது, ''இரண்டுமே அவைக் குறிப்பில் இருக்கின்றன. எனவே, இதற்கு மேல் வேறு எதுவும் வேண்டாம்'' என தலைவர் குறிப்புரைத்தார்.

1986 XXXI 121

மானியக் கோரிக்கையில் ஏதாவது ஐயப்பாடு இருக்குமானால் அதுகுறித்து அமைச்சர் தம் பதிலுரையில் விளக்கம் சொல்வார். உடனே அதற்குப் பதில் சொல்லவேண்டுமென்று அமைச்சரை நிர்ப்பந்திக்க முடியாது.

1986 XXI 49

மானியக் கோரிக்கை விவாதத்திற்கு அமைச்சர் பதிலளித்த பிறகு விளக்கம் கேட்பவர் உதாரணங்கள் சொல்லிக் கொண்டுபோகக் கூடாது.

1985 XIII 97

மானியத்தின் மீதான விவாதத்திற்கு அமைச்சர் பதில் அளித்த பிறகு உறுப்பினர்கள் விளக்கத்தைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும். விவாதம் போல் பேசக்கூடாது.



உறுப்பினர்கள் எழுதி அமைச்சரிடம் கொடுத்தால் நடவடிக்கை எடுப்பார்கள்.

| | | |
|---|---|---|
| 1985 | VIII | 166 |
| | IX | 616 |
| 1986 | XXIII | 157, 159 |
| 1987 | XXXVI | 632 |
| | XLII | 719 |

மானியத்தின் மீதான விவாதத்திற்கு பதில் அளிக்க அமைச்சர் முற்படுகையில் ஒரு கட்சித் தலைவர் எழுந்து பேச முயன்றபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''பிரதான எதிர்க்கட்சி பேசிய பிறகு அமைச்சர்தான் பேச வேண்டும் என்ற முறையில் ஏற்கனவே தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது பேச முடியாது. வேண்டுமானால் கடைசியில் விளக்கம் கேட்கலாம்.''

1987 XLII 670

விவாதத்தில் பங்கு பெற்ற உறுப்பினர்கள் மட்டும்தான் விளக்கம் கோரும் அடிப்படையில் அமைச்சர் பதில் உரைக்குப் பிறகு கேள்விகள் கேட்கலாம். அவ்வாறு கேட்கும்போது புதியதாக எதையும் கேட்கக்கூடாது. ஏற்கெனவே பேசியதைப் பற்றிதான் விளக்கம் கேட்கலாம்.

| | | |
|---|---|---|
| 1985 | VII | 471 |
| 1986 | XXIV | 123 |

விவாதத்திற்கு அமைச்சர் பதிலளித்துக் கொண்டிருக்கும் போது ஒவ்வொரு கருத்துக்கும் குறுக்கிட்டு விளக்கம் கோர வேண்டுமென்றால் முடியாது. அமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பிறகு கடைசியாக விளக்கங்களைக் கேட்கலாம்.

| | | |
|---|---|---|
| 1985 | II | 559–560 |
| | XIII | 128 |
| | XV | 99 |
| 1986 | XVI | 543 |
| | XVII | 276 |
| | XIX | 346 |
| | XX | 802 |
| | XXII | 307, 310, 319, 321 |
| | XXX | 478 |
| 1987 | XXXIX | 165, 168 |

குறுக்கீடுகள்—தொடர்ச்சி

**உறுப்பினரின் உரையில் விளக்கம்—**

அவையில் ஓர் உறுப்பினர் உரையாற்றுகையில், இன்னொரு உறுப்பினர் அடிக்கடி குறுக்கிடுவது கூடாது. உரையாற்றும் உறுப்பினர் தம் பேச்சை முடித்த பின்னர் வேண்டுமானால் அது குறித்து விளக்கம் கேட்கலாம்.

| | | |
|---|---|---|
| 1985 | II | 175 |
| | V | 654 |
| | XIII | 555 |
| 1986 | XVIII | 235 |
| | XIX | 443, 446 |
| 1987 | XXXII | 353 |
| | XXXIII | 72, 79, 80–81 |

உரையாற்றிக் கொண்டிருக்கிற ஓர் உறுப்பினர் 'யீல்டு' செய்தால்தான் மற்றொரு உறுப்பினர் குறுக்கிட்டுப் பேச முடியும். உரையாற்றிக் கொண்டிருக்கிற உறுப்பினர் ஒரு கருத்தைச் சொன்னால், அதற்குப் பதிலை மற்ற உறுப்பினர்கள் வாய்ப்புக் கிடைக்கும்போது தெரிவிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 1986 | XXIX | 69 |
| 1987 | XXXVI | 570 |

உரையாற்றிக் கொண்டிருக்கும் உறுப்பினரின் பேச்சில் குறுக்கிடுவது கூடாது. அந்தந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசும்போது அதற்கான விளக்கம் அளிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 1985 | V | 296, 298, 669 |
| 1986 | XVIII | 512, 644 |
| | XXIII | 584, 585 |
| 1987 | XXXII | 381, 382 |
| | XXXV | 517 |
| | XXXVIII | 98 |
| | XLIV | 206 |

உறுப்பினர்கள் குறுக்கீடு வராமல் பேசவேண்டும். சர்ச்சைக்கு உள்ளாகாத விஷயங்களைச் சொல்லலாம். ஓர் உறுப்பினர் உரையாற்றுகையில், மற்ற உறுப்பினர்கள் குறுக்கிடக்கூடாது. உறுப்பினர்கள் பேசும்போது அமைச்சர் பதிலளிக்கலாம். உறுப்பினர் பேசுவதாக இருந்தால், ஏதாவது விதியின்கீழ் பேசலாம்.

| | | |
|---|---|---|
| 1987 | XXXVII | 947–948 |



குறுக்கீடுகள்—தொடர்ச்சி

**உறுப்பினரின் உரையில் விளக்கம்—தொடர்ச்சி**

உறுப்பினர்களுக்குப் பேச வாய்ப்புக் கிடைக்கும்போது ஏற்கெனவே தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு விளக்கம் சொல்லலாம்.

அதை விட்டுவிட்டு, வார்த்தைக்கு வார்த்தை விளக்கம் கேட்டு, பதில் சொல்ல வேண்டும் என்று உறுப்பினர்கள் எதிர்பார்க்கக்கூடாது.

| | | |
|---|---|---|
| 1986 | XXVII | 80 |
| 1987 | XXXVIII | 100 |

ஒரு குறிப்பிட்ட பொருள் குறித்து, ஓர் அமைச்சரும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும், மாறி மாறி விவாதிக்கத் தொடங்கியபோது, பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது :

" இது உங்கள் இருவருடைய விவாதம் அல்ல. அதோடு நிறுத்திக்கொள்ளலாம். "

| | | |
|---|---|---|
| 1986 | XVIII | 625 |

ஒருவர் உரையில் தவறு இருந்தால், அதைச் சுட்டிக்காட்ட குறுக்கீடு செய்யும்போது, அது சுருக்கமாக இருக்க வேண்டும். தெளிவாக இருக்க வேண்டும். இன்னொரு உரை போல இருக்கக்கூடாது.

| | | |
|---|---|---|
| 1985 | VIII | 440—441 |
| | X | 562 |
| | XIII | 556–557 |
| 1986 | XXI | 566 |
| | XXII | 95 |
| | XXVII | 263 |
| | XXX | 391, 419 |

ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது வரிக்கு வரி குறுக்கிடக் கூடாது. அடுத்து பேசுகின்ற உறுப்பினர்கள், தேவைப்பட்டால் பதில் சொல்லலாம். இரு பக்கங்களிலும் இந்த முறையைப் பின்பற்ற வேண்டும்.

"வரிக்கு வரி குறுக்கிடுவதாக இருந்தால் ஒரு நாளைக்கு நான்கு உறுப்பினர்கள்தான் பேச முடியும்.

| | | |
|---|---|---|
| 1986 | XVIII | 512 |
| 1987 | XL | 446 |

**உறுப்பினரின் உரையில் விளக்கர்**— தொடர்ச்சி

ஒரே கட்சியைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் எழுந்து, ஓர் உறுப்பினருடைய பேச்சுக்கு ஆட்சேபம் தெரிவித்தபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

" யாராவது ஒருவர் எழுந்து பிரச்சினையை எடுத்துச் சொன்னால் அதைப்பற்றி முடிவு செய்யலாம். அப் படி நடைமுறைக்குக் கொண்டு வாருங்கள். அதை விடுத்து, இப்படி எல்லோரும் எழுந்து நின்றால், இதையே எல்லா கட்சிகளும் செய்ய ஆரம்பித்தால் அது மிகவும் சிரமமாக இருக்கும். ".

1987 XXXVIII 90

ஓர் உறுப்பினர் அமைச்சரின் பேச்சுக்கு உடனுக்குடன் எழுந்து பதிலளிக்க முயன்றபோது, தலைவர் பின் வருமாறு குறிப்புரைத்தார் :

" இவ்வாறு இருவரும் மாறி மாறி பேசினால் அனுமதிக்க இயலாது. இன்னும் உறுப்பினர்கள் பேச வேண்டி யிருக்கிறது.

.. அமைச்சர் பதில் சொல்லிவிட்ட பிறகு, அதோடு அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. திரும்பப் பேசினால், அமைச்சர் பதில் சொல்ல வேண்டியிருக் கும்"

1986 XIX 306, 307

ஓர் உறுப்பினர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது அமைச்சர் குறுக்கிட்டு கேட்ட கேள்விக்கு உறுப்பினர் நேரடியாகப் பதில் சொல்வதுதான் முறை.

1986 XXVIII 212, 213
217

ஓர் உறுப்பினர் உரையாற்றிக் கொண்டிருக்கும் போது சில தவறான தகவல்களை அவர் தருவதாக குறிப்பிட்டு மற் றொரு உறுப்பினர் குறுக்கிட முயன்றபோது தலைவர் பின் வருமாறு குறிப்புரைத்தார் :

"நீங்கள் விவாதத்தில் பேசும்போது பதில் கொடுத்து விடுங்கள். இப்போது அதை நீக்கிக் கொண்டிருக்க முடியாது. அதற்காகத் தான் உறுப்பினர்கள் பேசும் போதே 'ரெஸ்ட்ரெய்ன்டாக' பேசுங்கள் என்று சொன் னேன். நீங்கள் பதில் சொல்லும் போதும் பேசலாம்.





**உறுப்பினரின் உரையில் விளக்கம்**— தொடர்ச்சி.

" உறுப்பினர் கூறியது தவறான தகவல் என்றால் அது குறித்து உரிமைப் பிரச்சினை எழுப்புவதற்கு வாய்ப்பு இருக்கிறது."

1985 III 304, 403

ஓர் உறுப்பினர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது மற்ற உறுப்பினர்கள் பேசுகின்ற உறுப்பினரின் ஒவ்வொரு கருத் துக்கும் விளக்கம் கேட்கக் கூடாது.

ஒருவருக்கொருவர் நேரிடையாக கருத்து பரிமாறிக் கொள்வதும் முறையல்ல. தலைவர் மூலமாகத்தான் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும்.

1986 XXIX 69, 92

ஓர் உறுப்பினர் உரையாற்றுகையில் அமைச்சர் குறுக் கிட்டுப் பதில் அளித்த பிறகு, தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிற உறுப்பினர்தான் பேச வேண்டும். மற்ற உறுப்பினர்களுக்குப் பேச வாய்ப்பில்லை.

1986 XXIV 281

ஓர் உறுப்பினர் உரையாற்றுகையில் இன்னொரு உறுப்பினர் குறுக்கிட்டபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத் தார் :

"A Member is addressing the House. Do not prevent the Member. He is a Member and he is entitled to speak and he is entitled to be heard. I have to protect his right."

1986 XXXI 431

ஓர் உறுப்பினர் உரையாற்றுகையில் இன்னொரு உறுப்பினர் குறுக்கிட்டு சில கருத்துக்களை தெரிவித்த போது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"பேசுகின்ற உறுப்பினர் அவருடைய கருத்தைச் சொல் கிறார். நீங்கள் பேசும் போது அப்படிப்பட்ட கருத் துக்களைச் சொல்லியிருக்கலாமே! இவ்வாறு ஓர் உறுப் பினர் பேசும் போது குறுக்கிடுவதால்தான் வேண்டாத விவகாரங்கள் வருகின்றன."

1986 XXIII 108

உறுப்பினரின் உரையில் விளக்கம்— தொடர்ச்சி

ஓர் உறுப்பினர் உரையாற்றுகையில் இன்னொரு உறுப்பினர் குறுக்கிட்டுப் பேச முயன்றபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் ;

" ஓர் உறுப்பினர் பேசும்போது இடைமறித்துப் பேசாதீர்கள். அவர் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. ஓர் உறுப்பினர் பேசும்போது அவர் உரிமையை நீங்கள் பாதுகாக்கவேண்டும்".

1986 XXX 484

ஓர் உறுப்பினர் உரையாற்றுகையில் தெரிவித்த ஒரு கருத்துக்கு அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் விளக்கம் சொல்லலாம். ஒவ்வொருவரும் அதற்குப் பதில் சொல்வது என்பது சரியல்ல.

1987 XXXV 231

ஓர் உறுப்பினர் உரையாற்றுகையில் தெரிவித்த கருத்து தவறானது என்று இன்னொரு உறுப்பினர் வாதாட முயன்றபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் ;

"அவர் கோடீஸ்வரர்களுக்கு அந்தப் பள்ளி என்று சொல்லுகிறார். நீங்கள் அவர் பேசவே கூடாது என்று பேசினால் எப்படி நியாயமாகும்? ஒரேயடியாக அவர் குரல்வளையைப் பிடிப்பது சரியல்ல. அவர் குற்றச்சாட்டு சொல்லவில்லை. அந்தப் பள்ளி வசதியானவர்களுக்கு என்று தான் சொல்லுகிறார். நீங்கள் 'இல்லை, அது ஏழைகளுக்குத் தான்' என்று பேசுங்கள். நீங்கள் நிறையபேர் பேச இருக்கிறீர்கள். அப்போது சொல்லுங்கள். மறுக்க வேண்டிய இடத்தில், மறுப்பு சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லாமல் இருக்கிறீர்கள். தேவையில்லாத இடத்தில் இப்படி செய்தால், என்ன அர்த்தம்? இப்படி குறுக்கீடு செய்தால் அது 'டிபேட்' ஆகாது. அவர் அவருடைய கருத்தைச் சொல்லுகிறார். உங்களுக்கு மாற்று கருத்து இருந்தால் நீங்கள் சொல்லுங்கள்".

1987 XXXVII 942

ஓர் உறுப்பினர் உரையாற்றும்போது தெரிவித்த ஒரு கருத்தை வைத்துக் கொண்டு இன்னொரு உறுப்பினரும்





உறுப்பினரின் உரையில் விளக்கம்—தொடர்ச்சி.

அமைச்சரும் மாறி மாறி விவாதித்துக் கொண்டிருந்த போது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

" இந்த நிலைமை நீடித்துக் கொண்டே போகுமானால், குறுக்கிடுகிற உறுப்பினர்களுக்குத் தான் வாய்ப்புக் கிடைத்து பேச முடியும் என்ற நிலைமை வந்து விடும்.

.. உறுப்பினர் தெரிவித்த கருத்துக்கு அமைச்சர் பதில் சொல்லி விட்டார். ஆகவே இத்துடன் நிறுத்திக் கொள்ளலாம். பேசிக் கொண்டிருக்கிற உறுப்பினர்களுக்கு நியாயம் வழங்க வேண்டும்.".

1986 XIX 86, 91

ஓர் உறுப்பினர் உரையாற்றும்போது விளக்கம் கோர விரும்பும் லேடி மெம்பருக்கு வாய்ப்புத் தர வேண்டுமென்று கோரப்பெற்றபோது பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது :

" அவையில் லேடி மெம்பர், ஜென்ட்ஸ் மெம்பர் என்ற பாகுபாடு இல்லை."

1987 XLIV 208

ஓர் உறுப்பினர் ஒரு குறிப்பிட்ட தகவலைத் தாம் சொல்லவில்லை என்று சொன்னால், மற்ற உறுப்பினர்கள் அதை ஏற்றுக் கொண்டு அத்துடன் விட்டு விட வேண்டும்.

1987 XXXIV 590—591

ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட கருத்தை மறுத்துப் பேச இன்னொரு உறுப்பினர் எழுந்த போது, பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது :

"அவைக் குறிப்பிலிருந்து அது நீக்கப்பட்டு விட்டதால்,, மறுத்துப் பேச வேண்டிய அவசியம் இல்லை".

1986 XIX 357

ஓர் உறுப்பினர் தம் உரையில் மற்றொரு உறுப்பினர் சார்பாக சில கோரிக்கைகளைத் தெரிவித்தபோது, பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

"இங்கே ஓர் உறுப்பினர் சார்பாக மற்றோர் உறுப்பினர் கேட்க முடியாது.

**உறுப்பினரின் உரையில் விளக்கம்—தொடர்ச்சி.**

"ஒருவருக்குப் பதிலாக ஒருவர் வக்கீலாகப் பேச முடியாது."

1987 XL 199

ஓர் உறுப்பினர் தம் பேச்சில் குறிப்பிட்ட புள்ளிவிவரங்களை மற்றொரு உறுப்பினர் ஆட்சேபித்தபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

"அவர் தன்னுடைய கருத்தைச் சொல்லுகிறார். நீங்கள் காலையில் சொல்லியிருக்கிற புள்ளிவிவரம் தப்பு என்பதற்கு அவர் இந்தப் புள்ளிவிவரங்களை சொல்லுகிறார். உங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேச ஆரம்பிக்கும்போது நீங்கள் அதை 'ரிபட்' பண்ணுங்கள். புள்ளிவிவரத்திற்கு நீங்கள் மட்டும் 'அத்தாரிட்டி' என்று நினைக்கக் கூடாது."

1987 XL 113

ஓர் உறுப்பினர் தெரிவித்த கருத்துக்களுக்கு மறுப்புத் தெரிவிக்க விரும்பும் உறுப்பினர் மறுப்பை மட்டும் தெரிவிக்கலாமே தவிர, தனிப்பட்டவர்களைப் பற்றிக் குறிப்பிடக் கூடாது என்று குறிப்புரைக்கப்பெற்று, அவ்வாறு பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1987 XXXVIII 84, 86–89

ஓர் உறுப்பினர் தெரிவித்த கருத்தை மறுக்கும் வகையில் இன்னொரு உறுப்பினர் கருத்து தெரிவித்த போது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"இதிலே 'ஃபர்தர் டிபேட்' கூடாது. ஓர் உறுப்பினர் மாநில அரசின் வெளியீட்டை ஆதாரமாகக் கொண்டு பேசுகிறார். இன்னொரு உறுப்பினர் மாநிலங்களவை நடவடிக்கைக் குறிப்புகளையும், அரசு கடிதத்தையும் ஆதாரமாகக் கொண்டு பேசுகிறார். இரண்டும் ரிக்கார்டாகி இருக்கின்றன. இதோடு விவகாரத்தை முடித்துவிடலாம்."

1987 XXXIII 494–497

ஓர் உறுப்பினர் பேச்சில் இன்னொரு உறுப்பினர் அடிக்கடி குறுக்கிட முயன்றபோது தனக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று அவ்வுறுப்பினர் கோரியபோது, "இது எல்லோருக்கும் பொருந்தும். நீங்கள் குறுக்கிடும்போதும் பொருந்தும்" என்று குறிப்புரைக்கப்பெற்றது.

1987 XLIV 441





**உறுப்பினரின் உரையில் விளக்கம்—தொடர்ச்சி.**

ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது மற்றொரு உறுப்பினர் அடிக்கடி குறுக்கிட்டபோது கீழ்க்கண்டவாறு குறிப்புரைக்கப்பெற்றது.—

"இந்தக் குறுக்கீடுகள் எல்லாம் அவையின் நடவடிக்கையைச் சேர்ந்தவை அல்ல. இவை எல்லாம் தேவையில்லாத குறுக்கீடுகள். இந்தக் குறுக்கீடுகள் எல்லாம் அவைக் குறிப்பில் இருக்கத் தேவையில்லை."

1987 XXXVI 68

ஓர் உறுப்பினர் பேசியதைப் பற்றி இன்னொரு உறுப்பினர் குறை சொல்லக்கூடாது.

1985 XIII 670

ஓர் உறுப்பினர் பேசுகையில் தேவையில்லாமல் யாரும் குறுக்கிட வேண்டாம். தேவையில்லாத விவகாரங்களைக் கொண்டுவர வேண்டாம்.

1987 XXXIII 334

ஓர் உறுப்பினர் பேசும்போது, அதே கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் விளக்கமளிக்க எழுந்தபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"ஒரு கட்சியில் ஒருவர் பேசும்போது அதே கட்சியைச் சேர்ந்த மற்றவர்களும் எழுந்து நிற்கக்கூடாது. பேசுகின்ற உறுப்பினரே விளக்கம் சொல்லலாம்."

1987 XXXIII 365

ஓர் உறுப்பினர் பேசும்போது அவருக்கு ஏதாவது பதில் சொல்ல வேண்டுமென்று விரும்புகிற உறுப்பினர் அவர் பேசும்போது அல்லது அவரது கட்சியில் உள்ளவர்கள் பேசும்போது அதற்குப் பதில் சொல்லலாம். ஒவ்வொரு வார்த்தைக்கும் உடனுக்குடன் பதில் சொல்லிக்கொண்டு போவது சரியல்ல.

| | | |
|---|---|---|
| 1985 | XII | 529 |
| 1986 | XXIII | 102, 104 |
| 1987 | XXXII | 260 |
| | XXXVII | 587, 850 |

**உறுப்பினரின் உரையில் விளக்கம்—தொடர்ச்சி.**

ஓர் உறுப்பினர் பேசும்போது இன்னொரு உறுப்பினர் பேசுவது முறையல்ல. விதிக்கு அப்பாற்பட்டு அவ்வாறு பேசுவது சரியல்ல.

1987 XXXVI 210

ஓர் உறுப்பினர் பேசும்போது மற்றொரு உறுப்பினர் விளக்கம் கோர முற்பட்டபோது தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார் :

" நீங்கள் பேசும்போது இந்தத் தரப்பிலிருந்து யாராவது இந்த மாதிரி குறுக்கிட்டால் நீங்கள் அனுமதிப்பீர்களா? தவறான தகவலாக இருந்தால் நீங்கள் அதைச் சுட்டிக் காட்டலாம். கிளாரிபிகேஷன் என்பது ஒரு சிறு விளக்கமாக சொல்ல வேண்டும். அதிலே ஒரு பிரசங்கம் வேண்டாம்."

1987 XLIV 206–209

ஓர் உறுப்பினரின் பேச்சில் அமைச்சர் ஒருவர் அடிக்கடி குறுக்கிட்டுப் பேசியதைத் தொடர்ந்து தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

" மாண்புமிகு அமைச்சர்களுக்கு வேண்டுகோள். அடிக்கடி இப்படிக் குறுக்கிட வேண்டாம்.

.. உறுப்பினர்கள் நேரம் குறைகிறதே என்று கேட்கிறார்கள். உறுப்பினர்கள் மத்தியிலே, we are becoming unpopular. ஆகவே, தயவு செய்து குறுக்கிடாதீர்கள்."

1986 XIX 502

ஓர் உறுப்பினருக்கு இன்னொரு உறுப்பினர் வக்காலத்து வாங்கக் கூடாது.

1985 XII 349

குறுக்கீடு ஒரு நியதி முறையோடு இருக்கவேண்டும்.

1987 XXXIV 223

தம்முடைய கருத்து மற்றொரு உறுப்பினரால் திரித்துக் கூறப்பட்டுள்ளதால் தமக்கு அதை விளக்க வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கோரியபோது தலைவர் குறிப்புரைத்ததாவது :

" நீங்கள் சரியாகச் சொல்வது அவைக் குறிப்பில் இருக்கிறது. அவர் சொன்னதைப்பற்றி நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள் ?





**உறுப்பினரின் உரையில் விளக்கம்— தொடர்ச்சி**

" உங்கள் இருவர் கருத்துக்களும் அவைக்குறிப்பில் இருக்கின்றன. இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ளலாம்."

1987 XLI 48

தலைவர் அனுமதி கொடுத்தால்தான் குறுக்கிட்டுப் பேசலாம்.

1985 II 644

தலைவருடைய அனுமதியைப் பெறாமல் பேசியவை அவைக் குறிப்பில் இருக்காது.

1986 XX 535

தன்னுடைய பெயரை ஓர் உறுப்பினர் குறிப்பிட்டதால் தனக்கு விளக்கம் அளிக்க அனுமதி அளிக்கவேண்டும் என்று ஓர் உறுப்பினர் கோரியபோது பேசிய உறுப்பினர் தப்பாக ஒன்றும் சொல்லவில்லை என்று தலைவர் குறிப்புரைத்தார்.

1986 XXIII 776

வார்த்தைக்கு வார்த்தை பதில் சொல்வது என்றால் சரியாக இருக்காது. தவறான தகவலைச் சொன்னால் தான் பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் கேட்க வேண்டும். வேறு காரணம் இருந்தால் அந்த விளக்கத்தை உறுப்பினர் தாம் பேசும்பொழுது சொல்லலாம்.

| | | |
|---|---|---|
| 1985 | IV | 684 |
| 1986 | XV | 425 |
| 1987 | XXXVII | 939 |
| | XLI | 680–681 |

'வேளாண்மை' மானியக் கோரிக்கை மீது உரையாற்றிய ஓர் உறுப்பினரிடம் மற்றொரு உறுப்பினர் ஒரு விளக்கத்தைக் கோரியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

" இதற்கு உறுப்பினர் எப்படி பதில் சொல்ல முடியும்? நீங்கள் டிமாண்டில் பேசும்போது பேசினால் அமைச்சர் பதில் சொல்ல முடியும். அதை நீக்கிவிடலாம்."

1987 XXXVI 244

'ஸ்பெசிபிக்'காக குற்றச்சாட்டு சொல்லப்படாதபோது மற்ற உறுப்பினர்கள் குறுக்கிடக் கூடாது.

1986 XXIII 716

**குறைவெண்—**

அவையில் 'கோரம்' (Quorum) இல்லாமல் இருக்கிறது என்றும் அதைக் கவனிக்கவேண்டுமென்றும் ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

"கோரம் இருக்கிறது. பத்திரிகையில் வரவேண்டும் என்பதற்காக சரியாகப் பார்க்காமல் சொல்லக்கூடாது."

1986 XXVIII 526

**கூட்டுப் பொறுப்பு—**

உள்ளாட்சித்துறை பொறுப்பு வேறொரு அமைச்சருக்கு மாற்றப்பட்ட பிறகு உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட சட்ட முன்வடிவுகளை இன்னொரு அமைச்சர் மொழிவது முறையா என்றும் அது நீதிமன்றத்துக்குப் போனால் என்ன நிலை ஏற்படும் என்றும் ஓர் உறுப்பினர் கேட்டபோது, பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது:

"அவை நடவடிக்கை பற்றி யாரும் கோர்ட்டுக்குப் போக முடியாது. ஒரு அமைச்சருக்காக இன்னொரு அமைச்சர் கூட்டுப் பொறுப்பில் விவாதத்தில் கலந்து கொள்ளலாம்.

In Page 2 of the Assembly Rules-'(n) Member-in-charge of a Bill means-(i) in the case of a Government Bill, any Minister என்று இருக்கிறது. ஆகவே, எந்த அமைச்சர் வேண்டுமானாலும் பதில் சொல்லலாம். இது பெரிய பிரச்சினையும் இல்லை."

1985 III 23, 25

**கொள்கை அறிவிப்புகள்—**

பேரவைக்கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது மின் வெட்டைப் பற்றிய அறிவிப்பு அவைக்குத் தெரிவிக்கப் படாமல் பத்திரிகையாளருக்கு மின் வாரியத் தலைவர் செய்தியாகக் கொடுப்பது முறையா என ஓர் உறுப்பினர் கேட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

"ஏற்கெனவே ஒருமுறை சொல்லியிருக்கிறேன் இந்த மாதிரி அதிகாரிகள் கொடுக்கக்கூடாது என்று. I, strongly condemn the attitude of the Chairman".

1986 XX 691–692



**கொள்கை அறிவிப்புகள்—தொடர்ச்சி**

பேரவை நடந்து கொண்டிருக்கும்போது புது மின்திட்டங்கள் குறித்து அவையில் அறிவிக்காது, செய்தித் தாள்களுக்கு அதிகாரிகள் அறிவிப்பது நல்ல ஜனநாயக மரபா என்று ஓர் உறுப்பினர் கேட்டபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது :

"ஜனநாயகத்திலே அமைச்சர் மூலமாகத்தான் எந்த பாலிசி ஸ்டேட்மெண்டும் வெளியே வருகிறது. அதிகாரிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல. அவர்கள் மாதச் சம்பளம் வாங்கிக்கொண்டு மக்களுக்கு வேலை செய்பவர்கள். மத்திய அரசாங்கத்திடமிருந்து அவர்களுக்கு ஏதாவது கடிதம் வந்தால்கூட அதை அமைச்சர்களிடம்தான் கொடுக்க வேண்டும். அவர்கள் இப்படி பத்திரிகையில் போட்டதை அமைச்சர் சார்பிலும் சபையின் சார்பிலும் கண்டிக்கிறேன்.

The Officers have no business to go to the Press and issue Policy statements. They are bureaucrats and we are democrats."

1985 XI 536–538

**சட்டமன்ற கட்சிகளுக்கு உறுப்பினர்கள் விடுதியில் இட ஒதுக்கீடு—**

ஒரு குறிப்பிட்ட சட்டமன்ற கட்சிக்கு அரசினர் தோட்டத்தில் ஒதுக்கப்பெற்ற இடத்தை பேரவைச் செயலகம் கையகப் படுத்திக் கொண்டதைப்பற்றி ஓர் உறுப்பினர் பிரச்சினையை எழுப்ப முற்பட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

"இன்றைக்கு உங்கள் கட்சியில் 22 பேர்கள் இருக்கிறீர்கள். 22 பேர்களுக்கு தக்கவாறு ஓர் இடத்தை உங்கள் கட்சிக்குக் கொடுத்திருக்கிறேன்.

.. உங்களிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட இடத்தை ஆளும் கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் கொடுக்கவில்லை. புதிதாக பல் சட்டமன்றக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் குழுக்களுக்கு வேண்டுமென்று கேட்டு எடுத்துக்கொண்டேன்.

இது தனிப்பட்ட கட்சிப் பிரச்சினை. எனது அறையில் கூடி தாம் விவாதிக்கலாம். இந்த அவையில் எழுப்பவேண்டாம்."

1985 VI 2–31

சட்டமன்ற நடவடிக்கைகள் குறித்த நீதிமன்றத்தின் அறிவிக்கைகள்—

நீதிமன்றத்திலிருந்து ஏதாவது தாக்கீது வந்தால் அது குறித்து அவையின் நிலை என்ன என்று ஓர் உறுப்பினர் அறிய விரும்பியபோது தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார் :

"பொதுவாக நம்முடைய அவையில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒரு வரைமுறையைச் சொல்கிறேன். நீதிமன்றத்திலிருந்து ஏதாவது இங்கே சம்மன் வருமேயானால் அதை ஏற்றுக்கொள்வது கிடையாது".

1986 XXIII 553-554

பதவி நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர்களின் மேல்முறையீடு தொடர்பாக உச்ச நீதிமன்றம் அனுப்பியுள்ள முன்னறிவிக்கையை ஏற்காதது குறித்து தலைவர் பின்வருமாறு அறிவித்தார் :

"I want to inform the Hon. Members of this House that I have received today by post from the Supreme Court of India a notice in regard to the Appeal filed by certain expelled Members of this House against the judgement of the Madras High Court upholding the expulsion of the Members from the House, informing that the application will be listed before the Supreme Court on 20th July 1987.

As per the Constitutional provisions and the conventions followed in this House, I feel that I cannot be and do not propose to be subjected to the authority of any Court in respect of the proceedings of this House. Hence I am not going to respond to the notice.

A similar notice has also been received by the Secretary, Legislative Assembly. I am directing him not to respond to the notice as the matter in question relates to the proceedings of the House.

However, I request the Hon. Minister for Law to instruct the Advocate-General, Tamil Nadu to apprise the Supreme Court of the correct legal and Constitutional position in the matter."

1987 XLIII 807

சட்ட முன்வடிவுகள்—உரையாற்றும் முறை—

அமைச்சர் உறுதிமொழி நிறைவேற்றப்படாதது பற்றி ஓர் உறுப்பினர் பேசியபோது அஷ்யூரன்ஸ் கமிட்டியிலே பேச வேண்டியதை அவையிலே பேசக் கூடாதென்றும், அது பெயிலியர் ஆகியிருக்கிறது என்றால் அதற்கு எல்லோரும் ரெஸ்பான்சிபிள், எல்லாக் கட்சி உறுப்பினர்களும் அதிலே இருக்கிறார்கள் என்றும் குறிப்புரைக்கப் பெற்றது.

1987 XLIII 542



சட்ட முன்வடிவுகள்—உரையாற்றும் முறை—தொடர்ச்சி

அவைமுன் உள்ள பொருள் குறித்துப் பேச வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1985 | II | 701 |

அறிமுக நிலையில் 'எதிர்க்கிறேன்' என்று வேண்டுமானால் சொல்லலாம். விவாதம் கூடாது. ஆய்வு நிலையில் ஆதரித்தோ, எதிர்த்தோ பேசலாம்.

| | | |
|---|---|---|
| 1987 | XLIII | 585–587 |
| | XLV | 471 |

அறிமுக நிலையில் எதிர்த்தால் சட்டத்திற்கு முரணாக உள்ளது என்று சொல்லலாம். அரசியல் சட்டத்திற்கு முரணாக உள்ளது என்று சொல்லலாம். ஒரே வரியில் சொல்வதுதான் பாராளுமன்ற நடைமுறையில் இருப்பது. ஆய்வு நிலையில் எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம்.

| | | |
|---|---|---|
| 1985 | XII | 71–72 |

அறிமுக நிலையில் விரிவாகப் பேச முடியாது. ஆய்வு நிலையில் விரிவாகப் பேசலாம். பாராளுமன்றத்திலிருக்கிற முறைப்படி whether the introduction of the Bill is ultra vires and unconstitutional என்பதைத்தான் அறிமுக நிலையில் சொல்ல முடியும்.

| | | |
|---|---|---|
| 1985 | XIII | 71–72 |
| 1986 | XVI | 370 |
| | XIX | 77 |

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது விவரமாகப் பேசலாம். அப்போது டெக்னிக்கலாக என்னென்ன பிரச்சினை என்பதையெல்லாம் பேசிக் கொள்ளலாம். இப்போது அறிமுகநிலையில் சுருக்கமாகப் பேசவேண்டும்.

| | | |
|---|---|---|
| 1985 | VI | 358. |

ஆய்வுக்கு வரும்போது விரிவாகப்பேசலாம். அறிமுக நிலையில் எதிர்க்கிறபோது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு மாறுதலாக இருக்கிறதா, முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது என்பதைப் பற்றி மட்டும்தான் சுருக்கமாகப் பேசவேண்டும்.

| | | |
|---|---|---|
| 1985 | XIII | 652–653 |

உறுப்பினர்கள் (Scope) வரம்புக்குள் பேசவேண்டும் 'ஸ்கோப்'பை விட்டு வெளியே போகக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1986 | XV | 82 |
| | XVII | 135, 297 |
| | XXVIII | 205, 206 |
| 1987 | XLIII | 530, 537 |
| | XLV | 487 |

எல்லா உறுப்பினர்களுமே, ஒரு ஒழுங்குமுறைக்கு கட்டுப்பட்டு அவை முன்னுள்ள பொருள் மீதுதான் பேச வேண்டும் என்ற முறையைக் கடைப்பிடித்தால்தான் அவையினுடைய நேரத்தைக் காப்பாற்ற முடியும்.

| | | |
|---|---|---|
| 1985 | VI | 745 |

ஏற்கனவே பேசி அமைச்சர் பதிலுரைத்ததை, திரும்பவும் பேசுவதற்கு விதிப்படி அனுமதிக்க முடியாது.

| | | |
|---|---|---|
| 1986 | XXVIII | 209 |
| 1987 | XLVI | 277 |

ஏற்கனவே பேசியதையே மீண்டும் பேச அனுமதிக்கமுடியாது.

| | | |
|---|---|---|
| 1987 | XLIII | 459 |

ஒரு காம்ப்ரஹென்சிவ் சட்ட முன்வடிவு அண்மையில் விவாதிக்கப்பெற்று நிறைவேற்றப்பட்டிருப்பதால், இதில் விவாதம் தேவையில்லை என்றும், இருப்பினும் குறுகிய நேரம் எடுத்துக்கொண்டு பேசி முடிக்கலாம் என்றும் பேசிய கருத்தைத் திரும்பப் பேசக்கூடாது என்பது ஒரு 'கன்வென்ஷன்' ஆகும் என்றும் குறிப்புரைக்கப் பெற்றது.

| | | |
|---|---|---|
| 1987 | XLIII | 69, 70 |

ஒரு சட்ட முன்வடிவின் அறிமுக நிலையில் பேச விரும்பும் உறுப்பினர் சுருக்கமாக எதிர்ப்பைத் தெரிவித்துவிட வேண்டும். ஆய்வு நிலையில் நிறைய பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

| | | |
|---|---|---|
| 1985 | II | 7, 143, 295 |
| | V | 277, 642 |
| | VI | 357, 358, 359, 362, 363. |
| | XII | 510, 519, 520 |
| 1986 | XV | 238 |
| | XIX | 666 |
| | XXVIII | 93 |
| 1987 | XXXIII | 323 |
| | XLIII | 264 |
| | XLV | 141 |



ஒரு சட்ட முன்வடிவின் அறிமுக நிலையில் பேசும் உறுப்பினர்கள் சட்ட முன்வடிவை "பார்மலாக" எதிர்த்துப் பேசலாம். ஆய்வுக்கு வரும்போதுதான் விளக்கமாகப் பேச முடியும்.

"அறிமுக நிலையில் கேள்விகள் கேட்டால் அமைச்சர் அதற்கு பதில் சொல்ல முடியாது. "டெக்னிகல் அப்ஜெக்ஷன்" இருந்தால் சுருக்கமாகச் சொல்லலாம். "கான்ஸ்டிடியூஷனல் வேலிடிடி" பற்றி சொல்ல விரும்பினால் அதைச் சுருக்கமாகச் சொல்லி 'அப்ஜெக்ஷனை' ரிக்கார்ட் செய்வதோடு முடித்து விட வேண்டும்.

"ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ்" பற்றிய 'கிரிடிசிசம்' இப்போது தேவையில்லை. அவைகளை எதிர்க்கிறேன் என்று சொல்லி முடித்து விடலாம்.

| | | |
|---|---|---|
| 1986 | XXIX | 170–171, 177 |

ஒரு சட்ட முன்வடிவின் மீதான விவாதத்தில் உறுப்பினர் ஒருவர் பேசும்போது குறிப்பிட்ட சில வார்த்தைகள் விளம்பரத்திற்காக சொல்லப்பட்டதாகக் குறிப்புரைக்கப் பெற்று, அவைக்குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றன.

| | | |
|---|---|---|
| 1987 | XLVI | 318–319 |

ஒரு சட்ட முன்வடிவின் மீதான விவாதத்திற்கு அமைச்சர் பதிலளித்துப் பேசியதற்குப் பிறகு, விளக்கம் கோர விரும்பும் உறுப்பினர் சுருக்கமாகத் தன்னுடைய விளக்கத்தைக் கேட்க வேண்டும். விவாதம் ஆக்கிவிடக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1986 | XXVIII | 439, 482 |

ஒரு சட்ட முன்வடிவின் மீதான விவாதத்திற்கு அமைச்சர் பதிலுரைத்த பிறகு, விளக்கம் பெற விரும்பும் உறுப்பினர்கள், "கிளாரிபிகேஷன்" என்று சொல்லி விட்டு திரும்பத் திரும்ப நினைத்ததை எல்லாம் பேசிக்கொண்டிருக்க முடியாது. விவாதத்தில் பங்கு பெற்ற உறுப்பினர்கள் தான் விளக்கம் கேட்க முடியும். இரண்டாவது டிபேட்டை கிரியேட் பண்ண முடியாது.

.. சட்ட முன்வடிவு குறித்து மட்டும் கிளாரிபிகேஷன் கேட்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1986 | XXXI | 201, 202 |

ஒரு சட்ட முன்வடிவின் மீதான விவாதத்திற்குப் பதில் அளிக்க அமைச்சரை அழைத்த பிறகு தங்களுக்குப் பேச அனுமதி அளிக்க வேண்டுமென உறுப்பினர்கள் சிலர் கோரிய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''சட்ட முன்வடிவின் மீது பேசும்போது, அதையொட்டித் தான் பேச முடியும். ஓட்டு மொத்தமாக மானியக் கோரிக்கை மாதிரி பேச முடியாது.''

...சட்ட முன்வடிவு சம்பந்தமான கருத்துக்களை மட்டும் சொல்ல வேண்டும். அதிகம் பேசுவதால்தான் சில விவகாரங்கள் வந்து விடுகின்றன. எனவே, சம்பந்தம் இல்லாமல் பேசியது நீக்கப்படுகிறது.

..Confine yourself to the Objects and Reasons of the Bill. Don't go beyond that.

| 1987 | XLVI | 309,311, 313, 316 |
|---|---|---|

ஒரு சட்ட முன்வடிவின் மீது ஓர் உறுப்பினர் தொடர்ந்து பின்றிப் பேசியதை தலைமை சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்து அவ்வுறுப்பினர் வெளிநடப்பு செய்தபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது;

''நான் இங்கே ஒரு ஆலோசனையாகச் சொல்ல விரும்புகிறேன். பல புதிய உறுப்பினர்கள் எல்லாம் வந்திருக்கிறார்கள். சட்ட முன் வடிவுகளைப் பற்றி பேசுவதற்கு முன்பு, அதைப்பற்றி படித்துவிட்டு வந்து பேச வேண்டும். அப்படிப் பேசினால், விவாதமே உருவாகாது. படிக்காத காரணத்தால் தான் பிரச்சினையே உருவாகிறது. தேவையில்லாத விவாதங்களைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.''

| 1987 | XLVI | 315, 318—319, 320 |
|---|---|---|

ஒரு சட்ட முன்வடிவை எதிர்க்க விரும்பும் உறுப்பினர், 'நான் இதை எதிர்க்கிறேன்' என்று கூறிவிட்டு அமர்ந்து விடவேண்டும். பாராளுமன்றத்தில் அப்படிப்பட்ட நடைமுறைதான் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆய்வு நிலையின் போது விவரமாகப் பேசிக் கொள்ளலாம்.

| 1986 | XVI | 501 |
|---|---|---|





[illegible] கருத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பது கூடாது. சுருக்கமாகப் பேசி முடிக்க வேண்டும்.

| 1986 | XXXVIII | 118—119 |
|---|---|---|
| 1987 | XLV | 303 |

ஓர் உறுப்பினர் பேசிய சில கருத்துக்களைக் குறித்து பின்வருமாறு குறிப்புரைக்கப்பட்டது;

''இதையெல்லாம் மானியக் கோரிக்கையில் நன்றாகப் பேசலாம். சட்ட முன்வடிவைப் பற்றி இவ்வளவு தூரத்திற்கு விவாதிக்க வேண்டுமா? 'மெரிட்' பற்றி பேசுங்கள். யூகத்தின் பேரில் பேச வேண்டாம்.''

| 1985 | VI | 730 |
|---|---|---|

ஓர் உறுப்பினரின் உரை சட்ட முன்வடிவையொட்டி அமையாத போது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்;

''ஹைபோதட்டிகலாக கேட்டுக் கொண்டே போனால் எப்படி சரியாக வரும்? பில்லிலே ஆலோசனை சொல்லுங்கள்.''

| 1987 | XLIII | 779 |
|---|---|---|

குறிப்பிட்ட சட்ட முன்வடிவின் மீதுதான் பேச வேண்டும். தொடர்புடைய துறை சம்பந்தமாக தமிழ்நாட்டிலே உள்ள நிலைமைகளையெல்லாம் பேசக் கூடாது.

| 1985 | III | 66 |
|---|---|---|

சட்டமன்ற (தகவின்மையைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின் மீது ஓர் உறுப்பினர் பேசியபோது மேலவையை நீக்குவது சம்பந்தமாக குறிப்பிட்ட போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்;

''ஹைபோதட்டிக்கலாக கேள்விகளைக் கேட்டுக்கொண்டு போகக் கூடாது. மேலவை நீக்கம் சம்பந்தமாக தீர்மானம் வரும்போது அதைப் பற்றிப் பேசலாம். சட்ட முன்வடிவின் மீது பேசும் போது அதைப் பேசுவது முறையாக இருக்காது.''

| 1986 | XXVIII | 119 |
|---|---|---|

சட்ட முன்வடிவில் அமைச்சர் பதிலளித்த பின்னர் ஓர் உறுப்பினர் விளக்கம் கேட்க முற்பட்ட போது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்;

"உங்களுடைய இடத்திலிருந்து பேசுங்கள்; சுருக்கமாகக் கேளுங்கள்."

| | | |
|---|---|---|
| 1987 | XLVI | 303 |

சட்ட முன்வடிவிற்கு அமைச்சர் பதிலளித்த பின் விளக்கம் பெற அதில் கலந்து கொண்ட உறுப்பினர்களுக்குத் தான் அனுமதி அளிக்கப்படும். அவர்களும் புதுப் பிரச்சினைகளை எழுப்ப முடியாது.

| | | |
|---|---|---|
| 1985 | III | 220 |

சட்ட முன்வடிவிற்கு தொடர்பானதை மட்டும் பேச வேண்டும் என்று குறிப்புரைக்கப் பெற்று, சட்ட முன்வடிவிற்கு சம்பந்தம் இல்லாமல் பேசப்பட்ட பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1986 | XXIX | 307 |

சட்ட முன்வடிவின் அறிமுக நிலையில் அதை எதிர்த்து ஓர் உறுப்பினர் விரிவாகப் பேச முற்பட்ட போது, 'டெலிபரேஷன்ஸ்' வரும்போது பேசலாம் என்றும், I will record your objection என்றும் தலைவர் குறிப்புரைத்தார்.

| | | |
|---|---|---|
| 1987 | XXXII | 87 |
| | XLI | 254 |
| | XLIII | 735, 736 |

சட்ட முன்வடிவின் அறிமுக நிலையில் பேசிய உறுப்பினர் குற்றச்சாட்டு ஒன்றைக் கூறியபோது தலைவர் குறிப்புரைத்ததாவது:

"நீங்கள் குற்றச்சாட்டை சொல்லிக் கொண்டு போனால் அமைச்சர் பதில் சொல்வதற்கு வாய்ப்பு வேண்டும். அறிமுக நிலையில் இதையெல்லாம் சொல்ல முடியாது."

| | | |
|---|---|---|
| 1986 | XIX | 668 |

சட்ட முன்வடிவின் மீதான விவாதத்தில் பங்கு கொள்ளும் உறுப்பினர் தனிப்பட்ட விவகாரங்களைப் பற்றி பேசக் கூடாது என்று குறிப்புரைக்கப் பெற்று அவ்வாறு பேசிய பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றன.

| | | |
|---|---|---|
| 1986 | XXIV | 141 |





சட்ட முன்வடிவின் மீது உரையாற்றுகின்ற உறுப்பினர் வெளியே பேசப்பட்டதை எல்லாம் அவையிலே குறிப்பிடக் கூடாது என்று குறிப்புரைக்கப் பெற்று அவ்வாறு குறிப்பிட்ட பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1986 | XXVIII | 458 |

சட்ட முன்வடிவின் மீது பேச வேண்டும்; மானியத்தில் பேசியதைத் திரும்பப் பேசுவது சரியல்ல.

| | | |
|---|---|---|
| 1987 | XLIII | 805 |

சட்ட முன்வடிவின் மீது பேசும் உறுப்பினர்கள் சட்ட முன்வடிவு சம்பந்தப்பட்ட கருத்துக்களை மட்டும் தெரிவிக்க வேண்டும். மற்ற கருத்துக்களை அந்தந்தத் துறைகளின் மானியங்கள் வருகிறபோதுதான் பேச வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1986 | XXVIII | 195 |
| | XXX | 115, 117, 118, 133, 141 |

சட்ட முன்வடிவின் மீது மட்டும் கருத்துக்களைச் சொல்ல வேண்டும். மற்றவைகளைக் குறித்து உறுப்பினர்கள் எழுதிக் கொடுத்தால் மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுப்பார்.

| | | |
|---|---|---|
| 1987 | XLVI | 337 |

சட்ட முன்வடிவு அறிமுக நிலையில், அச்சட்ட முன்வடிவினை எதிர்த்துப் பேச விரும்பும் உறுப்பினர் அவருடைய மறுப்பை மட்டும் தெரிவிக்க வேண்டும். "I oppose the Bill" என்று மட்டுமே சொல்ல வேண்டும். பேச ஆரம்பித்தால் விவாதம் பெரியதாக ஆகிவிடும். சட்ட முன்வடிவின் ஆய்வு நிலையில் விரிவாகப் பேசலாம்.

| | | |
|---|---|---|
| 1986 | XIX | 669 |
| | XXX | 66—67 |
| 1987 | XLIV | 433—434 |

சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் போது அதைப்பற்றி மட்டும் பேச வேண்டும் என்று குறிப்புரைக்கப்பெற்று "எமர்ஜென்சி" பற்றி பேசப்பட்டவை நீக்கப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1986 | XX | 83 |

சட்ட முன்வடிவு பற்றி மாத்திரம் பேச வேண்டும். மற்ற பிரச்னைகளையெல்லாம் பேச வேண்டாம். தேவையில்லாதவற்றைப் பேச வேண்டாம்.

| | | | |
|---|---|---|---|
| 1985 | III | 104, | 302 |
| 1987 | XXXIII | | 484 |
| | XLIII | | 451 |
| | XLV | | 305 |

சட்ட முன்வடிவைப் பற்றி மட்டும் பேசி முடிக்க வேண்டும். வேறுவிஷயத்திற்கு வெளியே பேசி பதில் சொல்லலாம். ஓர் உறுப்பினருக்கு விளக்கம் சொன்னால் அவரும் விளக்கம் சொல்ல வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1987 | XLIII | 521, | 530, 531 |

நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீது பேசும் போது எல்லா துறைகளையும் பற்றி சேர்த்துப் பேசினால் அது பொது விவாதம் ஆகிவிடும்.

.. Matters of detail are not gone into during the discussion on Appropriation Bill.

| | | |
|---|---|---|
| 1986 | XVII | 380 |

பல்கலைக் கழகங்கள் பற்றிய சட்ட முன்வடிவில் பல்கலைக் கழகம் பற்றிப் பேசலாம். பாலிடெக்னிக்குகளைப் பற்றி பேசுவது சரியாக இருக்காது.

| | | |
|---|---|---|
| 1985 | III | 101 |

பில்லின் மீது பேசும்போது அதனுடைய 'Objects and reasons'-ஐப் படித்துவிட்டுப் பேச வேண்டும். பில்லுக்குச் சம்பந்தம் இல்லாமல் பேசுவதற்கெல்லாம் அமைச்சர் பதில் சொல்ல முடியாது.

| | | |
|---|---|---|
| 1986 | XXXII | 230 |

மானியத்தின் மீது பேசுவது போல பேசக் கூடாது. சட்ட முன்வடிவையொட்டித்தான் பேச வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1986 | XXXI | 207 |
| 1987 | XL | 436 |

வீடியோ திருட்டு தடுப்பு குறித்த சட்ட முன்வடிவின்மீது ஓர் உறுப்பினர் பேசியபோது, தொலைக்காட்சி பற்றிப் பேசிய பகுதி நீக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1987 | XLVI | 328 |





வேறு விவகாரங்கள் பற்றிப் பேசினால் பதில் சொல்ல வாய்ப்பில்லை. எனவே, அவைமுன் உள்ளவற்றை ஒட்டி மட்டும் பேசவேண்டும்.

| | | |
|---|---|---|
| 1985 | III | 106 |

A Member should not go into the merits of the Bill at the introduction stage.

| | | | |
|---|---|---|---|
| 1985 | XII | 512, | 513 |

When an amending Bill is discussed, the debate should be within the scope of the amendment. Practical difficulties, if any, should be referred to only during the discussion on Voting on Demands for Grants.

| | | |
|---|---|---|
| 1987 | XLVI | 318 |

சட்ட முன்வடிவு—நடைமுறைகள்—

ஆய்வு நிலை வரும்போதுதான் 'Ordinance disapproval motion' எடுத்துக் கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| 1985 | II | 145 |

உள்ளாட்சித்துறை பொறுப்பு வேறொரு அமைச்சருக்கு மாற்றப்பட்ட பிறகு உள்ளாட்சித்துறை சம்பந்தப்பட்ட சட்ட முன்வடிவுகளை இன்னொரு அமைச்சர் மொழிவது முறையா என்றும் அது நீதிமன்றத்துக்குப்போனால என்ன நிலை ஏற்படும் என்றும் ஓர் உறுப்பினர் கேட்டபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது:

" அவை நடவடிக்கைபற்றி யாரும் கோர்ட்டுக்குப் போக முடியாது. ஒரு அமைச்சருக்காக இன்னொரு அமைச்சர் கூட்டுப்பொறுப்பில் விவாதத்தில் கலந்து கொள்ளலாம்."

| | | |
|---|---|---|
| 1985 | III | 23 |

ஒரு சட்ட முன்வடிவின் மீது தனக்கு பேச வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று ஓர் உறுப்பினர் கோரிய போது தலைவர் குறிப்புரைத்ததாவது:

"You have walked out of the House. You have no opportunity now. நான் கூப்பிடும்போது நீங்கள் சீட்டில் இல்லை. டிஸ்கஷன் முடிந்து போய்விட்டது. திடீரென்று உங்கள் வசதிக்கு நான் பேச கூப்பிட முடியாது."

| | | |
|---|---|---|
| 1987 | XLIII | 901 |

ஒரு சட்ட முன்வடிவின் மீது பேசும்போதே அதேபோன்ற நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்டுள்ள எல்லா சட்ட முன்வடிவுகளின் மீதும் உறுப்பினர்கள் பேசிவிடலாம்.

1986 XVI 550

ஒரு சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்படும்போது, அறிமுக நிலையிலேயே அதை எதிர்த்துப் பேச வேண்டும் என்று சில உறுப்பினர்கள் கோரிய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"Your objcctions are rccordec. இச்சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் போது பேசிக் கொள்ளலாம்."

1986 XXVI 194—195

ஒரு சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானம் கொண்டு வரப் பெறுவதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக உறுப்பினர்கள் அனைவருக்கும் அச்சட்ட முன்வடிவின் பிரதிகள் கிடைக்கப் பெற வேண்டும். அவ்வாறு கிடைக்கப்பெறாவிடில் உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கலாம். இருப்பினும் தலைவர் சட்ட முன்வடிவின் முக்கியத்துவத்தைக் கருதி அத் தீர்மானத்தைக் கொண்டு வர அனுமதித்தால், தீர்மானம் மொழியப் பெறலாம்.

1985 XIII 99

ஓர் அமைச்சருக்காக இன்னோர் அமைச்சர் கூட்டுப் பொறுப்பில் விவாதத்தில் கலந்து கொள்ளலாம். பேரவை விதி 2-ன்படி "Member in charge of a Bill means in the case of a Government Bill, any Minister" என்பதுதான் நிலை. ஆகவே, எந்த அமைச்சர் வேண்டுமானாலும் பதில் சொல்லலாம். இது பெரிய பிரச்சினையும் அல்ல. சட்டப் பிரச்சினையும் அல்ல.

1985 III 25

ஓர் உறுப்பினர் தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்ட முன்வடிவின் மீது பேசும்போது, அச்சட்ட முன்வடிவில் தலைவருக்குள்ள அதிகாரம் பற்றிக் குறிப்பிட்டு, அது தலைவர் பதவியை கான்ட்ரவர்சிக்கு உள்ளாக்குகிறது என்று கூறியபோது, தலைவர் அளித்த தீர்ப்புரைகளின் தொகுப்பு வருமாறு :

"சபை உறுப்பினர்களைப்பற்றி யாராவது எழுதினாலோ, பேசினாலோ, இல்லாவிட்டால் படமெடுத்தாலோ அதிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக வரக்கூடிய சட்டம்,





உங்களையும் சேர்த்துத்தான். தனிப்பட்ட எந்தவொரு எம்.எல்.ஏ.யையும் பாதுகாப்பதற்கு அல்ல. அரசியல் சட்டத்தில், நீதிமன்றத்தில் ஏதாவது ஒரு அவ்தூறு ஏற்பட்டிருக்குமேயானால் அவர்களைப் பாதுகாப்பதற்கு அது எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், அன்றைக்கு இப்படி படம் எடுப்பார்கள் என்று அவர்கள் நினைக்கவில்லை. ஆகவே, இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் இந்தச் சட்டம் தேவைதான்.

.. Do you want a Certificate from a film producer?

.. It is very disgraceful.

.. M.L.A.s and Ministers are all popular among the public. Film producer, by maxing some propaganda against popular men, is getting money. He is not doing any social service."

1987 XLIII 893

ஓர் உறுப்பினர் தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்ட முன்வடிவின் மீது பேசும்போது, சில திரைப்படங்களில் ஆட்சேபகரமான காட்சிகள் இடம் பெற்றிருப்பதாகக் குறிப்பிட்டபோது தலைவர் அளித்த தீர்ப்புரைகளின் தொகுப்பு வருமாறு :

"எல்லாவற்றையும் எழுதிக் கொடுங்கள். நடவடிக்கை எந்த வழியிலே எடுக்கலாமோ, அந்த வழியிலே எடுக்கலாம். இந்தச் சட்ட முன்வடிவு இல்லாமலேயே தீர்மானம் போட்டு எடுக்கலாம். . இந்த அவைக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது.

.. "தண்ணீர் தண்ணீர்" என்ற படம் எடுத்தவர் போய், ஊருக்குத் தண்ணீர் கொடுத்து இருக்க வேண்டும், சம்பாதித்த பணத்திலிருந்து. படத்தை எடுத்தவர் பொறுப்பானவர் அல்ல. பொறுப்பானவர் படத்தை எடுக்கவில்லை. எங்கேயோ ஒரு சிறிய தவறு நேருமானால் அதைப் பெரிதுபடுத்தி நாடு முழுவதும் காட்டுவதா பொறுப்பு? ஏதோ ஒரு வீட்டிலே சிறிய தவறு ஏற்படுமானால் அந்தச் சிறிய தவறை நாடு முழுவதும் காட்டுவதா ஒரு ஜனநாயகம்? ஒரு சிறிய தவறை "ஜெனரலைஸ்" செய்யக் கூடாது. . You should not propagate the evil. You should rectify the evil. . You should avoid the evil."

1987 XLIII 901

ஓர் உறுப்பினர் தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்ட முன்வடிவின் மீது பேசும்போது, தவறான திரைப்படங்களை எடுப்பார்களேயானால், அதற்குத் தண

டனை வழங்குவது பற்றி உரிமைக் குழுதான் ஆய்ந்து முடிவு செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டபோது, பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

"The House is more than the Privilege Committee. They are only about 12 Members. Here we are 224 Members.

1987 XLIII 894

சட்டமுன்வடிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டால் ஆய்வு செய்வதற்கு முன் ஐந்து நாட்கள் தவணை கொடுக்க வேண்டுமென்ற முறையைக் கடைப்பிடிக்காமல் மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வது முறையா என்று ஓர் உறுப்பினர் வினவியபோது அதைப்பற்றி அலுவல் ஆய்வுக் குழுவில் விவாதிக்கப்பட்டது என்றும், அங்கே விவாதித்த பிறகு அவையிலே விவாதிப்பது முறையல்ல என்றும் குறிப்புரைக்கப் பெற்றது.

1987 XLV 445

சட்ட முன்வடிவின்போது 'இனிஷியேட்' செய்து பேசுகிறவர் எதிர்க்கட்சியைச் சார்ந்தவராகவும் இருக்கலாம், ஆளும் கட்சியைச் சார்ந்தவராகவும் இருக்கலாம்.

1986 XVII 131

சட்ட முன்வடிவின் மீது பேசும்போது கட்சி சார்பு கிடையாது. யார் வேண்டுமானாலும் பேசலாம்.

1987 XLIII 791

தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின் மீதான விவாதத்திற்கு அமைச்சரின் பதில் முடிந்தபோது பல உறுப்பினர்கள் கூச்சல் குழப்பம் விளைவித்தபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது :

"நீங்களே அவையினுடைய உரிமையை 'லெட் டவுன்' செய்தால் எப்படி? அப்படிச் செய்ய வேண்டாம். 224 உறுப்பினர்களுக்கும் நல்ல மரியாதை வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டம் வந்திருக்கிறது. வேறு யாருக்கும் அல்ல. படம் எடுப்பவர்கள் உங்களைப் பற்றி சிந்திக்கவா செய்கிறார்கள்? அமைச்சர்களைப் பார்க்கவா செய்கிறார்கள்? கிடையாதே. பணம் தான் குறிக்கோள். பிரபலமானவர்களைப் பற்றி படம் எடுத்தால்தான் படம் ஓடும். பிரபலமானவர்களைப் பற்றி குறை சொன்னால்தான் ஓடும்."

1987 XLIII 903





வணிக வரித்துறை சம்பந்தப்பட்ட எட்டு சட்ட முன்வடிவுகளை ஒன்றாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். விவாதத்தில் பங்கு கொள்ளும் உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக இந்த எட்டு சட்ட முன்வடிவுகள் மீதும் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம். வாக்கெடுப்பின் போது ஒவ்வொரு சட்ட முன்வடிவாக நிறைவேற்றப் பெறலாம்.

1986 XXVIII 608, 629–636

If it is ultra vires Fundamental Rights, leave can be refused. If a Bill is constitutionally valid, it can be introduced. If it is not ultra vires, the Chair cannot pull up the Government.

1986 XXIX 172

## தகவல் கோரல் —

### அமைச்சர்களின் இலாக்கா மாற்றம் —

அமைச்சர்களின் இலாக்கா மாற்றம் குறித்து வந்துள்ள தகவல்களைச் சுட்டிக்காட்டி ஓர் உறுப்பினர் விளக்கம் கோரியபோது, அது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சரே ஒரு அறிக்கை அளிக்க இருப்பதாகத் தலைவர் குறிப்புரைத்தார்.

1986 XXI 104

### அரசு நிகழ்ச்சிகளுக்கு உறுப்பினர்களை அழைத்தல்—

அந்தந்தத் தொகுதிகளில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு உறுப்பினர்கள் அழைக்கப்பட வேண்டும் என்று ஏற்கனவே தலைவர் ஆணையிட்டிருந்தும் கூட ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியின் அழைப்புகளில் உறுப்பினரின் பெயர் இடம் பெறாமல் இருப்பது குறித்து ஓர் உறுப்பினர் தலைவரின் கவனத்தை ஈர்த்த போது, அளிக்கப் பெற்ற குறிப்புரைகளின் தொகுப்பு வருமாறு :

"ஏற்கனவே அதுபற்றி சொல்லியாகிவிட்டது. இனிமேல் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்தத் தொகுதியில் விழா நடக்கும்போது அழைக்கப்பட வேண்டும். அவர்களுடைய பெயரும் போட வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். அப்படிப் போடாமல் இருந்திருந்தால் அதிகாரிகள் தவறு செய்திருப்பார்கள். I am directing the Government to see that the members are invited for such functions in future.

"..என்னால் ஆன அளவிற்கு இன்ஸ்டிரக்‌ஷன் கொடுத்துவிட்டேன். உரிமைப் பிரச்சினையாக கொண்டுவர விரும்பினால் கொண்டு வரலாம்.

..அது மத்திய அரசு பொது நிறுவனமாக இருந்தாலும், இந்த மாநிலத்தில் உள்ள எந்த அரசு நிறுவனமாக இருந்தாலும், நிகழ்ச்சிகள் நடத்தினால் நம்முடைய உறுப்பினர்களை அழைக்க வேண்டும்.

..நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், யூனியன் சேர்மன், முனிசிபல் சேர்மன் ஆகிய இவர்களுக்குள் ஒரு கோ-ஆர்டினேசன் இருந்தால் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வராது. சாதாரணமாக என்னுடைய தொகுதியில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளில் பஞ்சாயத்து பிரசிடென்டிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரையில் எல்லோரும் பங்கு பெறுகிறார்கள். எனவே, இப்படி இருந்தால் நல்லது. நான் தான் எல்லோருக்கும் உத்தரவாதம் கொடுத்து இருக்கிறேன். அதற்குப் பிறகு இம்மாதிரி நடக்காது. அப்படி நடந்தால் அதற்கு என்ன வழி என்பதைச் சொல்லுங்கள். அதை நான் கண்டிப்பாக அமல்படுத்துகிறேன்."

**1986 XX 510–514**

அரசு நிகழ்ச்சிகளுக்கு உறுப்பினர்கள் அழைக்கப்படுவதில் ஏற்பட்ட தாமதம் குறித்து ஓர் உறுப்பினர் சுட்டிக் காட்டியபோது, 'இது அவை நடவடிக்கை அல்ல, இது சம்பந்தமாக அமைச்சரிடம் வெளியே கேட்டுக் கொள்ளுங்கள்' என்று குறிப்புரைக்கப்பெற்றது.

**1986 XXXI 46**

அரசு விழாக்களுக்கான அழைப்பிதழ்களில் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களின் பெயர்களைக் குறிப்பிடாதது குறித்து ஓர் உறுப்பினர் சுட்டிக்காட்டிய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"சம்பந்தப்பட்ட அழைப்பிதழை என்னிடம் கொடுங்கள். அதை அவை முன்னவர் அவர்களிடம் கொடுத்து சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரிக்கச் சொல்லுகிறேன்."

**1986 XXX 53–54**







குடியரசுதின விழா மற்றும் இதர அரசு நிகழ்ச்சிகளில் எதிர்க்கட்சித் தலைவருக்கு உரிய இடம் வழங்கப் பெறாதது குறித்து ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"இதற்கும் அவைக்கும் சம்பந்தம் இல்லை ; நானே அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்து பேசுகிறேன்."

**1986 XVII 38–39**

தன்னுடைய தொகுதியில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சிக்குத் தன்னை அழைக்கவில்லையென ஓர் உறுப்பினர் சுட்டிக்காட்டியபோது, தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார் :

"என்னுடைய அறைக்கு வாருங்கள். அது என்னுடைய வேலை இல்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர்களுக்காக நான் தீர்த்து வைக்கிறேன்."

**1986 XXXI 43**

திருவொற்றியூரில் மத்திய அரசால் நடத்தப்படுகிற முதலமைச்சர் கலந்துகொள்கிற விழாவிற்கு அந்தத் தொகுதி உறுப்பினர் அழைக்கப்படவில்லை என்பது குறித்து தகவல் கோரப்பட்டபோது பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது :

"பார்லிமென்டில் கேட்க வேண்டும். அதிலே எனக்கு ஜூரிஸ்டிக்‌ஷன் இல்லை."

**1986 XVIII 623**

தொகுதிகளில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளுக்கு அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களை அழைப்பதில்லை என்று ஓர் உறுப்பினர் தெரிவித்தபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'தொகுதிகளில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளுக்கு அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களை அழைக்கவேண்டுமென்று நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். இந்த நடைமுறையைப் பின்பற்றினால் நல்லது என்று நினைக்கிறேன்.'

**1986 XX 222–223**

**அறிக்கைகள்—**

தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் ஆண்டறிக்கை அவைமுன் கால தாமதமாக வைக்கப்பெற்றது குறித்து ஓர் உறுப்பினர் எழுப்பியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"விவாதத்திற்கு நோட்டீஸ் கொடுங்கள். விவாதிக்கலாம். "Papers laid on the Table of the House" பற்றி ஆய்வு செய்ய ஒரு கமிட்டி போட்டிருக்கிறோம். That committee will definitely look into it. அரசியல் சட்டத்தின் Article 323 (2) says that it shall be the duty of a State Commission to present annually to the Governor of the State a report as to the work done by the Commission. இதை 2 வருடம் தாமதமாகக் கொடுத்து இருக்கிறார்கள். They have not followed the letter of the Constitution. ஒவ்வொரு ஆண்டும் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. இனிமேல் சரியாகக் கொடுக்க வேண்டும் என்று அவையின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன். You will be in the Committee and pull them up."

1986 XXVII 223

தமிழக அரசிடம் சர்க்காரியா கமிஷன் அளித்த அறிக்கை அவைமுன் வைக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தி, அரசு தரப்பில் அதற்குப் பதில் தரப்பட வேண்டுமென்று தலைவர் உத்திரவிட வேண்டும் என சில உறுப்பினர்கள் கோரிய போது அளிக்கப்பெற்ற குறிப்புரைகளின் தொகுப்பு வருமாறு :

"சபாநாயகருக்கு இத்தகைய உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்று தாங்கள் சொல்கிற கருத்தை நானும் கொண்டிருக்கிறேன். ஆனால் நடைமுறையில் சபாநாயகர் அமைச்சர்களை பதில் சொல்ல வேண்டுமென்று வற்புறுத்த முடியாது.

..அதிகாரம் இல்லையென்று நான் சொல்லவில்லை. I cannot compel.... புரொசிஜர்படி சபையை நடத்துவதுதான் என்னுடைய கடமை. அறிக்கையை அவைமுன் வைக்க வேண்டிய பொறுப்பு, அதுபற்றி இங்கே சொல்வது, சொல்லாமல் இருப்பது என்பதெல்லாம், It is upto the Government. I cannot compel...

... My function is to conduct the proceedings according to the rules. It is part of the administration. அரசாங்கத்திலேயுள்ள எல்லா விவரங்களையும் தெரிந்து கொள்ள





**அறிக்கைகள்— தொடர்ச்சி**

விரும்பினால் அதை இந்த அவையிலே உரிமையாகச் சொல்ல முடியாது. வேறு ஏதாவது முன் மாதிரி இருந்தால் சொல்லுங்கள், I will definitely follow, I will immediately order them to place it....எனக்கு உதவி செய்வதற்காகச் சொல்கிறேன். I want a precedent. யாராவது ஒரு ஸ்பீக்கர் அந்த மாதிரி அரசாங்கத்திற்கு ஒரு உத்தரவு போட்டிருந்தால் சொல்லுங்கள்."

1985 XV 63–65

பொது நிறுவனங்கள் குறித்த காலத்தில் தங்களது நிறுவன ஆண்டுக் கணக்கை அளிக்காது தாமதமாக அவையில் வைத்திருப்பது பற்றி மானியக் கோரிக்கைகள் வரும் போது பேசலாம்.

1985 XII 52

**உறுப்பினர்கள் அமரும் இடங்கள்—**

தனது பக்கத்து இருக்கை "வெற்றிடம்" என்று போடப் பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி ஓர் உறுப்பினர் விளக்கம் கோரிய போது, பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது:

"அந்த உறுப்பினரை முதலமைச்சர் மீண்டும் ஆளுங் கட்சியிலே சேர்த்து விட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகையால் அவருக்கு வேறு இடத்தில் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது."

1987 XLIII 767

**உறுப்பினர்களுக்கான வசதிகள்—**

உறுப்பினர்களின் அறைகளில் வைக்கப்பட்டுள்ள தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டு இருப்பதைச் சுட்டிக் காட்டி ஓர் உறுப்பினர் பேச முற்பட்ட போது தலைவர் அளித்த குறிப்புரையாவது :

"இது குறித்து நீங்கள் ஏற்கெனவே என்னிடம் கேட்டீர்கள். நான் பதில் சொல்லியிருக்கிறேன். இது பற்றி தெரிந்து கொண்டு மீண்டும் இங்கே பேசுவது முறையல்ல. அறைக்கு வந்தால் பேசலாம்."

1987 XXXIV 557–558

தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்களுக்கான வசதிகள்—தொடர்ச்சி

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் மின் தடை ஏற்பட்டுள்ளது பற்றி ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''என் அதிகாரத்திற்குள் வருகிற பிரச்சினை இது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் என்னுடைய அறைக்கு வந்தால் அது பற்றிப் பேசிக்கொள்ளலாம்.''

1986 XVI 213–214

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாநகராட்சியில் அளிக்கப்பட வேண்டிய வசதிகள் குறித்து ஓர் உறுப்பினர் தகவல் கோரியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

''என்றைக்கு எம். எல். ஏ. என்று ஆகிவிட்டோமோ அன்றைக்கே அந்த உள்ளாட்சி நிறுவனங்களிடத்திலே சென்று உரிய உரிமைகளை எடுத்துக்கொள்ளலாம்.

...It is an inherent power. The moment you are elected as M.L.A., you will be provided with a seat and provided with every thing.

..அதுபற்றி கேட்பதுகூட ஏதோ சலுகை கேட்பது போல் இருக்கிறது. எனவே அவ்வாறு கேட்க வேண்டியதில்லை. உங்களுக்கு அந்த உரிமை இருக்கிறது. எனவே அதிலே ''கிளாரிபிகேஷன்'' கேட்க வேண்டிய அவசியமே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முனிசிபாலிட்டியாக இருந்தாலும், கார்ப்பரேஷனாக இருந்தாலும் நீங்கள் அரசாங்கத்தினுடைய அனுமதியோடு போய்த்தான் அறை கொடுங்கள் என்று கேட்க வேண்டியதில்லை. You will be provided with that. You will be accommodated.''

1986 XX 507–510

சட்டமன்ற விடுதியிலே மின் தடை ஏற்பட்டிருப்பதை ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''நாட்டு மக்களுக்கு எந்தக் குறைபாடு இருக்கிறதோ, நிச்சயமாக அந்தக் குறைபாடு உங்களுக்கும் வரலாம் ; அதைப் பற்றி யோசியுங்கள். உங்களைப் பற்றி யோசிக்காதீர்கள். மக்களைப் பற்றிப் பேசுங்கள்.''

1987 XXXII 342



தகவல் கோரல்— தொடர்ச்சி

வெளிநாட்டுப் பிரச்சினைகள்—

அமெரிக்க வல்லரசு லிபியா நாட்டைத் தாக்கியதற்கு இந்திய பாராளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதைப் போன்று இந்த அவையிலும் நிறைவேற்றப்பட வேண்டும் என்று சில உறுப்பினர்கள் கூறிய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''நம்முடைய அவையிலே இதுபற்றிப் பேசவேண்டாம். பாராளுமன்றத்தில் 'ரெசலூஷன்' பாஸ் செய்தாலே நாம் செய்ததாகத்தான் அர்த்தம்.''

1986 XXII 765

இலங்கைத்தமிழர் பிரச்சினை குறித்து பெங்களூரில் நடந்த பேச்சு வார்த்தைகளைக் குறித்து அமைச்சர் கூறியதற்குப் பிறகு மேலும் சில விளக்கங்களை உறுப்பினர்கள் கோரியபோது தலைவர் பின் வருமாறு குறிப்புரைத்தார்:

''This is connected with external affairs. The talks are in progress and it should not be spoiled.

.. நாம் அதைப்பற்றி இங்கே பேசி நல்லதை செய்ய முடியாவிட்டாலும்கூட கெட்டதையாவது செய்யாமல் இருப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் தகவல் சொல்லி விட்டார்கள். அதற்கு மேலும் பேசுவது சரியல்ல.''

1986 XXX 53

தகவல் கோரல்—ஏனைய பிரச்சினைகள்—

இரண்டு உறுப்பினர்கள் கட்சி மாறியிருப்பது பற்றி ஓர் உறுப்பினர் திடீரென்று எழுப்பியபோது தலைவர் பின் வருமாறு குறிப்புரைத்தார் :

''தலைவருக்கு அதுபற்றித் தகவல் வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.''

1987 XXXV 422

கரும்பு விவசாயிகள் பிரச்சினை குறித்து ஓர் உறுப்பினர் தகவல் கோரியபோது, பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது :

''எதற்கும் ஒரு வரையறையை வைத்துக்கொள்ள வேண்டும். நேற்று அரைமணி நேரம் இதைப்பற்றி பேசி இருக்கிறோம். தமிழ்நாட்டில் 5 கோடி மக்கள் இருக்கிறார்கள், அவர்களையும் நினைத்துக் கொள்ள

வேண்டும். இங்கேயுள்ள கரும்பு விவசாயிகளை மட்டும் நினைக்கிறீர்கள். இந்திய விவசாயிகளையும் மனதில் வையுங்கள். அரை மணி நேரம் பேசியாகி விட்டது.''

1986 XXIII 554

தமிழக நிர்வாகம் பற்றி குற்றஞ்சாட்டி பத்திரிகையில் வெளி வந்த செய்தியைச் சுட்டிக் காட்டி தகவல் கோரிய பொழுது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''இதெல்லாம் தேவையில்லாத விவகாரம். பத்திரிகையிலே வந்ததை வைத்துப் பேச வேண்டாம். அது முறையல்ல. அது அவைக் குறிப்பில் இருக்கத் தேவையில்லை. தமிழ் நாடுதான் நல்ல அட்மினிஸ்ட்ரேஷன் நடத்துகிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் பெஸ்ட் அட்மினிஸ்ட்ரேஷன், அசெம்பிளி உட்பட. உலகத்திலேயே தமிழ்நாடு அசெம்பிளிதான் சிறந்த அசெம்பிளி. வெளி நாட்டில் எல்லாம் போய்ப் பார்த்துவிட்டுத்தான் சொல்லுகிறேன். ஹாலண்டு, ஹவுஸ் ஆப் காமன்ஸ் போன்றவைகளைப் பார்த்துத்தான் சொல்கிறேன். உலகத்திலேயே சிறந்தவர்கள்தான் இங்கேயிருக்கிறார்கள். நல்ல பண்புள்ளவர்கள், அன்புள்ளவர்கள், எதையும் மறக்கக் கூடியவர்கள்தான் இருக்கிறார்கள். வெளி நாட்டு எம்.எல்.ஏ., எம்.பி.-க்களைப் பார்த்தபோது தான் இங்கே இருக்கிறவர்கள் சிறந்த நண்பர்கள் என்று தெரிந்துகொள்ள முடிந்தது. நம் நாட்டைப் போல் சிறந்த நாடு உலகத்திலேயே கிடையாது. We are the best in everything.''

1987 XXXVII 72

தலைவருக்கென்று தனி அதிகாரம் இல்லை; பேரவைக்கு உள்ள அதிகாரம்தான் தலைவருக்கு உண்டு என்று ஓர் உறுப்பினர் குறிப்பிட்டதை இன்னோர் உறுப்பினர் சுட்டிக் காட்டி, அவை உறுப்பினர்களுக்கு இருக்கக் கூடிய உரிமை போக இந்த அவையில் உள்ள உறுப்பினர்கள் அத்தனை பேர்களுடைய உரிமையையும் காப்பாற்றக் கூடிய உரிமையும் தலைவருக்கு உண்டு என்றும், அதைத் தலைவர் நிலைநாட்ட வேண்டுமென்றும் கோரியபோது தலைவர் பின் வருமாறு குறிப்புரைத்தார் :

''ஒருக்காலும் அது குறையாது, குறையவும் விடமாட்டேன். உங்கள் எல்லோருடைய ஆதரவும், ஒத்துழைப்பும் இருக்கும்போது, நிச்சயமாக அந்த உரிமை பாதுகாக்கப்படும்.''

1986 XV 69



நகர்ப்புற நிலவரிச் சட்டத்திற்குத் திருத்தம் கொடுத்திருப்பது குறித்து ஓர் உறுப்பினர் தகவல் கோரியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

'' ஒரு சட்டப் பிரச்சினை பற்றி ஸீரோ ஹவரில் எழுப்பினால் பதில் சொல்ல இயலாது. தலைவருடைய அறைக்கு வந்து சொன்னால் பிரச்சினை முறையானதாக இருந்தால் அதை எப்படி எழுப்புவது என்பதுபற்றிப் பரிசீலிக்கலாம்.''

1985 XVI 361

பத்தாம் வகுப்பு வினாத்தாள் வெளியானது பற்றி ஓர் உறுப்பினர் தகவல் கோரும் முகத்தான் விளக்கமாகப் பேச முற்பட்டபோது, தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார் :

'' வெளியாகிவிட்ட அந்தச் செய்தியை முழுமையாக இங்கே சொல்ல வேண்டாம். பொது நலன் கருதி அது குறித்து எழுப்பியதோடு விட்டு விடலாம்.''

1987 XXXIV 413

பாரதியார் பல்கலைக் கழக ஆட்சிமன்றக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள இடங்களை நிரப்ப வேண்டுமென்று எட்டாவது சட்டமன்றம் கூடி ஓராண்டு ஆன பிறகு காலம் கடந்து கோருவது சரியா என ஓர் உறுப்பினர் கேட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' இனி இந்தமாதிரி காலியிடங்கள் வருவதற்கு முன்னாலே, 6 மாதத்திற்கு முன்னாலே சட்டப் பேரவைச் செயலகத்திற்கு சம்பந்தப்பட்ட துறையினர் தெரிவிக்க வேண்டும்''.

1985 XVI 495–496

பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை திருப்பி அழைப்பது ' Right to recall ' சம்பந்தமான சட்டத்தைக் கொண்டுவர அரசு முயற்சிக்குமா என்று ஓர் உறுப்பினர் கோரியதற்கு அமைச்சர் விளக்கம் அளித்த பிறகு தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' பதில் பார்லிமெண்டிலே கேட்க வேண்டும். நான் அரசியல் சட்டத்தைத் திருத்த முடியாது. பாராளுமன்ற உறுப்பினர்களை, சட்டமன்ற உறுப்பினர்களைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமானால், திருப்பி அழைப்பது '' Right to recall '' என்ற முறையில் செய்ய, அரசியல் சட்டம் பாராளுமன்றத்திலே திருத்தப்பட்ட பிறகு தான் அமலுக்கு வரும். அதை நாம் இங்கே இருந்து

கொண்டு ஒன்றும் செய்வதற்கில்லை, அதை அங்கே கொண்டு வரச் சொல்லுங்கள். உங்கள் கட்சி சார்பிலே பேசி, கொண்டு வரச் சொல்லுங்கள். ராடிபிகேஷன் வரட்டும், பார்த்துக் கொள்வோம்.''

1987 XLI 548–549

பேரவைக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களைக் கூட்டுவதால் உறுப்பினர்கள் அவற்றில் பங்கு கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது என்பதை ஓர் உறுப்பினர் சுட்டிக்காட்டிய போது தலைவர் குறிப்புரைத்ததாவது :

'' அவை நடக்கும்போது மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங் களை நடத்துவது நல்லதல்ல. அவ்வாறு கூட்டம் நடத்து வதைத் தவிர்க்க வேண்டும் ''.

1986 XIX 649

முன் வரிசையில் உள்ள ஓர் உறுப்பினர் வேறு ஒரு கட்சியில் இணைந்துவிட்டதாக வந்த செய்தியைக் குறித்து ஓர் உறுப்பினர் தகவல் கோரியபோது, '' தலைவருக்கு எழுத்து மூலமாக தகவல் வரவில்லை '' என்று குறிப்புரைக்கப் பெற்றது.

1987 XXXVI 36

லால்குடி தொகுதி உறுப்பினர் திரு. வெங்கடாசலம் அவர் களின் தேர்தல் வழக்கு குறித்து உச்ச நீதிமன்றம் அளித்து உள்ள தீர்ப்பு பற்றி ஓர் உறுப்பினர் கேட்டபோது அது குறித்து தகவல் ஏதும் வரவில்லை என்று குறிப்புரைக்கப் பெற்றது.

1986 XXVI 175–176

வைத்தியக் கல்லூரி மாணவர்கள் சேர்ப்பில், அகில இந்திய அளவில் இடம் ஒதுக்கவேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தெரிவித்தது என்றும், மாநில அரசாங்கங்கள் இந்தக் கருத்திற்கு எதிர்ப்பு இருந்தால் தெரிவிக்கலாம் என்றும் கூறி கால அவகாசம் கொடுத்திருக்கிறது என்றும், இது குறித்து மாநில அரசு என்ன ' அபிடவிட் ' தாக்கல் செய் திருக்கின்றது என்றும் ஓர் உறுப்பினர் கோரியபோது, அது குறித்து அமைச்சர் விளக்கம் அளித்த பிறகு, 'தலைவர் 1983 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பினை மேற்கோள் காட்டினார் :

"... This Court, that is, the Supreme Court, is not a third chamber of the Legislature. It has no such extra-territo-



rial ambitions and it does not aspire to do the job of 'out-riders', to use an expression of Lord Devlin. It is simply the highest Court of Law and justice in a country governed by a written Constitution, which is its primary and exclusive function to interpret. The care which we must take is that while interpreting the laws and the Constitution, we ought not to be swayed by passing passions or by populist sentiments. We must do our duty by the Constitution, unaffected by extraneous considerations and guided solely by the obligation to the fair and just, almost to a fault. (A.I.R. 1983 - Supreme Court-Paragraph 36—Page 1174) இன்று தலைமை நீதி பதியாக இருப்பவர் அந்தத் தீர்ப்பு வழங்கிய பென்ச்சின் உறுப்பினராக இருந்திருக்கிறார்.''

1987 XLIII 416

தகவல் கோரல்— நடைமுறைகள்—

அனுமதி —

உரிமை மீறல் குற்றத்திற்காக பேரவையால் தண்டிக்கப் பட்ட திரு. பால்ராஜ் மீது நடவடிக்கை எடுக்கப்படாதது குறித்து ஓர் உறுப்பினர் தகவல் கோரியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' அதுபற்றியெல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவில் கேட்க வேண்டும். இங்கே கேட்கக் கூடாது. உரிமைப் பிரச் சினைகளுக்கெல்லாம் குழு வேறு தனியாக இருக்கிறது. அந்தக் குழுவில் தாங்கள் கூட இருக்கிறீர்கள். அங்கே கேட்டுக் கொள்ளலாம்.

,,அந்தத் தீர்ப்பு எக்சிகியூட் ஆகவில்லை. அதில் நீங்கள் என்ன செய்ய முடியும்? நான்தான் என்ன செய்ய முடியும்? இந்த அவைதான் சுப்ரீம் என்பது நிலைநாட் டப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்டவர் ஓடி ஒளிந்தால் போலீஸ்தான் தேடிப்பிடிக்க வேண்டும் ''.

1986 XV 218–220

உறுப்பினர் விரும்பும் தகவல்களை அமைச்சரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

1987 XXXVI 34

அனுமதி — தொடர்ச்சி

ஏதாவது ஒரு பொருள் குறித்து உறுப்பினர் அரசின் கவனத்தை ஈர்த்துவிட்டால் சம்பந்தப்பட்ட அமைச்சர், மானியம் வரும்போது பதில் சொல்வார்.

1986 XXV 525

ஓர் உறுப்பினர், ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி, அரசு வறட்சி குறித்த அறிக்கையை உடன் மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' இது Point of order அல்ல, Point of Information ''.

1987 XXXIII 229

ஓர் உறுப்பினர் தகவல் கோரும் முகத்தான் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்ப முற்பட்டபோது தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார் :

'' தகவல் கோர விரும்பும் உறுப்பினர் முன்னமேயே அறைக்கு வந்து அனுமதி பெற்றுக் கோர வேண்டும். முன்கூட்டியே தலைமைக்குத் தகவல் கொடுத்தால்தான் அமைச்சரிடம் சொல்லித் தகவல் பெற்றுத்தர முடியும் ''.

1987 XLIV 431–432
435
436–437

கேள்வி நேரம் முடிந்த பிறகு ஏதாவது பிரச்சினை பற்றி எழுப்ப வேண்டுமானால், தலைவரின் முன் அனுமதியைப் பெற வேண்டும். ஒரே நேரத்தில் பல உறுப்பினர்கள் எழுந்து நின்று பிரச்சினைகளை எழுப்புவது முறையல்ல. திடீர் திடீரென்று பிரச்சினைகளை எழுப்புவதும் முறையல்ல. ஏதாவது ஒரு முறையில் குறிப்பிட்ட பிரச்சினை பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வர முன் அனுமதி பெற வேண்டும்.

1986 XXIII 36–37,
298

கேள்வி நேரம் முடிந்தவுடன் அவசரமும் முக்கியத்துவமும் பொருந்திய சில பொருள்கள் குறித்து ஒரே நேரத்தில் பல உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்ப முயன்றபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"A point of order shall relate to the interpretation or enforcement of these rules or Articles of the Constitution.''



அனுமதி— தொடர்ச்சி

. . ''ஜீரோ அவர்'' என்று நம்முடைய அவையைப் பொறுத்தவரையில் ஒன்றும் கிடையாது. வினாக்கள் - விடைகள் முடிந்தவுடன் முன் வரிசையில் உள்ள தலைவர்கள் அவசர முக்கியமான பொருள் குறித்து தகவல் கோருவது என்றால், அடுத்த அலுவலை எடுத்துக் கொள்வதற்குமுன் அதை அனுமதித்து வருகிறோம்.

. . 7, 8 உறுப்பினர்கள் ஒரே சமயத்தில் எழுந்திருந்து பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் என்ன செய்வது ? பாயின்ட் ஆப் ஆர்டர் எழ சந்தர்ப்பமே இல்லை. ஏதாவது தகவல் கோர வேண்டுமென்றால் முன்வரிசையிலுள்ள அவர்களது கட்சித் தலைவர்கள் எழுந்து கேட்க அனுமதிக்கலாம் என அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவுசெய்து அதைத் தான் நம் அவையைப் பொறுத்தவரை பின்பற்றி வருகிறோம். என்னுடன் முழுமையாக உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

. . பிசினஸ் நடந்து கொண்டிருக்கிறபோது நடைமுறை சம்பந்தமாக முறை பிசகு இருக்குமானால் யார் வேண்டுமானாலும் கேட்கலாம். ஆனால் நாம் இப்போது பிசினசை ஆரம்பிக்கவே இல்லை.

. . சில உறுப்பினர்கள் என்னுடைய அறைக்கு வருகிறார்கள். They get prior permission to raise point of order. அந்த முறையில் இருந்தாலும் பரவாயில்லை. திடீரென்று ஏழு உறுப்பினர்கள் இதை எழுப்புகிறபோது யாருக்கு அனுமதி கொடுப்பது, யாரை நிறுத்துவது என்று முடிவு செய்வது சரியாக வராது.

. . என்னுடைய முன் அனுமதி பெற்று இங்கே உறுப்பினர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம். நான் சீக்கிரமாகவே வந்து விடுகிறேன். என்னுடைய செயலகத்தைப் பற்றியோ, இந்த அவையை நடத்துவது பற்றியோ இங்கே விவாதிப்பது நல்லதல்ல.

அலுவல் நடந்து கொண்டிருக்கிறபோது, யார் வேண்டுமானாலும் எழுப்பலாம். ஆனால் 10 மணிக்குக் கேள்வி நேரம் முடிந்தவுடன் எழுப்புகிற வாய்ப்பு முன்வரிசையில் உள்ள தலைவர்களுக்கு மட்டும்தான் உண்டு. எனவே, இந்தப் பிரச்சினையை இன்றைக்கு முடித்து விடலாம். நாளையிலிருந்து ஒரு வரைமுறையைப் பின்பற்றலாம்.''

1986 XX 34–35
36, 37, 38

**அனுமதி** — தொடர்ச்சி

செங்குன்றம் காவல் நிலையத்தில் ஒரு பெண் துன்புறுத்தப் பெற்றது குறித்து காவல் நிலைய ஆய்வாளருக்குத் தாம் எழுதியனுப்பிய கடிதத்தை அவர் கிழித்தெறிந்ததோடு, அக்கடிதத்தைக் கொண்டு சென்றவரையும் துன்புறுத்தியது குறித்து ஓர் உறுப்பினர் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவந்து அவையில் எழுப்பியபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது :

'' அதைப் பற்றி எழுதிக் கொடுங்கள். I will take up the issue with the Hon'ble Leader of the House. ''

1985 XIII 627

தகவல் கோரல் என்பது சுருக்கமாக இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட ஒரு பகுதியில் நடைபெற்றது குறித்து, முன் னறிவிப்பு கொடுத்த பிறகு எழுப்பினால் விவரங்கள் சேகரித்துத் தர முடியும்.

1985 XV 215, 218

தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர்விட வேண்டியது குறித்து ஓர் உறுப்பினர் தகவல் கோரியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

"You give a separate notice. Then only the Hon. Minister can give a reply.''

1985 XIV 41, 44

தலைவரிடம் விளக்கம் கேட்பதாக இருந்தால் அவரது அறைக்குச் சென்று கேட்க வேண்டும். அவையில் கேட்கக் கூடாது.

1985 VI 446

தலைவரின் அலுவல் சம்பந்தப்பட்ட பிரச்சினை பற்றி பேசவேண்டுமானால் தலைவரின் அறைக்குச் சென்று பேசலாம். அவையில் அதுபற்றிக் கேட்பது முறையல்ல.

1987 XXXIV 230–231

தலைவரின் முன் அனுமதியைப் பெற்றுத்தான் தகவல் கோர வேண்டும்.

1986 XXII 219, 220



**அனுமதி**— தொடர்ச்சி

தாய்த் தமிழகத்துடன் கன்னியாகுமரி மாவட்டம் இணைவதற்காகப் போராடிய தியாகிகளுக்கு பென்சன் மீண்டும் வழங்கப்பட வேண்டியது குறித்து ஓர் உறுப்பினர் சுட்டிக் காட்ட முற்பட்டபோது, "இதற்கு தாங்கள் என்னிடம் முன் அனுமதி பெறவில்லை, சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் இதைப் பற்றித் தெரிவித்து இருந்தால், அமைச்சர் பதில் சொல்ல முடியும் ; திடீரென எழுப்பினால் பதில் சொல்ல முடியாது'' எனத் தலைவர் குறிப்புரைத்தார்,

1986 XXXI 46–47

திடீரென எழுப்பப்பெறும் பிரச்சினைக்கு அரசு தரப்பில் பதில் சொல்ல முடியாது. ஆகையால் ஏதாவது ஒரு முன்னறிவிப்பு கொடுத்துவிட்டு எழுப்ப வேண்டும்.

1985 VIII 398

திருச்சி நகரில் நிலவும் பதட்ட நிலை குறித்தும் கோட்டூர்புரத்தில் உள்ள குடிதண்ணீர் தட்டுப்பாடு குறித்தும் சில உறுப்பினர்கள் தகவல் கோரியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

'' இவ்வளவு பெரிய விவகாரங்களை எழுதிக் கொடுத்தால் நல்லது. பதில் சொல்வதற்கு எளிதாக இருக்கும். இவ்வளவு தகவல்களும் அமைச்சரிடம் இப்போது இருக்காது.''

1986 XXVII 40–41

தீ விபத்து குறித்து ஒரு பிரச்சினையை ஓர் உறுப்பினர் அவையில் எழுப்பியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''திடீரென்று இப்படிப்பட்ட பிரச்சினைகளை எழுப்பக் கூடாது. அரசு தரப்பில் இதற்கு பதில் சொல்ல முடியாது. ஏதாவது ஒரு வகையில் முன் அறிவிப்பு கொடுத்து எழுப்ப வேண்டும்.'

1985 VIII 398

பழனியில் இந்திய மாணவர்கள் சங்கம் மாநாடு நடத்துவது பற்றி ஓர் உறுப்பினர் தகவல் கோர முற்பட்டபோது அவையிலே எழுப்பப்போவது என்ன என்பது குறித்து முன்கூட்டியே தலைவரின் அறைக்கு வந்து சொல்லிவிட்டு எழுப்பினால் நல்லது என்று குறிப்புரைக்கப்பெற்றது.

1986 XVII 89

[illegible]— தொடர்ச்சி

பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்' என்ற அடிப்படையில் சில உறுப்பினர்கள் தகவல் கோர முயன்றபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது :

என்னிடம் முன் அனுமதி கேட்கவில்லை. என்னிடம் நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள் என்று சொல்லவில்லை. எதைச் சொல்லிக் கேட்கப் போகிறீர்கள் ? இன்று சொல்லுங்கள். நாளை காலை உங்களை அனுமதிக்கிறேன்.''

1987 XXXVII 810–811

பேரவைத் தலைவரின் அறைக்குச் சென்று கேட்கவேண்டிய விஷயங்களை அவையில் கேட்கக் கூடாது.

1985 V 399

மன்றத்திலுள்ள பெண் உறுப்பினர்கள் எல்லாம் ஒரே மாதிரியான புடவையோடு வந்திருப்பதைச் சுட்டிக்காட்டி மன்ற உறுப்பினர்களுக்குச் சீருடை வழங்கப்பட்டிருக்கிறதா என்று ஓர் உறுப்பினர் பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்று எழுப்பியபோது, தலைவர், இதுவெல்லாம் பாயின்ட் ஆப் இன்பர்மேஷனில் வராது என்றும், சீருடைகள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவது இல்லையென்றும், உடைகள் அணிந்து வருவது அவரவர்களுடைய விருப்பமென்றும் குறிப்புரைத்தார்.

1986 XIX 290

'மாநில சுயாட்சி பற்றி சர்க்காரியா கமிஷனுக்கு மாநில அரசு தெரிவித்த கருத்துக்களைப் பற்றி ஓர் உறுப்பினர் விளக்கம் கோரியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது :

''இது பெரிய பிரச்சினை. எனவே, எழுதிக் கொடுத்து, அறிவிப்பு கொடுத்து விவாதிக்கலாம்.''

1985 VIII 826

முன் வரிசையில் உள்ளவர்களுக்குத்தான் 'பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்' என்ற ஒரு முடிவு அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பெற்றிருக்கிறது.

1987 XXXII 342





அனுமதி— தொடர்ச்சி

முன்னனுமதியின்றி அவையில் பிரச்சினையை எழுப்பினால் அரசிடமிருந்து பதில் கிடைக்காது.

1985 VI 335
1986 XVII 39

வறட்சிப் பணிகளை ஒட்டி விளக்கமாக ஓர் உறுப்பினர் பேசத் தொடங்கியபோது, இதுபற்றி விவாதத்தின் போது பேசிக்கொள்ளலாம் என்று தலைவர் குறிப்புரைத்தார்.

1987 XXXIII 230

விதி 114-ன் கீழ் தாம் கொடுத்த ஓர் அறிவிக்கைபற்றி ஓர் உறுப்பினர் அவையில் எழுப்பியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

'' தாங்கள் இப்போதுதான் கொடுத்தீர்கள். அதுபற்றி நான் இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. விதி 114-ன்படி எழுப்புவதற்கும் என் அனுமதி வேண்டும். நான் அந்த விதியைப் படிக்கிறேன்.

"A Member wishing to point out any mistake or inaccuracy in a statement made by a Minister or any other Member shall before referring to the matter in the House write to the Speaker, pointing out the particulars of the mistake or inaccuracy and seek his permission to raise the matter in the House " என்று இருக்கிறது. எனவே, நான் அனுமதி அளித்த பிறகே நீங்கள் எழுப்ப முடியும்.''

1985 IX 57

விவசாயக் கடன்களைச் செலுத்துவதற்கு கால அவகாசம் கொடுக்கப்படுமா என்று ஓர் உறுப்பினர் தகவல் கோரியபோது, இது கொள்கை விவகாரமாக இருப்பதால் இதை எழுப்ப வேண்டாமென்று தலைவர் குறிப்புரைத்தார்.

1987 XXXII 85

வினாக்கள் எடுத்துக்கொள்ளப்படும் வரிசை குறித்து ஓர் உறுப்பினர் தகவல் கோரியபோது, பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

'' இப்படிப்பட்ட பிரச்சினைகளை அவையில் எழுப்பாமல் தலைவரின் அறையில் வந்து கேட்க வேண்டும்.''

1985 VIII 828

அனுமதி— தொடர்ச்சி

வினாக்கள்-விடைகள் முடிவுற்ற பின்னர், சில உறுப்பினர்கள் தகவல் கோர முற்பட்டபோது, தலைவர் கீழ்க் கண்டவாறு தீர்ப்பளித்தார் :

'' நீங்கள் முன் அனுமதி பெறவில்லை. நீங்கள் எதைப் பற்றி வினா எழுப்பப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. காலையில் சொல்லியிருப்பீர்களேயானால், நான் அனுமதித்து இருப்பேன். இன்று வந்து சொல்லுங்கள், நாளை காலை அனுமதிக்கிறேன்.''

1987 XXXVI 38

ஜனநாயக முன்னணி மாதர் சங்கம் நடத்திய ஊர்வலம் பற்றி தகவல் கோரப்பட்டபோது, பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

''இந்தப் பிரச்சினை பற்றி இன்று காலையில் என்னுடைய அறையிலே கேட்கப்பட்டு அதற்கு அனுமதி மறுக்கப் பட்டது.

'' மீண்டும் அதை இங்கே எழுப்ப வேண்டியதில்லை. வேண்டுமானால் காவல் துறை மானியம் வரும்போது அதுபற்றிப் பேசலாம்.''

1986 XXIII 552

உறுப்பினர்களின் அறிவிக்கைகள்—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள், முன்னறிவிப்புகள் குறித்து பேரவைத் தலைவரின் அறைக்குச் சென்றுதான் கேட்கவேண்டும். அவையிலே எழுப்பக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1985 | III | 342—343 |
| 1987 | XXXVII | 469 |
| | XLIV | 432 |

உறுப்பினர்கள் தாம் கொடுத்துள்ள சில அறிவிக்கைகள் குறித்து தகவல் கோரியபோது தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு பின் வருமாறு :

'' என்னிடத்தில் என்ன பேசப் போகிறீர்கள் என்று கூறி என் அனுமதி வாங்கவில்லை, ஆகவே அனுமதிக்க முடியாது.





உறுப்பினர்களின் அறிவிக்கைகள்— தொடர்ச்சி

'' ஒத்திவைப்புத் தீர்மானங்களைப் பற்றி அறையில் வந்து கேளுங்கள். இவ்வளவு பேர்கள் எழுந்து நிற்கும் போது ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டுமென்று கணக்கு இல்லை. ஏதாவது அவையில் எழுப்ப வேண்டுமென்றால் அவை முன்னவர் அவர்களிடத்தில் பேசிவிட்டு வந்து என்னிடம் சொல்லி அனுமதி பெற வேண்டும்.

'' முக்கியமான பிரச்சினையாக இருந்தால், தேவைப் படுமானால் எந்த வழியிலாவது அனுமதிக்கிறேன்.''

1987 XLV 122, 123

உறுப்பினர்கள் போடுகின்ற கேள்விகளுக்கு உரிய காலத்தில் சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து 41 நாட்களுக்குள் பதிலை வாங்கித் தர தகுந்த ஏற்பாடு செய்யப்படுமா என உறுப்பினர்கள் சிலர் வினவியபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' துறையிடமிருந்து பதில்கள் வந்தவுடன் அவை முறைப் படி அவையில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. விரைவிலே பதிலை அனுப்பவேண்டுமென்று என்னுடைய அலுவலகத்திலிருந்து துறைச் செயலாளர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். என்னுடைய அலுவலகத்தில் தாமதம் கிடையாது.''

1987 XLII 6C5, 619—620

ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிக்கை கொடுத்த உறுப்பினர் அதுபற்றி அவையில் கேட்பது கூடாது.

1985 IV 596

காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்து ஓர் உறுப்பினர் தகவல் கோரியபோது, அதே பொருள் குறித்து இன்னொரு உறுப்பினர் ஒத்திவைப்புத் தீர்மான முன்னறிவிப்பு கொடுத்திருப்பதால் அதற்கும் சேர்த்தே இப்போது அமைச்சர் பதிலளித்துவிடலாம் என்று தலைவரால் குறிப்புரைக்கப்பெற்று, அமைச்சரால் பதிலளிக்கப்பெற்றது.

1986 XVI 352

**உறுப்பினர்களின் அறிவிக்கைகள்**— தொடர்ச்சி

கேள்வி நேரம் முடிந்து கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகும் தொடர்ந்து ஓர் உறுப்பினர் ஒரு பிரச்சினை குறித்து தகவல் கோர விரும்பியபோது தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு பின்வருமாறு :

" ..எது எது முடியுமோ, எது எதை இந்த அவையில் விவாதிக்க வேண்டுமோ அதற்கு மட்டும்தான் அனுமதி உண்டு.

..உங்களுடைய பிரச்சினை என்ன என்பதை எழுத்து மூலமாகக் கொடுத்தால் அவை முன்னவர் அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர் பதில் சொல்ல வாய்ப்பு இருக்கும். இப்படி திடீரென்று கேட்டால் அது சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் தெரியாது, எனக்கும் தெரியாது.

..நேற்றையதினம் உங்கள் கட்சியின் சார்பில் பேசிய போது இதுபற்றி குறிப்பிட்டிருக்கலாம். துணை மானியக் கோரிக்கையில் பேசியிருக்கலாம். ஒவ்வொன்றுக்கும் ஒரு முறை இருக்கிறது. இப்படி குறுக்கிடுவது முறையல்ல. பொது நலன் கருதித்தான் அனுமதிக்கவில்லை. நீங்கள் அமரவேண்டும்.

பல முறை சொல்லியும் நீங்கள் தொடர்ந்து குறுக்கிடுவதால் அவையிலிருந்து உங்களை வெளியேற்றுகிறேன். உறுப்பினர் பேசிய பகுதிகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகின்றன.''

*1987* **XLVI** *175, 178, 179, 180*

தாம் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றின் பொருள் பற்றி உறுப்பினர் ஒருவர் தகவல் கோரியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

" உறுப்பினர் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் என் ஆய்வில் உள்ளது. அதை எந்த விவாதத்தில் எடுக்கலாம் என்று யோசித்துச் சொல்லுகிறேன்''.

*1986* **XXX** **54**

நடந்து முடிந்திருக்கிற உள்ளாட்சித் தேர்தல்கள் செல்லுமா செல்லாதா என்பது குறித்து சில உறுப்பினர்கள் கையெழுத்திட்டு தலைவரிடத்தில் கொடுத்திருக்கிற மனுவைக் குறிப்பிட்டு ஓர் உறுப்பினர் தகவல் கோரிய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:





**உறுப்பினர்களின் அறிவிக்கைகள்**— தொடர்ச்சி

'' பெரிய சட்டப்பிரச்சினை இருக்கிறது. அது இப்போது வேண்டாம். சபைக் கூட்டம் முடியும் நேரத்தில் உறுப்பினர்கள் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும்.''

*1986* **XXVIII** *670–671*

பேரவைக்குக் கொடுத்த நோட்டீஸ் பற்றியும், அதை ' ரிஜெக்ட் ' செய்த காரண-காரியம் பற்றியும் பேசக் கூடாது என்று குறிப்புரைக்கப் பெற்று அவ்வாறு பேசிய பகுதி நீக்கப்பெற்றது.

கேட்கும் முறை— *1986* **XXIII** *379, 380*

அமைச்சர் தகவல் கோரலுக்கு பதிலளித்தபிறகு இன்னொரு உறுப்பினர் தன்னிலை விளக்கம் சொல்ல விரும்பிய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

" There shall be no discussion on such statement made by Minister "

*1986* **XVI** *360*

உறுப்பினர்கள் தகவல் கோரும்போது அதிகமான விவரங்களைக் கூறிக்கொண்டே இருக்கக் கூடாது.

*1986* **XIX** *648*

ஒரு பொருள் குறித்து ஒருவர் கேட்டதற்குப் பிறகு இன்னொருவர் கேட்க வேண்டாம்.

*1987* **XXXVI** *34*

ஓர் உறுப்பினர் அனுமதி பெற்று, தகவல் கோருகையில் சில உறுப்பினர்கள் பிரச்சினைகளை எழுப்ப முற்பட்டு கூச்சல் குழப்பம் விளைவித்தபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

" ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது மற்றொரு உறுப்பினர் எழுந்து பேசுதல் கூடாது. உறுப்பினர்கள் முதலில் அனுமதி கேட்கவில்லை. ஆகவே அனுமதி இல்லை. அனுமதி பெறாமல் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது.

கேட்கும் முறை— தொடர்ச்சி

..இது முறையல்ல, அழகல்ல. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழகல்ல. சபையின் கண்ணியத்தை நீங்கள் கெடுக்கின்றீர்கள். பாரம்பரியத்தை, மரபைக் கெடுக்கின்றீர்கள்.

..மரபைக் காப்பாற்றுங்கள். இன்றைக்கு நீங்கள் எல்லாம் பேசுகின்ற காரணத்தால்தான் இந்த அவைக்கே சம்பந்தம் இல்லாதவர்கள் எல்லாம், இந்த அவையைப் பற்றி வெளியே விமர்சிக்கக்கூடிய அளவுக்கு நீங்கள் காரணமாக இருக்கிறீர்கள்.

..நீங்களே இந்த அவையின் பாரம்பரியத்தைப் பாதுகாக்க வேண்டும். கண்ணியத்தைப் பாதுகாக்க வேண்டும். முதலாவது இந்த நிறுவனத்திற்கு நீங்கள் 'ஃபெயித்புல்லாக' இருங்கள். உண்மையாக இந்த நிறுவனத்தைக் காப்பாற்றுங்கள். மக்களுக்காகப் பேசுங்கள். தனி மனிதனுக்காகப் பேசாதீர்கள்.

..இதுபோன்ற நடவடிக்கைகள், எதிர்பாராத நடவடிக்கைகள். இப்பொழுது உறுப்பினர்கள் இப்படி நடந்து கொண்ட முறைகள், ஜனநாயகத்திற்கு நல்லதல்ல. மக்களுக்கு நல்லதல்ல. இதை நம்முடைய நாட்டு மக்களுக்கு புரிய வைக்க வேண்டும். நேற்றைய தினம் இந்த நிறுவனத்தையே குறைத்து எழுதிய பத்திரிகைகள் இந்த சபாநாயகர் ஆசனத்தையே குறைத்து எழுதிய பத்திரிகைகள் பற்றி இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு அக்கறை கிடையாது. அரசியல் செய்வதற்காக இந்த சட்டமன்றத்திற்குள் வருகின்றார்கள். இதை நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிறுவனத்தையும், இந்த ஆசனத்தையும் நேற்றையதினம் குறைத்து மதிப்பிட்டு பத்திரிகைகளில் பேட்டி கொடுத்த இந்த அவைக்குச் சம்பந்தம் இல்லாதவர்கள், அவர்கள் எந்தத் துறையிலே இருந்தாலும், யாராக இருந்தாலும், அவர்களை வன்மையாகக் கண்டிக்கிறேன். அவர்களைப் பற்றி இனிமேல் நாட்டு மக்கள் புரிந்துகொள்வார்கள். ஜனங்களைப் பற்றிப் புரியாதவர்கள் ஜனநாயகத்தை வெளியிலே பேசிக்கொண்டிருக்கிறார்கள்.''

1987 XXXVIII 446, 447, 448, 450, 451, 454, 455, 456, 457, 458.



கேட்கும் முறை— தொடர்ச்சி

தகவல் கோரல் என்பது சுருக்கமாக இருந்தாக வேண்டும். குறிப்பிட்ட ஒரு பகுதியில் நடைபெற்றது குறித்து, முன்னறிவிப்பு கொடுத்த பிறகு எழுப்பினால் விவரங்கள் சேகரித்துத் தர முடியும்.

1986 XV 215, 218

தகவல் கோரல் என்ற முறையில் ஓர் உறுப்பினர் சுருக்கமாகப் பேசலாம். இந்த அவையில் 'சீரோ அவர்' என்பது கிடையாது. தகவல் கோரல் என்ற முறையில் எழுப்பும் பிரச்சினை குறித்து நிதி ஒதுக்க சட்டமுன்வடிவில் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

1986 XXVII 47–48

தகவல் கோர விரும்பும் உறுப்பினர் மிகச் சுருக்கமாகப் பேச வேண்டும்.

1986 XXI 530

தகவல் கோரிப் பெற்ற பிறகு, திரும்பத் திரும்ப அதைப் பற்றியே கேள்வி கேட்க முடியாது.

1986 XLVI 598

'பாயின்ட் ஆப் இன்பர்மேஷனில்' அதிகமாகப் பேசக் கூடாது.

1987 XXXVII 811

பெரம்பலூர் ஒன்றியத்தில் ஒரு மாணவன் இறந்தது குறித்து ஓர் உறுப்பினர் தகவல் கோரிய நிலையில், அரசாங்கத் தரப்பிலிருந்து அதுகுறித்து பதில் தரப்படவேண்டுமென்று சில உறுப்பினர்கள் வலியுறுத்தியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது :

''ஏதாவது ஒரு சம்பவம் பற்றி உறுப்பினர் தகவல் கோரும்போது அதற்கு பதில் தர வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது. அது பற்றித் தெரிவிக்க அவருக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.''

1986 XXIII 551

யூகத்தின் அடிப்படையில் தகவல் கோரக்கூடாது என்று குறிப்புரைக்கப்பட்டு அவ்வாறு பேசிய பகுதி நீக்கப் பெற்றது.

1986 XXVII 224

தலைவரின் தீர்ப்பு—

**அரசியலமைப்புச் சட்டப் பிரிவை எரித்தோர்,** உறுப்பினர் தகுதியை இழந்துவிட்டதாக தலைவர் தீர்ப்பளித்த பிறகு, சில உறுப்பினர்கள் விளக்கம் கூற வாய்ப்பு கோரிய போதும், சில உறுப்பினர்கள் தீர்ப்பை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தபோதும், தலைவர் அளித்த தீர்ப்புரைகளின் தொகுப்பு வருமாறு :

"ரூலிங் மீது பேசக்கூடாது. I have made clear the constitutional and legal provisions. There need not be a debate on my ruling.

..This is not a Court. I am invoking my residuary powers. Please for heaven's sake respect this institution. I will not allow any disrespect to the Constitution inside the House. I am forwarding a copy of my ruling along with the proceedings to the Governor and the Election Commission for follow up action. The Speaker has got ample powers. Legislature is a Democratic institution. It is supreme. The House is supreme. The Constitution is supreme.

..Do not talk about the burning of the Constitution issue here. I cannot be a witness. If you say that you are going to burn it, it is an offence. As a matter of caution, I am telling you. இங்கே நீங்கள் எரிக்கலாம் என்று சொன்னால் கூட, அதுவும் offence. நீங்கள் பேசுவது சரியல்ல. Atleast I am protecting you all. Do not make me a witness.

..Are you going to justify the violation of oath? It is a point of law. It is quite simple. You have come to the House after taking the oath. Now you have committed a crime. Your eligibility ceases.

..The House is not concerned with that deliberation made in Parliament. I will explain, Simply because they have violated, do not come to their rescue. I have no other option. Do not make it a political issue. I am only deciding a Constitutional issue here."

*1986 XXXI 163-171, 173, 216—219*



தலைவரின் தீர்ப்பு— தொடர்ச்சி.

அரசியலமைப்புச் சட்டப் பிரிவை பொது இடத்தில் எரித்தோரைப் பதவி நீக்கம் செய்யும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது ஓர் உறுப்பினர் பேசுகையில், முன்னால் இருந்த சபாநாயகர் அவர்கள் அளித்த தீர்ப்பைச் சுட்டிக்காட்ட முயன்றபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"..வெளியே நடக்கிற விவகாரம் வேறு. அந்த மாதிரி முன்மாதிரியைப் பின்பற்றுவது கிடையாது. நீங்கள் முன்னாள் சபாநாயகர் பற்றிச் சொன்னீர்கள். அந்தத் தீர்ப்பு பற்றி இங்கே பேசுவது சரியல்ல. 1963ஆம் ஆண்டின் தீர்ப்பு அது. சுப்ரீம் கோர்ட்டில் மாதா மாதம் நம்முடைய நாட்டின் தேவைக்கேற்ப, சமுதாயத்தினுடைய சூழ்நிலைக்கேற்ப தீர்ப்பு மாற்றப்படுகிறது.

..அதற்கும் இதற்கும் பெரிய வேறுபாடு இருக்கிறது. அந்த சர்ச்சை வேண்டாம். வெளியே அதை வைத்துக் கொள்ளுங்கள். உள்ளே அது வேண்டாம்."

*1986 XXXI 471–472*

உறுப்பினர்கள் நினைப்பது போல தலைவர் தீர்ப்பளிக்க முடியாது.

*1987 XXXII 285*

ஒரு குறிப்பிட்ட பிரச்சினை பற்றிய பேச்சை நீக்காததற்கு தம்முடைய உணர்வுதான் காரணம் என்று தலைவர் குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டி ஓர் உறுப்பினர், அவையில் பிரச்சினைகளை எழுப்ப தலைவர் தினமும் அனுமதித்து பிறகு நீக்கிவிடுவதற்கும் அதுதான் காரணமா எனக் கேட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

"நான் அதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அப்படிக் கேட்பது முறையல்ல. என்னுடைய உணர்வை வெளிப்படுத்த வேண்டிய நேரத்தில் வெளிப்படுத்துவேன். வேண்டாத நேரத்தில் வெளிப்படுத்த மாட்டேன். அது என்னுடைய உரிமை, மனிதனுடைய உரிமை."

*1987 XLV 447*

**தலைவரின் தீர்ப்பு— தொடர்ச்சி**

தம்முடைய கோரிக்கை மறுக்கப்பட்டதற்கான காரணத்தை ஓர் உறுப்பினர் கேட்டபோது தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார் :

''இதுவரையில் கடைப்பிடிக்கப்பட்டுள்ள முறையைத்தான் கடைப்பிடித்து வருகிறேன். கோரிக்கையை மறுக்கிற போது காரணங்கள் சொல்வது இல்லை.''

1986 XVIII 628

தலைவரின் தீர்ப்பின் மீது விளக்கம் கேட்கக் கூடாது. விவாதமும் கூடாது.

1985 XII 348
XIII 632

தலைவரின் தீர்ப்புக்கு மேலே விவாதிப்பது முறையல்ல, இந்த மன்றம், எந்த மன்றத்தையும் பின்பற்ற வேண்டிய நிலைமையில் இல்லை. This House is sovereign.

1987 XLVI 616

தலைவரின் தீர்ப்பு சரியில்லை என்று பேசுவது தவறாகும்.

1986 XV 143

தலைவருடைய தீர்ப்பு மீது ஒழுங்குப் பிரச்சினை வராது.

1985 VI 446

தலைவரைப்பற்றி கண்டபடி பொதுக் கூட்டத்தில் பேசுவது. பத்திரிகைகளில் எழுதுவது என்பதெல்லாம் முறையற்ற செயல்.

1985 IX 54

**தன்னிலை விளக்கம்—**

அமைச்சர் பதிலில் தன்னைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதால் அதற்குத் தாம் தன்னிலை விளக்கம் கொடுக்க வேண்டுமென்று ஓர் உறுப்பினர் கோரியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

''உங்களைப் பற்றித் தவறாகப் பேசவில்லை. உங்கள் மேல் குற்றச்சாட்டைச் சொல்லவில்லை. கேள்வி நேரத்தில் தன்னிலை விளக்கம் தர முடியாது. தயவுசெய்து ஒத்துழையுங்கள்.''

1986 XXVII 166



**தனி உறுப்பினர் அலுவல்—**

தனி உறுப்பினர் அலுவலுக்காகக் கொடுக்கப்பட்டுள்ள நாட்களில் அவ்வலுவல் எடுத்துக்கொள்ளப்படுவதில்லையென ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"Rule 33(i) says on all Thursdays on which the Assembly sits except Thursdays allotted for the discussion on the Motion of Thanks to the Governor's Address and Thursdays allotted for the discussion of financial matters under Article 202 to 206 of the Constitution, the business of Private Members shall have precedence ;

Provided that the Speaker may in consultation with the Leader of the House allot in lieu thereof a day or days respectively as the case may be, after completion of discussions on the Motion of Thanks to the Governor's Address and financial matters, for transacting Private Members business.".........

''இப்போது பட்ஜெட் பற்றி விவாதித்துக் கொண்டிருப்பதால் அதற்கு வாய்ப்பே கிடையாது என்று விதியில் இருக்கிறது. ஏதாவது பிரச்சினை வந்தது என்றால், பட்ஜெட் பற்றிய விவாதங்கள் எல்லாம் முடிந்த பிறகு, 'டிஸ்கஷன்' முடிந்து, 'கிராண்ட்ஸ்' வாங்கிய பிறகு, எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, 'பிரைவேட் மெம்பர்ஸ் டே' கைவிடப்படவில்லை."

1986 XVIII 322

'தனியார் அலுவல்கள்' நாள் அன்று ஒரு தனித் தீர்மானத்தின் மீதான விவாதம் தொடர இருந்தபோது, ஓர் உறுப்பினர் விளக்கம் ஒன்று கூறுவதற்காக தலைவரிடம் அனுமதி கோரினார். அப்போது தலைவர் அளித்த குறிப்புரையாவது :

''இப்போது விளக்கம் வேண்டாம். இப்படி, ஒவ்வொன்றிலும் உறுப்பினர்கள் குறுக்கிடுவது சரியல்ல, முறையும் அல்ல. ஏற்கனவே தனித் தீர்மானம் மொழியப் பெற்று விவாதம் நடைபெற்றிருக்கிறது. அதைத் தொடர்ந்து இன்றும் விவாதம் நடைபெற இருக்கிறது. அதிலே விளக்கம் சொல்ல வேண்டிய தேவையில்லை. கட்சித் தலைவர்கள் எல்லாம் பேசி முடித்ததற்குப் பிறகு ஏதாவது விளக்கம் சொல்ல வேண்டும் என்றால்

தனி உறுப்பினர் அலுவல்—தொடர்ச்சி.

என் அனுமதி பெற்றுச் சொல்லலாம். உறுப்பினர்கள் இந்த நேரத்தில் ஆலோசனை சொல்ல வேண்டாம். ஏதாவது முக்கியமான ஆலோசனை கூற வேண்டும் என்றால் அதற்கு அலுவல் ஆய்வுக் குழு இருக்கிறது''.

1986 XXIX 183, 184

தனியார் அலுவல்களுக்கென ஒரு நாள் ஒதுக்கப்பட வேண்டும் என்று ஓர் உறுப்பினர் கோரியபோது, நிதி நிலை அறிக்கை விவாதிக்கப்படும்போது தனியார் அலுவல்கள் எடுத்துக்கொள்வதில்லை என்றும் அது முடிந்த பிறகு எடுத்துக்கொள்ளப்படுகிறது என்றும் அப்படித் தான் விதிகளில் இருக்கிறது என்றும் தலைவர் குறிப் புரைத்தார் :

1986 XXVII 292

தனித் தீர்மானங்கள்—(சட்டமன்ற மேலவையை நீக்குதல்)—

அரசியல் அமைப்புச் சட்டத்தின் 169-வது உறுப்பின் (1)-வது கூறின்படி தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நீக்கப்பட வேண்டும் என்ற தனித் தீர்மானம் மொழியப் பெற்று, விவாதிக்கப்பெற்று, வாக்கெடுப்பிற்கு விடப் பெற்றது.

அவையின் மொத்த உறுப்பினர்களில் பாதிக்கு மேலும் வாக்கெடுப்பின்போது வாக்களித்தவர்களில் மூன்றில் இரண்டு பாகத்திற்கு மேலும் தனித் தீர்மானத் திற்கு ஆதரவாக வாக்களித்ததால் தீர்மானம் அவையினால் நிறைவேற்றப்பெற்றது என்று அறி விக்கப் பெற்றது.

1986 XXVIII 320–389

திருத்தங்கள்—

சட்ட முன்வடிவுகள்—

ஒரு திருத்தச் சட்டத்தின் மீதான ஆய்வின்போது அந்தச் சட்டத்தைப் பற்றிய ஏனைய தகவல்களையும் தர வேண்டுமென்று கோரிக்கை எழுந்தபோது தலைவர் குறிப்புரைக்கையில் அவையின் ஆய்விலுள்ள திருத்தம் பற்றிய தகவல்களை மட்டும்தான் திருத்தச் சட்டத்தில் தர முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

1985 III 141



திருத்தங்கள்—தொடர்ச்சி

சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வரும்போது திருத்தங்கள் பற்றிய காரண நோக்க விளக்கங்கள்தான் அளிக்கப் படும். சட்டத்தில் இருக்கிற பிரிவுகளை உறுப்பினர் களே படித்துக் கொள்ள வேண்டும்.

1985 IV 81–82, 84

ஒவ்வொரு சட்டமுன்வடிவின் பிரிவுவாரியான ஆய்வின் போதுதான் பிரிவுகளுக்கான திருத்தங்கள் முன்மொழியப் பெற வேண்டும்.

1985 III 84

சட்ட முன்வடிவுக்குத் திருத்தங்கள் கொடுப்பதற்கு 3 நாட்கள் முன்னறிவிப்பு கொடுக்க வேண்டுமென்று இருப்பதால் அந்த அவகாசம் கொடுக்காமல் உடனடியாகச் சட்ட முன்வடிவை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வது விதிக்கு முரணானது என்று ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார் :

''பேரவை விதி 188-ன்படி முன்னறிவிப்புக்கான கால அவகாசத்தைத் தளர்த்துவதற்குத் தலைவருக்கு அதிகாரம் உண்டு என்பதால் அதன்படி முன்னறிவிப்புக்கான கால அவகாசத்தைத் தளர்த்திச் சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் இச்சட்டமுன்வடிவு அவசரமாக எடுத்துக் கொள்ளப்படுவதற்குக் காரணம், தனி அதிகாரிகளின் பதவிக்காலம் ஏப்ரல் 9 ஆம் தேதியோடு முடிவு அடை கிறது. மேலவைக் கூட்டம் ஏப்ரல் 3 ஆம் தேதியோடு முடிகிறது. இந்தச் சட்ட முன்வடிவு இங்கே நிறை வேறியபின் மேலவைக்குச் செல்ல வேண்டும். இதை யெல்லாம் கருதித்தான் சட்ட முன்வடிவு இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படுகிறது.''

1986 XX 69–73

திருத்தங்களுக்கான முன்னறிவிப்புகள் சட்ட முன்வடிவு பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிற நாளுக்கு மூன்று நாட்களுக்கு முன்னதாகவே செய லாளருக்கு அனுப்பப்பெற வேண்டும் என்ற விதியை ஓர் உறுப்பினர் சுட்டிக்காட்டி, முதல்நாள் அறிமுகம் செய்துவிட்டு மறுநாள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது

திருத்தங்கள்—தொடர்ச்சி

சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

முறையல்ல என்று கூறியபோது தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார் :

'' விதிகளின்படி தலைவர் அதை 'வெய்வ்' செய்யலாம்''.

1986 XVI 511

திருத்தத்தின்மீது நடைபெறும் வாக்கெடுப்பின்போது உறுப்பினர்கள் உரையாற்ற முடியாது.

1985 XIII 133

தனித் தீர்மானங்கள்—

தனித் தீர்மானம் ஒன்றுக்கு திருத்தத்தை முன்மொழிந்து 'தனித் தீர்மானம் சட்டத்தின் முன் நிற்காது' என்று ஓர் உறுப்பினர் கூறியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"You cannot argue as in a Court. It is an amendment and not a Motion.

நீங்கள் விரிவாகப் பேசினால் அதற்கான விவரங்களை அமைச்சர் சொல்ல முடியாது.

I am not here to reply to your arguments. I am not sitting here as a Judge. You tell me whether you are pressing the amendment when I put to vote."

1986 XXVIII 649–652

தீர்மானங்கள்—

அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவை எரித்தோர்—உறுப்பினர் தகுதியை இழத்தல்

பார்க்க—பக்கம் 1-3

தீர்மானம்—நடைமுறைகள்—

அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவை எரித்தோர்—பதவி நீக்கம்—

அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியின் நகலைப் பொது இடத்தில் எரித்ததற்காக சில உறுப்பினர்களைப் பதவி நீக்கம் செய்வது குறித்த தீர்மானம் மொழியப்





அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவை எரித்தோர்—பதவி நீக்கம்—தொடர்ச்சி

பெற்றதை ஓர் உறுப்பினர் ஆட்சேபித்தபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' மொழிவது தவறு என்று உறுப்பினர் பேச முடியாது. இந்தத் தீர்மானத்தை மொழிய நான் அனுமதி வழங்கியிருக்கிறேன். . . இதிலே ஆட்சேபணை தெரிவிக்க முடியாது. தீர்மானம் மொழிவதைத் தடுக்க முடியாது. இதிலே ஒன்றும் விதிமீறல் கிடையாது. I want to take the entire House with me. உங்களுக்கு வாய்ப்பு வரும்போது கருத்தைச் சொல்லலாம்.''

1986 XXXI 423–424

அரசியலமைப்புச் சட்டப் பிரிவை எரித்தோர் பதவி நீக்கம் குறித்த தீர்மானம் அவையில் மொழியப் பெற்ற போது சில உறுப்பினர்கள் அத் தீர்மானம் 'sub-judice' என்று வாதிட்டபோது தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு வருமாறு :

"It is a criminal case. We are not concerned with that. We are concerned with the breach of Constitutional obligation. There is a Constitutional violation.

. . It is a criminal case pending before the Magistrate. Inside the House the Speaker is competent to decide.

. . "The residuary power is here in this House right from 1952.

. . எனவே உறுப்பினர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது, இது அதிகாரத்தை மீறிச் செய்த செயல் அல்ல. இங்கே வந்து 'ஓத்' எடுக்கிறீர்கள். அதை 'வயலேட்' பண்ணி விட்டால், Speaker has to say.

. . இது அவையினுடைய நடவடிக்கை. இந்த அவையினுடைய நடவடிக்கையை எந்த நீதிமன்றமும் தடுக்க முடியாது.

..The conduct of a Member both inside the House and outside the House should be taken into consideration.

.. Rule 312 (New Rule 286) says: All matters not specially provided for in the Constitution, or in these rules and all questions relating to the detailed working of these rules shall be regulated in such manner as the Speaker may from time to time direct.

அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவை எரித்தோர்— பதவி நீக்கம்— தொடர்ச்சி

Further Rule 4(1) says : 'Every Member of the Assembly shall before taking his seat, make and subscribe an oath or affirmation as provided for in Article 188 of the Constitution.'. Art. 188-லே சொல்லப்பட்டிருக்கக் கூடிய அந்த ஷரத்து- Rule-4 லே வருகிறது. Rule-4-ல் there is no provision for action in the case of repudiation of the oath. It is not provided for in any of the Rules. I have to take recourse to Rule 312.

"I am not concerned about the Criminal case. You have taken oath under the Constitution. According to the Constitution you have stepped in. You have to protect that book.

..அரசியல் சட்டத்தைத் தீண்டிய காரணத்திற்காகத் தான் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. நீங்கள் வேறு எந்தச் சட்டத்தைத் தீண்டினாலும் அதன்மீது சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். அதற்கு அரசாங்கம் இருக்கிறது. That is for criminal prosecution. There is no provision for a second oath.

"They have voluntarily abandoned their right to sit in the House. Before taking seat, they should take oath.

..They have voluntarily relinquished their right. They have abandoned the right to sit in the House.

..அரசியலமைப்புச் சட்டத்தின் 194 (3) பிரிவைப் பற்றியும் உறுப்பினர்கள் யோசிக்க வேண்டும். The Speaker represents the House; the House represents the Nation. இவைகளை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் ."

1986 XXXI 423–511

காம் கொடுத்திருந்த கண்டனத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படவேண்டுமென்று ஓர் உறுப்பினர் வலியுறுத்தியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

"..தாங்கள் என்னுடைய அறைக்கு வந்து கூறியபோதே நான் ஏற்கெனவே தீர்மானத்தை நிராகரித்து விட்டேன். இன்றைக்குக் காலையில் உங்கள் அலுவலகத்திலிருந்து



யாரோ வந்து கொடுத்திருக்கிறார்கள். இன்று இந்தக் கூட்டத் தொடரின் இறுதி நாள். 1–30 மணியோடு அலுவல்கள் முடிக்கப்படவேண்டும். ஆகவே எந்தத் தீர்மானத்தைப் பற்றியும் விவாதிக்க நேரம் இல்லை.

..நாம் ஏற்கெனவே இரண்டு முறை அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி, அலுவல்களை முறைப்படுத்தி விட்டோம். இன்றைக்கு அவைக் கூட்டம் முடியும் தருவாயில் இருந்து கொண்டிருக்கிறது.

..நீங்கள் ஒரு மூத்த உறுப்பினர். நீங்கள் எல்லாம் எங்களுக்கு ஆலோசனையையும், அவையை சுமூகமாக நடத்துவதற்கு வழியையும் சொல்ல வேண்டும். ஏற்கெனவே நாம் எடுத்த முடிவின்படி தயவு செய்து ஒத்துழைக்க வேண்டும் ."

1986 XXXI 348–350, 351, 352, 355–356

நடவடிக்கைக் குறிப்புகள்—

அவையின் நடவடிக்கைக் குறிப்புகளை வெளியிடும்போது தவறான செய்திகளைப் பத்திரிகைகள் வெளியிடாமல் இருப்பது நலம்.

1985 II 137–138

அனுமதியில்லாமல் பேசுவது அவைக்குறிப்பில் ஏறாது.

1987 XXXVII 99–100

ஒரு மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு அமைச்சர் பதிலளிப்பதற்கு முன், அமைச்சர் கூறியதாக வானொலியில் செய்திகளை வெளியிட்டது குறித்து ஓர் உறுப்பினர் கேட்டபோது, தலைவர் அளித்த குறிப்புரையாவது:

"ஒரு மானியக் கோரிக்கை முன்மொழியப்படுகிறபோதே, கொள்கை விளக்கம் சம்பந்தமான உரைகள் அவையில் வைக்கப் பெறுகின்றன. அதிலுள்ள செய்திகளை வானொலி மாலையில் வெளியிட்டிருக்கலாம்."

1985 XI 110

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகளை பனை ஓலையிலே அச்சடித்துக் கொடுக்க வேண்டுமென்று ஓர் உறுப்பினர் தெரிவித்த யோசனைக்கு அமைச்சர் பதில் அளிக்கும்போது, சட்டமன்றக் கூட்டத்தை ஆல மரத்தடியில் நடத்தினால் அதுபற்றி சிந்திக்கலாம் என்று குறிப்பிட்டார். இது குறித்து தலைவர் நகைச் சுவை ததும்ப பின்வருமாறு குறிப்புரைத்தார்:

“நாம் எல்லோரும் ஆல மரத்தடியிலிருந்துதான் இங்கே வந்து இருக்கிறோம்.”

1987 XL 706

தலைவருடைய அனுமதியைப் பெறாமல் பேசியவை நடவடிக்கைக் குறிப்பில் இருக்காது.

1986 XX 535

மைக் இல்லாமல் பேசுவது நடவடிக்கைக் குறிப்பில் ஏறாது.

1987 XL 785, 786

நடவடிக்கைக் குறிப்புகள்—(பேரவை கூடும் நாட்கள் குறித்து திரித்து செய்தி வெளியிட்ட பத்திரிகை மீது நடவடிக்கை)—

குறிப்பிட்ட சில நாட்களில் பேரவைக் கூட்டம் இல்லை என்று அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யப்பட்டு, அறிவிக்கப்பட்ட பிறகு, அந்த அறிவிப்புக்குக் களங்கம் கற்பிக்கும் வகையில் 7–3–1987ஆம் நாளிட்ட ‘தினகரன்’ மற்றும் ‘மாலைமுரசு’ நாளிதழ்கள் செய்தி வெளியிட்டுள்ளது குறித்து, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

“அந்த அறிவிப்புக்குக் களங்கம் கற்பிக்கும் வகையிலும், உள் நோக்கத்துடனும் செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காகத்தான் பேரவைக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று அனுமானித்து செய்தி வெளியிடுவது முறையல்ல. இவ்விதமாக அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கு உள் நோக்கம் காட்டி, களங்கம் கற்பித்து செய்தி வெளியிடுவது பேரவையின் நடவடிக்கைகளுக்குக் களங்கம் கற்பிப்பதாகவும், அவை நடவடிக்கையைத் திரித்து வெளியிடுவதாகவும் அமைவது மட்டுமின்றி, பேரவையின் உரிமைமீறிய செயலாகும். எனவே பேரவை நடவடிக்கைகளுக்கு உள் நோக்கம் கற்பித்து செய்திகள் வெளியிடுவதை வன்மையாகக்





கண்டிக்கிறேன். எனது இந்த அறிவிப்பையும், ‘தினகரன்’ மற்றும் ‘மாலை முரசு’ பத்திரிகைகளில் அவற்றின் முதல் பக்கத்தில் முக்கியத்துவம் கொடுத்து, ஒரு வார காலத்திற்குள் ஏற்கெனவே செய்தி வெளியிட்ட அந்த அளவில் பிரசுரிக்க வேண்டுமென்று ஆணையிடுகிறேன்.”

1987 XXXIII 313–314

நீக்கம்—

அவைக்கு ஒவ்வாத சொற்கள்—

அவைக்கு ஒவ்வாத சொல் நீக்கப் பெற்றது.

1985 XIII 538

உறுப்பினர் ஒருவர் தெரிவித்த சில வார்த்தைகள் ‘நல்ல பேச்சல்ல’ என்று குறிப்புரைக்கப்பெற்று, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

1987 XLVI 272

ஓர் உறுப்பினர் பேசுகையில் தெரிவித்த சில வார்த்தைகள் பாராளுமன்ற நடைமுறைக்கு உகந்ததல்ல என்று குறிப்புரைக்கப்பெற்று, நீக்கம் செய்யப்பெற்றன.

1987 XXXVIII 95, 108, 109

சபையின் கண்ணியத்தை பாதுகாப்பதற்காக சில பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகின்றன.

1986 XVIII 543

பல சட்டமன்றங்கள், பாராளுமன்றங்களில் நீக்கப்பெற்ற அவைக்கொவ்வாத (unparliamentary) வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1985 XIII 177

மன்றத்திலே சொல்லக்கூடாத ஒன்றை சொல்லக் கூடாது. அப்படிச் சொன்னால் நீக்க வேண்டிவரும்.

1985 XII 340

**அவைக்கு ஒவ்வாத சொற்கள்—தொடர்ச்சி**

மாசு கற்பிக்கிற மாதிரி பயன்படுத்தப்பெற்ற சொற்கள் நீக்கப்பெற்றன.

1985 VI 364

வெளியில் பேசுவது போல் பேரவையில் பேசக் கூடாது; அவைக்குள் பின்பற்ற வேண்டிய முறைக்கும், அவையின் கண்ணியத்திற்கும் ஏற்பப் பேசவேண்டும் எனக் குறிப்புரைக்கப்பெற்று, அதற்கு மாறாகப் பேசிய பகுதி நீக்கப்பெற்றது.

1985 II 304

144 தடை உத்தரவு பற்றிச் சொல்கிறபோது ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட அருவருக்கத்தக்க வார்த்தைகள் நீக்கப்பெற்றன.

1987 XXXII 138

**அவையில் இல்லாதோர் குறித்துப் பேசியது—**

அதிகாரிகளைப்பற்றி குறிப்பிடப்பட்ட வார்த்தைகள் பொருத்தமானவை அல்ல என்று குறிப்புரைக்கப் பெற்று அவை நீக்கப்பெற்றன.

1986 XXI 99

அவையில் இல்லாதவர்களைப் பற்றி பேசுவது மரபல்ல என்று குறிப்புரைக்கப்பெற்று, அவ்வாறு பேசிய பகுதி நீக்கப்பெற்றது.

1986 XVI 149
XXVII 80
XXXI 96–97
1987 XXXII 374

ஆளுநர் உரை மீதான விவாதத்தில் ஓர் உறுப்பினர் பேசும்போது பத்திரிகைச் செய்திகளையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும் குறிப்பிட்டுப் பேசியவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றன.

1987 XXXIII 73–74

ஒரு செயலாளரைப் பற்றி குறிப்பிட்டுப் பேசிய பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

1986 XXI



**அவையில் இல்லாதோர் குறித்துப் பேசியது—தொடர்ச்சி**

ஓர் உறுப்பினர் உரையாற்றுகையில் தெரிவித்த கருத்து உண்மையா பொய்யா என்று மறுத்துக் கூறுவதற்கு வாய்ப்பு இல்லை என்று குறிப்புரைக்கப்பெற்று, அவ்வாறு குறிப்பிடப்பட்ட பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது.

1986 XXX 458–459

சபையில் இல்லாதவர்களைப் பற்றிக் குற்றச்சாட்டு கூறக் கூடாது என்று குறிப்புரைக்கப்பட்டு அவ்வாறு குறிப்பிடப்பட்ட பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1987 XXXV 388, 409
XXXVII 999

நீதிபதிகளைப்பற்றி ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது.

1986 XXX 224–225
1987 XL 829, 832–833

பொதுவாக மேலவையிலே இருக்கும் உறுப்பினர்களைப் பற்றி பேரவையிலே பேசக்கூடாது; பேரவையிலே இருப்பவர்களைப் பற்றி மேலவையிலே பேசக்கூடாது என குறிப்புரைக்கப்பெற்று, மேலவை உறுப்பினரைப் பற்றிக் குறிப்பிடப்பெற்ற வார்த்தை நீக்கப்பெற்றது.

1985 XIII 370

மானியக் கோரிக்கை விவாதத்தின்போது அவையில் இல்லாதவர்களை (நடிகர்களைப்பற்றி) பேசிய குறிப்பிட்ட பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1987 XXXVI 72

முதல் அமைச்சரைப் பற்றி குறிப்பிட்ட பகுதி நீக்கப்பெற்றது.

1985 VII 397, 398

விவாதத்தில் பங்குகொள்ளும் உறுப்பினர்கள் தனிப்பட்டவர்களின் பெயரைக் குறிப்பிடக்கூடாதென்று குறிப்புரைக்கப்பெற்று, அவ்வாறு குறிப்பிட்டது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது.

1986 XX 707

அவையில் இல்லாதோர் குறித்துப் பேசியது—தொடர்ச்சி

ஜனாதிபதி, உதவி ஜனாதிபதி பற்றி பேசக் கூடாது என்று மரபும், விதியும் தெளிவாக இருக்கிறது என்று குறிப்புரைக்கப்பெற்று, ஓர் உறுப்பினர் பேசிய பேச்சின் சில பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றன.

1987 XLV 487

அனுமதியின்றிப் பேசியது—

அமைச்சரின் அறிக்கையில் தவறு இருப்பதாகக் கருதினால் தலைவரின் அனுமதி பெற்றுப் பேசவேண்டும். அவ்வாறு அனுமதியின்றிப் பேசிய பகுதிகள் நீக்கப் பெற்றன.

1986 XVII 240, 241, 242, 243

அனுமதியின்றி ஒரு பிரச்சினையை அவையில் சிலர் எழுப்ப முற்பட்டு கூச்சல் குழப்பம் விளைவித்தபோது இவையெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது என்று குறிப்புரைக்கப்பெற்றது.

1987 XXXIX 351

ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப விரும்பும் உறுப்பினர்கள் முன்கூட்டியே தலைவரிடம் தெரிவித்து அனுமதியைப் பெற வேண்டும் என்று குறிப்புரைக்கப் பெற்று, அவ்வாறு தலைவரிடம் முன் அனுமதி பெறாமல் எழுப்பப் பெற்ற ஒழுங்குப் பிரச்சினைக்கு அனுமதி மறுக்கப் பட்டது.

1986 XXIX 258

ஓர் உறுப்பினர் ஒட்டுமொத்தமாக அதிகாரிகளைப் பற்றி குறைகூறிப் பேசியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''முன் கூட்டியே என்னிடம் அனுமதி பெற்றுப் பேச வேண்டும். அப்படி அனுமதி பெற்றுப் பேசியிருந்தால் அமைச்சர் அதற்குப் பதில் சொல்ல முடியும். அனுமதி பெறாமல் பேசியதால் அப்பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.''

1986 XXIX 318





அனுமதியின்றிப் பேசியது—தொடர்ச்சி

ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை திடீரென எழுப்பியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''என் அனுமதியின்றி பேசக் கூடாது. என் அறைக்கு வாருங்கள். பேசிக்கொள்ளலாம். உறுப்பினர் 'point of order' என்பதாக எழுப்பிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.''

1985 VIII 38

கேள்வி நேரத்துக்குப் பின்னர் அனுமதியின்றி பேசியவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டன.

1987 XXXIX 349

தலைவர் அனுமதியுடன்தான் எழுந்து பேச வேண்டும் என குறிப்புரைக்கப் பெற்று, அனுமதி இல்லாமல் பேசிய பகுதிகள் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கம் செய்யப் பெற்றன.

| | | |
|---|---|---|
| 1986 | XVII | 384 |
| | XVIII | 654, 655, 656, 657 702 |
| | XX | 535 |
| | XXV | 51, 77, 78, 371, 372, 375, 376 |
| | XXIX | 163, 318 |
| | XXXI | 421, 427-428 |
| 1987 | XXXIII | 74 |

தலைவருடைய அனுமதி பெறாமல் யார் பேசினாலும் அது அவைக் குறிப்பில் ஏறாது

1986 XVI 361

வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றபின், ஓர் உறுப்பினர் ஒரு பிரச்சினை குறித்து தகவல் கோரியபோது, முன்னறிவிப்பின்றி கேட்கக் கூடாது என்று குறிப்புரைக்கப் பெற்று, அப்பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றது.

1987 XXXIII 31

நீக்கம்—தொடர்ச்சி

**ஆதாரமின்றிப் பேசியது—**

ஆதாரம் இல்லாமல் சொல்லக் கூடாது. ஆதாரம் இருந்தால் தலைவரிடம் முன்கூட்டி காட்டிவிட்டு அவரது முன் அனுமதியைப் பெற்றுத்தான் அவையில் பேசவேண்டும் என குறிப்புரைக்கப்பெற்று அவ்வாறு சொன்ன குற்றச்சாட்டு நீக்கப்பெற்றது.

1985 XIII 143
1986 XVI 246

ஆதாரம் இல்லாமல் சொல்லப்பட்டவை நீக்கப்பெற்றன.

1986 XVI 246
1987 XLIII 786, 787

இன்னொரு அவையில் பேசியதை இங்கே சொல்லக்கூடாது. அது ஆதாரமாகாது.

குற்றச் சாட்டுக்குத் தகுந்த ஆதாரம் கொடுக்க வேண்டும். இல்லையென்றால், அப்பகுதி அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படும் என குறிப்புரைக்கப்பெற்று நீக்கப்பெற்றது.

1985 X 239—240

உண்மைக்குப் புறம்பான தகவல் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1987 XLIII 315, 316

குற்றச்சாட்டைச் சொல்லும்பொழுது ஆதாரம் கொடுக்காமல் பேச முடியாது என்று குறிப்புரைக்கப்பெற்று, அவ்வாறு பேசியவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

1987 XLI 293—294

தலைவரிடம் ஆதாரம் காட்டாமல், தலைவரின் அனுமதியோடு சொல்வதாகக் குறிப்பிடுவது முறையல்ல என குறிப்புரைக்கப்பெற்று, சம்பந்தப்பட்ட பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

1985 XII 327

**ஆளுநரைப் பற்றிப் பேசியது —**

ஆளுநர் வெளியே பேசியது குறித்து பேரவையில் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது என்று குறிப்புரைக்கப்பெற்று, அவ்வாறு பேசப்பட்ட பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1985 XV 143, 144



நீக்கம்— தொடர்ச்சி

**கட்சி பற்றிப் பேசியது**

ஒரு கட்சியை ஒப்பிட்டுச் சொல்லப்பட்ட உதாரணம் வேண்டாம் என்று குறிப்புரைக்கப்பெற்று நீக்கப்பட்டது.

1987 XLVI 639—640

ஒரு கட்சியைக் குறிப்பிட்டு குறை கூறி ஓர் உறுப்பினர் கூறியவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கம் செய்யப்பெற்றன.

1987 XLV 323—32

ஒரு கட்சியைப் பற்றி ஒட்டு மொத்தமாகச் சொல்லப்பெற்ற கருத்துக்கள் நீக்கப்பெற்றன.

1987 XLI 326, 327

கட்சி பற்றி பேசிய விவாதங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

1986 XXII 323

கட்சி விவகாரங்களை அவையில் பேசக்கூடாது என்று குறிப்புரைக்கப்பெற்று அவ்வாறு பேசியவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

1986 XXVI 641, 642

**கற்பனையாகப் பேசியது—**

ஓர் உறுப்பினர் பேசுகையில் தெரிவித்த ஒரு கருத்து கற்பனையாகச் சொல்லப்பட்டது என்று குறிப்புரைக்கப்பெற்று. அவைக் குறிப்பிலிருந்து நீக்கம் செய்யப்பெற்றது.

1987 XXXVIII 103

கவன ஈர்ப்பில் அமைச்சரிடத்தில் பதில் பெறுகிற அளவிற்குக் கேள்வி கேட்கலாம். உறுப்பினர் கற்பனையில் தோன்றியதையெல்லாம் கேட்கக் கூடாது என்று குறிப்புரைக்கப்பெற்று, அவ்வாறு கற்பனையாகப் பேசப்பட்ட பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கம் செய்யப்பெற்றன.

1987 XLI 574

யூகத்தின் அடிப்படையில் தகவல் கோரக்கூடாது என்று குறிப்புரைக்கப்பட்டு அவ்வாறு பேசிய பகுதி நீக்கப்பெற்றது.

1986 XXVII 224

328-77—53

**குற்றஞ்சாட்டிப் பேசியது—**

அதிகாரிகளைப் பற்றி ஒட்டு மொத்தமாகச் சொன்னவை நீக்கப்பெற்றன.

1985 XI 296
1987 XXXVI 75

அமைச்சரின் அறிக்கைமீது விளக்கம் கோர விரும்பும் உறுப்பினர் குற்றச்சாட்டு கூறாமல் கேள்வியாகக் கேட்கவேண்டும். குற்றச்சாட்டு கூறக் கூடாது என்று குறிப்புரைக்கப் பெற்று, அவ்வாறு குறிப்பிட்ட பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1986 XXVIII 310

அரசியல் சட்டத்தை இயற்றியவர்களைக் குறை கூறி ஓர் உறுப்பினர் பேசிய பகுதிகள் நீக்கப்பெற்றன.

1987 XLI 711–712

ஆதாரம் கேட்பதைக் குறை கூறிப் பேசிய பகுதி நீக்கப்பட்டது.

1987 XL 784, 785

ஆளுநர் உரை மீதான விவாதத்தில் இந்திப் பிரச்சினை பற்றிய அரசின் தீர்மானம் பற்றிக் குறிப்பிடப்பட்டபோது. ''அரசாங்கம் நல்ல நோக்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறது, அதற்கு நீங்கள் உள்நோக்கம் கற்பிப்பது தவறு'' என்று குறிப்புரைக்கப் பெற்று, உள் நோக்கம் கற்பித்துப் பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1987 XXXIII 333, 337–338

உள் நோக்கம் கற்பிக்கிற மாதிரி பேசப்பட்ட வார்த்தைகள் தேவையில்லையென குறிப்புரைக்கப்பட்டு, அவை, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

1985 XIV 278, 279

உறுப்பினர்கள் தலைமைச் செயலாளரது நடவடிக்கையைப் பற்றி விமர்சிக்கலாமே ஒழிய, அவரைப் பற்றி விமர்சிக்கக் கூடாது என குறிப்புரைக்கப்பெற்று சில பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

1985 VII 395–396

உறுப்பினர் கூறிய இருபொருள் கொண்ட வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றன.

1987 XLI 279, 280
XLIII 846, 847





**குற்றஞ்சாட்டிப் பேசியது — தொடர்ச்சி**

உறுப்பினர் வராததற்குக் காரணம் சொல்லத் தேவையில்லையென குறிப்புரைக்கப்பெற்று அவ்வாறு கூறப்பெற்றவை நீக்கப் பெற்றன.

1985 X 326

எந்த அமைச்சரைப் பற்றியாவது குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்றால் முன்னாலேயே நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்று விதி இருப்பதால் முன்னறிவிப்பின்றி குற்றஞ்சாட்டிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றது.

1985 XII 351

எந்தக் கருத்தைச் சொல்லும்போதும் உறுப்பினர்கள் உள் நோக்கம் கற்பித்துப் பேசக் கூடாது என்று குறிப்பிடப்பட்டு, அவ்வாறு குறிப்பிடப்பட்ட பகுதி நீக்கப் பெற்றது.

1986 XIX 336

ஒரு உறுப்பினர் பேசியதற்கு இன்னொரு உறுப்பினர் நோக்கம் கற்பிக்கக் கூடாது என்று குறிப்புரைக்கப் பெற்று, அவ்வாறு நோக்கம் கற்பித்துக் கூறியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றது.

1987 XLVI 331

ஒரு குறிப்பிட்ட துறையைப் பற்றிய கேள்விகள் வராததற்கு என்ன காரணமென்று ஓர் உறுப்பினர் வினவி சில கருத்துக்களைத் தெரிவித்தபோது தலைவர் குறிப்புரைத்ததாவது:

''வினாப் பட்டியலைச் சட்டமன்றப் பேரவைச் செயலகம் தயாரிக்கிறது. 'தலைவரின் அனுமதியோடு செய்யப்படுகின்ற பணி இது. ஆகவே இப்போது நீங்கள் குறிப்பிட்டது தலைவர் பணியில் குறை சொல்லுவதுபோல் அமைந்திருப்பதால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.''

1986 XIX 124

ஒரு தலைவரைப் பற்றி குறிப்பிடப்பட்ட சில வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

1987 XLI 414, 415

ஓர் அமைச்சரைப் பற்றி உள் நோக்கத்தோடு பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1987 XXXVI 90–91
XXXVII 590
XL 447–448

நீக்கம்—தொடர்ச்சி

குற்றஞ்சாட்டிப் பேசியது—தொடர்ச்சி

ஓர் உறுப்பினர் அரசாங்கத்தைத் தரக் குறைவாகப் பேசிய பகுதி நீக்கப்பட்டது.

1987 XL 443—444

ஓர் உறுப்பினர் கூறிய குற்றச்சாட்டும், அதற்கு அமைச்சர் சொன்ன பதிலும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

1987 XXXV 595

ஓர் உறுப்பினர் கூறிய குற்றச்சாட்டை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியது முறை அல்ல என வேறோர் உறுப்பினர் குறிப்பிட்ட போது, ''ஒரலாக ஸ்வீப்பிங்காகச் சொல்லிவிட்டுப் போவதென்றால்,

It is not proper. You give me evidence, I will allow after seeing it. I have to protect the people even outside The Officer is also citizen of India எனக் குறிப்புரைக்க பெற்று, அப்பகுதி அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1985 XII 613

ஓர் உறுப்பினர் தம் உரையில் 'ஒரு பழமொழியைச் சொல்லி, ஒரு கட்சியை உவமையாகக் கூறியபொழுது, பழமொழியை வேண்டுமானால் உறுப்பினர் உபயோகப்படுத்துகிற முறையில் சொல்லலாம். கட்சியை இணைத்து அதைக் கூறக் கூடாது என்று குறிப்புரைக்கப்பெற்று, அவ்வாறு குறிப்பிட்ட பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1987 XXXV 259—260

ஓர் உறுப்பினர் பேசும்பொழுது தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டு தவறான குற்றச்சாட்டு என்றும், உண்மைக்குப் புறம்பான தகவல் என்றும், உறுப்பினர் மனசாட்சிக்கு விரோதமாக தகவல் சொல்கிறார் என்றும் குறிப்புரைக்கப்பெற்று, குற்றச்சாட்டு கூறப்பட்ட பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1987 XLI 602

குற்றஞ்சாட்டிப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1986 XXVII 281, 282, 283, 284.
1987 XXXVII 848—849 860



நீக்கம்—தொடர்ச்சி

குற்றஞ்சாட்டிப் பேசியது—தொடர்ச்சி

குற்றச்சாட்டு இல்லாமல் கேள்வி கேட்க வேண்டுமென குறிப்புரைக்கப் பெற்று அவ்வாறு குற்றச்சாட்டாக அமைந்த பகுதி நீக்கப்பெற்றது.

1985 VI 326—327
VIII 7
1986 XVI 461
1987 XXXV 8—9

குறிப்பிட்டுச் சொல்லாமல், ஒட்டுமொத்தமாக குற்றச்சாட்டை சுமத்துதல் கூடாது என குறிப்பிடப்பட்டு அப்பகுதி நீக்கப்பெற்றது.

1985 IV 485—486

சட்டம்-ஒழுங்கு பற்றி குறிப்பிட்ட சம்பவம் ஏதாவது இருந்தால் சொல்லலாம். பொதுவாகச் சொன்னால் அது நாளிதழில் தலைப்புகள் கொடுக்கப்பட்டு வெளியிடப்படும் என்று குறிப்புரைக்கப்பெற்று அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1986 XVII 263

சம்பந்தப்பட்ட அமைச்சர் அவையில் இல்லாததால் கான்ட்ரொவர்சி தேவையில்லை என்று குறிப்புரைக்கப்பெற்று, குற்றஞ்சாட்டிப் பேசிய பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

1985 XIII 371

தகவல் கோரும் போது தலைவரின் அனுமதி பற்றிக் கூறப்பட்ட ஒரு வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றது.

1987 XLV 124, 131

தமிழக நிர்வாகம் பற்றி குற்றஞ்சாட்டி, பத்திரிகையில் மறைமுகமாக வெளிவந்த செய்தியைச் சுட்டிக் காட்டி ஓர் உறுப்பினர் தகவல் கோரிய பகுதி நீக்கப் பெற்றது.

1987 XXXVII 72

நீதித்துறை பற்றி ஒட்டுமொத்தமாக குறிப்பிட்டுப் பேசக் கூடாது என்று குறிப்புரைக்கப்பெற்று, அவ்வாறு பேசிய பகுதி நீக்கப்பெற்றது.

1986 XXI 80

நீக்கம்— தொடர்ச்சி

குற்றஞ்சாட்டிப் பேசியது— தொடர்ச்சி

நீதிபதியைப் பற்றிக் குறிப்பிடும்போது பொதுவாக 'நீதிபதி' என்றுதான் சொல்ல வேண்டும் என்று குறிப்புரைக்கப் பெற்று, வேறு வகையில் குறிப்பிடப்பட்ட சில சொற்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

1985 IX 564

நீதிமன்றத் தீர்ப்பு பற்றி பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1987 XXXIX 90

நீதிமன்றம் பற்றி ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட ஒரு வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1987 XXXIX 139
XL 775

நேரம் கருதி தலைவர் அடுத்த உறுப்பினரைப் பேச அழைத்ததற்கு ஓர் உறுப்பினர் ஆட்சேபணை தெரிவித்து பேசியபோது, அப்பகுதியை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு ஆணையிட்டுக் குறிப்புரைத்ததாவது:

"சேரை நோக்கிக் குற்றச்சாட்டு சொன்னால் சேர் நிச்சயமாகப் பதிலளிக்கும். அதிலே சேர் தவறவே தவறாது. சொல்லப்படுகிற குற்றச்சாட்டை சேர் கேட்டுக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை.

..நேரம் ஒதுக்குவதில் சேருக்கு எந்த வித்தியாசமும் கிடையாது.

..நேரம் ஒதுக்குவதுபற்றி அலுவல் ஆய்வுக் குழுவில் பேசிக்கொள்ளலாம்."

1987 XL 129, 130

பத்திரிகையில் வந்த செய்தியை ஆதாரமாகக் கொண்டு ஓர் உறுப்பினர் குற்றச்சாட்டுக் கூறிய பகுதியும், அதற்கு அமைச்சரும் மற்ற உறுப்பினர்களும் விளக்கம் அளித்த பகுதியும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

1987 XLII 417—420

பேரவைத் தலைவரைப் பற்றி குறிப்பிட்டவை நீக்கப் பெற்றன.

1985 XII 613
1986 XXI 1
1987 XL 130





நீக்கம்— தொடர்ச்சி

குற்றஞ்சாட்டிப் பேசியது— தொடர்ச்சி

பொதுவாக காவல் துறையைப் பற்றி கூறப்பட்ட குற்றச் சாட்டுப் பகுதிகள் நீக்கப்பெற்றன.

1987 XXXVI 572

முதலமைச்சரின் சுற்றுப்பயணச் செலவு குறித்து பேசப் பட்ட பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

1987 XXXIX 709—712

'ஸ்வீப்பிங்காக' குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. அவ்வாறு சொல்வதற்கு அனுமதித்தால் ஆளும் கட்சியினரையும் அனுமதிக்க வேண்டி வரும். குற்றச்சாட்டுகளை 'ஸ்பெசிபிக்காக' த்தான் சொல்ல வேண்டும்.

'ஸ்வீப்பிங்காக சொல்லப்பட்டவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றன.

1985 VIII 842
1986 XVII 400
XXI 598
XXIV 91
XXIX 301, 302
1987 XXXII 355
XXXIV 256

தவறான தகவல்—

ஓர் உறுப்பினர் தெரிவித்த தவறான தகவல்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

1987 XXXII 391
XL 776—778

தீர்ப்புக்குப் பின் பேசியது—

ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து தலைவர் தீர்ப்பு வழங்கிய பின் பேசப்பட்டவை நீக்கப்பெற்றன.

1986 XVI 94

தலைவரின் தீர்ப்பிற்குப் பிறகு ஓர் உறுப்பினர் பேசியவை நீக்கப்பெற்றன.

1986 XXIII 304—305

தலைவரின் தீர்ப்பு சரியில்லை என்று பேசியது தவறாகும் என்று குறிப்புரைக்கப்பெற்று அது குறித்த பகுதி நீக்கப் பெற்றது.

1986 XV 143

**தீர்ப்புக்குப் பின் பேசியது—தொடர்ச்சி**

பேரவைக்குக் கொடுத்த நோட்டீஸ் பற்றியும், அதை ரிஜெக்ட் செய்த காரண-காரியம் பற்றியும் பேசக் கூடாது என்று குறிப்புரைக்கப்பெற்று, அவ்வாறு பேசிய பகுதி நீக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1986 | XXIII | 379, 380 |

**தொடர்பற்ற கேள்வி—**

கேள்வி நேரத்தின்போது சில உறுப்பினர்கள் குறிப்பிட்ட வாசகங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1987 | XXXIII | 29, 30 |

மூலக்கேள்விக்குத் தொடர்பில்லாத துணை வினாவைக் கேட்கக்கூடாது என்று குறிப்புரைக்கப்பெற்று, அவ்வாறு கேட்கப்பட்ட வினா அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றது.

| | | |
|---|---|---|
| 1987 | XXXII | 221 |
| | XXXV | 177 |
| | XXXVIII | 411 |
| | XL | 23 |

**தொடர்பின்றிப் பேசியது—**

அவைக்குறிப்பிலிருந்து ஓர் உறுப்பினர் பேசிய சில பகுதிகளை நீக்குமாறு குறிப்புரைத்த தலைவர் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாம் என்றும் அவையின் முன்புள்ள மானியத்திலே மட்டும் பேசவேண்டும் என்றும் உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார்.

| | | |
|---|---|---|
| 1986 | XXII | 945 |

அவை நடவடிக்கைக்குத் தேவையில்லாத குறுக்கீடுகள் நீக்கப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1987 | XXXVI | 68 |

அவை முன் இருக்கக்கூடிய தனித் தீர்மானத்தைப் பற்றி மட்டும் பேச வேண்டும்; மற்ற அரசியல் எல்லாம் பொதுக்கூட்டங்களில் பேசலாம் என்று குறிப்புரைக்கப் பெற்று அவ்வாறு பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1986 | XXViIl | 348 |





**தொடர்பின்றிப் பேசியது—தொடர்ச்சி**

அவையின் முன்னுள்ள பொருளுக்குத் தொடர்பில்லாத ஒரு பிரச்சினையை இணைத்துப் பேசுவது சரியல்ல என்று குறிப்புரைக்கப்பெற்று அப்பகுதி நீக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1985 | VII | 631 |

ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போது ஒரு பிரச்சினை பற்றி அமைச்சர் ஒருவரும், உறுப்பினர் ஒருவரும் பேசியதை பேரவைக்கு வெளியில் பேசப்பட வேண்டியவை என்பதாகக் குறிப்புரைத்த தலைவர் அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்கம் செய்து ஆணையிட்டார்.

| | | |
|---|---|---|
| 1987 | XXXiII | 51–52 |

ஆளுநர் உரைமீதான விவாதத்தின்போது, ஓர் உறுப்பினர் அதற்கு சம்பந்தம் இல்லாமல் பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1987 | XXXiII | 326 |

'ஆனந்த விகடன்' மீதான உரிமைப் பிரச்சினை குறித்த விவாதத்தில் வேறு பத்திரிகைகள் பற்றி பேசிய பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1987 | XXXVII | 97, 99 |

இந்தியப் பிரதமரைப்பற்றி குறிப்பிட்டுச் சொன்ன சில வார்த்தைகள் பொருத்தமாக இல்லை என குறிப்புரைக்கப்பட்டு நீக்கப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1985 | V | 300 |

உரிமை மீறல் பிரச்சினை குறித்த விவாதம் நடைபெற்ற போது, அப்பொருள் தவிர, மற்றைய விவாதங்கள் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1985 | IX | 78 |
| 1986 | XXIX | 164 |

ஒழுங்குப் பிரச்சினை என்ற முறையில் எழுப்பப்பெற்ற பிரச்சினையின் பொருள் ஒழுங்குப் பிரச்சினையின் கீழ் வராததால் அது குறித்துப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1986 | XIX | 353 |
| | XXI | 41 |
| | XXV | 555 |
| | XXVI | 623 |
| | XXVIII | 72 |
| | | 464—465 |
| | | 469 |

தொடர்பின்றிப் பேசியது—தொடர்ச்சி

ஓர் உறுப்பினர் தம் உரையில் அமைச்சரவை சம்பந்தமாகப் பேசியவை நீக்கப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1987 | XXXIV | 591 |

சட்டமுன்வடிவின் மீதான விவாதத்தில் உறுப்பினர் ஒருவர் பேசும்போது குறிப்பிட்ட சில வார்த்தைகள் விளம்பரத்திற்காக சொல்லப்பட்டதாகக் குறிப்புரைக்கப்பெற்று, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1987 | XLVI | 319 |

சட்டமுன்வடிவின் மீதான விவாதத்தில் பங்கு கொள்ளும் உறுப்பினர் தனிப்பட்ட விவகாரங்களைப் பற்றி பேசக் கூடாது என்று குறிப்புரைக்கப்பெற்று அவ்வாறு பேசிய பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1986 | XXIV | 141 |

சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது, அதைப்பற்றி மட்டும் பேச வேண்டும் என்று குறிப்புரைக்கப்பெற்று 'எமர்ஜென்சி' பற்றி பேசப்பட்டவை நீக்கப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1986 | XX | 337 |

சட்டமுன்வடிவுக்குத் தொடர்பானவைகளை மட்டும் பேச வேண்டும் என்று குறிப்புரைக்கப்பெற்று சட்டமுன்வடிவுக்குச் சம்பந்தம் இல்லாமல் பேசப்பட்ட பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1986 | XXIX | 307 |
| 1987 | XLIII | 778 |
| | XLVI | 276 |

திட்டக் குழுவிலே தெரிவிக்கப்பட்ட விவரங்களைப் பேச வேண்டாம் எனக் குறிப்புரைக்கப்பெற்று, அவ்வாறு பேசப்பட்ட பகுதி நீக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1985 | VIII | 434 |

பாயின்ட் ஆஃப் ஆர்டரும் இல்லை, பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷனும் இல்லை என்பதால் அவ்வாறு எழுப்பப்பெற்று பேசப்பட்டவை நீக்கப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1987 | XXXVII | 940—941 |







தொடர்பின்றிப் பேசியது—தொடர்ச்சி

பேரவைச் செயலகத்தைப்பற்றி மறைமுகமாகக் கூட அவையில் பேசக்கூடாது என்று குறிப்புரைக்கப்பெற்று அவ்வாறு பேசப்பட்ட பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1985 | VII | 426 |

மானியம்/துணை மானியக் கோரிக்கையில் பேசும்போது ஓர் உறுப்பினர் தொடர்பின்றிப் பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கம் செய்யப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1986 | XXXVI | 244, 333 |
| 1987 | XLV | 492 |

வீடியோ திருட்டு தடுப்பு குறித்த சட்டமுன்வடிவின் மீது ஓர் உறுப்பினர் பேசியபோது, தொலைக்காட்சி பற்றி பேசிய பகுதி நீக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1987 | XLVI | 328,329 |

நீக்கியதைப் பேசியது—

அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றதை திரும்பவும் குறிப்பிடுதல் கூடாது என குறிப்புரைக்கப்பெற்று அப்பகுதி நீக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1985 | VII | 685, 686 |
| 1986 | XVIII | 544 |
| | XXVIII | 351 |
| 1987 | XXXIII | 141 |
| | XLII | 701 |

சபை சுமுகமாக நடக்கவும், விவாதம் ஒழுங்காக நடக்கவும் உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும். அனுமதி மறுக்கப்பெற்ற பொருளைக் குறித்து உறுப்பினர்கள் அவையில் பேசக்கூடாது. உறுப்பினர் கேள்வியைக் குறுக்கு வழியில் கேட்டு அதே வழியில் தலைமையும் கேட்டால் உறுப்பினரால் பதில் சொல்ல முடியாது. சபையின் விவாதம் வேறு திசையில் போக அனுமதிக்க முடியாது. இப்பிரச்சினைகள் பற்றி பேசப்பட்டவை ஏற்கனவே நீக்கம் செய்யப்பட்டுள்ளனவாதலால் இப்போது பேசப்பட்டவையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கம் செய்யப் பெறுகின்றன.

| | | |
|---|---|---|
| 1987 | XLV | 493, 495 |

**நீக்கியதைப் பேசியது— தொடர்ச்சி**

சில உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்யப்பெற்ற பிரச்சினை பற்றி ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியபோது, தலைவர் அளித்த குறிப்புரையாவது :

''அதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் வராது. அவையெல்லாம் நேற்று 'எக்ஸ்பஞ்ச்' பண்ணியாகிவிட்டது. நேற்றைய தினம் உங்கள் அனைவருடைய வேண்டுகோளுக்கு இணங்க அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டவை பத்திரிகையில் வந்திருந்தால் எழுதிக் கொடுங்கள், நடவடிக்கை எடுக்கலாம்.

மீண்டும் அவற்றை எல்லாம் அவைக் குறிப்பில் ஏற்ற வேண்டாம்.''

ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றது.

| | | |
|---|---|---|
| 1987 | XXXIII | 465–469, 472 |

நீக்கியதையே திரும்பத் திரும்ப பேசக் கூடாது. சபையில் பேசக் கூடாத வார்த்தை என்பதால் அது நீக்கப்பட்டது. அதை எப்படியாவது 'ரெக்கார்டு' செய்ய வேண்டுமென்ற முறையில் பேசக் கூடாது.

..மானியத்தைப் பற்றிப் பேச வேண்டும். சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம் என்ற அக்கறையோடு அவையில் பேச வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1987 | XLI | 280 |

'வணிக ஒற்றுமை' திங்கள் இதழ் மீதான உரிமை மீறல் பிரச்சினை குறித்த அவை உரிமைக் குழுவின் அறிக்கையைப் பேரவையில் வைத்தபோது அப்பத்திரிகையில் எழுதப்பட்டிருந்தது பற்றி குறிப்பிடப்பட்டவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1985 | XI | 47 |

**விசாரணையிலுள்ளது பற்றிப் பேசியது—**

போலீஸ் கமிஷனர் பற்றிப் பேசியது மற்றும் நீதிமன்றத்தில் வழக்கில் இருக்கும் பொருள் பற்றிப் பேசியவை நீக்கப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1985 | II | 300 |
| 1986 | XVI | 84, 309–310 |
| | XX | 725–727 |
| | XXIII | 405, 413 |
| | XXV | 628–629 |
| 1987 | XXXII | 124, 125 126, 128, 129, 284 |





**விசாரணையிலுள்ளது பற்றிப் பேசியது— தொடர்ச்சி**

விசாரணையில் இருக்கும் ஒரு பொருள் குறித்து விளக்கமாகப் பேசக் கூடாது. காவல்துறையினர் நடந்து கொண்ட முறையினைப் பற்றி விமர்சிக்கலாம். குறிப்பிட்ட ஒரு வழக்கு எந்த வகையில் போடப்பட்டது என்பது பற்றி குற்றம் சாட்டப்பட்டவர் சார்பில் உறுப்பினர் பேசக் கூடாது. வழக்கு நீதி மன்றத்திலேதான் நிரூபிக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1986 | XXV | 538 |

**வெளியே பேசியது—**

ஆளுநர் உரைமீதான விவாதத்தின்போது, ஓர் உறுப்பினர் பொதுக் கூட்டம் பற்றிப் பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1987 | XXXIII | 327–328 |

இன்னொரு அவையில் பேசியதைப் பற்றி இந்த அவையில் விவாதிக்கக் கூடாது, இங்கே அதற்குப் பதில் சொல்லக் கூடாது என்று குறிப்புரைக்கப்பெற்று அவ்வாறு பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றது.

| | | |
|---|---|---|
| 1986 | XXVIII | 349 |

சட்டமுன்வடிவின் மீது உரையாற்றுகின்ற உறுப்பினர் வெளியே பேசப்பட்டதை எல்லாம் அவையிலே குறிப்பிடக் கூடாது என்று குறிப்புரைக்கப்பெற்று அவ்வாறு குறிப்பிட்ட பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1986 | XXVIII | 458 |

பாராளுமன்றத்தில் பேசப்பட்ட ஒரு 'டிஸ்பியூட்டைப்' பற்றி மன்றத்தில் எழுப்பக் கூடாது என்று குறிப்புரைக்கப்பட்டு, அப்பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றது.

| | | |
|---|---|---|
| 1986 | XVIII | 235 |

வெளியே சொன்னதை மேற்கோள்காட்டி பேசக்கூடாது என்று குறிப்புரைக்கப்பட்டு அவ்வாறு பேசிய பகுதி நீக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1987 | XL | 786–787 |

வெளியே பேசியது—தொடர்ச்சி

வெளியே நீதிமன்றத்தைப் பற்றி பேசியதை அவையில் குறிப்பிடக் கூடாது என்று குறிப்புரைக்கப்பட்டு, அவ்வாறு பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது.

1987 XL 801

நீக்கம்—ஏனையவை—

அவையின் மரபுகளுக்கு மாறாகப் பேசுவது நல்லதல்ல என குறிப்புரைக்கப்பெற்று, அவ்வாறு பேசப்பெற்றவை நீக்கப் பெற்றன.

1985 XIII 73–74

ஏப்ரல் முதல் நாளையொட்டி சில உறுப்பினர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்தபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"இன்று ஏப்ரல்-1 முட்டாள்கள் தினம்.

.. முட்டாள்கள் தினம் சம்பந்தப்பட்ட விவாதங்கள் எல்லாமே நீக்கப்படுகின்றன"

1987 XXXVI 35

ஓர் உறுப்பினர் தம் உரையில் சில பெயர்களையும், ஜாதியையும் இணைத்துக் குறிப்பிடுகையில் இன்னொரு உறுப்பினர் அதை ஆட்சேபித்தபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

'உறுப்பினர் பெயர்களோடு ஜாதியையும் இணைத்துச் சொன்னதில் ஜாதியைக் குறிப்பிட்டு சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.'

1985 VIII 889

சில பத்திரிகைகள் விதிகளுக்குட்பட்டு இங்கே நீக்கப்படுகின்ற பகுதிகளை வேண்டுமென்றே பிரசுரிப்பதை சுட்டிக் காட்டி பின்வருமாறு தலைவர் குறிப்புரைத்தார :

"பத்திரிகையாளர்களுக்கென்று பத்திரிகையாளர் சங்கம், நிருபர்கள் சங்கம் ஆகியவைகள் இருக்கின்றன. இந்த விதிகளைக் கடைபிடிக்க வேண்டும் என்பதைப் பத்திரிகை





யாளர்கள் எல்லோரும், எல்லா பத்திரிகைகளுக்கும் அறிவுறுத்த வேண்டும் என்று வேண்டுகோளாக விடுகிறோம். இந்த வேண்டுகோளும் மீறப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுப்பதைத் தவிர, வேறு வழியே இல்லை என்பதையும் பத்திரிகையாளர்களுக்கு இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்."

1987 XXXVI 73

தனியாகப் பேசிக் கொள்வதை அவைக்குள்ளே பேசக் கூடாது என்று குறிப்புரைக்கப்பெற்று, அவ்வாறு பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1987 XXXIII 508

மாநில அரசு நடுவண் அரசுக்கு விண்ணப்பம் அனுப்புவது பற்றி குறிப்பிடுகையில் பயன்படுத்தப்பெற்ற ஓர் வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1987 XL 637

மைனாரிட்டி சம்பந்தமான பிரச்சினையைப் பற்றி ஓர் உறுப்பினர் கூறிய கருத்தினை இன்னொரு உறுப்பினர் ஆட்சேபித்தபோது பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது :

"இது ரொம்ப 'சென்சிட்டிவ்' பிரச்சினை. எனவே, இது பற்றிய கருத்துக்களைச் சொல்லும்போது பொறுப்போடு சொல்ல வேண்டும். ஆகவே மைனாரிட்டி சமூகம் பற்றி குறிப்பிட்டுப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது."

1985 VIII 102–103

நீக்கம்—நடைமுறைகள்—

அவைக் குறிப்பிலிருந்து ஒரு பகுதியைத் தலைவர் நீக்கி ஆணையிட்ட போது அவ்வாறு நீக்கியதற்கான காரணம் என்ன என்றும், அதில் 'அன்பார்லிமென்டரி' வார்த்தைகள் இருக்கின்றனவா என்றும் ஓர் உறுப்பினர் வினவிய போது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"வேறு கட்சியினைச் சார்ந்த உறுப்பினர்களின் கருத்து பற்றி சொல்ல வேண்டியதில்லை என்பதால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். உடன்படாத

சில கருத்துக்களைப் பேசும்போது நீக்கித்தான் ஆக வேண்டியதிருக்கிறது. பேசும்போதே சற்றுயோசித்து பேசினால் பிரச்சினை வராது.''

1986 XXVIII 351, 352, 355

அவையின் நடவடிக்கைகளில் தேவையில்லாத வாதம் வருகிறது என்று கருதினால் அதை நீக்குவதற்குத் தலைவருக்கு உரிமை இருக்கிறது.

1986 XVI 437

ஒரு குறிப்பிட்ட பிரச்சினை பற்றிய பேச்சை நீக்காததற்கு தம்முடைய உணர்வு தான் காரணம் என்று தலைவர் குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டி ஓர் உறுப்பினர், அவையில் பிரச்சினைகளை எழுப்ப தலைவர் தினமும் அனுமதித்து பிறகு நீக்கிவிடுவதற்கும் அதுதான் காரணமா எனக் கேட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''நான் அதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அப்படி கேட்பது முறையல்ல. என்னுடைய உணர்வை வெளிப்படுத்த வேண்டிய நேரத்தில் வெளிப்படுத்துவேன். வேண்டாத நேரத்தில் வெளிப்படுத்த மாட்டேன். அது என்னுடைய உரிமை. மனிதனுடைய உரிமை.''

1987 XLV 447

ஓர் உறுப்பினர் பத்திரிகையில் வந்த செய்தியைக் குறிப்பிட முனைந்த போது, ''இந்த அவையில் பிரஸ் ரிப்போர்ட்டை வைத்து நாம் விவாதிப்பதே கிடையாது'' என்று குறிப்புரைக்கப்பெற்று அவ்வாறு குறிப்பிடப்பெற்ற பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1987 XXXV 583

தாம் பேசிய பேச்சில் சில பகுதிகள் நீக்கப்பட்டு இருப்பது குறித்து ஓர் உறுப்பினர் எழுப்பிய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' குறிப்புகளை என்னிடத்தில் கொடுத்தால் ஒப்பிட்டுப் பார்த்து தவறு இருக்கிறதா என்று பார்க்கிறேன். தவறு நேர்ந்திருந்தால் அதைத் திருத்த முடியும்.''

1986 XXX 55–56



நீக்குகிற மாதிரி உறுப்பினர்கள் பேசக் கூடாது. அதை தவிர்த்தால் நன்றாக இருக்கும்.

1986 XXX 230

பேசிய எந்தப் பகுதியும் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெறுதல் கூடாது என்றால், உறுப்பினர்கள் ஒரு கட்டுப்பாட்டோடு பேசுதல் வேண்டும் எனக் குறிப்பிட்டு அதற்கு மாறாகப் பேசிய பகுதி நீக்கப்பெற்றது.

1985 II 293

**நீதிமன்றத் தீர்ப்பு—(சென்னை சுக்கிராசங்கி மற்றும் சந்தலால் மீதான வழக்கு)**

1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7 ஆம் நாள் அன்று நீதி நிர்வாகம் குறித்த மானியக் கோரிக்கை விவாதத்தில் ஓர் உறுப்பினர் பேசும்போது, சென்னை மின்ட் தெருவிலே வாணிகம் செய்யும் சுக்கிராசங்கி, சந்தலால் ஆகியோர் மீதான வழக்கில், உயர்நீதிமன்றம் வெக்கேஷனுக்காக மூடியிருக்கும் காலத்தில் யாருக்கும் முன்னறிவிப்புக் கொடுக்காமல், சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்களுக்கோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கோ எந்தவிதமான அவகாசமும் கொடுக்காமல் நீதிபதி ஒருவர் தண்டனை வழங்கியதைச் சுட்டிக்காட்டி, தவறு செய்யும் நீதிபதிகள் மீது நடவடிக்கை எடுக்க வழிவகை இருக்கிறதா என்று கேட்டதையொட்டி எழுந்த விவாதத்திற்குப் பிறகு தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

' அதற்குப் பதில் இதுதான்.

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை.

சான்றோரின் சால்பு என்னும் நிறைந்த பண்பு குறைபடுமானால், இந்தப் பெரிய நிலவுலகமும் தன் பாரத்தைத் தாங்க முடியாமற் போய்விடும். இதுதான் நீதிபதிகளைப் பற்றிச் சொல்லக்கூடியது. அரசியலமைப்புச் சட்டத்தின் 211-வது பிரிவின்படி'

**You cannot discuss about the conduct of the High Court or Supreme Court Judges inside the Legislature.**

.. மிஸ்காண்டக்டைப்பற்றி விவாதிப்பது அந்த அந்த அவையைப் பொறுத்தது. எப்படி என்றால்,

128-77— 25

recently a full Bench of the Madras High Court, in former Chief Justice's case, has passed a judgment that 'receiving bribe is not in the discharge of duty'. ஆகவே 211 அதிலே அடிபடுகிறது.

.. நீதிபதிகள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று யாராவது விரும்புவார்களானால், குடியரசுத் தலைவர் உத்தரவைப் பிறப்பித்து அதற்குப் பிறகு, மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் விவாதித்த பிறகுதான், அவர்களை அந்தப் பதவியிலிருந்து விலகச் செய்ய முடியும். நாம் அதைப் பேசமுடியும்.

.. அரசியல் சட்டத்தில் there are checks and balances. நிர்வாகம் தவறு செய்தால், நிர்வாகம் எக்ஸஸாகப் பண்ணினால் கூட நீதிமன்றம் கட்டுப்படுத்த முடியும். நம்முடைய சட்டமன்ற நடவடிக்கைகளில் கூட சில பிரச்சினைகள் வந்து, நீதிமன்றம் தலையிடக்கூடாது என்று சொல்லியிருந்தாலும் அதைத் தொட்டுப் பார்க்கக் கூடிய 'அதிகாரம் இருக்கிறது என்று அவர்கள் காட்டியிருக்கிறார்கள். நிர்வாகம் ஏதாவது தவறு செய்தால் அதை நீதிமன்றம் கட்டுப்படுத்துகிறது. நம்முடைய சட்டமன்றம்— ஏதாவது நடவடிக்கையில் தவறு என்று சொல்லமாட்டேன், தலையீடு இருந்தால் அவர்கள் தவறு செய்தால்—நிச்சயமாக இந்த அவை தலையிடலாம் என்பது என்னுடைய கருத்து, என்னுடைய எண்ணமும் ஆகும்.

.. இதிலே உறுப்பினர்கள் 234 பேர்களையும் கான்ஃபிடன்ஸிலே எடுத்துக்கொண்டுதான் நான் பேசுகிறேன். யாராவது என்னுடைய 'வியூ'வில் தவறு என்று சொல்லிவிட்டால், I will shed it because I shall take you all with me.

.. ஜுடிஷீயரிக்கு இருக்கிற கான்ஃபிடன்ஸ் மக்கள் மத்தியில் குறைந்து வருகிறது. அப்படி என்றால், 'கான்டக்ட்' பற்றி பேசலாமா என்று ஒரு கேள்வியை நானே போட்டுக் கொண்டேன். இப்போது நீங்கள் சொன்னீர்கள். With regard to misconduct, definitely you can deliberate it any where. Even in public meetings you can attack if there is a grave misconduct. When the conduct of the President is questioned, when the conduct of the Government is questioned, when the conduct of the Chief Minister is questioned and when the conduct of the Ministers is questioned, you can definitely question the conduct or misconduct of the judges, whoever they may be, because we





are all representatives of the people. Our goal is only to serve the people.

Even the Madras Advocates' Association have offered their views in this particular case.

அதிலே இது தவறு என்று அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். The Madras Advocates' Association have also been appraised of the matter. The President of the Advocates' Association has also written to me that it is an illegal judgment and that we can set it aside and set the individual at liberty.

.. இதில் நான் வக்கீல் என்ற முறையில் முழுமையாகச் சொல்லவில்லை; பேரவைத்தலைவர் என்ற முறையில் சொல்கிறேன். இந்த அவைக்கு முழு அதிகாரம் இருக்கிறது. மக்களுக்கு எங்கே நீதி கிடைக்கவில்லை என்றாலும் இந்த அவையில் நிச்சயமாக நீதி கிடைக்கும்.''

நீதிமன்றம் மற்றும் நீதிபதிகள் குறித்து அவையில் விவாதிக்கலாமா என்பதற்கு முந்தைய நாள் தலைவர் அளித்த குறிப்புரை குறித்து 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8 ஆம் நாள் அன்று சில உறுப்பினர்கள் விளக்கங்களைக் கோரிய போது மன்றத்தில் இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களையும் கான்ஃபிடென்ஸில் எடுத்துக் கொண்டுதான் அன்றைய தினம் அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்றும் அது குறித்து வேறு விதமாக முடிவு செய்ய வேண்டும் என்று அவை விரும்பினால் அவ்வாறு செய்யலாம் என்றும் தலைவர் குறிப்புரைத்தார்.

சிறிது விவாதத்திற்கு பிறகு, பேரவை கேட்டுக் கொண்டதற்கிணங்க, பிரச்சினையை உருவாக்கக்கூடிய ஒன்றிரண்டு ஆட்சேபகரமான கருத்துக்களையும், தலைவர் தீர்ப்பாகச் சொன்ன பகுதியையும் தலைவரே அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விடலாம் என்ற பேரவை முன்னவரின் கருத்தை தலைவர் ஏற்றுக் கொண்டதற்கிணங்க, ஆட்சேபகரமான கருத்துக்களும் தீர்ப்பாகச் சொல்லப்பட்ட பகுதியும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

**நீதிமன்றத் தீர்ப்பு—(வணிக ஒற்றுமை ஆசிரியர் திரு. பால்ராஜ் தொடுத்த வழக்கு).**

'வணிக ஒற்றுமை' ஆசிரியர் திரு. ஏ. எம். பால்ராஜ் அவர்களுக்கு பேரவை வழங்கிய தண்டனையை எதிர்த்து அவர் உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கின் மீது நீதிபதி அளித்த தீர்ப்பில், முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள், உறுப்பினர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று கூறியதை மேற்கோள் காட்டித் தெரிவித்த கருத்துக்களைப்பற்றி ஓர் உறுப்பினர் குறிப்பிட்டு நீதித் துறையில் தலைவருடைய தீர்ப்பை எடுத்துக் கொண்டு விவாதிப்பது சரிதானா என்றும் எதிர் காலத்திலே நீதிபதிகளைப் பற்றி பேரவையிலே பிரச்சினைகளை எழுப்பலாமா என்றும், வணிக ஒற்றுமை ஏட்டின் ஆசிரியருக்கு பேரவை அளித்த தண்டனை நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்றும் விளக்கங்கள் கோரிய போது பின் வருமாறு தீர்ப்புரைக்கப்பட்டது:

"It is quite unfortunate that the Hon'ble Judge has referred to an extract. That is uncalled for.: அதைச் செய்திருக்கக் கூடாது.

An expert of a speech of Franklin, D.Roosvelt President of United States of America : 'When the Congress has sought to stabilise national agriculture, to improve the condition of labour, to safeguard business against unfair competition, to protect our national resources and in many other ways to serve our clear national needs, the majority of the Court has been assuming the power to pass on the wisdom of these Acts of Congress and to approve or disapprove the public policy written into these laws.

The Court in addition to the proper use of its judicial functions has improperly set itself as a Third House of the Congress—a super legislature as one of the justices has called it—reading into the Constitution words and implications which were not there and which were never intended to be there. We have therefore reached the point as a Nation where we must take action to save the Constitution from the Court and the Court from itself..... We want a Supreme Court which will do justice under the Constitution, not over it. In our Courts we want a Government of laws and not of men".

இவ்வாறு பிரசிடென்ட் ரூஸ்வெல்ட் அவர்கள் தன்னுடைய பேச்சிலே சொல்லியிருக்கிறார்கள். இது டாக்டர் 'ராதாகிருஷ்ணன் அவர்களுடைய பேச்சிற்குரிய பதிலாக அமைகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

*1985* **XIV** *420–425*



**பத்திரிகையாளர் மாடம்—**

பத்திரிகையாளர் மாடத்தில் 'முரசொலி' பத்திரிகை நிருபர் இருக்கையை மாற்றம் செய்துள்ளது பற்றி ஓர் உறுப்பினர் எழுப்பியபோது தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு பின்வருமாறு :

'' இது என்னுடைய ஆளுகைக்கு உட்பட்டது. பார்வையாளர்கள் மாடம், அதிகாரிகள் மாடம், பத்திரிகையாளர் மாடம் போன்றவையெல்லாம் என்னுடைய ஆளுகைக்கு உட்பட்டவை. அவற்றை சில நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றுவது வழக்கம்.

..பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கும்போது சர்க்குலேஷனைப் பார்த்து ஒதுக்கி இருக்க வேண்டும். முன்பே அதைச் செய்து இருக்க வேண்டும். காலந்தாழ்த்தி செய்தது தவறா? பொது மக்களுக்கு போய்ச் சேரக் கூடிய காரியங்களைச் செய்யக் கூடிய பத்திரிகைகளை வரிசைப்படுத்தியிருக்கிறேன். இதை நீங்கள் கேட்கவே அவசியம் இல்லை. நான் ஏதாவது செய்தால் அதில் பொது மக்களுக்கு ஒரு நன்மை இருக்கும் என்று கருதிக் கொள்ளுங்கள்.

..மக்களுக்கு அதிகமாக செய்தியைக் கொடுக்கிற பத்திரிகைகளை வரிசைப்படுத்தியிருக்கிறேன்.

..It is not my right; It is my power, I s:y.

..இது என்னுடைய அலுவல் விவகாரம். ஏதாவது குறையிருந்தால் என்னுடைய அறையில் பேசலாம். என்னை இங்கே பதில் சொல்ல வைப்பது வேண்டாம்.''

*1987* **XXXVI** *207–214*

விவாதத்தின் போது பத்திரிகை நிருபர்கள் அவையில் இல்லாதது பற்றி ஓர் உறுப்பினர் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வந்த போது, ''எல்லோரும் இருக்கிறார்கள்; வெளியே போய் இருக்கிறார்கள்; இதையெல்லாம் பிரச்சினையாகச் சொல்லாதீர்கள்'' என்று குறிப்புரைக்கப்பெற்றது.

*1987* **XXXVII** *613*

பேரவை அலுவல்—

ஒரு குறிப்பிட்ட துறையைப் பற்றிய கேள்விகள் வரவில்லையென்று ஓர் உறுப்பினர் தன் உரையில் குறிப்பிட்டபோது தலைவர் குறிப்புரைத்ததாவது :

'' வினாப் பட்டியலை சட்டமன்றப் பேரவைச் செயலகம் தயாரிக்கிறது. பேரவைத் தலைவரின் அனுமதியோடு செய்யப்படுகின்ற பணி இது. ஆகவே, இப்போது நீங்கள் குறிப்பிட்டது பேரவைத் தலைவர் பணியில் குறை சொல்லுவது போல் அமைந்திருப்பதால் அதையொட்டிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.''

1986 XIX 124

தனி உறுப்பினர் அலுவலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நாட்களில் அவ்வலுவல் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை என்று ஓர் உறுப்பினர் சுட்டிக் காட்டியபோது சம்பந்தப்பட்ட விதியைப் படித்துக் காட்டிய தலைவர், வரவு செலவுத் திட்டம் பற்றிய விவாதங்கள் முடிந்த பிறகு அவ்வலுவல் எடுத்துக் கொள்ளப்படும் என்று குறிப்புரைத்தார்.

1986 XVIII 321–323

பேரவைச் செயலகம்—

''கடந்த சில தினங்களாக முரசொலிநாளிதழ்சட்டமன்றப் பேரவைச் செயலகத்தையும், பேரவைத் தலைவரையும் குறித்து கண்ணியம் அற்ற முறையில் பொதுமக்கள் மத்தியில் இழுக்கு ஏற்படும் வகையில் எழுதி வருகிறது. பத்திரிகைகளுக்கு அவர்கள் கருத்துக்களைத் தெரிவிக்க சுதந்திரம் இருக்கிறது என்றாலும் பேரவையின் கண்ணியத்தையும் உரிமையையும் மீறும் வகையில் எழுதுவது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. அவை உரிமையை மீறிய நடவடிக்கைக்கு உட்பட்ட ஒன்று என்றாலும் உடனடியாக நான் அப்பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்க விரும்பவில்லை. ஆனால், இப்படி எழுதுவது முரசொலியிலும் மற்ற செய்தித் தாள்களிலும் தொடருமானால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று எச்சரித்து இனிமேலாவது இம்மாதிரி எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும் என்று கூறி இத்துடன் விட்டுவிடுகிறேன்.'' எனத் தலைவர் குறிப்புரைத்தார்.

1985 VI 445–446



பேரவைச் செயலகம்— தொடர்ச்சி

துறைகளிலிருந்து பதில்கள் பெறப்பெற்ற வினாக்களை அவையில் எடுத்துக் கொள்வதற்கான நடைமுறைகளைப் பற்றிச் சில உறுப்பினர்கள் ஆலோசனை தெரிவித்தபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

'' அவையில் வைத்துப் பேசவேண்டாம் நீங்கள் சொல்வதை ஆலோசனையாக ஏற்றுக் கொள்கிறேன். என்னுடைய செயலகத்தைப் பற்றிய ஆலோசனைகளை என்னுடைய அறையில் வந்து சொல்லுங்கள். அலுவல் ஆய்வுக் குழுவிலே அவற்றை விவாதித்து முடிவு செய்யலாம்.''

1985 VIII 828–829

பேரவைச் செயலகத்தைப் பற்றி மறைமுகமாகக்கூட அவையில் பேசக்கூடாது என்று குறிப்புரைக்கப்பெற்று அவ்வாறு பேசப்பட்ட பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றன.

1985 VII 426

பொது நடைமுறைகள்—

அமெரிக்க வல்லரசு லிபியா நாட்டைத் தாக்கியதற்கு இந்திய பாராளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதைப் போன்று, இந்த அவையிலும் நிறைவேற்றப்பட வேண்டும் என்று சில உறுப்பினர்கள் கூறியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

''நம்முடைய அவையிலே இது பற்றிப் பேச வேண்டாம். பாராளுமன்றத்தில் ரெசலூஷன் பாஸ் செய்தாலே நாம் செய்ததாகத்தான் அர்த்தம்.''

அமெரிக்காவின் போக்கைக் கண்டித்து கட்சித் தலைவர்கள் பேசிய பிறகு தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''உலக சமாதானத்திற்காகவும் லிபியா நாட்டை அமெரிக்கா நாடு தாக்கியதைக் கண்டித்துப் பேசிய மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் கருத்துக்களோடும், மாண்புமிகு சர்வ கட்சித் தலைவர்கள் தெரிவித்த கருத்துக்களோடும் இந்த அவையின் கருத்தாக என்னுடைய கருத்துக்களையும் இணைத்துக்கொள்கிறேன். இந்திய நாட்டிலேயே தமிழ்நாடு சட்டமன்றம்தான் இரண்டாவதாக அமெரிக்காவின் செயலுக்கு கண்டனம் தெரிவித்துக் கொள்கிறது. இந்தத்

தாக்குதலை தமிழகச் சட்டமன்றம் வன்மையாகக் கண்டிக்கிறது. 'இது இப் பேரவையின் ஏகோபித்த கருத்து என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.''

1986 XXII 765, 766, 770

உறுப்பினர்கள் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்பு ஆகியவை எடுத்துக்கொள்ளப் பெறுவதில்லையென ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

''தலைவரின் நடவடிக்கையைப்பற்றி விமர்சனம் செய்யக் கூடாது. உரிமை மீறல் தீர்மானம், ஒத்திவைப்புத் தீர்மானம் உறுப்பினர்களால் கொடுக்கப் பெற்றால், இருக்கின்ற விதிமுறைகளின்படி பேரவைத் தலைவர் முடிவு செய்கிறார். விதியைத் திருத்துவது உறுப்பினர்களுடைய பொறுப்பு. இருக்கிற விதிமுறைகளை வைத்துக் கொண்டுதான் அவை செயல்படுகின்றது.''

1985 XIII 385

சபையில் 'ஜீரோ அவர்' என்பதே கிடையாது.

1985 IX 295

புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்வதைத் தவிர்க்க, தலைவர் அவருக்குள்ள வானளாவிய அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று ஓர் உறுப்பினர் கூறியபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' யார் யார் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எழுதிக் கொடுப்பார்களே யானால், அவர் சொன்ன அதிகாரத்தைப் பயன்படுத்தி புறம்போக்கு நிலங்கள் வைத்திருப்பவர்களை நானே அடையாளம் காட்டுவேன்.''

1987 XXXII 56

மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் ஓர் உறுப்பினர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது மற்றொரு உறுப்பினர் எழுந்து அவையில் வைக்கப்பட்டிருக்கிற, மைய-மாநில அரசு உறவுகள் குறித்து அரசினுடைய கருத்துக்கள் அடங்கிய அறிக்கை மீது விவாதம் வேண்டும் என்று கோரிய நேரத்தில் தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :



''திடீரென்று உறுப்பினர் எழுந்து இவ்வாறு கேட்பது முறையல்ல ; அதற்கென்று உறுப்பினர் முன்னறிவிப்பு கொடுத்த பிறகு, அரசு தரப்பிலேயிருந்து அதற்குப் பதில் கிடைக்கும். இதுபற்றி அலுவல் ஆய்வுக் குழுவில் பேசி முடிவு எடுக்கலாம்.''

1986 XXIII 370, 371

முறையாக எழுதிக் கொடுத்து எந்தப் பிரச்சினையை வேண்டுமானாலும் கொண்டு வரலாம்.

1985 V 398

விதி 36 (5)-ல் கொடுக்கப்பெறும் முன்னறிவிப்பினை தலைவர் அனுமதித்து உறுப்பினர்களுக்கு அனுப்பாதவரை, அவ்வினா பற்றி வேறு எவரும் வெளியிடக்கூடாது.

1987 XXXVIII 454–455

1987–88 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவின் மீது ஓர் உறுப்பினர் பேசுகையில், 1983 ஆம் ஆண்டுக்கு தொடர்புடைய தணிக்கை அறிக்கையிலிருந்து சில தகவல்களைக் குறிப்பிட்டு, குற்றஞ்சாட்டிப் பேசி, அவ்வறிக்கை குறித்து இந்த அவை விவாதிப்பதற்கு உரிமை உண்டு என வாதிட்டபோது, தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு பின்வருமாறு:

''..இது பற்றி பி. ஏ.சி.யிலே வந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து விசாரிக்க முடியும், இப்போது அமைச்சரிடத்திலே அந்த விவகாரங்கள் எல்லாம் கையிலே இருக்காது.

..மேலும் விதி 191-ல், 'If an Appropriation Bill is in pursuance of a supplementary grant in respect of an existing service, the discussion shall be confined to the items constituting the same and no discussion shall be raised on the original grant nor the policy underlying it save in so far as it may be necessary to explain or illustrate a particular item under discussion.''

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஆடிட் ரிப்போர்ட் இதிலே வரவில்லை.

..இப்போது ஒதுக்கியிருக்கிற ஒதுக்கீடுகளைப் பற்றி விவாதிப்பதற்காகத்தான் இந்த விவாதம்.

Past appropriation need not be discussed here. It is a post-mortem. Post-mortem is done by the Public Accounts Committee. I quote from Kaul and Shakdher—page 386 :

'Normally, no question on the Audit Report is permitted to be raised in the House until the Public Accounts Committee has considered the Report.' We have not considered the Report.

..பொதுக்கணக்குக் குழு இதுபற்றி விவாதிக்க இருப்பதாலும், விதி 191 இதைப்பற்றி குறிப்பிட்டுச் சொல்வதாலும், பொதுக் கணக்குக் குழுவில் விவாதிப்பதற்கு முன் ஆடிட் ரிப்போர்ட்டில் குறிப்பிட்டுள்ளதைப் பற்றி சபையில் விவாதிக்கக் கூடாது என்று 'கவுல் அன்ட் ஷக்தரில்' தெளிவாகச் சொல்லியிருப்பதாலும் இந்தக் குற்றச்சாட்டுகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

..This Audit Report is not a final document. It is not a sacred document and it is not a Judgement.

நான் பொதுவாகச் சொல்கிறேன். பி. ஏ. சி.யில் விவாதிக்கப்பட்ட பிறகுதான் பி.ஏ.சி. முடிவுக்கு வந்த பிறகுதான் அந்த ரிப்போர்ட் சரியா, தவறா என்று அங்கே பதில்சொல்லி, இந்த அவைக்கு தெரிவிக்க முடியும். அதுவரை இது நிலுவையில்தான் இருக்கிறது.

..'Any paper laid on the Table of the House under any provision of law may be discussed by the House on an appropriate motion given by any Member as provided for in these rules and admitted by the Speaker.' என்று விதி 31-ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கே அவைமுன் வைக்கப்படுகின்ற ஏடுகளுக்கே இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.

This is a Report. If it has to be debated, a consensus has to be arrived at in the Business Advisory Committee Meeting."

| | | |
|---|---|---|
| 1987 | XLVI | 604, 605, 606, 607, 608, 609, 610, 611, 612, 613, 618 |





அமைச்சர் உரைக்குப் பிறகு, விளக்கம் கோருவதற்கு, ஒரு நியாயத்தின் அடிப்படையில், விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர்களுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வேறு யாரையும் அனுமதிக்கவில்லை. இது ஒரு மரபு, நியதி.

| | | |
|---|---|---|
| 1986 | XXX | 491 |

அரசியலமைப்பின் ஒரு பிரிவின் நகலை பொது இடத்தில் எரித்ததற்காக பதவி நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் தொடுத்த வழக்கு தொடர்பாக உச்ச நீதிமன்றத்திலிருந்து தமக்கு வந்துள்ள ஓர் அறிவிக்கை பற்றி தாம் எடுத்துள்ள நிலை குறித்து அவைக்கு அறிவிக்கும்போது, தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார்:

"I want to inform the Hon. Members of this House that I have received to-day by post from the Supreme Court of India a notice in regard to the Appeal filed by certain expelled Members of this House against the Judgement of the Madras High Court upholding the expulsion of the Members from the House, informing that the application will be listed before the Supreme Court on 20th July 1987.

As per the Constitutional Provisions and the conventions followed in this House, I feel that I cannot be and do not propose to be subjected to the authority of any Court in respect of the proceedings of this House. Hence I am not going to respond to the Notice.

A similar notice has also been received by the Secretary, Legislative Assembly. I am directing him not to respond to the notice as the matter in question relates to the proceedings of the House.

However, I request the Hon. Minister for Law to instruct the Advocate-General, Tamil Nadu, to apprise the Supreme Court the correct legal and Constitutional position in the matter."

| | | |
|---|---|---|
| 1987 | XLIII | 807 |

அரசினர் தனித் தீர்மானத்தின் மீதான விவாதத்தின் இறுதியில் எதிர்க்கட்சித் தலைவர் பேசியதற்குப் பிறகு, இன்னொரு கட்சித் தலைவரைப் பேச அனுமதிப்பது முறையா என கேட்கப்பட்ட போது தலைவர் பின் வருமாறு குறிப்புரைத்தார்:

" தீர்மானத்தில் சம்பந்தப்பட்ட பொருள் 'காமன் இன்ட்ரஸ்ட்' என்பதினால் அதை அனுமதிக்கிறேன். மற்ற

வற்றிற்கு இது மாதிரி நடக்காது. மொழிப் பிரச்சினை என்பதால் இந்த முறை மட்டும் அனுமதி அளித்திருக்கிறேன். இனிமேல் இதுபோன்ற புதிய மரபு இங்கே உருவாகாது.''

1986 XXIX 95-96

அவையில் இல்லாதவர்களைப் பற்றியும், மேலவை உறுப்பினர்களைப் பற்றியும் விமர்சனம் செய்யக் கூடாது. இந்த மரபு கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

1986 XVI 494

உறுப்பினர் ஒருவர் தம் கன்னிப் பேச்சில் தவறான தகவலைத் தெரிவிப்பதாக குறிப்பிட்டு இன்னொரு உறுப்பினர் குறுக்கிட முயன்றபோது தலைவர் பின் வருமாறு குறிப்புரைத்தார்:

''கன்னிப் பேச்சின்போது குறுக்கீடு கூடாது என்பதை ஒரு மரபாக நாம் வைத்திருக்கிறோம். தவறான தகவலைத் தருகிறார் என்றால் அடுத்து உங்கள் கட்சியிலிருந்து பேசுகின்ற உறுப்பினர் விளக்கம் அளிக்கலாம். அல்லது அந்த உறுப்பினர் பேசி முடித்த பிறகு விளக்கம் கேட்கலாம்.''

1985 I 406-407

ஓர் உறுப்பினர் அவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ள வேண்டுமென்று தலைவர் கட்டளை பிறப்பிக்கலாம் என்று எந்த பாராளுமன்ற நடைமுறைகளிலும் சொல்லப் படவில்லையென்று ஓர் உறுப்பினர் தெரிவித்த போது, 'A responsible Member should attend the House.' என்று தலைவர் குறிப்புரைத்தார்.

1987 XXXIX 713

ஓர் உறுப்பினர் தாம் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படாமல் இருப்பதைச் சுட்டிக் காட்டிய போது தலைவர் குறிப்புரைத்ததாவது:

''வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் போது ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்ள வேண்டாமென்று மரபு இருக்கிறது. அலுவல் ஆய்வுக் குழுவிலே அவ்வாறு முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. முக்கியமான பிரச்சினையை அதன் முக்கியத்துவத்தைக் கருதி



எடுத்துக்கொள்ளலாமென்று அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்தால் எடுத்துக் கொள்ளலாம். அலுவல் ஆய்வுக் குழுவிலே மீண்டும் இதுபற்றி விவாதித்து முடிவெடுக்கலாம். இந்த அவையை தயவுசெய்து அலுவல் ஆய்வுக் குழுவாகக் கருத வேண்டாம்.''

அவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதைப் பற்றியெல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவுக்கு ரெபர் செய்யாமல் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அவ்வப்போது அவை முன்னவருடன் கலந்து உசிதம்போல் தலைவர் அனுமதிக்கலாமென்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்த கருத்தை தலைவர் ஏற்றுக் கொண்டு இனி மேல் அம்மாதிரியான முறையைக் கடைப்பிடிக்கலாம் என்று குறிப்புரைத்தார்.

1986 XIX 650-652

'ஸீரோ ஹவர்' என்பது கிடையாது. இருந்தாலும் முக்கிய பிரச்சினைகள் என்றால் முன் வரிசையில் உள்ள கட்சித் தலைவர்கள் அவை பற்றிக் கேட்பதற்கு அனுமதிப்பது தான் மரபாக உள்ளது. திடீர் திடீரென்று ஒவ்வொரு வரும் ஒவ்வொரு பிரச்சினை பற்றி எழுப்ப முற்பட வேண்டாம்.

1985 XVI 361

தலைவர் மணியடித்ததை ஓர் உறுப்பினர் ஆட்சேபித்த போது கீழ்க்கண்டவாறு குறிப்புரைக்கப் பெற்றது:

''கொடுக்கப்பட்ட காலம் நெருங்கிக் கொண்டு இருக்கிறது. சீக்கிரம் பேசி முடிக்க வேண்டும் என்று அறிவிப்பதற்காக மணி அடிப்பது வழக்கம். அடிக்கடி அடிக்கக்கூடாது என்று சொல்வது சரியல்ல. அடிக்க வேண்டிய நேரத்தில் அடிக்காமல் இருக்க முடியாது.''

1987 XL 71

பல உறுப்பினர்கள் குற்றச்சாட்டுகளைக் குறிப்பிடுகின்ற போது கூட 'பொதுவாகக் குறிப்பிடாதீர்கள்' என்று சொல்வதன் மூலம் சட்டமன்ற மரபுகள் உங்களுக்கு அளித்து இருக்கின்ற கேடயங்களை வைத்துக் கொண்டு தப்பிக்காதீர்கள் என ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது:

''மரபு எல்லா உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பை அளிக்கிறது. அவைக் குறிப்பிலேயிருந்து சிலவற்றை நீக்கவில்லை என்றால் எதிர் தரப்பிலே உள்ளவர்கள் எழுந்து

பேசத் தொடங்குவார்கள். ஆகவே எல்லா உறுப்பினர்களின் உரிமைகளையும், நலன்களையும் காப்பதற்காகத்தான் மரபுகள், விதிகள் இருக்கின்றன.''

1986 XXIX 322

பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று தாம் பலமுறை கேட்டும் தம்மை அனுமதிக்காமல் அமைச்சர் அவர்கள் பேச எழுந்த உடனே அவரை அனுமதிப்பது என்ன நியாயம் என ஓர் உறுப்பினர் வினவிய போது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

''It is a convention. Whenever a Minister rises, we use to give him priority and preference. தயவுசெய்து ஒத்துழையுங்கள்.''

1986 XXXI 350–351

ஜனாதிபதி, உதவி ஜனாதிபதி பற்றி பேசக் கூடாது. சட்ட முன்வடிவின் மீது பேசும்போது அதனுடைய ஸ்கோப்பிற்குள் மட்டும் பேச வேண்டும்.

1987 XLV 487

மேலவை நீக்கம்—

பார்க்க— ''தனித் தீர்மானங்கள்''.

மேற்கோள்கள்—

ஏற்கெனவே கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது அமைச்சர் பதில் அளித்து, விஷயம் பூராவும் ரிக்கார்டில் இருக்கிறது. அதை மேற்கோள் காட்டிப் பேசுவதில் தவறு இல்லை.

1987 XXXV 410–412

ஓர் உறுப்பினர் உரையாற்றுகையில் செய்தித்தாளில் வந்ததை தலைவரின் அனுமதியோடு படிப்பதாகக் கூறியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

''அனுமதியோடு படிக்கிறேன் என்று உறுப்பினர் சொல்கிறாரே தவிர அப்படி கொடுத்து முன் அனுமதி பெறவில்லை. முன்கூட்டி தலைவரிடம் கொடுத்து அனுமதி பெறாமலேயே 'அனுமதியோடு படிக்கிறேன்' என்று சொல்கிற நிலை பொதுவாக உள்ளது. அப்படிச் சொல்





கிறார்களே தவிர தலைவரிடத்தில் யாரும் காட்டுவதில்லை. அப்படிக் காட்டினால் அது குறித்து அமைச்சரிடம் சொல்வதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, யாராக இருந்தாலும் இனிமேல் முன்கூட்டியே தலைவரிடம் கொடுத்து அனுமதி பெற்றுப் படிக்க வேண்டும்.''

1985 II 644

1986 XVIII 253

ஓர் உறுப்பினர் பத்திரிகையில் வந்த செய்தியைக் குறிப்பிட முனைந்த போது ''இந்த அவையில் பிரஸ் ரிப்போர்ட்டை வைத்து நாம் விவாதிப்பதே கிடையாது'' என்று குறிப்புரைக்கப் பெற்று, அவ்வாறு குறிப்பிடப் பெற்ற பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றது.

1987 XXXV 583

நான்காவது ஊதியக் குழு அறிக்கை தொடர்பான ஒரு பகுதியை தமிழிலும் ஆங்கிலத்திலும் தட்டச்சு செய்து உறுப்பினர்கள் அனைவருக்கும் விநியோகம் செய்யப் பட்டிருப்பதாக ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

''தலைவரின் அனுமதியில்லாமல் உறுப்பினர்கள் வெளியிலே யாரிடமிருந்தாவது வாங்கிக் கொண்டு வந்து அவையில் மேற்கோள் காட்டினால் அதற்குத் தலைவர் பொறுப்பு இல்லை. அவைக்குள் தலைவரின் அனுமதியில்லாமல் எந்த அறிக்கையும் நுழைய முடியாது. விநியோகிக்கப்பட முடியாது.''

1986 XXVI 317

நோட்டீஸ், நியூஸ் பேப்பர் போன்றவற்றிலிருந்தோ அல்லது வேறு எந்த டாகுமெண்டிலிருந்தோ மேற்கோள் காட்ட விரும்பும் உறுப்பினர்கள் முன் கூட்டியே அவைகளை தலைவரிடம் காட்டி முன்அனுமதி பெற வேண்டும். இல்லையென்றால் அவையில் அது பற்றிக் குறிப்பிட அனுமதி அளிக்க முடியாது.

1986 XVII 401

XXX 413–414

மேற்கோள்கள்— தொடர்ச்சி.

பத்திரிகைச் செய்தியை ஆதாரமாக வைத்துப் பேசக்கூடாது. பத்திரிகையில் வந்த செய்தி 'ஆதன்டிக்காக' இருந்தாலொழிய அதை வைத்துப் பேசக்கூடாது.

1985 VIII 77, 79

பத்திரிகையைப் பற்றிப் பேசக் கூடாது; பத்திரிகையை மேற்கோள் காட்டியும் பேசக் கூடாது; What has appeared in Press is no evidence.

1985 XIV 269

1987 XL 801

விசாரணையில் இருக்கும் பொருள்—

அருப்புக்கோட்டை இடைத் தேர்தலின்போது ஒரு அரசு அலுவலர் கொலை செய்யப்பட்டது குறித்து ஓர் உறுப்பினர் பேசியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது:

"நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் உறுப்பினர் அது பற்றிப் பேச வேண்டாம்."

1986 XXXI 105

ஒரு நபர் வைத்திருக்கிற நிலத்தின் உரிமை பற்றிய பிரச்சினை, வழக்கு மன்றத்திலே இருக்கும்போது அதைப் பற்றி இந்த மன்றத்திலே தீர்மானிக்க முடியாது. உறுப்பினர்கள் நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளைப் பற்றியும், அவையில் இல்லாத தனிப்பட்டவர்களைப் பற்றியும் பேச வேண்டாம்.

1986 XXXI 100–103

சுப்ரீம் கோர்ட் தீர்ப்பைப் பற்றி ஓர் அமைச்சர் குறிப்பிட்டுப் பேசிய போது பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது:

"சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்ட்டை 'கிரிட்டிஸைஸ்' செய்ய முடியாது. என்று சொன்னீர்கள். You can criticise ; You can debate over a judgement ; you cannot" impute motives ; you can have deliberation over a judgement."

1985 XI 252



விசாரணையில் இருக்கும் பொருள்—தொடர்ச்சி

செய்யாறு தொகுதி இடைத் தேர்தல் பிரச்சாரத்தின்போது நடைபெற்ற நிகழ்வு பற்றி வழக்கு பதிவு செய்யப்பட்டு இருக்கின்ற ஒரு பொருள் குறித்து அவையில் பேசக் கூடாது. யார் தவறு செய்தார்கள் என்பதை நீதிமன்றத்தில்தான் கூற வேண்டும். நீதிமன்றம் தான் இது குறித்து முடிவு செய்ய வேண்டும்.

1986 XXVI 75-76

நீதிமன்றத்தின் முன்னுள்ள பொருள் சம்பந்தமாகப் பேசக் கூடாது.

1985 III 406

V 234

XIV 281

மின் வாரியத் தலைவர் பற்றிய உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் மீது உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்திருக்கும்போது உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புக் குறித்து ஓர் உறுப்பினர் பேசிய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

" 1969-லிருந்து இன்றுவரை பல சபாநாயகர்கள் ரூலிங் கொடுத்திருக்கிறார்கள். The possibility of an arising litigation is itself subjudice. High Court decision has not reached the finality. வேறு கருத்து சொல்லுங்கள். When an appeal is pending before the Supreme Court, it is definitely sub-judice."

1986 XXX 220–221

மின் வாரியத் தலைவர் பற்றிய உயர்நீதி மன்றத்தினுடைய தீர்ப்பின் மீது உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு அனுமதிக்கப்படாத நிலையில் அப் பொருள் குறித்து அவையில் கருத்து தெரிவிக்கலாம் அல்லவா என்று ஓர் உறுப்பினர் கோரியபோது தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார் :

" Of course, it is not admitted. But special Leave Petition is numbered. It is posted before the Court. It is coming up to-morrow. So its sub-judice. If there is a case or possibility of a case coming up later on, a Member should not refer to the matter. In this case the Leave Petition is numbered, so the possibility is certain."

1986 XXX 201–202, 203, 359–360

மேலவை உறுப்பினர் நியமனத்தில் ஆளுநர் மேற்கொண்ட நடவடிக்கை பற்றி ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி பேச முற்பட்ட போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

" The act of the Governor cannot be questioned at all and the matter is sub-judice.

" I have given an opportunity to the Member to express his views. The ruling of the Chair is final. There cannot be a debate after my ruling. இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.''

1986 XXIII 299–307

ராஜபாளையத்தில் சில சமுதாயத்தினரிடையே ஏற்பட்ட கலவரம் குறித்து வழக்கு பதிவாகியிருந்தால், அவ் விஷயம் குறித்து கூறப்படும் கருத்து விசாரணைக்கு பாதகமாக இருந்துவிடக் கூடாது. அக் கருத்தைச் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லலாம். விசாரணைக்குக் குந்தகம் இல்லாத அளவிற்கு கருத்துக்களைச் சொல்ல வேண்டும்.

1987 XLIII 470–471

'' வழக்கு இருக்கிறது என்பதைப் பற்றிச் சொல்லலாம். அதனுடைய merits, demerits பற்றி விவாதிக்கக் கூடாது. நீதிமன்றத்தின் விசாரணையில் இருக்கும் பொருள் குறித்துப் பேசக் கூடாது'' என்று குறிப்புரைக்கப் பெற்று, அவ்வாறு பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றது.

1987 XXXII 124, 125,
126, 128,
129, 390.

விசாரணையில் இருக்கும் பொருள் குறித்து குறிப்பிடப் பட்ட பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டன.

1986 XX 725–727

வெளியிலே உள்ள ஒருவர் மீது பொய் வழக்கு போடப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள புகார் பற்றி ஓர் உறுப்பினர் பேசியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' நீங்கள் இப்போது சொல்வதைப் பார்த்தாலே அது பற்றி புகார் கொடுக்கப்பட்டு அந்த வழக்கு விசாரணையில் இருக்கிறது என்று தெரிகிறது. ஆனால் குற்றம்





சாட்டப்பட்டவர்கள், தான் அவ்வாறெல்லாம் செய்ய வில்லை என்று சொல்லக்கூடும். அதையெல்லாம் இங்கு வந்து நாம் சொல்வதென்பது சரியாக இருக் காது. ஆகவே அது சம்பந்தமான வழக்கு நடந்து கொண்டிருக்கிறது என்று நீங்களே சொல்வதால் அந்த ஃபேக்டுக்கு உள்ளே போக வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

'' அது பற்றி நிரூபிக்கவேண்டியது கோர்ட்டிலேதானே தவிர இங்கு இல்லை.

''போலீஸ் நடந்துகொண்ட முறையைப் பற்றி விமர்சிக் கலாம். ஆனால் அந்த கேஸ் எந்த வகையில் போடப்பட்டது என்பது பற்றி குற்றம் சாட்டப் பட்டவர் சார்பில் பேசக் கூடாது. கோர்ட்டிலே தான் அதெல்லாம் நிரூபிக்கப்பட வேண்டும். இங்கே அந்த ஃபேக்டுக்குள்ளே போய்ப் பேச வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.''

1986 XXV 586

விவாதம்—

அவை முன்னுள்ள பொருள்—

அமைச்சரை நீக்குவது அல்லது சேர்ப்பது என்பதெல்லாம் முதலமைச்சரின் அதிகாரத்திற்கு உட்பட்டது. அதைப் பற்றியெல்லாம் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பேசுவது தேவையற்றது.

1986 XX 92

அரசினர் தனித் தீர்மானத்தின் மீது உறுப்பினர்கள் பேசும் போது தீர்மானத்தை ஒட்டிய கருத்துக்களை மட்டும் பேச வேண்டும். உறுப்பினர்கள் அவரவர்களுடைய கருத்துக்களை மட்டும் பேச வேண்டும்.

1986 XXIX 57

அவை முன் இருக்கக்கூடிய தனித் தீர்மானத்தைப் பற்றி மட்டும் பேச வேண்டும். மற்ற அரசியல் எல்லாம் பொதுக் கூட்டங்களில் பேசலாம் என்று குறிப்புரைக் கப்பெற்று அவ்வாறு பேசிய பகுதி அவைக் குறிப்பிலி ருந்து நீக்கப்பெற்றது.

1986 XXVII 257
XXVIII 348

அவை முன்னுள்ள பொருள்— தொடர்ச்சி

அவை முன்பிருக்கும் மானியத்தைப் பற்றி மட்டும் பேச வேண்டும். கற்பனை செய்துகொண்டு பேசக்கூடாது.

| | | |
|---|---|---|
| 1987 | XXXVIII | 488 |
| | XLI | 107 |

அவை முன்னுள்ள பொருள் குறித்து சுருக்கமாகப் பேச வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1985 | III | 414 |
| | V | 481, 486 |
| | VII | 384, 388, 389 |
| | XIV | 283, 308 |

அவை முன்னுள்ள பொருளை ஒட்டிப் பேச வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1981 | XIII | 661 |

ஆளுநர் உரைமீதான விவாதத்தின்போது ஏ.ஐ.ஆர். டிசம்பர் 1986-ல் வீடியோ பற்றி வந்த ஒரு தீர்ப்பு பற்றி ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கையில், தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' அந்த விவகாரங்கள் எல்லாம் இப்போது வேண்டாம். ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது பேசுங்கள்.''

| | | |
|---|---|---|
| 1987 | XXXIII | 272 |

ஆளுநர் வெளியே பேசுவது என்பது வேறு; இந்த மன்றத்தில் பேசுவது என்பது வேறு. இங்கே ஆளுநர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது மட்டும்தான் பேச வேண்டும். ஆளுநரைப் பற்றி பேசுவதைத் தவிர்ப்பது நல்லது.

| | | |
|---|---|---|
| 1986 | XV | 143, 144 |

உறுப்பினர் ஆளுநர் உரையின்மீது பேச வேண்டும். மத்திய அரசு வரவு செலவுத் திட்டம் பற்றிய விவாதம் கூடாது.

| | | |
|---|---|---|
| 1987 | XXXII | 119 |





அவை முன்னுள்ள பொருள்—தொடர்ச்சி

ஒரு சட்ட முன்வடிவின் மீதான விவாதத்தில் மொழிப் பிரச்சினை குறித்து இரண்டு உறுப்பினர்கள் கருத்துக்களை பரிமாறிக்கொண்டபோது, பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது:

'' இது இரண்டு கட்சிக்காரர்களும் பாராளுமன்றத்திலே விவாதிக்க வேண்டிய விவகாரம். இதை இங்கே விவாதிக்க முடியாது. மசோதா சம்பந்தப்பட்டவற்றை மட்டும் பேசுங்கள். மொழி விவாதம் வேண்டாம்.''

| | | |
|---|---|---|
| 1987 | XLVI | 740, 741 |

துணை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் உறுப்பினர்கள் பேசும்போது பணம் ஒதுக்காத மானியத்தைப் பற்றி பேசுவது முறையல்ல.

| | | |
|---|---|---|
| 1987 | XLV | 482, 483 |
| | | 489, 492-493 |

மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது உறுப்பினர்கள் மானியக் கோரிக்கையின் மீது மட்டுமே கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும். மற்றவற்றையெல்லாம் பொதுக் கூட்டத்திலே வைத்துக்கொள்ளலாம். கட்சி விவகாரங்களைப் பற்றி பேசக்கூடாது.

| | | |
|---|---|---|
| 1987 | XXXVI | 67 |

அவையில் இல்லாதோர் குறித்து—

அரசாங்க நிதியுதவி பெறக்கூடிய எந்த நிறுவனமாக இருந்தாலும் அல்லது அரசாங்கம் பொறுப்பு ஏற்கக் கூடிய எந்த நிறுவனமானாலும் அது சம்பந்தப்பட்டவர்களைப் பற்றி இங்கே பேசலாம். அவர்கள் அவையிலே இல்லாவிட்டாலும் அவர்களைப் பற்றிப் பேசலாம்.

| | | |
|---|---|---|
| 1986 | XXIII | 726 |

அவையில் இல்லாதோர் குறித்து—தொடர்ச்சி

அவையிலே இல்லாதவர்களைப் பற்றிப் பேசக் கூடாது.

1986 V 124

XIX 560

ஓர் உறுப்பினர் கேட்டதற்கிணங்க, அவையில் இல்லாதவரைப் பற்றி குறிப்பிட அனுமதியளிக்கப் பெற்றது.

1987 XL 212

விவாதத்தில் பங்கு கொள்ளும் உறுப்பினர்கள், தனிப்பட்டவர்களின் பெயரைக் குறிப்பிடக்கூடாதென்று குறிப்புரைக்கப்பெற்று, அவ்வாறு குறிப்பிட்டது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது.

1986 XX 707

அழைக்கும் முறை—

ஓர் உறுப்பினர் தம் உரையின் துவக்கத்தில், ''மாண்புமிகு பேரவையின் வருங்காலத் தலைவர் அவர்களே'' என்று குறிப்பிட்டபோது, ''துணைத் தலைவர்'' என்று அழைக்குமாறு குறிப்புரைக்கப்பெற்றது.

1986 XXIII 431

ஓர் உறுப்பினர் தனது உரையில் தலைவரையும், அமைச்சரையும் ''கனம், ஸ்ரீ'' என்று அழைப்பது மரபுதானா என்றும், ''மாண்புமிகு'' என்று தமிழில் அற்புதமான வார்த்தை இருக்கும்போது அவ்வாறு அழைக்கலாமே என்றும் யோசனை தெரிவித்தபோது பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது:

''எப்படி நம்முடைய வரைமுறை இருக்கிறதோ அதன் பிரகாரம் மாற்றிவிடலாம்.''

1986 XXIV 243



அழைக்கும் முறை—தொடர்ச்சி

ஓர் உறுப்பினர், ''பேரவை துணைப் பெருந்தலைவர்'' என்று தம் பேச்சை தொடங்கியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

''துணைப் பெருந்தலைவர் என்று வராது. துணைத் தலைவர் என்று சொல்ல வேண்டும்.''

1987 XXXVI 602

''நண்பர்களே'' என்று உறுப்பினர்களை நேரிடையாக விளித்துப் பேசுதல் கூடாது.

1986 I 421

மற்ற உறுப்பினர்களை விளித்துச் சொல்கிறபோது சகோதரர் என்றோ, நண்பர் என்றோ அழைக்காமல் ''மாண்புமிகு உறுப்பினர்'' என்றே குறிப்பிட வேண்டும்.

1985 XII 95

முன்னாள் உறுப்பினர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுப் பேசும்போது உறுப்பினர்கள், ''மாண்புமிகு திரு.'' என்ற அடைமொழியோடு பேச வேண்டும்.

1986 XVIII 646

உரையை எழுதிவந்து படித்தல்—

உரையாற்றுகின்றபோது பார்த்துப் படிக்கலாமா என்று ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''மன்றத்தில் இருக்கிற நடைமுறை பார்த்துப் படிக்கக்கூடாது என்பதுதான். கன்னிப் பேச்சில் மட்டும்தான் இவ்வாறு அனுமதிக்கலாம் என்பது இதுவரை கடைபிடிக்கப்பட்டு வந்திருக்கிற முறை. அதனால் உறுப்பினர்கள் பார்க்காமலே பேசவேண்டும்.''

1986 XIX 302, 303
1987 XXXIV 436

உரையை எழுதிவந்து படித்தல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் தம் உரையில் குற்றச்சாட்டைச் சொல்கிறபோது அதற்கான குறிப்புரைகளை, ஆதாரங்களை தவறாகச் சொல்லிவிடக் கூடாது என்பதற்காகவும், அவற்றை நினைவு படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் படிப்பது தவறல்ல என்று ஒரு உறுப்பினர் குறிப்பிட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

''..குறிப்புகள் வைத்துக் கொள்ளலாம். ஆனால் முழுமையாகப் பார்த்துப் படிப்பது சரியல்ல. இந்த அவையில் கன்னிப் பேச்சில் பேசுகின்றவர்களுக்கு இது அனுமதிக்கப்படுகிறது.''

1986 XIX 303

கற்பனையாகப் பேசுதல்—

உள் நோக்கம் கற்பிக்கிற மாதிரி பேசப்பட்ட வார்த்தைகள் தேவையில்லை என குறிப்புரைக்கப் பெற்று, அவைக் குறிப்பிலிருந்து அவை நீக்கப் பெற்றன.

1985 XIV 278, 279

உள் நோக்கம் கற்பித்து, அவரவர்கள் கற்பனை செய்து விவாதித்தால் எப்படி டிமாண்டிற்கு சம்பந்தம் இருக்கும். கற்பனையாக ஒரு வாதத்தைச் செய்ய ஆரம்பித்தால், அப்புறம் இந்தப் பக்கமும் செய்ய ஆரம்பித்தால், அதையும் தாங்கிக் கொள்ள வேண்டும். அரசியலுக்கு வந்து ஒரு தொழிலைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தால், அப்புறம் எல்லோரும் அப்படிச் சொல்ல ஆரம்பித்தால் ரொம்பச் சிக்கல் வந்துவிடும். நடிகர்களைப் பற்றி சொன்ன பகுதிகள் எல்லாம் நீக்கப்பெற்றன.

1987 XXXVI 72

எந்தக் கருத்தைச் சொல்லும் போதும் உறுப்பினர்கள் உள் நோக்கம் கற்பித்துப் பேசக் கூடாது என்று குறிப்பிடப்பட்டு, அவ்வாறு குறிப்பிட்ட பகுதி நீக்கப்பட்டது.

1986 XIX 336





கற்பனையாகப் பேசுதல்—தொடர்ச்சி.

ஓர் அமைச்சரைப் பற்றி உள்நோக்கத்தோடு பேசக் கூடாது என்று குறிப்புரைக்கப் பெற்று அப்பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1987 XXXVI 90–91

ஓர் உறுப்பினர் தம் உரையில் அமைச்சர்கள் நீக்கம் பற்றிய வதந்திகள் இருப்பதாகக் குறிப்பிட்டபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''நீங்கள் வதந்தி என்று சொல்லுகிறீர்கள். பின் ஏன் அதைப் பற்றிப் பேசுகிறீர்கள்? நாட்டு மக்களுக்குத் தேவையான நல்ல விஷயங்களைப் பற்றிச் சொல்லுங்கள். இப்படி எல்லாம் பேசி ஏன் உங்கள் நேரத்தையும் வீண் ஆக்குகிறீர்கள்? உறுப்பினர்களுக்கான நேரத்தை இப்படிப் பேசி வீணாக்க வேண்டாம்.''

1987 XXXIII 268

விவாதத்தில் பங்கு கொள்ளும் உறுப்பினர் 'ஹைப்பதெடிக்கலாகக்' கேள்வி போட்டுக் கொண்டே போகக் கூடாது.

1986 XIX 525

கன்னிப் பேச்சு—

உறுப்பினர் ஒருவர் தம் கன்னிப் பேச்சில் தவறான தகவலைத் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டு இன்னொரு உறுப்பினர் குறுக்கிட முயன்றபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''கன்னிப் பேச்சின்போது குறுக்கிடு கூடாது என்பதை ஒரு மரபாக நாம் வைத்திருக்கிறோம். தவறான தகவலைத் தருகிறார் என்றால் அடுத்து உங்கள் கட்சியிலிருந்து பேசுகின்ற உறுப்பினர் விளக்கம் அளிக்கலாம். அல்லது அந்த உறுப்பினர் பேசி முடித்த பிறகு விளக்கம் கேட்கலாம்.''

1985 I 406–407

கன்னிப் பேச்சில் விவாதத்திற்குரிய பிரச்சினைகளை, குற்றச்சாட்டுக்களைத் தவிர்ப்பது நல்லது.

1985 II 42

காலவரையறை—

அதிக நேரம் ஒதுக்க வேண்டுமென்று சில உறுப்பினர்கள் கோரிய போது அலுவல் ஆய்வுக் குழுவில் அது பற்றிப் பேச வேண்டும் என்று குறிப்புரைக்கப்பெற்றது.

1987 XXXVII 839

ஆளும் தரப்பில் இருக்கிற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வைத்துத் தான் நேரத்தை ஒதுக்க முடியும். தினசரி ஓர் உறுப்பினருக்கு பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்க முடியாது.

1986 XXI 94

உறுப்பினர்கள் அவரவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள நேரத்தில் தங்கள் உரையை முடித்துக் கொள்ள வேண்டும்.

1985 II 63
XII 123, 511, 617
XIV 189

உறுப்பினர்கள் உரையாற்றும்போது தங்களுக்கு இன்னும் கொஞ்சம் நேரம் அனுமதிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால் தலைமை அவையின் நேரத்தை கொஞ்சம் நீட்டித்தால் எழுந்து வெளியே செல்கிறார்கள். உறுப்பினர்கள் அனைவரும் அவையில் அமர்ந்திருக்க வேண்டும்.

1986 XIX 375

உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் சுருக்கமாகப் பேசி அவர்களுடைய பேச்சுக்களை முடித்துக் கொண்டால்தான் அமைச்சர்கள் பேசுவதற்கும். அறிவிப்புகளை வெளியிடுவதற்கும் நேரம் கிடைக்கும்.

1986 XXVI 657, 667



காலவரையறை—தொடர்ச்சி

உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடியும் தருவாயில் பேச்சை முடித்து விடுகிறேன் என்று சொல்லி விட்டு தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பது சரியல்ல.

1987 XXXII 126

ஒதுக்கப்பட்ட நேரத்தை அனுசரித்துப் பேசுதல் வேண்டும்.

1986 XVI 245

ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி விட்ட பிறகு இன்னும் கொஞ்சம் நேரம் வேண்டுமென்று கேட்பதைத் தவிர்த்தால் பிரச்சினைகள் எழாது.

1986 XX 110

ஒவ்வொருவருக்கும் ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள்ளாக பேசி முடித்து விட வேண்டும். ஒவ்வொருவரும் ஒரு நிமிடம், இரு நிமிடம் என்று அதிகமாக்கினால் மற்ற உறுப்பினர்கள் குறை சொல்வார்கள்.

1985 IV 62
IX 88, 479

1986 XVII 693

ஓர் உறுப்பினர் அதிகமான நேரம் எடுத்துக் கொண்டு பேச்சைத் தொடர்ந்த போது உறுப்பினர்களுக்கு எவ்வளவு நேரம் கொடுத்தாலும் திருப்திபடாமல் இருக்கக் கூடாது எனக் குறிப்புரைக்கப் பெற்றது.

1987 XXXVII 601

ஓர் உறுப்பினர் பேச்சை விரைவில் முடித்துக்கொள்ள வேண்டும் என்று தலைவர் கூறியபோது, "ஏன் இப்படி என் தொண்டையைப் பிடிக்கிறீர்கள்" என அவ்வுறுப்பினர் கேட்டதற்கு "நேரம் என் தொண்டையைப் பிடிக்கிறது. எனவே நான் உங்கள் தொண்டையைப் பிடிக்க வேண்டியிருக்கிறது ; வேறு வழியில்லை" என குறிப்புரைக்கப் பெற்றது.

1987 XLVI 311–312

காலவரையறை—தொடர்ச்சி

ஓர் உறுப்பினர் பேசும்பொழுது நேரம் கருதி தலைவர் மணியடித்த பொழுது அவ்வுறுப்பினர் ''தாம் அரசை ஒரு இடத்தில் கூட தாக்கவில்லை. அமைதியாகத் தானே பேசுகிறேன். அதற்குள் மணி அடிக்கிறீர்களே'' என்று கேட்டபோது, தலைவர் அளித்த குறிப்புரையாவது :

''தாக்குவதற்காக அடிக்கவில்லை. எல்லோரும் சாதகமாகவே பேசுவீர்கள் என்றா எதிர்பார்க்கிறேன்? நேரம் ஆகிறது என்பதால் மணி அடிக்கிறேன்''.

| | | |
|---|---|---|
| *1987* | XLI | *414* |

கட்சிக் கணக்கைப்பார்த்து நேரம் ஒதுக்க வேண்டியிருக்கிறது. எனவே உறுப்பினர்கள் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் தங்கள் உரையை முடித்துக் கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| *1985* | V | *106, 109 110* |

குறிப்பிட்ட நேரத்தில் உறுப்பினர்கள் தம் உரையை முடித்துக் கொள்ள வேண்டும். அவையில் அனைத்து உறுப்பினர்களும் சமமானவர்கள். பெண்களுக்கென்று தனிச் சலுகை கிடையாது.

| | | |
|---|---|---|
| *1986* | VIII | *850* |

குறிப்பிட்ட நேரத்திற்கும் மேல் ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருந்தபோது பின்வருமாறு குறிப்புரைக்கப் பெற்றது :

''உங்களுக்கு மட்டும் அதிக நேரம் கொடுத்தால் மற்றவர்களும் அவ்வாறே கேட்பார்கள். ஆகவே பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்''.

| | | |
|---|---|---|
| *1987* | XXXV | *85–86* |



காலவரையறை—தொடர்ச்சி

குறிப்பிட்ட நேரத்திற்குள் பேசி முடித்தல் வேண்டும். ஏதாவது விடுபட்ட கருத்துக்கள், புள்ளி விவரங்கள் இருந்தால் பின்னால் அதே கட்சி உறுப்பினர்கள் பேசலாம்.

| | | |
|---|---|---|
| *1985* | VII | *72, 389, 626, 680* |

கூடுதலாக நேரம் கொடுக்கப்படாததை ஆட்சேபித்து ஓர் உறுப்பினர் தெரிவித்த கருத்தையொட்டி தலைவர் அளித்த குறிப்புரையாவது :

''சர்வாதிகாரம் என்றால் யார் சர்வாதிகாரம் செய்கிறார்கள் என்பதை அவையினர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். உறுப்பினரின் சர்வாதிகாரத்திற்கு ஏற்ப நாங்கள் செய்யத் தயாராக இல்லை. அப்படிச் செய்தால் சட்டசபையை நடத்த முடியாது. உங்களுக்கு அதிக நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற உறுப்பினர்களை விட உங்களுக்கு அதிக நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி விவாதிப்பது நல்லதல்ல. இவ்வளவு வேகம் எதற்காக? தயவுசெய்து அமருங்கள்.''

| | | |
|---|---|---|
| *1987* | XXXVII | *865* |

சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றுவதில், 'ரோடு ரோலர்' மாதிரி உருண்டு கொண்டே போகிற நிலைமை இல்லாமல், போதிய அவகாசம் கொடுக்கப்பட வேண்டும் என்று ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட போது தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார் :

''சட்ட முன்வடிவுகளை வேகமாக நிறைவேற்றவில்லை. நீங்கள் அந்த வார்த்தையைச் சொன்னால் வெளியே வேறு மாதிரி வரும். வேகமாக மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன என்று எழுதுவார்கள். '' இன்றைக்கு காலை 10-30 மணியிலிருந்து எல்லா மசோதாக்களும் படிப்படியாக—எல்லோரையும் பேசவிட்டு இங்கே அவர்கள் எடுத்துக் கொண்ட நேரத்திற்கு ஏற்ப ஒவ்வொன்றாக— நிறைவேற்றப்படுகின்றன. இதிலே எந்தக் குறைபாடும் கிடையாது. இதிலே நீங்கள் ஏதாவது குறை கண்டால் இனிமேல் ஒரு நாளைக்கு ஒரு ''பில்'' என்று தான் எடுத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் சொன்ன 'ரோடு ரோலர்' என்ற வார்த்தை— 'It is a sweeping remark on the entire House'.

| | | |
|---|---|---|
| 1987 | XLVI | 782, 783 |

காலவரையறை—தொடர்ச்சி

தலைவர் மணியடித்ததை ஓர் உறுப்பினர் ஆட்சேபித்த போது கீழ்க்கண்டவாறு குறிப்புரைக்கப்பெற்றது :

"கொடுக்கப்பட்ட காலம் நெருங்கிக் கொண்டு இருக்கிறது. சீக்கிரம் பேசி முடிக்க வேண்டும் என்று அறிவிப்பதற்காக மணி அடிப்பது வழக்கம். அடிக்கடி அடிக்கக் கூடாது என்று சொல்வது சரியல்ல. அடிக்க வேண்டிய நேரத்தில் அடிக்காமல் இருக்க முடியாது."

1987 XL 71

நிறையப் பேர் பேச வேண்டியிருக்கும் போது சீக்கிரமாக, ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் உறுப்பினர்கள் சுருக்கமாகக் கருத்துக்களைச் சொல்லி முடிக்க வேண்டும்.

1985 XIII 63, 176, 670

நேரம் கருதி தலைவர் அடுத்த உறுப்பினரை பேச அழைத்ததற்கு ஓர் உறுப்பினர் ஆட்சேபணை தெரிவித்துப் பேசிய போது, அப் பகுதியை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு ஆணையிட்டு, குறிப்புரைக்கப்பெற்றதாவது :

"சேரை நோக்கிக் குற்றச்சாட்டு சொன்னால் சேர் நிச்சயமாக பதிலளிக்கும். அதில் சேர் தவறவே தவறாது. சொல்லப்படுகிற குற்றச்சாட்டை சேர் கேட்டுக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை..., நேரம் ஒதுக்குவதில் சேருக்கு எந்த வித்தியாசமும் கிடையாது. "நேரம் ஒதுக்குவது பற்றி அலுவல் ஆய்வுக் குழுவில் பேசிக் கொள்ளலாம்."

1987 XL 129–130

பல பிரச்சினைகளைக் குறிப்பிட்டு அவற்றை விவாதிக்க போதிய நேரம் ஒதுக்கப்படுவதில்லை என்று ஓர் உறுப்பினர் கூறிய போது, அது குறித்து தலைவரின் அறையில் பேசியிருக்க வேண்டுமென்றும், பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் பேச வேண்டுமென்றும் குறிப்புரைக்கப் பெற்றது.

1987 XLV 507





காலவரையறை—தொடர்ச்சி

பெண் உறுப்பினர்கள் பேசுவதற்கு போதுமான நேரம் ஒதுக்கப்பட வேண்டுமென்று ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட போது தலைவர் குறிப்புரைத்ததாவது :

"அப்படிப் பார்க்க முடியாது. உறுப்பினர்கள் என்று தான் பார்க்க முடியும். அந்த மாதிரி 'டிஸ்கிரிமினேஷன்' இங்கே இல்லை. எல்லா உறுப்பினர்களுக்கும் ஒரே மாதிரிதான் நேரம் கொடுக்க முடியும்."

1986 XX 551

பேசுகின்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் 2 நிமிடம், 2 நிமிடம் என்று கூடுதலாகக் கொடுத்தால் குறிப்பிட்டபடி முடிக்க முடியாது. அதனால் மற்ற உறுப்பினர்களின் வாய்ப்பு பாதிக்கப்படும்.

1986 XXII 830

மக்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்காக போதுமான நேரம் உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று ஓர் உறுப்பினர் கோரிய போது தலைவர் குறிப்புரைத்ததாவது :

"இந்த அவையைப் பொறுத்த வரைக்கும் எல்லா உறுப்பினர்களும் விவரமாகப் பேசுபவர்கள் தான். ஒவ்வொரு உறுப்பினரும் படித்துவிட்டு வந்து பேசுபவர்கள் தான். நான் எல்லா தரப்பினரையும் பார்க்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட உறுப்பினருக்கு மட்டும் தான் அந்தக் கடமை என்று இல்லை. எல்லா உறுப்பினர்களுக்கும் அந்தக் கடமை இருக்கிறது. இருக்கின்ற நேரத்திற்கு ஏற்ப வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு உறுப்பினரும் இப்படி கேட்டால் குறிப்பிட்ட நேரத்திற்குள் நிகழ்ச்சிகளை முடிக்க முடியாது."

1986 XX 711–712

மணியடிக்கப்பெற்றதற்குப் பிறகு ஓர் உறுப்பினர் பேச முயன்ற போதும் மேலும் ஒரு நாள் விவாதம் வைத்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்ட போதும், தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார் :

"இப்படி கேட்க ஆரம்பித்தால் எல்லோரும் கேட்க ஆரம்பிப்பார்கள். உங்களுக்கு மாத்திரம் தனி உரிமை கொடுக்க

காலவரையறை—தொடர்ச்சி

முடியாது. 2 நாட்களுக்கு விவாதம் வைத்துக் கொள்வது பற்றி எல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு எடுக்க வேண்டும். இங்கே பேசி முடிவு எடுக்க முடியாது.''

| | | |
|---|---|---|
| 1987 | XL | 78 |

மணியடித்த பிறகும் உறுப்பினர் ஒருவர் தன்னுடைய தொகுதி பற்றி பேச அனுமதி கோரிய போது தலைவர் தெரிவித்த குறிப்புரையாவது :

''தொகுதி இல்லையென்றால் நீங்கள் இங்கே வர முடியாது. ஆகையால் தொகுதியைப் பற்றி முதலிலேயே பேசியிருக்க வேண்டும். கடைசியாக தொகுதியைப் பற்றி பேசும் நிலையை ஏற்படுத்தக் கூடாது.''

| | | |
|---|---|---|
| 1987 | XXXV | 103, 202 |
| | XXXVII | 1009 |

மற்ற உறுப்பினர்களுக்கும் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்பதால், உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசி முடித்துக்கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1986 | XXXI | 70 |

மின் வாரிய நிதிநிலை அறிக்கைகளை படிப்பதற்குப் போதிய கால அவகாசம் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப் படவில்லை என்று ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''அமைச்சரின் பேச்சு மட்டும் நான் இன்றைக்கு அவையில் வைக்கப்பட்டு இருக்கிறது. மற்றவை ஏற்கனவே கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அதை உறுப்பினர்கள் படித்திருக்கலாம். இதைப் பெரிதாகச் சொல்ல வேண்டியதில்லை. மனம் இருந்தால் மார்க்கம் உண்டு.''

| | | |
|---|---|---|
| 1986 | XXX | 197-198 |





சவால் விடுதல்—

ஓர் உறுப்பினர் தம் உரையில் சவால் விட்டுப் பேசியபோது தலைவர், சவால் விடுகின்ற இடம் இது அல்ல என்றும், சவால் விட்டுப் பேசக் கூடாது என்றும் குறிப்புரைத்தார்.

| | | |
|---|---|---|
| 1986 | XVIII | 571 |
| | XXII | 94 |

சுருங்கச் சொல்லி விளக்குதல்—

அதிக நேரம் பேசாமல் சுருங்கச் சொல்லி விளங்க வைக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1987 | XL | 119 |

உறுப்பினர்கள் பேசுகையில் பிரச்சினையை வளர்க்காமல் கேட்க வேண்டியவற்றைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1986 | XV | 417 |

ஓர் உறுப்பினர் தம்முடைய கருத்தை உதாரணத்தோடு விரிவாக விளக்க முற்பட்டபோது, 'கதை சொல்கிற இடம் அல்ல இது' என்று குறிப்புரைக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1987 | XXXIX | 458—459 |

தலைவரைப் பற்றி பேசுதல்—

உரையாற்றுகின்ற உறுப்பினர் எடுத்துக்காட்டு கூறும்போது தலைவரைப் பற்றி குறிப்பிடக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1986 | XXI | 520 |

பேரவைத் தலைவரை விவாதம் எதிலும் இழுக்கக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1985 | V | 607 |

தவறான தகவல்—

விவாதத்தில் பங்குகொள்ளும் உறுப்பினர்கள் தவறான தகவல்களை அளிக்கக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1986 | XXIII | 395 |

விவாதம்—தொடர்ச்சி

பத்திரிகைச் செய்திகள்—

பத்திரிகைகளைப் பற்றி பேசக்கூடாது ; பத்திரிகையை மேற்கோள் காட்டியும் பேசக்கூடாது ; What has appeared in press is no evidence.

1985 XIV 269

பத்திரிகைச் செய்தியை ஆதாரமாக வைத்துப் பேசக் கூடாது. முன்கூட்டியே பேரவைத் தலைவரிடம் காட்டி அனுமதி பெற்று, பொறுப்பேற்றுப் பேசவேண்டும்.

1986 XVII 401
XXX 202

பத்திரிகையில் வந்த செய்திகளைப் பற்றி அவையில் குறிப்பிட வேண்டியதில்லை.

1985 XIV 199

பிற அவையில்/குழுவில் பேசியது—

அலுவல் ஆய்வுக் குழுவில் நடைபெற்ற விவாதத்தை அவையில் திரும்பச் சொல்லி விவாதிக்க முடியாது.

1985 VI 210
1987 XLVI 787

இன்னொரு அவையில் பேசியதைப் பற்றி இந்த அவையில் விவாதிக்கக்கூடாது. இங்கே அதற்குப் பதில் சொல்லக் கூடாது என்று குறிப்புரைக்கப் பெற்று அவ்வாறு பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.

1986 XXVIII 349

பாராளுமன்றத்தில் குறிப்பிட வேண்டியவைகளை இந்த அவையில் பேசிப் பயனில்லை.

1985 V 295–296

பொதுவாக மேலவையிலேயிருக்கும் உறுப்பினர்களைப்பற்றி பேரவையிலே பேசக்கூடாது ; பேரவையிலே இருப்பவர்களைப்பற்றி மேலவையிலே பேசக்கூடாது என குறிப்புரைக்கப்பெற்று, மேலவை உறுப்பினரைப் பற்றி குறிப்பிடப்பெற்ற வார்த்தை நீக்கப் பெற்றது.

1985 XIII 320



விவாதம்—தொடர்ச்சி

பேசியதையே பேசுதல்—

அமைச்சர் ஏற்கெனவே விளக்கம் சொல்லி விட்ட ஒரு பிரச்சினை குறித்து திரும்பத் திரும்பப் பேசக்கூடாது.

1986 XX 334

ஒருமுறை குறிப்பிட்டதை மீண்டும் மீண்டும் குறிப்பிடுதல் கூடாது.

1985 XIII 368

முடிந்த பிரச்சினை குறித்து திரும்பப் பேசக்கூடாது.

1985 III 409

முன்பு அவையில் பேசி பதிலளிக்கப்பட்டதைக் குறித்து திரும்பப் பேசுதல் கூடாது, ரெப்படிசன் வேண்டாம்.

1987 XLII 415

'வரலாறு காணாத அளவில்' என்ற சொற்றொடர்களை உறுப்பினர்களும், அமைச்சரும் மீண்டும் மீண்டும் பயன் படுத்திய போது, தலைவர் குறிப்புரைத்ததாவது :

"I impose a ceiling on the use of the word— வரலாறு காணாத அளவில்".

1987 XXXV 563

பேசும் முறை—

அவையில் யார் பேசலாம், யார் பேசக் கூடாது என்று உறுப்பினர் உத்தரவு போடக் கூடாது. தலைமைப் பீடத்தில் இருப்பவர்தான் சொல்ல வேண்டும்.

1985 V 487

அனுமதி இல்லாமல் யாரும் பேச முடியாது. அனுமதி இல்லாமல் பேசினால் அது அவைக் குறிப்பில் ஏறாது.

1987 XXXVII 99, 100
472
XL 225

## விவாதம்— தொடர்ச்சி

### பேசும் முறை—தொடர்ச்சி

ஆளுநர் உரை விவாதத்தின்போது உறுப்பினர் இலக்கியத் திலே பேச ஆரம்பித்தால், அது பட்டிமன்றம் மாதிரி ஆகிவிடும்.

1987 XXXIII 330

இரண்டு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிக்கலாம். அவை அனுமதிக்கப் படும்.

1987 XLIII 498

உரையாற்றும் உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டும். 'எது எதற்கோ முடிச்சுப் போட வேண்டும், எதை எதையோ ஒப்பிட்டுப் பேச வேண்டும்' என்று எண்ணக் கூடாது.

1987 XLIV 232

உறுப்பினர்கள் நேரடியாக ஒருவருக்கொருவர் கேள்வி கேட்டுக் கொள்வதோ, பதில் அளித்துக் கொண்டிருப் பதோ, முறையாகாது. யார் பேசுவதாக இருந்தாலும் பேரவைத் தலைவர் மூலமாகப் பேச வேண்டும்.

1985 III 444
IV 700
V 107
1986 XXIII 578
XXXI 484

உறுப்பினர்கள் பேசும்போது வார்த்தைகளை எண்ணிப் பார்த்து யாரையும் புண்படுத்தாத அளவிற்குப் பேச வேண்டும். ஒப்பிட்டுப் பேசும்போது கொஞ்சமாவது ஒத்துப் போகின்ற வகையில் ஒப்பிட்டுப் பேசவேண்டும்.

1986 XXVIII 354

எல்லோரும் ஒரே நேரத்தில் எழுந்து நின்று ஒருவருக்கொரு வர் நேருக்கு நேர் பார்த்துப் பேசக் கூடாது. தலைவரின் அனுமதி பெற்றுத்தான் பேசவேண்டும். பேசும்போது பிரச்சினைக்கு இடம் இல்லாமல் பேச வேண்டும்.

1986 XXIII 620

எவரையும் தாக்கிப் பேசுவதை விடுத்து, யாருக்கு எப்படிப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று பேசினால் நன்றாக இருக்கும்.

1985 V 481



## விவாதம்— தொடர்ச்சி

### பேசும் முறை— தொடர்ச்சி

ஒரு சட்ட முன்வடிவின்மீது ஓர் உறுப்பினர் தொடர்பின்றிப் பேசியதை தலைமை சுட்டிக்காட்டியபோது, அவ்வுறுப் பினர் வெளிநடப்பு செய்தபின் தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''நான் இங்கே ஒரு ஆலோசனையாகச் சொல்ல விரும்பு கிறேன். பல புதிய உறுப்பினர்கள் எல்லாம் வந்திருக் கிறார்கள். சட்ட முன்வடிவுகளைப் பற்றி பேசுவதற்கு முன்பு, அதைப்பற்றி படித்துவிட்டு வந்து பேசவேண்டும். அப்படிப் பேசினால் விவாதமே உருவாகாது. படிக்காத காரணத்தால்தான் பிரச்சினையே உருவாகிறது. தேவை யில்லாத விவாதங்களைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.''.

1987 XLVI 315, 318
319, 320

ஒரே நேரத்தில் நான்கு உறுப்பினர்கள் எழுந்து பேச முற் பட்டபோது யாராவது ஓர் உறுப்பினர் மட்டும் பேசலாம் எனத் தலைவர் குறிப்புரைத்தார்.

1987 XXXIX 640

ஓர் உறுப்பினர் ஓர் அமைச்சர் பற்றிக் குறிப்பிட்டதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டு தலைவர் குறிப்புரைத்ததாவது :

''பொறுமையாகப் பேசுங்கள். எதுவும் முறையாக இருக்க வேண்டும்.''

1987 XXXVII 590

ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட ஒரு கருத்தை வைத்து விவாதத்தை வளர்க்கக் கூடாது.

1985 VIII 827

கட்சி விவகாரங்களை அவையில் பேசக் கூடாது என்று குறிப் புரைக்கப் பெற்று அவ்வாறு பேசியவை அவைக் குறிப்பி லிருந்து நீக்கப் பெற்றன.

1986 XXVI 641, 642

பேசும் முறை— தொடர்ச்சி

கட்டுப்பாடோடு பேசவேண்டும்.

1986 XVII 379, 381

தனிப்பட்ட தாக்குதலைத் தவிர்ப்பது நல்லது. இல்லாவிட்டால், அது நாகரீகமான நடவடிக்கையாக அமையாது.

1987 XXXVII 591

பேச்சுக்கும் உரிமைக்கும் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. எப்போது வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று நினைப்பது நல்ல முன்னுதாரணம் அல்ல.

1985 XV 425

முன் வரிசையில் இருக்கிற தலைவர்களுக்கு முன்னுரிமை தர வேண்டுமென்ற முறையில், அவர்களுக்குப் பேச வாய்ப்பு அளிக்கப்படுகிறபோது, அவர்கள் திரும்பி நின்று, மற்ற உறுப்பினர்களோடு நேருக்கு நேர் பேசுவது நியாயமல்ல.

1987 XXXIII 303

முன்னறிவிப்பு இன்றி அவையில் திடீரென எந்தப் பொருள் குறித்தும் எழுப்புதல் கூடாது.

1985 V 397
XII 253
1987 XLI 70

மைக் இல்லாமல் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது.

1987 XL 785

விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் ஓர் உறுப்பினர் தன்னுடைய பேச்சில் ' தெரிய வருகிறது, தெரிய வருகிறது ' என்று குறிப்பிடுவது சரியல்ல.

1987 XXXV 435

விவாதத்தில் பங்கெடுத்துப் பேசுகின்ற உறுப்பினர் சக உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் வைத்துப் பேசிக் கொண்டிருப்பது சரியல்ல. அந்த முறையை எல்லோரும் பின்பற்ற ஆரம்பித்தால் நேரம் இருக்காது.

1986 XXV 121





பேசும் முறை—தொடர்ச்சி

வெளியில் பேசுவது போல் பேரவையில் பேசக் கூடாது; அவைக்குள் பின்பற்ற வேண்டிய முறைக்கும், அவையின் கண்ணியத்திற்கும் ஏற்ப பேச வேண்டும் எனக் குறிப்புரைக்கப்பெற்று, அதற்கு மாறாகப் பேசிய பகுதி நீக்கப் பெற்றது.

1985 II 304

மத்திய அரசின் கொள்கைகள்—

ஃபாரின் பாலிசியைப் பற்றி இந்த அவையில் பேச முடியாது.

1986 XXII 934

மத்திய அரசினுடைய கொள்கையைப் பற்றிப் பேசுவது தவறல்ல. ஆனால் சில புள்ளி விவரங்களைப் பற்றி இங்கே சொல்கிறபோது அதை மறுப்பதற்கு மத்திய அரசின் சார்பிலே இங்கே பிரதிநிதிகள் இல்லை என்பதால் அதைப் பற்றி குறிப்பிடுவது தேவையில்லை.

1985 V 295–296

மத்திய அரசினுடைய ஜவுளிக் கொள்கையைப் பற்றி ஓர் உறுப்பினர் குறிப்பிடுகையில் அதை இன்னொரு உறுப்பினர் ஆட்சேபித்தபோது தலைவர் குறிப்புரைத்ததாவது :

" கொள்கையைப் பற்றி விமர்சனம் செய்யலாம். விமர்சனம் செய்ய உரிமையுண்டு. உறுப்பினர் ஜவுளிக் கொள்கை சரியில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார் ; அவ்வளவுதான் ; . . அதுபற்றி பிறகு அந்தக் கட்சியின் சார்பில் பேசுபவரிடம் சொல்லி விளக்கம் சொல்லச் சொல்லலாம்."

1986 XX 742–745

வெளியே பேசப்பட்டவை—

உறுப்பினர்கள் விவாதத்தில் பங்குகொள்ளும்போது வெளியிலே சொல்வதை எல்லாம் அவையில் வந்து பேசுவது சரியல்ல. அதிலே பிரச்சினைகள் வரும். அவர்கள் சொல்கிறார்கள், இவர்கள் சொல்கிறார்கள் என்று சொல்லி, அவையில் அதைப்பற்றி வாதாட முடியாது.

1987 XXXII 123

வெளியே பேசப்பட்டவை—தொடர்ச்சி

ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் தங்களுடைய கட்சி வெளியே எடுத்த முடிவுகளை அவையில் வந்து பேச வேண்டிய அவசியம் இல்லை. அக்கட்சியினர் என்ன செய்யப் போகிறார்கள் என்பதை அவையில் வந்து சொல்வது நல்லது அல்ல. அரசியல் சட்டத்தைப் பற்றிப் பேசுவது, விமர்சிப்பது நல்லது அல்ல.

1986 XXIX 78

பிரச்சினையை ஏற்படுத்துகிற முறையிலே வெளியே சொல்லப்படுகின்றவைகளைப் பற்றி அவையிலே குறிப்பிட வேண்டாம்.

1986 XIX 482
XXIX 305

பொதுக் கூட்டத்தில் பேசியதை அவையில் குறிப்பிட வேண்டாம். பத்திரிகையில் வந்த செய்தியாக இருந்தாலாவது முன் அனுமதி பெற்றுச் சொல்லலாம்.

1985 VI 76
XII 35
1986 XVI 556

யாரோ வெளியில் கூறியதாகச் சொல்லி அவற்றை அவையில் குறிப்பிடுவது கூடாது.

1985 XI 436

வெளியில் வருகின்ற செய்தியைப் பற்றி அவையில் பேசக் கூடாது. அப்படிப் பேசினால் அதற்கு பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

1986 XXII 84

விவாதம்—ஏனையவை

உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனம் குறித்து ஓர் உறுப்பினர் தன் பேச்சில் ஆதி திராவிடர்களுக்கு உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி சலுகைகள் அளிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டபோது அரசியலமைப்புச் சட்டத்தின் 124(3)-வது பிரிவின்படி வழக்கறிஞர்களிலிருந்து நேராக நீதிபதியாக நியமிக்கலாம் என்றும் ஆதி திராவிடர்களுக்கு அவ்வாறு நீதிபதியாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றும் தலைவர் குறிப்புரைத்தார்.

1987 XXXVII 594-598





ஓர் உறுப்பினர் தம் உரையில் ஆடிட் ரிப்போர்ட்டில் உள்ள தகவல்களைச் சுட்டிக்காட்டிப் பேசியபோது பின் வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

"ஆடிட் ரிப்போர்ட்டைப் பொறுத்தவரையில் மேல் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது. அது பற்றி கமிட்டியிலே ஆராய்கிறோம். தொடர் நடவடிக்கை இருக்கிறது. அவ்வாறு அதற்கு மேல் நடவடிக்கைக்கான வாய்ப்பு இருப்பதால் இங்கே மற்றவற்றைப் பேசுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். ஆடிட் ரிப்போர்ட்டை வைத்துக் கொண்டு குற்றச்சாட்டு சொல்ல வேண்டியதில்லை. அந்தக் குழுக்களிலே நாமே உறுப்பினர்களாக இருக்கிறோம். அனைத்துக் கட்சியினைச் சேர்ந்தவர்களும் உறுப்பினர்களாக இருக்கிறோம். எனவே, அது குறித்து பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதிலே இருக்கிற நிலைமைகளைக் கண்டுபிடித்து நாம் தான் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும். எனவே அந்த வகையில் மேல் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது."

1987 XXXVIII 75

ஓர் உறுப்பினர் பேசுகையில் அமைச்சரவைக் கூட்டத்தில் என்ன நடந்தது என்பது பற்றிக் கூறியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"அமைச்சரவைக் கூட்டத்தில் என்ன நடந்தது என்பது பற்றி உறுப்பினருக்குத் தெரிய வாய்ப்பில்லை. கற்பனையில் வாதங்களைச் சொல்வது மரபல்ல. அமைச்சரவைக் கூட்டத்தில் நடப்பதையெல்லாம் அமைச்சர்கள் வெளியே சொல்லக் கூடாது, பதவிக்காப்புப் பிரமாணப்படி. ஆகவே, அமைச்சர் அமைச்சரவைக் கூட்டத்திலே பேசினாரா என்றெல்லாம் உறுப்பினர் கேட்கக் கூடாது."

1986 XIX 525

ஓர் உறுப்பினர் 'Justice delayed is justice denied.' என்று குறிப்பிட்டபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"Justice hurried is also justice buried"

1987 XL 839

கிருஷ்ணா நதி நீரை சென்னைக்குக் கொண்டு வருகிற திட்டம் தீட்டப்படுவதற்கு முன்பு மத்திய அரசினுடைய அனுமதியை ஆந்திர அரசும், தமிழக அரசும் பெறவில்லையென்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டிய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"முன்னாள் பிரதம அமைச்சர் அவர்களே அதைப் பாராட்டியிருக்கிறார்கள். முன்னுதாரணமாக இரண்டு மாநிலங்களும் செயல்பட்டு இருக்கின்றனவென்று கூறியிருக்கிறார்கள். என்னை பதில் சொல்கிற மாதிரி வைக்காதீர்கள். 'காண்ட்ரவர்சி' வருகிற மாதிரி பேசாதீர்கள்."

1986 XIX 90

சட்டமன்ற உறுப்பினர்கள் சம்பள உயர்வை தம் கட்சியினர் நிராகரித்தது பற்றி ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"இந்த மாதிரி விவகாரங்களை எல்லாம் கமிட்டியிலே பேச வேண்டும்.

..கட்சிக் கொள்கை வேறு, இங்கே கட்சிப் பாகுபாடு இல்லாமல் உறுப்பினர்களாக இருக்கிறோம். கட்சியினுடைய கொள்கை வெளியே. இந்த சட்டசபைக்குள்ளே வரும்போது சட்டசபை ஒரு முழுமையான நிறுவனம். நாம் எல்லோரும் அங்கத்தினர்கள். நம் எல்லோருடைய கௌரவத்தைப் பாதுகாக்கிற அளவுக்கு பேச்சுக்கள் அமைய வேண்டும்."

1986 XVII 415

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகளை பனை ஓலையிலே அச்சடித்துக் கொடுக்க வேண்டுமென்று ஓர் உறுப்பினர் தெரிவித்த யோசனைக்கு அமைச்சர் பதில் அளிக்கும்போது, சட்டமன்றக் கூட்டத்தை ஆலமரத் தடியில் நடத்தினால் அது பற்றி சிந்திக்கலாம் என்று குறிப்பிட்டார். இது குறித்து தலைவர் நகைச்சுவை ததும்ப பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"நாம் எல்லோரும் ஆலமரத்தடியிலிருந்துதான் இங்கே வந்து இருக்கிறோம்."

1987 XL 706



சில உறுப்பினர்கள் அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியை எரித்ததற்காக பதவி நீக்கம் செய்யப்பெற்றது, இந்தியைத் திணிக்கக் கூடாது என்பது பற்றிய தீர்மானத்தை ஏகமனதாகப் பேரவையில் நிறைவேற்றியதற்காகக் கிடைத்த பரிசு என்று ஓர் உறுப்பினர் கூறிய போது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"அவர்கள் பேசும்போதே நானே ஒரு கருத்தைச் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். அதாவது அவர்கள் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக கிடைத்த பரிசு என்று சொன்னார்கள். அது அதற்காகக் கிடைத்த பரிசு அல்ல. சட்டத்தை மீறியதற்காக, சட்டத்தை எரித்ததற்காகத்தான், அவர்கள் எடுத்த வாக்குறுதியை மீறியதற்காகதான் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லித்தான் ஆக வேண்டும்."

1987 XXXIII 49

சுப்ரீம் கோர்ட் தீர்ப்பைப்பற்றி ஓர் அமைச்சர் குறிப்பிட்டு பேசியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

"சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்ட்டை 'கிரிட்டிஸைஸ்' செய்ய முடியாது என்று சொன்னீர்கள். You can criticise; you can debate over a judgement; you cannot impute motives; you can have deliberation over a judgement."

1985 XI 252

நகரமன்ற நிகழ்ச்சிகளுக்கு முக்கியமான பிரமுகர்கள் வரும்போது அவர்கள் அமர வேண்டிய ஆசனம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், சட்டமன்றப் பேரவைக்கு வரும் முக்கியப் பிரமுகர்களுக்கு ஆசனம் அளிப்பது குறித்து ஓர் உறுப்பினர் விளக்கம் கோரியபோது, பின்வருமாறு குறிப்புரைக்கப்பட்டது :

"குடியரசுத் தலைவர் அவர்கள் வரும்போது இந்த ஆசனத்தில்தான் வந்து அமர்கிறார். நம்முடைய ஆளுநர் அவர்கள் வந்தாலும் இங்கேதான் வந்து அமர்கிறார். நான் பக்கத்தில் இன்னொரு நாற்காலியில் அமருகிறேன். இங்கே இப்படித்தான் உட்காரவேண்டும். ஆகவே நம்முடைய நாட்டில் நடைமுறை அப்படி இருக்கிறது. மற்ற நாடுகளில் அப்படி கிடையாது. சபையில் முதல் நாளில், ஆரம்ப நாளில் ஆளுநர் அவர்கள் உரை நிகழத்தும்போது முதலமைச்சர் அவர்களும், பிரதம அமைச்சர் அவர்களும், சபாநாயகர் அவர்களும் ஒன்றாகத்தான் மேலை நாடுகளில் அமர்ந்து கொண்டு இருக்கிறார்கள். இங்கே நம்முடைய நாட்டில் அப்படி இல்லை."

1987 XLIII 826-827

மதுவிலக்குப் பற்றி பேசுகையில் ஓர் உறுப்பினர் முதல் மைச்சர் பற்றிக் குறிப்பிட்டபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' கள், சாராயம் யார் வைத்திருக்கிறார்கள் என்ற விவரங்களைச் சொல்லுங்கள். ஆனால் இரட்டை வேடம் போன்ற தேவையில்லாத விமர்சனங்களைச் சொல்ல வேண்டாம்.''

1987 XXXII 105–106

மானியக் கோரிக்கைக்கு பதில் அளித்து அமைச்சர் பேசுகையில் அவையில் வர இருக்கின்ற கவன ஈர்ப்புத் தீர்மானம் பற்றிய விவரங்களைக் கூறுவது முறைதானா என்று ஓர் உறுப்பினர் கேட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' அந்த கவன ஈர்ப்புத் தீர்மான முன்அறிவிப்புக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. அது அமைச்சருக்குப் போய் இருக்கும். ஆகவே, அதை குறிப்பிட்டு அமைச்சர் பேசியிருக்கிறார்.''

1986 XXII 326

முதலமைச்சர் பற்றி ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட சில வார்த்தைகளை நீக்கி, தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பாவது :

'' உண்மை மறைக்கப்படுகிறபோது, விதிகள் மீறப்படுகிறபோது, We are here to straighten the record.

..சபையிலே தவறான தகவலை ரெக்கார்டாக்கிவிட முடியாது. உறுப்பினர்கள் உண்மைக்குப் புறம்பான தகவலைத் தந்தால், தெரிந்த உண்மையைச் சொல்வோம், அதைத் தவிர்க்க முடியாது.

..அரசியலுக்காக, நடந்த ஒரு நிகழ்ச்சியை மறைத்து, மிகக் கீழே இறங்கி ஒரு வார்த்தையை உறுப்பினர் சொல்லுகிறபோது , அதை முறைப்படுத்துவது தலைமையினுடைய கடமை.

..எல்லா உறுப்பினர்களுடைய உரிமைகளையும் பாதுகாப்பது தலைமையினுடைய கடமை.

..நடந்த உண்மையை தலைவர் சொல்லக் கூடாது என்று கட்டுப்பாடு போட்டால், உண்மைக்கு மாறானவைகளைச் சொல்வதற்குக் கட்டுப்பாடே இல்லாது போய்விடும்.''

1987 XLIII 509. 510





வருமானமில்லாத கோயில்களைக் குறிப்பிட்டுக் கருத்து தெரிவிக்கையில், ஓர் உறுப்பினர் சாமிகளைப் பற்றிக் கூறிய போது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''மனிதர்களிலேதான் ஏழைகள், பணக்காரர்கள் என்று இருக்கிறார்கள். வருமானம் உள்ள கோயில், வருமானம் இல்லாத கோயில் என்று சொல்லவேண்டும்.''

1987 XLII 115

வில்லன் நடிகரிடத்திலேயே திருடிக் கொண்டு போய்விட்டார்கள் என ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது, 'வில்லன் நடிகர்' தானே, 'வில்லன்' இல்லையே என நகைச்சுவையாக குறிப்புரைக்கப்பெற்றது.

1987 XLII 426

வினாக்கள்—விடைகள்—

துணை வினா—அனுமதி—

அடுத்த வினா எடுத்துக் கொள்ளப்பெற்ற பிறகு முந்தைய வினாவில் ஓர் உறுப்பினர் ஒரு துணை வினா கேட்டபோது அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு ஆணையிடப் பெற்றது.

1987 XXXIII 26

அடுத்த வினா எடுத்துக் கொள்ளப்பெற்ற பிறகு முந்தைய வினாவில் துணைவினா கேட்க அனுமதி மறுக்கப்பெற்றது.

1987 XXXIII 436

அமைச்சர் பதில் அளித்துவிட்டது பற்றியே மீண்டும் கேட்கப்பட்ட துணைக் கேள்வி அனுமதிக்கப் பெறவில்லை.

1985 X 183

கேள்வி நேரத்தில் கட்சி அடிப்படையில் வாய்ப்பு அளிப்பது இடையாது.

1987 XLIV 41

Supplementaries not relevant to main question were disallowed since no answer would be available for them.

1985 X 168

XIII 296, 46

1987 XXXV 15

**துணை வினா—குற்றச்சாட்டுகள்—**

ஓர் உறுப்பினர் தம் துணைக் கேள்வியில் அலுவலர்களைப் பற்றிக் குறிப்பிட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. ஒரு அதிகாரி மீதோ, அமைச்சர் மீதோ, உறுப்பினர் மீதோ குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்றால் எழுதிக் கொடுக்க வேண்டும்.''

| | | |
|---|---|---|
| 1987 | XXXV | 8–9 |

கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1985 | VIII | 815 |
| 1986 | XXVII | 187 |
| | XXIX | 146 |
| 1987 | XXXII | 216 |

கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டே கூடாது. குற்றச்சாட்டு எதுவும் இருந்தால் அதைத் தனியாக எழுதிக் கொடுக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1987 | XLIV | 333 |

துணை வினா கேட்கும்போது குற்றச்சாட்டு கூறக் கூடாது என்று குறிப்புரைக்கப்பெற்று அவ்வாறு கூறப்பெற்ற பகுதி நீக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1985 | VIII | 7 |
| 1986 | XVI | 461 |
| | XXX | 33,38 |
| 1987 | XXXIII | 3, 4, 7, 8 |
| | XXXVII | 301 |
| | XXXVIII | 23 |
| | XXXIX | 321 |

**துணை வினா—கேட்கும் முறை—**

ஏற்கெனவே அமைச்சர் பதிலளித்த ஒரு துணை வினாவை ஓர் உறுப்பினர் திரும்பக் கேட்டபோது, அதற்கு அனுமதி மறுக்கப் பெற்றது.

| | | |
|---|---|---|
| 1986 | XXXI | 35 |
| | XLV | 24 |





**துணை வினா-கேட்கும் முறை—தொடர்ச்சி**

ஒரு குறிப்பிட்ட ஊரைப் பற்றி மூலக் கேள்வி இருக்கும் போது, ஒவ்வொரு ஊரைப் பற்றியும் உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் கேட்டால், அமைச்சர் தகவல் அளிக்க முடியாது.

| | | |
|---|---|---|
| 1986 | XIX | 581, 583 |
| | XXII | 444 |
| | XXXI | 20 |

ஒரு குறிப்பிட்ட மருத்துவமனையை விரிவுபடுத்துவது சம்பந்தமாக ஓர் உறுப்பினர் நீண்ட துணைக் கேள்வியைக் கேட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' மருத்துவத் துறை மானியம் வரும்போது அது பற்றி முழுவதுமாகப் பேசலாம். கேள்வி நேரத்தில் உறுப்பினர் கேள்வியாக மட்டும் கேட்க வேண்டும்.''

| | | |
|---|---|---|
| 1986 | XXIX | 234 |

ஒரு சமயத்தில் ஒரு துணை வினாதான் கேட்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1987 | XXXIX | 29 |

ஓர் உறுப்பினர் துணை வினா கேட்கும்போது, அவையில் அமைச்சர் அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்று குறிப்பிட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

'' அரசினர் உறுதிமொழிக் குழுவில் இது பற்றிய தகவல்களைக் கேட்க வேண்டும்.''

| | | |
|---|---|---|
| 1986 | XXVIII | 489 |

ஓர் உறுப்பினர் தொடர்பில்லாத துணைக் கேள்வியைக் கேட்டபோது, 'தனிக் கேள்வி போடவும்' என்று குறிப்புரைக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1987 | XXXVII | 446 |

குற்றச்சாட்டு இல்லாமல் கேள்வி கேட்க வேண்டுமென குறிப்புரைக்கப்பெற்று, குற்றச்சாட்டாக அமைந்த பகுதி நீக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1985 | VI | 326, 327 |

வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி

துணை வினா—கேட்கும் முறை—தொடர்ச்சி

கேட்ட கேள்வியை மீண்டும் கேட்கவேண்டாம்

| | | |
|---|---|---|
| 1986 | XXXI | 7, 32 |

கேள்வி நேரத்தில் ஆலோசனை சொல்ல வேண்டாம்.

| | | |
|---|---|---|
| 1987 | XL | 356 |

கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூறக்கூடாது. துணைக் கேள்வியை மட்டும் கேட்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1986 | XXVI | 15,17 |

கேள்வி நேரத்தில் குறுக்குக் கேள்விகள், பதிலுக்குப் பதில் என்பதெல்லாம் கிடையாது. கேள்வியாகக் கேட்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1985 | V | 17 |

கேள்வி நேரத்தில் விவாதம் போல் பேசினால், அமைச்சர் பதில் சொல்ல முடியாது. கேள்வியாக இருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1987 | XXXIV | 190 |

கேள்வியாகக் கேட்க வேண்டும். நீண்ட சொற்பொழிவு செய்வதற்கு இது மானியக் கோரிக்கை மீதான விவாதம் அல்ல.

| | | |
|---|---|---|
| 1985 | V | 732 |
| 1987 | XXXIV | 378 |
| | XXXVI | 460 |

கேள்வியாகக் கேட்க வேண்டும். விவரம் கேட்டால்தான் அமைச்சர் பதில் சொல்வார். இல்லையென்றால் நடவடிக்கை எடுக்கும்படி 'பெட்டிஷன்' எழுதிக் கொடுக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1985 | VI | 310 |
| 1986 | XV | 339 |
| | XVI | 4,21,26 |
| | XVII | 167 |
| | XXIV | 39 |
| | XXVIII | 268,287 |
| 1987 | XXXV | 30 |
| | XXXVIII | 35 |
| | XL | 321 |
| | XLVI | 573 |



வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி.

துணை வினா—கேட்கும் முறை—தொடர்ச்சி.

கேள்வியாகக் கேட்க வேண்டும். வெளியில் நடப்பதைப் பற்றிச் சொல்லக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1985 | IV | 142 |

கொள்கைப் பிரச்சினை சம்பந்தமான துணை வினா கேட்கப்படக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1986 | XXIX | 139 |

துணை வினா அமைச்சரிடம்தான் கேட்க வேண்டும். மற்ற உறுப்பினர்களைப் பார்த்து கேட்கக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1986 | XIX | 396 |

துணை வினா கேட்க விரும்பும் உறுப்பினர் தலைவரின் கவனத்தை ஈர்க்க தம் கையை இருக்கையிலிருந்தே உயர்த்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1985 | VIII | 367 |

துணை வினா கேட்கும்போது பத்திரிகைச் செய்திகளை எல்லாம் பேசக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1986 | XVIII | 313 |

நீண்ட வினாவாகக் கேட்டால் அமைச்சரால் பதிலளிக்க இயலாது.

| | | |
|---|---|---|
| 1985 | IX | 15 |

பத்திரிகையில் வந்த செய்தி அடிப்படையில் துணைக்கேள்வி கேட்கக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1987 | XLIII | 375 |

துணை வினா— கேட்கும் முறை— தொடர்ச்சி.

பல துணைக் கேள்விகளை ஒன்றாகக் கேட்டால் எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல முடியாது. சுருக்கமாக, ஒவ்வொன்றாகக் கேட்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1985 | IV | 11 |
| | VI | 193,308 |
| | IX | 422 |
| | XIII | 287 |
| | XIV | 398 |
| 1986 | XVI | 207 |
| | XVIII | 417 |
| | XX | 301 |
| | XXVII | 21,186 |
| | XXX | 38 |
| | XXXI | 243 |

மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத துணைக் கேள்வியைக் கேட்கக் கூடாது. உறுப்பினரே 'மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லை' என்று சொல்கிற நிலையில் அமைச்சர் அதற்குப் பதிலளிக்க முடியாது.

| | | |
|---|---|---|
| 1986 | XVI | 27 |
| | XVIII | 198 |

மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத துணைக் கேள்வி நீக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1987 | XXXVIII | 411 |

மூலக் கேள்விக்குத் தொடர்புடைய துணை வினாவைக் கேட்க வேண்டும். தொடர்பில்லாமல் கேட்டால் அமைச்சரால் பதில் சொல்ல முடியாது.

| | | |
|---|---|---|
| 1985 | IV | 286,430 |
| | V | 151 |
| | VI | 329,330 |
| | IX | 34,444, 459 |
| | XIII | 287 |
| 1986 | XVI | 341 |
| | XIX | 425 |
| | XX | 679 |
| | XXVIII | 257 |
| 1987 | XXXII | 202 |
| | XXXIX | 36 |
| | XLV | 22 |





துணை வினா—கேட்கும் முறை—தொடர்ச்சி.

மூல வினாவில் குறிப்பிட்டுள்ள பொருள் பற்றி மட்டுமே துணை வினா கேட்க வேண்டும். உறுப்பினர்களின் தொகுதிகளில் உள்ள இடங்களைக் குறிப்பிட்டு துணை வினா கேட்டுக்கொண்டு இருப்பது சரியல்ல.

| | | |
|---|---|---|
| 1986 | XXI | 278 |

மூல வினாவிற்கும் துணை வினாவிற்கும் தொடர்பு இல்லையென்பதால் அனுமதி மறுக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1985 | VII | 39 |
| | VIII | 362,367, 377 |
| | XI | 17 |
| 1986 | XXI | 11 |
| 1987 | XLV | 29 |

வேளாண்மை பற்றி ஒரு நீண்ட துணை வினாவை ஓர் உறுப்பினர் கேட்டபொழுது, அண்மையில்தான் விவசாய மானியமே நிறைவேறியிருக்கிறது என்பதைத் தலைவர் நினைவுபடுத்தினார்.

| | | |
|---|---|---|
| 1987 | XXXVII | 22 |

துணை வினா—பதிலளிக்கும் முறை—

ஓர் அமைச்சர் துணை வினா ஒன்றிற்கு பதில் அளிக்கும் பொழுது மாவட்டத்தின் (அமைச்சரின் மாவட்டம்) முக்கியத்துவத்தைக் கருதி அங்கு விமானப் போக்கு வரத்து வசதிகளைச் செய்ய விரைவான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்று தெரிவித்தபோது, ''இதே வேகம் எல்லாப் பகுதிக்கும் வேண்டும்'' என்று நகைச்சுவையோடு குறிப்புரைக்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1987 | XLI | 514 |

தமது கேள்விக்கு அமைச்சர் முழுமையான பதில் அளித்து இருக்க வேண்டுமென ஓர் உறுப்பினர் வற்புறுத்திய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்;

''இப்படித்தான் பதில் சொல்ல வேண்டுமென்று அமைச்சரை வற்புறுத்த முடியாது.''

| | | |
|---|---|---|
| 1986 | XVII | 141 |

துணை வினா—பதிலளிக்கும் முறை—தொடர்ச்சி.

நீண்ட பதிலாக வரும்போது அதை அறிக்கையாக அவையில் வைத்துவிட்டால் உறுப்பினர்கள் படித்துக் கொள்வார்கள்.

1985 V 598
VI 659

வினாக்கள்—விடைகள்—நடைமுறைகள்—

அமைச்சர் பதிலில் தன்னைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதால் அதற்கு தாம் தன்னிலை விளக்கம் கொடுக்க வேண்டுமென்று ஓர் உறுப்பினர் கோரியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

''உங்களைப் பற்றித் தவறாகப் பேசவில்லை. உங்கள் மேல் குற்றச்சாட்டைச் சொல்லவில்லை. கேள்வி நேரத்தில் தன்னிலை விளக்கம் தர முடியாது. தயவு செய்து ஒத்துழையுங்கள்.''

1986 XXVII 166

உறுப்பினர்கள் போடுகின்ற கேள்விகளுக்கு உரிய காலத்தில் சம்பந்தப்பட்ட துறையிலிருந்து 41 நாட்களுக்குள் பதிலை வாங்கித்தர தகுந்த ஏற்பாடு செய்யப்படுமா என உறுப்பினர்கள் சிலர் வினவியபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''துறைகளிடமிருந்து பதில்கள் வந்தவுடன் அவை முறைப்படி அவையில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. விரைவிலே பதிலை அனுப்ப வேண்டுமென்று என்னுடைய அலுவலகத்திலிருந்து துறைச் செயலாளர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். என்னுடைய அலுவலகத்தில் தாமதம் கிடையாது.''

1985 VIII 828
1987 XLII 605, 619–620

எந்தெந்த வினாக்களுக்கு துறையிடமிருந்து பதில் வருகிறதோ, அந்த அடிப்படையில் வினாக்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அதனால் முன்பின் வினாக்கள் மாறி வரலாம். தாமதப்படுத்த வேண்டுமென்று செய்யவில்லை.

1986 XIX 124



ஒரு குறிப்பிட்ட உறுப்பினரின் கேள்விகளை எடுத்துக் கொள்வது போல் ஏனைய உறுப்பினர்களின் கேள்விகளையும் ஒவ்வொரு நாளும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஓர் உறுப்பினர் கூறியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

''உறுப்பினர்கள் கேள்வி போடுகிறார்கள். அவை ஆய்வு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பிவைக்கப் பெறுகின்றன. துறைகளிலிருந்து பதில் வந்தவுடன் இங்கே எடுத்துக் கொள்ளப்படும். அதிலே தாமதம் ஏற்படாது. குறிப்பிட்ட உறுப்பினரின் வினாக்கள் வந்துகொண்டிருப்பதற்குக் காரணம் அவர்கள் தனிப்பட்ட முயற்சி எடுத்துக் கொண்டு, சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து பதில் வர ஏற்பாடு செய்கிறார்கள். அதைப்போல் எல்லோரும் செய்ய வேண்டுமென்று நான் சொல்லவில்லை. விரைவில் பதில்கள் வந்துவிடும். நான் ஏற்கனவே அமைச்சர்களுக்கு வேண்டுகோளும் விடுத்திருக்கிறேன். அவர்களும் துரிதமாகப் பதில் அனுப்ப ஏற்பாடு செய்வார்கள். பதில் வந்தவுடன் அவையில் எடுத்துக் கொள்ளப்படும்.''

1985 II 567-568

ஒரு குறிப்பிட்ட கேள்வியைக் கேட்ட உறுப்பினரும், அமைச்சரும் அவையில் இருக்கும்போது அக் கேள்வியை ஒத்திவைப்பது முறையா என ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

''கேள்வியைக் கேட்ட உறுப்பினரோ, துணைத் தலைவர் போன்றவர்களோ தலைமைப் பீடத்தில் அமர்ந்திருக்கும்போது அவர்கள் கேட்டுள்ள வினாக்களை ஒத்திவைப்பது மரபாகும். உறுப்பினர் அவர்களே தலைமைப் பீடத்தில் இருந்தால் நிச்சயமாக அந்த உரிமை அவருக்கு வழங்கப்படும். எனவே இதில் ஒழுங்குப் பிரச்சினை எதுவும் இல்லை.''

1985 VIII 350–351

ஒரு குறிப்பிட்ட துறையைப் பற்றி கேள்விகள் வரவில்லையென்று ஓர் உறுப்பினர் தன் உரையில் குறிப்பிட்டபோது தலைவர் குறிப்புரைத்ததாவது :

''வினாப் பட்டியலை சட்டமன்றப் பேரவைச் செயலகம் தயாரிக்கிறது. பேரவைத் தலைவரின் அனுமதியோடு செய்யப்படுகின்ற பணி இது. ஆகவே, இப்போது

நீங்கள் குறிப்பிட்டது பேரவைத் தலைவர் பணியில் குறை சொல்லுவது போல் அமைந்திருப்பதால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.''

1986 XIX 124

ஒவ்வொரு நாளும் 20 வினாக்கள் எடுத்துக்கொள்ளப் பெறுகின்றன. அதற்கு மேல் இருக்கும் போது வினா நேரம் முடிவுற்றவுடன் மற்றவற்றிற்கான விடைகளை அச்சிட்டுத்தான் கொடுக்க முடியும்.

1985 VIII 829

ஓர் உறுப்பினரின் துணைக் கேள்வியில் கூறப்பட்ட புகாரை அமைச்சர் 'இல்லை' என்ற முறையில் பதில் சொல்லி விட்டதால், அந்தப் பதில் உண்மை என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். எங்காவது மாறுபாடு நடந்திருந்தால் அதை எழுதிக் கொடுக்கலாம் என்று அமைச்சரே தெரிவித்திருப்பதால், அந்த வகையில்தான் உறுப்பினர் செயல்பட வேண்டுமே தவிர, அதையே திருப்பித் திருப்பிச் சொல்லக் கூடாது.

1985 XIII 479

கேள்வி நேரம் முடிவடையும்போது எஞ்சியுள்ள எந்த வினாவையும் நிறுத்த வேண்டாம் என்பதற்காக ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு துணை வினா என்று கேட்க அனுமதித்ததன் மூலம் பட்டியலில் உள்ள எல்லா வினாக்களும் எடுத்துக் கொள்ளப்பெற்றன.

1987 XLV 36

சில வினாக்கள் எடுத்துக்கொள்ளப்படாதது பற்றிக் கேட்கப்பட்டபோது ''ஒரு மணி நேரம்தான் கேள்வி நேரம். அதற்குள் இவ்வளவுதான் எடுக்க முடியும்'' என்று குறிப்புரைக்கப்பெற்றது.

1987 XXXVI 478





சுற்றுலா விடுதி அமைப்பது குறித்து பல்வேறு உறுப்பினர்கள் துணைக் கேள்விகளைக்கேட்க முற்பட்டபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

''எல்லா உறுப்பினர்களும் அமைச்சரிடம் வேண்டுகோளைக் கொடுத்துவிடுங்கள்.''

1987 XXXII 338

நிலுவையில் இருக்கும் வினாக்களுக்கான விடைகளை 20–4–1987 ஆம் தேதிக்குள் சம்பந்தப்பட்ட துறையினர் சட்டமன்றச் செயலகத்திற்கு அனுப்பவேண்டும் என்று குறிப்புரைக்கப் பெற்றது.

1987 XXXVIII 463

நீதி நிர்வாகம் குறித்து அதிகமான துணை வினாக்கள் எழுப்பப்பெற்றபோது தலைவர் குறிப்புரைத்ததாவது :

''சட்டத்துறை மானியம் வரும்போது உறுப்பினர்கள் முழுமையாகப் பேசலாம்.''

1987 XXXIX 317

மூலக் கேள்வியும் அதற்கான விடையும்கூட சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு அளிக்கப்பட வேண்டுமென ஓர் உறுப்பினர் கேட்டபோது, இவற்றையெல்லாம் தன்னுடைய அறையிலே வந்து கேட்கவேண்டும் எனத் தலைவர் குறிப்புரைத்தார்.

1985 XIII 628

வெளிநடப்பு—

வெளிநடப்பு செய்யும்போது அவையில் நடைபெறாத ஒன்றை நடைபெற்றதாகச் சொல்லிவிட்டுப் போவது முறையல்ல.

1986 XIX 451

122318
21.3.1988

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008,

## தவணைத்தாள்.

சே எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6 –1,00,000—30-1-84.